# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

**Vol. VII.** **January 1921.** **No. 1.**

**புத்தகம் VII.]** FIDES AC ROBUR. **[நம்பர் 1.**

## A Happy New Year.

### பாக்கியமான புது வருஷம்.

புதுவருஷ சுப மங்களம் நமது நேச சந்தாதார் அனைவருக்கும் உண்டாவதாக!

இந்தப் புது வருஷத்தில் சௌக்கியமும், தாராளமும், மேன்மையும் ஆகிய இம்மூன்று உலக நன்மைகள் உங்களுக்கு உண்டாகவேணுமென்று விரும்புகிறோம்.

சௌக்கியம் உங்களுக்கு உண்டாவதாக!

சௌக்கியம் சுகிர்த வரம். ஆனால் அது எவ்வளவோ நிலையற்ற வரம்—பஞ்சம், கொள்ளைநோய், சண்டை முதலிய தின்மைகளிலிருந்து எங்களை இரட்சியும் சுவாமி.

தாராளம் உங்களுக்கு உண்டாவதாக!

ஆஸ்திபாஸ்தி அவசரமில்லை. அது அநேகருக்குத் தின்மையாயிருக்கக்கூடும். ஆனால் உங்களுக்குத் தேவையானதெல்லாம் குறைவில்லாமல் கிடைக்கவேணுமென்று விரும்புகிறோம்.

அன்றன்றுள்ள எங்கள் அப்பம் எங்களுக்கு இன்று தாரும்!

மேன்மை உங்களுக்கு உண்டாவதாக, உலக மகிமை, சிலாக்கியம் வேண்டாம். ஆனால் நல்லபேர், மரியாதை என்

161298

கிற வரங்களைக் காப்பாற்றுவீர்களாக. உங்கள் பிள்ளைகளும், வீட்டோர் எல்லோரும், உங்களுக்கு மகிமையும், ஆறுதலுமாயிருப்பார்களாக. உங்கள் வீட்டில் அந்நியோந்நிய நேசமும், ஒற்றுமையும், நல்லொழுக்கமும் உங்களுக்கு மகிமையாகக்கடவது. ஆனால் ஷை உலக நன்மை வரங்களைவிட ஆத்துமத்துக்குத் தேவையான ஞான வரங்கள் அதிக அவசரம். உறுதியான விசுவாசம், அழியாத நம்பிக்கை, சுறுசுறுப்பான தேவ சிநேகம் இவைகள் உங்கள் இருதயத்தில் எப்போதும் நிற்கும்படி சுவாமி கிருபை செய்வாராக.!

சுவிசேஷம் உங்கள் ஒளி, ஜெபம் உங்கள் உதவி, தேவ நற்கருணை உங்கள் ஞான ஔஷதம், தேவமாதா உங்கள் அடைக்கலம், சேசுக்கிறீஸ்துநாதர் உங்கள் துணை உண்டாவதாக. தேவ இஷ்டப்பிரசாதத்தை உங்கள் இருதயத்தில் காப்பாற்றுவீர்களாக. சகல நன்மைகளையும்விட இதுதான் பெரிய திரவியம்; மற்றதெல்லாம் அழிந்துபோனாலும் இது மாத்திரம் இருந்தால் போதும். வியாதி, துன்பம், தரித்திரம், அவதூறு, என்ன பொல்லாப்பு நேரிட்டபோதிலும், தேவ இஷ்டப்பிரசாதம் அழியாமல் இருந்தால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்; இந்தப் பாக்கியம் உங்களுக்கு உண்டாவதாக.

மோட்ச மகிமை உங்களுக்கு உண்டாவதாக. இப்பூலோகத்தில் தேவ வரப்பிரசாதமும் மறுலோகத்தில் நித்திய பாக்கியமும் உங்களுக்கு உண்டாவதாக. இவ்வுலகில் எவ்வளவு காலம் ஜீவித்தாலும் இந்த ஜீவியம் ஒருநாள் முடிந்துபோகும். யாராயிருந்தாலும் சரி, ஒரு நாள் மண்ணோடு மண்ணாய், தூசியோடு தூசியாய்ப்போவோம். மனிதனுடைய கதி அவ்வளவுதானோ, இல்லை. இந்த ஜீவியம் முடிந்தவுடன் நித்திய ஜீவியம் துவக்கும்; நம்மைப் படைத்து இவ்வுலகில் வைத்த கடவுள் மறுலோகத்தில் நமக்கு ஓர் இடம் முஸ்திப்புச் செய்திருக்கிறார், அவர் உங்களை வரவழைக்கும் நாளில் உங்கள் எல்லாருக்கும் நித்திய மகிமையும், பாக்கியமும் கிடைக்கும்படி கிருபை செய்து உங்களை என்றென்றைக்கும் ஆசீர்வதிப்பாராக.

---

"What shall I do with the Golden Year
If God will give it to me?
Shall I receive it with faith or fear?
Abuse it, or use it with conscience clear?
O! what will the answer be?"

---



## We have seen His Star

## அவருடைய நட்சத்திரத்தைக் கண்டோம்.

1. ஏரோதரசனுடைய நாட்களில் யூதாவின் ஊராகிய பெத்லகேமிலே யேசுநாதர் பிறந்திருக்கையில், இதோ கீழ்த்திசையினின்று சோதிட சாஸ்திரிகள் ஜெருசலேம் நகருக்கு வந்து,

2. யூதருடைய இராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? ஏனெனில் கீழ்த்திசையில் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரை ஆராதிக்க வந்தோம் என்றார்கள்.

3. ஏரோதரசன் இதைக் கேட்கவே கலங்கினான். ஜெருசலேம் முழுதும் அவனோடு கலங்கினது.

4. பின்னும் அவன் பிரதான ஆசாரியரையும், ஜனத்தின் வேதபாரகரையும் ஒன்றாய்க்கூட்டி கிறீஸ்துவானவர் எங்கே பிறப்பாரென்று அவர்களிடம் விசாரித்தான்.

5. அவர்கள் அவனுக்குச் சொன்னதாவது: யூதாவின் பெத்லகேம் ஊரில்தான்; ஏனெனில் தீர்க்கதரிசியால் இவ்வாறு எழுதப்பட்டிருக்கிறது.

6 நீயோ பெத்லகேமே, யூதாவின் காணியே, யூதாவின் சிரேஷ்ட நகரங்களில் நீ அற்பமேனும் சிறிதல்ல. ஏனெனில் எனது இஸ்ராயேல் ஜனத்தையாளும் தலைவர் உன்னிடமிருந்து வெளிப்படுவார் என்பதாம்.

7. அப்போது ஏரோதன் சோதிட சாஸ்திரிகளை இரகசியமாய் அழைத்து அவர்களுக்கு நட்சத்திரந் தோன்றின காலத்தைப்பற்றி ஜாக்கிரதையாய் விசாரித்து அறிந்தான்.

8. பிறகு அவர்களைப் பெத்லகேம் ஊருக்கு அனுப்பி: நீங்கள்போய் பிள்ளையைப்பற்றி ஜாக்கிரதையாய் விசாரியுங்கள், அவரை நீங்கள் கண்டபின் நானும் வந்து அவரை ஆராதிக்கும்படி எனக்கு அறிவியுங்கள் என்றான்.

9. அரசன் சொன்னதை அவர்கள் கேட்டபின் புறப்பட்டார்கள். அப்போது இதோ, கீழ்த்திசையில் அவர்கள்

கண்ட நட்சத்திரம் பிள்ளை இருந்த இடத்தின்மேல் வந்து நிற்குமட்டும் அவர்களுக்கு முன்சென்றது.

10. நட்சத்திரத்தைப் பார்த்துச் சந்தோஷ மிகுதியால் ஆனந்தங்கொண்டார்கள்.

11. பின்பு வீட்டில் பிரவேசித்துப் பாலனை அவர் தாயான மரியம்மாளோடு கண்டு, சாஷ்டாங்கமாக விழுந்து அவரை ஆராதித்தார்கள். மேலும் தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னும், தூபவர்க்கமும், மீறையும் அவருக்குப் பாதகாணிக்கையாக வைத்தார்கள்.

12. மேலும், அவர்கள் ஏரோதனிடம் திரும்பிப்போகாதபடிக்கு சொப்பனத்தில் உத்தரவு பெற்றதால், வேறே மார்க்கமாய்த் தங்கள் தேசத்திற்குத் திரும்பிப் போனார்கள்.

(மத்தேயு. II. 1-12.)

---

## A word to the reader.

## வாசிப்பவனுக்கு ஓர் வார்த்தை.

பிரிய நண்பனே,

இதோ ஏழாம் வருஷத்திய சத்தியதூதன் என்னும் என் சின்னப் பத்திரிகையை உனக்கு ஒப்புக்கொடுக்கிறேன். உனக்காகவே நான் இதை ஏற்படுத்தி பிரசுரித்துவருகிறேன். இதின் சிறுமை உனக்குப் பிரியமில்லையென்றாலும் இதை நான் உனக்குக் கொண்டுவருகிறேன். ஏனெனில் இதினால் உனக்குப் பிரயோஜனம் உண்டாகுமென்று நம்புகிறேன். ஒரு நல்ல பத்திரிகை ஓர் நல்ல சிநேகிதனைப்போலாகும் என்கிறார்கள்; ஆகையால் நீ இந்தச் சிறு தூதனைப்பற்றி என்ன அபிப்பிராயப்பட்டாலும் இது உனக்கு நல்ல சிநேகிதனாகவேணுமென்று ஆசிக்கிறேன். நீயும் அது நல்ல சிநேகிதன் என்று எண்ணி, அதைத் தயவோடும் எதார்த்தத்தோடும் ஏற்றுக்கொள். அதே கருத்தோடுதான் நான் அதை உனக்கு ஒப்புக்கொடுக்கிறேன். இந்த நல்ல சினேகிதன் சிறப்பின்றியும் சிரிப்பின்றியும் உன்னிடம் வந்தாலும் உனக்குச் சலிப்பு உண்டாகாதென்று நம்புகிறேன். சலிப்புக்குரிய புத்திமதி சொல்லாமல் சாதாரணமாய் சம்பாஷிக்கவேணுமென்று நான் இந்தச் சிநேகிதனுக்குச் சொல்லியனுப்பினேன்; அதின் படிப்பினை உனக்குப் பிரியமும் நன்மையுமாயிருக்கும்படி கடவுள் கிருபைசெய்வாராக.



சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்வதுதான் மெய்யான பாக்கியம் என்று நான் அறிந்துகொண்டு நீயும் இந்தப் பாக்கியம் அடையவேணுமென்று நான் ஆசிக்கிறேன். என் கருத்து நல்லது; என் பத்திரிகை அவ்வளவு நல்லதோ இல்லையோ நான் அறியேன்; என் சாமர்த்தியம் வெகு சொற்பமானது. ஆனால் சாமர்த்தியமும் நல்ல மனதுமுள்ள சிநேகிதர் சிலர் எனக்கு ஒத்தாசை செய்துவருகிறார்கள். அதினால் அநேகரிடத்தில் சத்தியதூதன் நல்லபேர் வாங்கியிருக்கிறது. அதற்கு அத்தாட்சியாக கொஞ்சநாட்களுக்கு முன் ஓர் சந்தாதார் எனக்கு எழுதினதாவது: உமது பத்திரிகை இவ்விடம் வெகு மேன்மையாய் நன்குமதிக்கப்பட்டிருக்கிறது, வாழ்க் கடவது என்கிறார். இச்சிறு பத்திரிகையை முதல் பக்கத்திலிருந்து கடைசி பக்கமட்டும் கவனமாய் வாசி. அதில் அடங்கிய சத்தியத்தைத் தேடியடையப் பிரயாசப்படு. நல்ல மனதுள்ளவனுக்கு ஞான ஒளி எளிதாய்ப் புத்தியில் நுழையும். சத்தியதூதனை வாசித்தபிறகு உன் வீட்டாருக்கும் சிநேகிதர்களுக்கும் காட்டி அவர்களும் அதை வாங்கி வாசிக்கும்படி புத்திமதி சொல்லு; அப்படிச் செய்வாயாகில் நீ சத்தியத்துக்கும், எனக்கும் ஒத்தாசையாயிருப்பாய், கடவுள் உன்னை ஆசீர்வதிப்பாராக.—(ப-ர்.)

---

## The Little Garden of Roses.

## சிறு ரோஜாத் தோட்டம்.

### மலர் 15. (முன் தொடர்ச்சி.)

2. பிரிய சகோதரனே! நீ மற்றவர்களுடைய குற்றங்களைப் பொறுத்துக்கொள். அப்போது அவர்கள் உன்னிடத்திலுள்ள குணக்குறைகளைப் பொறுத்துச் சகித்துக்கொள்ளு

வார்கள். உனது சகோதரனைத் தயவுடன் மன்னித்துக் கொள். அப்போது தயவுள்ள சர்வேசுரன் உன்னையும் மன்னிப்பார். பாவியின் பலவீனங்களைப்பார்த்து அவன்மேல் இரக்கமாயிரு. அதற்குக் கைம்மாறாக உனக்கு இரக்கங் காட்டப்படும். துன்பசாகரத்தில் அமிழ்ந்திருப்பவர்களுக்கு உன்னால் கூடியவரையில் ஆறுதலும் தேறுதலும் சொல்லுவாயாக. அப்போது இன்பவெள்ளத்தில் மூழ்கியிருப்பவனால் உனக்கு ஆறுதல் அளிக்கப்படும். கீழே விழுகிறவனைக் கைதூக்கிவிடு. அப்போது சர்வேசுரனுடைய உதவியால் நீயும் கீழே விழாமல் காக்கப்பட்டு மேன்மையை அடைவாய்.

எவ்வளவுக்கு எவ்வளவு நீங்கள் மற்றவர்களைத் தாராளமாய்ப் பொறுப்பீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு சர்வேசுரன் தயாளமாய் உங்களைப் பொறுப்பார். நீங்கள் எம்மாதிரியாகப் பிறரிடத்து நடந்துகொள்ளுகிறீர்களோ அம்மாதிரிதான் உங்களிடத்துப் பிறர் நடந்துகொள்ளுவார்கள். உங்கள் கடன்காரரை நீங்கள் மன்னித்தால்தான் உங்கள் கடனையும் நீதியுள்ள சர்வேசுரன் மன்னிப்பார்.

இவ்வுலகில் துர்ப்பலமாயிருக்கப்பட்ட ஓர் மனிதன் தவறி விழும்போது அவனைப்பார்த்து யாதாமொருவன் ஆச்சரியப்படவும், கோபித்துக்கொள்ளவுங்கூடாது. ஏனெனில் மனிதன் மனிதன்தானே சம்மனசல்லவே. மோட்சத்தில் சம்மனசுகள்கூட கெட்டு நரகத்தில் விழவில்லையா? இவ்வுலக மோட்ச சிங்காரத்தோட்டத்தில் ஆதி மனிதனாகிய ஆதாம் ஒரு அற்ப ஆப்பில் பழத்துக்கு ஆசைப்பட்டு மோசம்போகவில்லையா?

ஒரு அற்பக்காரியம் அநேக சமயங்களில் ஒருவனுக்குப் பெரும் மோசக்கேடாகிறது. கருதத்தகாத ஒரு சிறு விஷயம் அவனுக்கு வெகு வருத்தத்தைக் கொடுக்கும். சர்வேசுரன் நியாயமாகவே இம்மாதிரியான சம்பவங்கள் நேருமாறு செய்கிறார். அதேனெனில் இவ்வளவு சொற்பமான சோதனைகளிற் பலவீனராயிருக்கிறவர்கள் தங்கள் சுய பலத்தை நம்பாமல் அவற்றை மேற்கொள்ளத்தவறினால், கனமான தந்திரங்கள் வரும்போது அவைகளை மேற்கொள்ளுதல் முடியாதென்பதைப் போதிக்கவே.

3. உனது சகோதரன் துன்பப்படும்போதும் சோதனைப்படும்போதும் அவனைத் தாங்கி அணைத்து தயாள குணத்தோடும் பட்சத்தோடும் அவன் படும் துயரத்தை ஆற்றி அவனுக்கு உன்னாலான உதவிசெய்யக்கடவாய். மேலும் நீ உனக்காக வேண்டிக்கொள்ளுவதுபோல உனது சகோதரன் கஸ்



திக் துன்பப்படும்போது அவனுக்காக வேண்டிக்கொள்ளுவது உசிதமாகும்.

உன் புறத்தியானுக்குவந்த நன்மையைக்கண்டு சந்தோஷப்பட்டு அந்த நன்மை உனக்குச் சம்பவித்ததுபோல் பாவித்துக்கொள்ளவேண்டும். மேலும் அவனுக்கு வரும் பொல்லாப்பைக்கண்டு அவனோடு நீயும் அநுதாபப்பட்டு அது உனக்கு நேர்ந்ததுபோல எண்ணிக்கொள்ளக்கடவாய். ஏனெனில் குறையில்லாதவனுமில்லை, பழுதற்றவனுமில்லை, பிறர் உதவி அவசரமில்லாதவனுமில்லை. ஆனதுபற்றி நாம் ஒருவரொருவருடைய குற்றங்களைச் சகித்துவரவும், ஒருவரொருவருக்கு ஆறுதல்சொல்லவும், உதவிசெய்துகொள்ளவும், புத்திசொல்லவும், ஒருவரொருவருக்காக வேண்டிக்கொள்ளவும் அவசரமாமே.

நம்மிடத்திலுள்ள குறைகளையும் பலவீனங்களையும் பிறர் சகித்துவரவேண்டுமென்று நாம் ஆசிக்கும்போது, அவர்களுடைய பலவீனங்களையும் துர்க்குணங்களையுங்கண்டு அவர்களைத் துவேஷிக்கவும் வெறுக்கவுங்கூடாது. இப்படிச் செய்வது அந்தகன் அந்தகனையும், செவிடன் செவிடனையும், முட்டாள் முட்டாளையும் பரிகசிப்பதுபோலாகும்.

நீ யாரை நிந்திக்கக்கூடாதோ அவர்களைப்பற்றிப் புறங் கூறாதே. முந்தமுந்த உன்பேரிற்றானே கண்ணாயிருந்து உன்னிடத்திலிருக்கும் குற்றக்குறைகளைப் பரிசோதித்து அவைகளைத் திருத்திக்கொள்ள வழிதேடுவாயாக. உன்பேரிற்றானே குற்றஞ் சாட்டிக்கொண்டு உன் சகோதரனை மன்னிப்பாயானால் அதிக நீதியாயிருக்கும்.

உனது சகோதரன் பழுதற்றவனாயிருக்கும்படி நீ மனப்பூரணமாய் விரும்பி அவனைச் சீர்திருத்த முயற்சியெடுப்பதற்குமுன் முதலில் நீயே உன்னைச் சீர்ப்படுத்திக்கொள்ளவேண்டும். அதன்பிறகு, துஷ்ட எண்ணத்தோடும் மிதமிஞ்சின வைராக்கியத்துடனல்லாமல் மிகுந்த தயாளத்தோடும் எச்சரிக்கையோடும் உனது சகோதரனுடைய நடக்கையைத் திருத்தப் பிரயாசப்படுவாயாக.

சகோதர வாஞ்சையுடன் மெய்யாகவே நீ உன் புறத்தியானைச் சிநேகிக்கிறவனாயிருந்தால், நீ உன்பேரில் எவ்வளவு கண்ணுங்கருத்துமாயிருப்பாயோ, அதேமாதிரி உன் புறத்தியானை உன் கண்ணின் கருவிழியைப்போலப் பாவித்து அவனுக்காக சர்வேசுரனைப் பிரார்த்திப்பாயாக.

தன் சகோதரனைச் சீர்ப்படுத்த விரும்புகிறவன் தானே அவனுக்காக வேண்டிக்கொள்ளவேண்டியதில்லையென்றும், அவனுடைய குணக்குறைகளைக்கண்டு அவன்பேரில் இரக்கங் கொள்ளத் தேவையில்லையென்றும் எண்ணுவானேயாகில், புத்தியும் மதுரகுணமுமுள்ள வைத்தியனைப்போலாகாமல், தான் அவனுடைய ஜென்ம சத்துருவாயும் அவனை ஓயாமல் திட்டுகிறவனுமாவான்.

தனக்காகவும் தன் சகோதரனுக்காகவும் சர்வேசுரனை இடைவிடாமல் பிரார்த்திப்பவன் இரண்டு பெரிய நற்காரியங்களைச் செய்கிறான். சகோதர அன்பு எவ்வளவுக்கெவ்வளவு உன்னிடத்தில் உண்டாகுமோ அவ்வளவுக்கவ்வளவு சந்தோஷத்தோடும் விரைவாயும் உன் சகோதரனுக்காக சர்வேசுரனை மன்றாடி அவன் திருந்துமாறு அவனுக்கு அருள் தரவும், துர்ப்பலமுள்ளவர்களிடத்து ஏளனத்துக்கிடமாகாமல் அவனிருக்கும்படிக்கும் சர்வேசுரனிடத்து வேண்டிய ஒத்தாசையைக் கேட்பாய். ஆகையினால் அவன் உன் புத்திமதிகளைக் கேட்கத் தவறினாலும், உனது எச்சரிக்கைகளைத் தீங்காக நினைத்தாலும் உனது துக்கம் ஆறுதலாயிருக்கும்.

ஒவ்வொருவனும் தனது சகோதரனுக்குச் சுகிர்தனாகவாவது அல்லது துஷ்கிருதனாகவாவது இருக்கிறான்.

(இன்னும் வரும்.) S. S. G.

---

# History of the Diocese of Coimbatore.

## கோயமுத்தூர் மேற்றிராசனத்தின் சரிதை.

(முன் தொடர்ச்சி.)

1837-ம் ௵ தெய்வ பத்திநாதர் என்னும் சங். பிகோ பொக்லர் (Begot Beauclair) சுவாமியார் ஸ்ரீரங்க பட்டணத்திலிருந்து கோயமுத்தூர் நாட்டிலுள்ள கிறீஸ்துவர்களை விசாரிக்க வந்தார். கனுவக்கரை, வாளிபாளையம், ஒட்டகமண்ட் முதலிய ஊர்களைத் தரிசித்தார். அப்போது வாளிபாளையம் என்கிற ஊரில் கிறீஸ்துவர்களுக்குள்ளே விளங்கின பத்தி விசுவாசத்தைக் கண்டு ஆறுதலடைந்தார்.



1839-ம் ௵த்தில் அன்னிய தேசத்துப் போதகச் சபையைச் சேர்ந்த குருக்கள் தென் இந்தியாவில் 19 பேர் உழைத்துவந்தார்கள். 4 வருஷங்களுக்குப்பிறகு 25 ஐரோப்பிய குருக்களும் 4 சுதேசக் குருக்களுமிருந்தார்கள்.

1841-ம் ௵ சங். பக்ரோ (Pacreau) சுவாமியார் ஒரே ஒரு ஐரோப்பிய குருவானவர் மாத்திரம் கோயமுத்தூர் நாட்டில் பல வருஷகாலமாய், கிறீஸ்துவர்களை விசாரித்து அஞ்ஞானிகளுக்கு சத்தியவேதத்தைப் போதித்தார். ஆகையால் அவர் ஒன்றுக்குப்பின் ஒன்றாக கருமத்தன்பட்டி, கோயமுத்தூர், ஒட்டகமண்ட், வாளிபாளையம் முதலிய ஊர்களைத் தரிசித்து விசாரிப்பார். அவரிடத்திலும் வாளிபாளையம் கிறீஸ்துவர்கள் நல்ல பேர் வாங்கினார்கள். அவ்வூர் பண்ணையக்காரன் சின்னப்பன் என்பவன் பத்தி விசுவாசத்திலும், தெய்வ பயத்திலும், கீழ்ப்படிதலிலும் மற்றக் கிறீஸ்துவர்களுக்கு நன்மாதிரிகையைக் காண்பித்து வந்தான். அவன் தன் உத்தியோகத்தின் நிமித்தமாக சில ஞாயிற்றுக்கிழமைகளில் சிலசமயம் கலெக்டர் துரையிடம் அழைக்கப்பட நேரிட்டது. ஒருநாள் சின்னப்பன் துரையிடம்போய் "ஐயா, என் உத்தியோகத்தின் நிமித்தம் நான் ஞாயிற்றுக்கிழமை சில விசை கோவிலுக்குப்போக முடியாததினால் என் உத்தியோகத்தை விட்டுவிட தீர்மானித்தேன்" என்று சொன்னான். கலெக்டர் துரை அவனுடைய நற்குணங்களையறிந்து, மதித்து, அவனுடைய விண்ணப்பத்தை அங்கீகரிக்கவில்லை. "சின்னப்பா, உன் உத்தியோகத்தை விட்டுவிடவேண்டாம், இனிமேல் நான் ஞாயிற்றுக்கிழமைகளில் உன்னை என்னிடம் வரவழைக்கமாட்டேன்" என்று சொல்லியனுப்பினார்.

**ஞானவிசாரணை:**—1842-ம் ௵ கனம்பொருந்திய பொன்னான் (Bonnand) ஆண்டவர் செப்டெம்பர் மாதத்தில் புதுவையிலிருந்து புறப்பட்டு கோயமுத்தூர் நாட்டில் ஞான விசாரணையைச் செய்துவந்தார். ஈரோடு, பெருந்துறை, கருமத்தன்பட்டி, சோமனூர், தாராபுரம், அத்திக்கோடு, கோவில்பாளையம், பாலக்காடு, வடக்கஞ்சேரி, ஒட்டகமண்ட், கொடிவேரி முதலிய ஊர்களை ஒன்றுக்குப்பின் ஒன்றாய்த் தரிசித்து நாலு மாதங்களுக்குப்பிறகு புதுவைக்குத் திரும்பிப் போய்ச் சேர்ந்தார். அவர் விசாரித்த ஒவ்வொரு ஊர்களிலும் சில விசேஷ காரியங்களைக் கவனித்தார். அவைகளில் சிலதாவது: கருமத்தன்பட்டி ஊரில் குடியிருக்கும் கிறீஸ்துவர்கள் வெகு

கொஞ்சம்பேர். அதற்கு அடுத்த சோமனூரில் குடியிருந்தவர்கள், நல்ல அந்தஸ்தும், நல்ல குணமுமுள்ளவர்கள். ஆனால் அந்த நாட்டிலுள்ள அஞ்ஞானிகள் மனந்திரும்புதல் அபூர்வம்; தாராபுரத்துக் கோவிலும், சுவாமியார் வீடும் வெகு தரித்திரமுள்ளது. வடக்கஞ்சேரி, அர்ச். இஞ்ஞாசியார் கோவிலுக்குத் திருயாத்திரையாய் வந்த கிறீஸ்துவர்களில் பல மலையாளப் பெண்பிள்ளைகளைப் பேய்பிடித்து தேர் சமயத்தில் தலை சுற்றி அலங்கோலமாய் ஆடிப் புரண்டு, அஞ்ஞானிகளைப் போல நடந்தார்கள்.

**புதுக்கோவில்கள்**:–1840-ம்ஞு த்தில் சங். ஆசீர்வாதப்பர் என்னும் ஓர் சுதேசக் குருவானவர் தாராபுரத்தில் ஒரு கோவில் அஸ்திவாரத்தைக் கட்டினபிறகு சங். பேர்சிவல் (Perceval) சுவாமியார் அந்தக் கட்டிடத்தை முடித்தார். அதே காலத்தில் சங். பக்றோ (Pacreau) சுவாமியார் கருமுத்தன்பட்டி கோவிலில் ஓர் மணிக் கோபுரத்தைக் கட்டினார். 1841-ஞு சங். பிகோ பொக்லர் (Bigot Beauclair) சித்தூரில் ஒரு புதுக் கோவிலைக் கட்டினார். அதே வருஷத்தில் சங். ஜாரிழ் (Jarrige) சுவாமியார், ஒட்டகமண்டில் சங். பிகோ பொக்லர் 1839-ஞு த்தில் துவக்கின கோவில் கட்டிடத்தை முடித்தார். அக்கோவில்தான் இப்போது பள்ளிககூடமாக உபயோகிக்கப்பட்டு வருகிறது. எரிச்சாம்பதியில் சங். பரோ (Borrot) சுவாமியார் கிறிஸ்துவர்களுடைய உதவியைக் கொண்டு ஒரு புதுக் கோவிலைக் கட்ட ஆரம்பித்தார். 1845-ஞு கோயமுத்தூருக்கு அடுத்த சவேரியார் பாளையத்தில் ஒரு புதுக் கோவில் கட்டப்பட்டது. சங். பக்றோ சுவாமியா அக்கோவில் கோயமுத்தூர் நாட்டிலிருந்த கோவில்களைவிட அதி அழகாயிருந்ததென்று அபிப்பிராயங்கொண்டார். அக்காலத்தில் இருந்த கோவில்களெல்லாம் வெகு ஏழையாயிருந்ததென்று அதினால் கண்டுபிடிக்கலாம். 1842-ம் ஞு த்தில் அத்திக்கோடு பங்கு விசாரணையில் 13 கிராமங்கள் சேர்ந்திருந்தன. அதிலுள்ள கிறீஸ்துவர்களுடைய தொகை 1568 பேர். அத்திக்கோட்டுக்கடுத்த சவேரியார்பாளையத்தில் முதல குடிகள் இராயப்பனும் ஜுசையும் இவர்களுடைய குடும்பங்களுமாம். இவர்களிடத்தில் வேலை செய்துவந்த பழனியாய் என்னும் ஓர் அஞ்ஞானிப் பெண்பிள்ளை மனந்திரும்பி கிறீஸ்துவளாகி தன் பழைய பேரால் அழைக்கப்பட்டிருந்தாள். அவள் இறந்து அதே இடத்தில் அடக்கஞ் செய்யப்பட்டாள். அதின் நிமித்தம் அவ்வூர் பழனியாய் பள்ளம் என்று அழைக்



கப்பட்டு இதுவரை வழங்கிவந்தது. 1842-ம் ஞு அத்திக்கோடு கிறீஸ்துவர்களில் சிலர் தங்கள் ஊரை விட்டுப் பிரிந்து போனார்கள். அவர்களில் சிலர் கூளராயன் பாளையம், சிலர் சவேரியார் பாளையம், சிலர் புதூா, சிலர் பள்ளிக்கூடத் தானூர் முதலிய கிராமங்களில் வாசம் பண்ணினார்கள். இப்போது இந்தக் கிராமங்கள் எல்லாம் சவேரியார் பாளையம் என்கிற ஒரே ஊராகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

---

## Good Manners.—நல்லொழுக்கம்.

(தொடர்ச்சி)

### பெற்றோரும் பிள்ளைகளும்.

பெற்றோர் பிள்ளைகளினுடைய நன்மைத்தனத்தை நாடி, அவர்களை அடக்கி ஆளவேண்டும். அரசனுக்குப் பிரஜைகள் மேலும், குருவுக்கு சிஷ்யர்கள்மேலும், எஜமானனுக்கு ஊழியர்கள் மேலும் அதிகாரம் இருப்பதுபோல, தகப்பனுக்கும் குடும்பத்தின்மேல் அதிகாரமுண்டென்பது வெட்டவெளியான சத்தியம்.

நாம் இவ்வுலகில் அடையவேண்டிய எல்லாப் பாக்கியங்களிலும் சிறந்தது புத்திர பாக்கியம். எல்லாப் பாக்கியத்தைப் பெற்றிருந்தும் புத்திர பாக்கியமில்லாதிருந்தால், மதியில்லா வானத்தைப்போலும், கண்ணில்லா யாக்கையைப் போலும், அரசில்லா நாட்டைப்போலும், பொலிவற்றிருக்குமெனக் கேட்டிருக்கிறோம். இப்படிக்கில்லாமல் கடவுள் கிருபையால் புத்திரபேறை யடைந்த பலர் புதல்வரை யீன்றதே போதுமென இருக்கின்றனர். நிலத்தை உழுது விதையை விதைத்து, முளைக்கச்செய்வது கடினமல்ல. ஆனால்,

> "ஏரினும் நன்றுலெரு விடுதல் கட்டபின்
> நீரினும் நன்றதன் காப்பு" என்றவாறு

அதை அல்லும பகலும் அதி ஜாக்கிரதையாக காப்பாற்ற வேண்டும். துஷ்ட புத்தியுடைய புத்திரர்களிலும் நன்மதியுடையான் ஒருவனே சிலாக்கியம்: இதைப்பற்றியன்றோ

"பன்றி பலகுட்டி பயந்ததனாலேதுபயன், ஒன்றமையாதோ கரிக்கன்று" என்று பழமொழியும் எழுந்தது: பெற்றோர் பிள்ளைகளினிடத்து எவ்வளவோ ஆசையாயிருந்தாலும், அவர்களது நன்மையைக்கோரி அதனை வெளிககாட்டலாகாது. இளம் பருவத்திலேயே அவர்களை நன்னடக்கையிற் பழக்க வேண்டும். இதைப்பற்றித்தான் "தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" "ஐந்திலே படியாதது ஐம்பதிலே படியாது" என்ற முதுமொழிகளும் வழங்குகின்றன. பிள்ளைகளினெதிரில் சூது முதலியன ஆடுவதும், வம்பும் தும்புமாய்ப் பேசுவதும், நாமே அவைகளைக் கற்பிக்கிறதுபோலாகும். கடவுள் கிருபையால் தாய் தகப்பனைப் பெற்றிருக்கும் பெரியோர், சகோதரர் யாவரும், பெற்றோருக்குப் பணிந்து நடக்கவேண்டும். சகோதரி, சகோதரர்களையும், சகல பந்துக்களையும், பெரியோரையும், குருக்களையும அவரவர் முறையறிந்து, அவர்களைச் சங்கிப்பது ஒழுக்கம். பெற்றோர்களும், பெரியோர்களும் அதிகாரம் காட்டும்போது, நாம் அவ்வதிகாரத்தை ஒப்புக்கொண்டு அன்போடு அவர்களுக்குப் பணிந்து நடக்கவேண்டும். "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை, தாய்சொற்றுறந்தொரு வாசமில்லை" என்பதை நன்குணர்ந்து நாம் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் நடப்பே, மானிடப் பிறப்பிற்கு அழகென்று எண்ணியிருக்கவேண்டும். தாய்தந்தையர் வயதிற்முதிர்ந்தோராயிருக்கையில் நாம் அவர்கட்கு நம்மாற் கூடிய உதவிபுரியவேண்டும். இப்படிக்கின்றி அவர்களது கிழப்பருவத்தில் அவர்களின்மீது கண்காணிப்பின்றி அவலமாய்ச் சாகவிடுவதும், மனநோகப்பண்ணுவதும் நமக்கே பிற்காலததில் தீங்கு விளைவிக்கும்.

"மாதா மனமெறிய வாழாபொருநாளும்
என்ற வாக்கு பொய்யுரை யாகாது."

"உன் பெற்றோரைக் கனஞ்செய், கிரிகையிலும், வார்த்தையிலும் உன் தந்தைக்குப் பொறுமையோடு சவகை செய். அதனால் உனக்கு அவருடைய ஆசீர்வாதம் கிடைக்கும். அவரது ஆசீர்வாதமும் உன் ஜீவியகாலம் வரைக்கும் உன்னோடிருக்கும். தந்தையின் ஆசீர்வாதமோ பிள்ளைகளின் குடும்பங்களை நிலைநாட்டும். தாயின் சாபமோ பிள்ளைகள் குடும்பங்களின் அஸ்திவாரத்தைப் பிடுங்கிவிடும்" என்று சாலபிரசங்கி சொல்லுகிறது.

---

## The Carrect Things in the home Circle

### வீட்டில் அநுசரிக்கும் நல்லொழுக்கம்.

வீட்டின் திரவியம் சமாதானமே என்று எண்ணிக்கொள்வது ஒழுங்கு.

ஆஸ்திபாள்திக்குரிய வீடு பாக்கியமான வீடென்று நினைப்பது தப்பு.

தெய்வமில்லாத வீடு பாக்கியமில்லாத வீடென்றும் எண்ணுவது ஒழுங்கு.

புருஷன் பெண்சாதி ஒருவரையொருவர் பட்சமாய் நேசித்து ஒருவரொருவருக்கு ஒத்தாசையாயும் ஆறுதலுமாயிருப்பது ஒழுங்கு. புருஷன் தன் மனைவி தனக்கு நீச அடிமையாயிருக்கவேணுமென்று நினைப்பது தப்பு.

மனைவி தன் புருஷன் தனக்கு காவலாளி என்று பாவமில்லாத காரியங்களில் அவனுக்குக் கீழ்ப்படிவது ஒழுங்கு.

புருஷன் கை இறுக்கத்தோடும், வருத்தத்தோடும் தன் மனைவிக்குப் பணம் கொடுப்பது தப்பு.

மனைவி குடும்பத்தின் அந்தஸ்துப்பிரகாரம் வீட்டுச் செலவு செய்வது ஒழுங்கு.

மனைவி நகை உடை முதலியவைகளின்மேல் வீண் சிலாக்கியங்கொண்டு நியாயத்துக்கு மிஞ்சின செலவு செய்வது தப்பு.

மனைவி நாளெல்லாம் வேலை செய்திருக்கும் தன் புருஷனுக்குக் கூடியமட்டும் பசியைத் தணிக்கும் உணவைத் தருந்த நேரத்தில தயார் செய்வது ஒழுங்கு

வெள்ளிக்கிழமையில் மாமிச உணவைத் தயார் செய்வது தப்பு.

புருஷன் பெண்சாதி இருவரும் திருச்சபைக்கு முன்பாக ஒருவரொருவருக்குக் கொடுத்த வார்த்தைப்பாட்டை பிரமாணிக்கமாய் அநுசரிப்பது ஒழுங்கு.

ஒருவரொருவர்மேல் வீண் சந்தேகப்படுவது தப்பு.

புருஷன், பெண்சாதி ஒருவரொருவருடைய குற்றங்களை மன்னிப்பது ஒழுங்கு.

புருஷன் இரவில் நடுச்சாமமட்டும் தன் சிநேகிதர்களோடு குடித்துப் பாடியாடித் திரிந்துவருவது தப்பு.

புருஷன் தன் மனைவியைத்தவிர வேறொருத்தியையாவது, மனைவி தன் புருஷனைத்தவிர வேறொருத்தனையாவது நேசிப்பது தப்பு.

மனைவி தன் வீட்டு வேலையைக் கவனித்து, வீட்டை எப்போதும் சுத்தமாயும் இன்பமுமாய் வைப்பது ஒழுங்கு.

புருஷன் சோம்பலால் வேலைக்குப் போகாமல் இருப்பது தப்பு.

குடும்பத்தார் எல்லோரும் அந்திசந்தி ஜெபஞ் செய்வது ஒழுங்கு.

வீடுகளில் பத்திக்குரிய சில படங்களை வைப்பது ஒழுங்கு.

பிள்ளைகள் தங்கள் தாய், தந்தையைச் சங்கித்தும் அவர்களை நேசித்து கீழ்ப்படிவதும் ஒழுங்கு.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்குக் கூடியசீக்கிரம் ஜெபங்களைக் கற்பிப்பது ஒழுங்கு.

தாய் தந்தையா தகாத வார்த்தையினாலாவது, தகாத பார்வையினாலாவது தங்கள் பிள்ளைகளுடைய மாசில்லாமை கெடாதபடி மிகவும் ஜாக்கிரதையாய்க் கவனிப்பது ஒழுங்கு.

பிள்ளைகள் சிறுவர்களாயிருந்தாலும் வஸ்திரம் அணியாமல் நிர்வாணிகளாய் விடுவது தப்பு.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளைப் பட்சத்தோடும், கண்டிப்போடும் நடத்துவது ஒழுங்கு.

பிள்ளைகள் திருந்தவேணுமென்கிற கருத்தில்லாமல் கோபத்தினால்மாத்திரம் அவர்களைத் தண்டிப்பது தப்பு.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுடைய சிநேகிதர், இன்னாரென்று அறிந்துகொள்வது ஒழுங்கு.

பிள்ளைகள் யாதொரு தகாத வார்த்தை சொல்லும்போது பெற்றோர் சிரித்துக்கொண்டு அவர்களைத் திருத்தாதிருப்பது தப்பு.

தாய் தகப்பன் தங்கள் பிள்ளைகளை அவர்களின் ஞானஸ்நானப் பேரால் அழைப்பது ஒழுங்கு.

பிள்ளைகளைக் கூடியசீக்கிரத்தில் சிறுவத்திலேயே, கோவிலுக்கும் கத்தோலிக் பாடசாலைகளுக்கும் அனுப்புவது ஒழுங்கு.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளை யாதொரு இதரமதப் பள்ளிகளுக்கு அனுப்பி படிக்கவைப்பது தப்பு.

தாய் தந்தையர் இவ்முறை முற்றுமுணர்ந்து தங்கள் பிள்ளைகளை நடத்துவார்களானால், உயர்ந்த விலையுள்ள நகைகளிலும், நல்லொழுக்கமுள்ள பிள்ளைகளே அதிக அழகான இரத்தினங்கள் என்று பெற்றோர் எண்ணிக்கொள்வது ஒழுங்கு.

---



# Page for the Young.

பிள்ளைகளின் பக்கம்.

## The Lost Diadem.

காணாமற்போன கிரீடம்.

உரோமாபுரி அரண்மனையில் நவரத்தினங்களாலிழைக்கப்பட்ட விலையுயர்ந்த கிரீடமொன்று காணாமற்போயிற்றென்கிற சங்கதி வெகு சீக்கிரத்தில் பட்டணமுழுவதும் பரவிவிட்டது. அது அரசியினுடையது. அரண்மனை முழுவதும் எல்லாப் பக்கங்களிலும் தேடியும் அது அகப்படவில்லை. இப்பேர்ப்பட்ட விபத்து அந்த அரசிக்கும், விசேஷமாய் அந்த இராஜ குடும்பத்துக்கும் தீங்கை விளைவிக்குமென்பது அவர்களுடைய எண்ணமாகையால், அரசி பைத்தியங்கொண்டவள்போலத் தான் போக்கடித்த விலையுயர்ந்த ஆபரணத்தை மறுபடியும் தேடிக் கண்டுபிடிக்க முயன்றும் பயன்படவில்லை. கடைசியாக உரோமாபுரித் தெருவீதிகளில், "அரசியுடைய கிரீடம் காணாமற்போய்விட்டது, எடுத்தவர்கள் யாராவது அதை முப்பது நாட்களுக்குள் கொண்டுவந்து கொடுத்தால் தகுந்த வெகுமதி பெறுவார்கள். தாமதித்து முப்பது நாட்களுக்குப்பிறகு கொண்டுவந்து கொடுப்பவர்கள் மரண தண்டனைக்குள்ளாவார்கள்" என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

அக்காலங்களில் எல்லா ஜாதியாரும், எவ்வகை வர்ணத்தாரும் உரோமாபுரியின் விநோதக் காட்சிகளைப் பார்க்க அப்பட்டணத்தின் மகத்தான மாளிகைகளிலும், வீதிகளிலும் கும்பல்கும்பலாகக் கூடியிருப்பதைப் பார்க்கலாம். இவர்களில் சன்மார்க்கத்துக்கும் நன்னடக்கைக்கும் பேர்போன வித்வானான ஒரு முனி கிழக்குதேசத்திலிருந்து அவ்விடம் வந்திருந்தார். இவர் ஒருநாள் இராத்திரி நிலவு வெளிச்சத்தில ஆழ்ந்த யோசனையோடு தெருவீதியின் வழியாய்ப் போகும்போது தனது காலின்கீழ் காணாமற்போன கிரீடம் பளிச்சென்று மின்னுவதைக் கண்டார். உடனே அதையெடுத்துத் தானிருக்குமிடத்துக்குக் கொண்டுவந்து

## The Little Girl and the Protestant.

### சிறுமியும், பதிதனும்.

புதுநன்மை வாங்கின ஒரு சிறுமிக்கும், ஒரு பதிதனுக்கும் நடந்த சம்பாஷணை.

பதிதன் :—அம்மா, நீ இன்று காலையில் உட்கொண்ட ஓஸ்தியில் சேசுநாதர்சுவாமி இருக்கிறார் என்று விசுவசிக்கிறாயா?

சிறுமி :—ஆம் மெய்யாகவே விசுவசிக்கிறேன்.

பதிதன் :—ஆனால் உனக்குப் பரமண்டல மந்திரம் தெரியுமா?

சிறுமி :—தெரியும்.

பதிதன் :—அதைச்சொல்.

சிறுமி :—பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே...

பதிதன் :—போதும் நிறுத்து—பரமண்டலங்களில் இருக்கிறார் என்றால் அர்த்தம் என்ன?

சிறுமி :—மோட்சத்திலிருக்கிறா என்று அர்த்தம்.

பதிதன் :—சேசுநாதர்சுவாமி மோட்சத்திலிருந்தால் எப்படி நீ உட்கொண்ட அப்பத்திலிருப்பார்?

சிறுமி :—(சற்று யோசித்து) ஐயா, உங்களுக்கு விசுவாச மந்திரம் தெரியுமா?

பதிதன் :—தெரியும்.

சிறுமி :—அதைச சொல்லுங்கள்.

பதிதன் :—பரலோகத்தையும், பூலோகத்தையும் படைத்த சர்வத்துக்கும்வல்ல பிதாவாகிய சர்வேசுரனை அதியோக்கியபத்தியாக விசுவசிக்கிறேன்.

சிறுமி :—போதும் நிறுத்துங்கள், சர்வத்துக்கும் வல்ல என்றால் அர்த்தமென்ன?

பதிதன் :—"எல்லாத்தையும் செய்யக்கூடிய" என்று அர்த்தம்.

சிறுமி :—அப்போது சர்வேசுரன் எல்லாத்தையும் செய்யக்கூடியவரானால், ஏன் அவர் பரலோகத்திலும் இந்தத் திவ்விய அப்பத்திலுமிருக்கக்கூடாது, என்றாள்.

பதிதன் :—வாய் பேசவில்லை.

---

முப்பது நாட்கள் கழியும்வரையில் அதைப் பத்திரமாய் வைத்திருந்து பிறகு அதைச் சொந்தக்காரியிடம் கொடுப்பதென்று தீர்மானித்துக்கொண்டார்.

முப்பது நாட்கள் கழிந்தபிறகு அதை எடுத்துக்கொண்டு அரண்மனைக்குச்சென்று அவ்விடம் அணிவகுத்துநிற்கும் காவற்சேவகர்களுக்கும், உத்தியோகஸ்தர்களுக்கும் பயப்படாமல், தாம் அரசியைப் பார்க்கவேண்டுமென்று சொல்ல, உடனே அவரை இராணி முன்னிலையில் கொண்டுபோய் நிறுத்தினார்கள். அப்போது அவர் இராணியைப்பார்த்துத், தாம் அம்முடியைக் கண்டெடுத்த வரலாற்றையும், தாம் அதைப் பத்திரப்படுத்தி வைத்திருந்த விதத்தைப்பற்றியும் விஸ்தாரமாய்ச் சொன்னபோது, சக்கரவர்த்தினி, "என்ன சொல்லுகிறாய்? எடுத்தவுடனே கொண்டுவந்து ஒப்பிக்காமல் இதுவரையில் தாமதம் செய்ததற்குத் தண்டனையாக உன் தலை போய்விடுமே என்றறியவில்லையா?" என்று கோபத்துடன் மொழிந்தாள்.

இராஜாத்தி சொன்ன கடூர வார்த்தைகளைக்கேட்டு, முனி, "அரசியே! வெகுமதி கிடைக்கும் என்பதற்காகவுமல்ல, இஞ்சித்தும் தண்டனை ஏற்படுமேயென்ற பயத்தினாலுமல்ல, ஆனால், "பிறருடைமையை அபேட்சியாதிருப்பாயாக" என்கிற தேவ கட்டளைக்கு அடங்கி நடப்பதைக் காட்டுவதற்காகவே உமது கிரீடத்தை உமக்குத் திருப்பிக்கொண்டுவந்தேன் என்ற விஷயத்தை நீர் அறியுமாறு இதுவரையில் தாழ்ந்திருந்தேன்" என்று முனி நிதானமாய்ப் பதிலுரைத்தார்.

இவ்வார்த்தைகளைக்கேட்டு இராணி மிகவும் ஆச்சரியப்பட்டு, "உமது கடவுள் ஸ்துதிக்கப்படக்கடவாராக" என்று சொல்லி, அவரைப் போகும்படி விடைகொடுத்தனுப்பினாள். ஏனெனில் அவர் நன்மைக்காகவே நன்மையைச் செய்தவரல்லவா!

ஆனதுபற்றி, பிள்ளைகளே! நீங்கள் பிறர் பொருளின்மேல் ஆசை வைக்கக்கூடாதென்பதும், கண்டெடுத்த பொருளைச் சொந்தக்காரன் இன்னானென்று தேடி விசாரித்து அவனுக்கு அதைத் திருப்பிக்கொடுப்பதும் உங்கள் கடமையாகும். மேலும் சர்வேசுரனின் கற்பனைகளைப் பிரமாணிக்கமாய் அனுசரிப்பீர்களேயாகில் நீங்கள் சம்மனசுகளுக்கொப்பாவீர்கள். தவிர இந்தப் பத்துக்கற்பனைகள் என்கிற ஏணி வழியாய் மோட்சத்தை ஏறுவீர்களேயொழிய வேறு வழி கிடையாதென்பதை நன்றாய் அறியக்கடவீர்களாக

போதகன்.

## The Justice of God.

### தேவ நீதி.

ஹாலண்ட் தேசத்தின் ஒரு கிராமத்தில் பதிதப் பெண்பிள்ளை ஒருத்தி தன் வேதத்தில் வெகு பிடிவாதமுள்ளவளாய். அந்த ஊர் பங்குசுவாமியார்பேரில் மகாப் பகையாயிருந்தாள், இந்தப் பகைக்குக் காரணமென்னவென்றால், அவளுடைய புருஷன் கத்தோலிக் திருச்சபையில் சேர்ந்திருந்தாலும் தன் பிள்ளைகளைப் பதிதப் பள்ளிக்கூடத்திலே விடுவேனென்று அவளுக்கு வாக்குத்தத்தம் கொடுத்திருந்தான். ஆகிலும், அவன் அதைக் கவனியாமல் தன் பிள்ளைகளைக் கத்தோலிக்குப் பள்ளிக்கூடத்தில் அனுப்பியிருந்தான். ஆகையால் தன் புருஷன் இப்படிச் செய்வதற்குக் காரணம் அந்தப் பங்கு சுவாமியார்தானென்று நினைத்திருந்தாள். இது முகாந்தரமாக அவரைக் காணும்போது தன் வழக்கப்பிரகாரம் அவருக்கு ஆசாரம்பண்ணாமல், அவர்பேரில் சகல பொல்லாப்பும் வரவேண்டுமென்று திட்டுவாள். இப்படியிருக்க, இந்தச் சங்கதி நடந்து ஒருமாசமாகுமுன்னே அவளுடைய மூத்த குமாரனுக்குத் தேவகோபாக்கினை வரத் துவக்கிற்று. அவள் குருவானவருக்கு என்னென்ன நிர்ப்பாக்கியம் வரவேணுமென்று ஆசித்தாளோ அதெல்லாம் அந்தப் பையனுக்கே வந்தது. அந்தப் பையன், வர வரச் சோம்பிக் கால் ஊன்றி நிற்கமாட்டாமலும், படுத்த கிடையாய் முதலாய்க் கிடக்கக் கூடாமலுமிருந்தான். இரவும் பகலும் அவனை ஏந்தித் திரியவேண்டியிருந்தது. வைத்தியர்கள் கொடுத்த மருந்தினால் ஒரு குணமுமாகாமையால் இந்த வியாதியைச் சொஸ்தப்படுத்தக் கூடாதென்று தீர்மானித்துவிட்டார்கள். இதையறிந்த கத்தோலிக்குக் கிறீஸ்துவர்கள் "இந்தப் பையனுடைய தாய், குருவானவரைத் திட்டினதற்கு வந்த ஆக்கினை இது. சர்வேசுரன் தம்முடைய ஊழியர்களை ஒருவரும் சபிக்கும்படி விடமாட்டார் என்ற தேவ வாக்கியம் இதோ நிறைவேறினது" என்று சுவாமியைப் புகழ்ந்தார்கள்.

---



## Here and There.

### நாலு சங்கதிகள்.

Coimbatore:—சென்ற மாதம் 19-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை கோயமுத்தூர் மேற்றிராசனக் கோவிலில், சங். மாசில்லாமணி சுவாமியார், மகா கனம்பொருந்திய கோயமுத்தூர் மேற்றிராணியார் கையால் குருப்பட்டம் பெற்றார். அன்று சாயங்காலம் கோயமுத்தூர் கத்தோலிக் க்ளப் மெம்பர்கள் ஷை புது குருவானவரை அழைத்து, அவருக்கு உபசார உபந்நியாசஞ்செய்து "ட்டீ பார்ட்டி" கொடுத்தார்கள். மேலும் அந்த சமயத்தில் கோவில் கம்பவுண்டில் ஒரு டென்னிஸ் கோர்ட் ஸ்தாபித்தார்கள். ஷை புது குருவானவருக்கு மங்களம்.

Marian Congress:—மரியாயின் மகா சங்கத்துக்குப் போக பிரியமுள்ள கத்தோலிக் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு ஜனவரி மாதம் 5-ம் தேதி கூடியமட்டும் ஒருநாள் லீவு கொடுக்கப்படும்படி சர்க்காரால் உத்தரவு இடப்பட்டிருக்கிறது.

Elections:—மிஸ்டர் மஸ்கரேனஸ், மிஸ்டர் அற்புதசாமி உடையார் இவ்விரண்டு கத்தோலிக்கர் சென்னை இராஜதானி புதுச் சட்ட சபைக்குத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறார்கள். இது விஷயத்தில் கத்தோலிக்கரும் புரோடெஸ்டாண்டாரும் செய்த ஒப்பந்தம் கத்தோலிக்கருக்கு அநுகூலமாகவில்லை

Rheims Cathedral:—ஐரோப்பிய மகா யுத்தத்தில், ஜெர்மானியரால் பாழாக்கப்பட்ட ரீம்ஸ் என்னும் அதிமேற்றிராசனக் கோவிலைச் செப்பனிடுவதற்கு உதவியாக இங்கிலாந்தில் பணத்தொகை சேர்க்கும்படியான ஓர் ஏற்பாடு அலெக்சாந்திரா இராணியின் முதன்மையில் செய்யப்பட்டிருக்கிறது.

The Madras Mail:—1921-ம் வருஷம் 1-ம் தேதி முதற்கொண்டு மதராஸ் மெயில், மதராஸ் டைம்ஸ் இவ்விரண்டு பத்திரிகைகளும் ஒன்றாய்ச்சேர்ந்து, திமெயில் அண்ட் டைம்ஸ் ஆவ் மதராஸ் என்னும் ஒரே பேரால் பிரசுரிக்கப்படும் என்று தெரியவருகிறது.

Conversion:—மேஜர் ஆரிங்டன் (Harrington) என்னும் கலிலேயா தேசத்தின் கவர்னர் மனந்திரும்பி நசரேத்

என்னும் கோவிலில் ஞானஸ்நானம் பெற்று திருச்சபையில் சேர்ந்திருக்கிறார்.

Catholic union Band :—கோயமுத்தூர் கத்தோலிக் யூனியனுக்குச் சம்பந்தமாக (பாண்ட்) என்னும் ஓர் கீத வாத்தியம் ஏற்பட்டிருக்கிறது. அதின் பெயர் "கத்தோலிக் யூனியன் பாண்ட்," அதில் 13-பேர் சேர்ந்திருக்கிறார்கள்.

Indian Catholic Conference :—அடுத்த ஜனவரி-மீ மரியாயின் மகா சங்கம் முடிவான மறுநாளாகிய 7-ம் தேதியன்று இந்திய கத்தோலிக் சங்கம் ஒன்று கூடுவதற்கு ஹைக்கோர்ட் வக்கீல் மிஸ்டர் அருமைநாதபிள்ளை அவர்கள் முயற்சி எடுத்திருக்கிறார். கத்தோலிக்கர் முன்னுக்குவரவேண்டிய வழிபாடுகளைப்பற்றி ஆலோசனைசெய்யவும், பொலிட்டிக்கல் விஷயமாய்க் கவனிக்கவும் இச்சங்கம் கூடுமென்று கருதப்படுகிறது.

Railway accident :—கடந்த மாதம் 14-ம் தேதி இரவு 2-மணிக்கு மதராஸ் மெயில் பொம்டி என்ற ஸ்டேஷனில் மோதப்பட்டு 150-பேர் இறந்துவிட்டதாகவும், இன்னும் 150-பேருக்குமேல் பலமான காயங்களும், அடியும்பட்டு சாகுந்தறுவாயில் கிடப்பதாகவும் கேள்விப்படுகிறோம்........ பரிதாபம்.

Madras Legislative Council :—சென்னைப் புதுச் சட்ட சபை மந்திரிகளாக நியமிக்கப்பட்டவர்கள் :—

1. திவான் பகதூர் (ஏ) A. சுப்பராயலு ரெட்டியார் அவர்களும்,
2. திவான் பகதூர் (பி) P. ராமராயனிங்கவர் அவர்களும்,
3. ராவ் பகதூர் (கே) K. வெங்கிட்டரெட்டி நாயுடு அவர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இச்சட்ட சபைக்கு அக்கிராசனாதிபதியாக, ஸர். பி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களும், ஷை சட்டசபைக்கு செக்ரெட்டரியாக எல். டி. சுவாமிக்கண்ணுப்பிள்ளை அவர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

Notice to the Subscribers. சந்தாதார்க்கு அறிக்கை:— சத்திய தூதனின் சந்தாதார் அனைவோரும் தாங்கள் செலுத்த வேண்டிய பாக்கிச் சந்தாத்தொகையையும், இப்புது வருஷத்திய சந்தாத்தொகையையும் தாமதமின்றி அனுப்பவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். (பத்திராதிபர்.)

---

# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

**Vol. VII.** **February 1921.** **No. 2.**

புத்தகம் **VII.**] FIDES AC ROBUR. [நம்பர் **2.**

## Begone, Satan!

## சாத்தானே, அப்பாலே போ.

அப்போது யேசுநாதர் பசாசினாலே சோதிக்கப்படுவதற்கு இஸ்பிரீத்துசாந்துவினால் வனாந்தரத்துக்குக் கூட்டிக்கொண்டு போகப்பட்டார். அவர் நாற்பது இரவும், நாற்பது பகலுமாக உபவாசமாயிருந்தபின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்போது சோதனை செய்வோன் அவரண்டையில் வந்து நீர் சர்வேசுரனுடைய சுதனானால் இந்தக் கற்கள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அதற்கு அவர் மாறுத்தாரமாக மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, சர்வேசுரனுடைய வாயினின்று புறப்படுகிற எந்த வாக்கியத்தினாலும் பிழைக்கிறானென்று எழுதப்பட்டிருக்கிறது என்றார்.

அப்பொழுது பசாசானவன் அவரைப் பரிசுத்த நகரத்திற்குத் தூக்கிக்கொண்டுபோய்த் தேவாலயச் சிகரத்தில் அவரை நிறுத்தி அவரை நோக்கி: நீர் சர்வேசுரனுடைய சுதனானால் கீழே குதியும்; ஏனெனில், அவர் உம்மைக் குறித்துத்

தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறாரென்றும்; உம்முடைய பாதம் ஒருவேளை கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உம்மைத் தங்கள் கரங்களிலே ஏந்திக்கொள்வார்களென்றும் எழுதியிருக்கிறது என்றான். யேசுநாதர் அதற்கு உன் தேவனாகிய கர்த்தரைச் சோதியாதிருப்பாயாகவென்று மீளவும் எழுதியிருக்கிறது என்றார்.

பசாசானவன் மறுபடியும் அவரை எடுத்து மிகவும் உயர்ந்த ஓர் பர்வதத்தின்மேல் கொண்டுபோய், உலக இராச்சியங்கள் எல்லாவற்றையும், அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து, நீர் சாஷ்டாங்கமாக விழுந்து என்னை ஆராதிப்பீராகில் இவையெல்லாம் உமக்குத் தருவேனென்றான். அப்போது யேசுநாதர் அவனை நோக்கி: சாத்தானே, அப்பாலே போ, உன் தேவனாகிய கர்த்தரை ஆராதித்து, அவர் ஒருவரையே சேவிப்பாயாக என்று எழுதியிருக்கிறது என்றார். அப்போது பசாசு அவரைவிட்டு அகன்று போகவே, இதோ தேவதூதர்கள் அணுகி அவருக்குப் பணிவிடை செய்தார்கள்.

(மத்தேயு. IV. 1-11.)

---

## Lenten Rules.

### கோயமுத்தூர் மேற்றிராசனத்தின் தபசு காலத்து ஒழுங்குகள்.

I. ஏழு பிராயத்திற்கு மேற்பட்டவர்கள்: (1) வருஷத்தில் வரும் சகல வெள்ளிக்கிழமைகளிலும், (2) தபசுகாலத்தில் வரும் சகல புதன்கிழமைகளிலும், (3) தேவமாதா மோட்சத்துக்கு எழுந்தருளின திருநாளுக்கு முந்தின நாளிலும், (4) கர்த்தர் பிறந்த திருநாளுக்கு முந்தின நாளிலும் மாம்சம் சாப்பிடக்கூடாது.

II. 21-வயதுக்கு மேற்பட்டு 60-வயது இன்னும் தொடங்காதவர்கள் எல்லாரும்: (1) தபசுகாலத்து ஏழு வெள்ளிக்கிழமைகளிலும், (2) கர்த்தர் பிறந்த திருநாளுக்கு முந்தின நாளும் ஒருசந்தி அநுசரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.



III. தபசுகாலத்தில்: (1) ஒருசந்தி சுத்தபோசன நாட்களில் பெரிய வெள்ளிக்கிழமையுமுதலாய் எல்லாப் போசனங்களிலும் முட்டை, வெண்ணெய், பாற்கட்டி, பால் சாப்பிட உத்தரவு உண்டு. (2) மற்ற நாட்களில் அதாவது ஞாயிறு, திங்கள், செவ்வாய், வியாழன், சனி முதலிய கிழமைகளில் எல்லாப் போசனங்களிலும் மாம்சமும் மீனும் கலந்து சாப்பிட உத்தரவுண்டு.

IV. மேற்கண்ட சுதந்தர நன்மைகளை அநுபவிக்கப் பிரியமுள்ள விசுவாசிகள் அதற்குக் கைம்மாறாக ஜெப முதலிய நற்கிருத்தியங்களையும், தங்கள் சக்திக்குத் தக்காப்போலே தருமங்கொடுத்தலையும் அநுசரித்து வரக்கடவார்கள்.

V. மேற்சொன்ன ஒழுங்குகளிலிருந்து விசேஷ காரணத்தை முன்னிட்டு விசேஷ நீக்குதல் வேண்டிய விசுவாசிகள்: தங்கள் பங்குசுவாமியாரிடமாவது ஆத்தும குருவினிடமாவது யோசனை செய்துகொள்ளலாம்.

---

## The Little Garden of Roses.

### சிறு ரோஜாத் தோட்டம்.

**மலர் 16.**

"Abide in my love" (Jac. XV. 14.)

"என் சிநேகத்தில் நிலைக்கொண்டிருப்பீர்களாக" (யோவான். 15-ம் அதி. 14-ம் வச.)

1. நமது திவ்விய கர்த்தரும் இரட்சகருமாகிய சேசுக்கிறீஸ்துநாதர் திருவாக்கருளிய இவ்வார்த்தைகள் செவிக்கு எவ்வளவோ இன்பமாயிருக்கின்றன. இதனால் நாம் சர்வேசுரனுக்குக் கீழ்ப்பட்டு அவருடைய நேச அக்கினியினால் நமது

புத்திக்குமேல் உயரவேண்டுமென்பது அவருடைய சித்தம். அவரை அறிவதே மெய்ஞ்ஞானம்; அவரைச் சிநேகிப்பதே அகமகிழ்ச்சி; அவரைத் தரிசிப்பதே ஆநந்தம்; அவரோடு ஒன்றித்திருப்பதே பேரின்ப பாக்கியமாமே.

கிறீஸ்துநாதரை உண்மையாக சிநேகிக்கிறவன் மிகுதியான மனசந்தோஷத்தையும பூரண ஆத்தும ஆறுதலுமடைவான். சேசுவின் சிநேகம் பிரபஞ்ச காரியங்களெல்லாம் விழலென்று கண்டுபிடிக்கச் செய்யும்; பசாசை தைரியமாய் எதிர்த்து அதனோடு வீரத்துடன் போராடி அதைச் சுளுவில் வெற்றிகொள்ளச் செய்யும்; நரகவாசலை அடைத்து மோட்ச வாசலைத் திறக்கும்படி செய்யும்.

சேசுவின் பேரில் வைக்கும் நேசம் உறுதியும் நிலைமையுமுள்ள நேசம்; உலக நேசமோவென்றால் நிலைமையற்ற பொய்யான நேசம். இதை நேசிக்கிறவன் வறுமையுள்ளவனும் பலவீனனுமாகித் துன்பத்துக்குக் கைவிடப்பட்டவனாவான். ஒருவன் ஈரெஜமான்களைச் சேவிக்க இயலாதது போல, ஒரே சமயத்தில் சேசுவுக்கும், உலகத்துக்கும் ஊழியம்பண்ண முடியாது. உலகத்தோடு சிநேகமாதல் சர்வேசுரனைப் பகைத்தலாம். இவையிரண்டும் ஒன்றுக்கொன்று எதிரிடையாயிருப்பதால் இவையிரண்டும் ஒரே சமயத்தில் ஒருவனிடத்தில் குடிகொண்டிருக்க முடியாது.

சேசுவின் சிநேகம் எலியாஸின் இரதத்தைப்போல ஆத்துமத்தை மோட்சத்துக்குத் தூக்கிக்கொண்டு போகும். ஆனால் உலகப்பற்றுதலானது சாத்தானுடைய வாகனம் போல ஆத்துமத்தை நரகத்துக்கு இழுத்துக்கொண்டு போகும். சுயநலம் தற்கொலைக்குச் சமானம், எப்படியெனில் சுயநலமுள்ளவன் தன்னுடைய சகல சத்துருக்களாலும் உலகமுழுவதாலும் அடையக்கூடுமான தின்மையைவிடத் தானே தனக்கு அதிக தீங்கை வருவித்துக்கொள்ளுவதினால், தன்னைச் சதிமானமாய்ப் பகைத்துத் தனதாத்துமத்தைக் கொன்று நித்தியக் கேட்டுக்குள்ளாகச் செய்துகொள்ளுகிறான். ஒருவன் பிரபஞ்ச காரியங்களைத் துவேஷித்து, இவ்வுலக ஜீவியத்துக்கடுத்த காரியங்களையெல்லாம் எம்மாத்திரம் வெறுத்திருப்பானோ அம்மாத்திரத்துக்கதிகமாய் அவன் சேசுவையும் அவருடைய இராட்சியத்தையுங் கண்டடைவான்.



பொய்யான சிநேகிதனின் முகஸ்துதியான வார்த்தைகள் நீதிமானுடைய நியாயமான கண்டனையைவிட அதிகத் தீங்கிழைக்கும் மோசக்காரனுடைய மனம் எப்போதும் பொய்யையே நாடும். ஆனால் சுத்தமனதுடையவனோ எப்போதும் உண்மையுடையவனாயிருப்பான். தன்னுடைய சகோதரனைத் தூஷித்துப்பேசுகிறவன் தானும் பிறரால் அவமதிக்கப்படுவான்.

இகலோக பரலோகமெல்லாம் படைத்து எல்லாக்காரியங்களையும் சர்வ வியாபகராயிருந்து நடத்துகிற சர்வேசுரன் தமது எளிய ஆடுகள் சிதறிப்போக விடுவதில்லை. எப்படியெனில், தேவபயம் என்கிற கோலினால் சிதறிப்போகும் ஆடுகளை ஒன்றாய்க்கூட்டி மந்தைக்கு அவைகளைத் திரும்பச் சேர்க்கிறார். சர்வேசுரன் அவர்கள் பேரில் தமது கிருபாநோக்கம் பாலித்துத் தமது மாதுரிய சிநேக பந்தனத்தால் அவர்களைத் தமது சமீபத்திலிழுத்து, அவர்கள் பாவ மார்க்கத்தினின்று திரும்பி ஆத்தும இரட்சண்ய அலுவலை விரும்பவும், பசாசின தந்திரசோதனைகளிற் சிக்காமல் தமது இருதய அரணை அணுகித் தமது உத்தமோத்ம பரம அலுவலில் உறுதியாய் நிற்கவும், அவர்களுக்கு எச்சமயத்திலும் ஏராளமான தமது தேவ இஷ்டப்பிரசாதத்தையும், நித்தியக் கேட்டுக்குள்ளாகாத வரத்தையும் தந்து, கடைசியில் அவர்களைத் தமது ஆசீர்வாதத்துக்குப் பங்காளிகளாகச் செய்கிறார்.

2. எவனிடத்தில் சமாதானமும் ஒற்றுமையும் குடிகொண்டிருக்குமோ, அவனுள்ளத்தில் சேசுநாதர் வீற்றிருந்து தம்முடைய வரப்பிரசாதத்தால் அவனை நிரப்பும்போது, அவன் தன் சுபாவ பலத்தால் முடியாதெனக் காணப்படுகிற காரியங்களைச் செய்ய வல்லவனாவான்.

எவனிடத்தில் சண்டையும் விரோதமும் காணப்படுமோ அவனிடத்தில் பசாசு இருந்துகொண்டு அவனுடைய பஞ்சேந்திரியங்களைக்கொண்டும் ஆசாபாசங்களைக்கொண்டும் அவன் மனதின் சம்மதத்தைப் பறித்துக்கொள்ளும்போது அவன் சகல பாவங்களையும செய்வதில் வல்லவனாகிறான்.

ஆங்காரம் எங்கே உண்டோ அங்கே அவமானமுமிருக்கும். தாழ்ச்சி எங்கேயோ அங்கே ஞானமுமுண்டு. ஆங்காரத்தைக காலின் கீழ்ப்போட்டு மிதி. அப்போது உத்தம சமாதானத்தைக் கண்டடைவாய். எவனொருவன் ஆங்கார

மும் கோபமுமுள்ள வார்த்தைகளைப் பேசுவானோ அவன் சர்வேசுரன் சமுகத்தில் பிரியகரமாக ஏற்றுக்கொள்ளப்படும் நற்கிருத்தியங்களிலொன்றாகிய தர்மகுண சிந்தனையற்றவனாவான்.

எங்கே ஏகாந்தமும் மௌனமும் காணப்படுமோ அங்கே கிறீஸ்துநாதரின் உத்தம விசுவாசிகள் பரலோக சிந்தனை கொண்டு ஞானத்தையும் இளைப்பாற்றியையும் கண்டடைவார்கள்.

எங்கே கண்டிப்பான ஒழுங்கும் பிரயோசனமான வேலை செய்வதில் விருப்பமும் காணப்படுமோ அவ்விடத்தில் பரிசுத்த ஆத்துமாக்கள் சாங்கோபாங்க நெறியில் விருத்தியடைவதைக் காணலாம்.

எங்கே சிரிப்பும் கெட்ட நடத்தையும் ஒன்றுகூடியிருக்குமோ அவ்விடத்தில் பத்தி சுறுசுறுப்புச் சிறகெடுத்துப் பறந்துபோய்விடும். ஏனெனில் சோம்பேறியும் வீண்பேச்சுப் பேசுகிறவனும் உத்தம மனஸ்தாபமுள்ளவர்களாயிருப்பது அரிது. மேலும் அவர்கள் பாவத்தினின்று நீங்கியிருப்பது அருமையிலும் அருமையே.

எளிமையும் தாழ்ச்சியுமுள்ளவனின் மனம் எப்போதும் ஞானவின்பத்தைச் சுகிக்கும். ஆனால் வீண் சம்பாஷணைகளில் காலத்தைப் பிரயோகிக்கிறவன் தனது இரட்சண்ய அலுவலைச் செய்வதில் அசட்டையுள்ளவனாயிருப்பான்.

எங்கே சுயநலம் அதிகமாய்ப் பாராட்டப்படுமோ அங்கே தருமம் என்கிற புண்ணியம் குறைவாயும் உற்சாகமற்றதாயுமிருக்கும்.

எங்கே கிறீஸ்துநாதரின் சுகிர்த போதனைகளை அதிகமாய்ப் பின்பற்றி நடக்கிறார்களோ அங்கே அவர்கள் கடைசிவரையில் அவரைச் சிநேகிப்பதில் பிரமாணிக்கமாய் நிலைக்கொண்டிருந்து அவர் நல்லவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கும் சம்பாவனையைப் பெறுவார்கள்.

எங்கே சகோதரர்கள் ஒன்று சேர்ந்து அந்நியோந்நிய நித்திய நேசத்தால் இணைக்கப்பட்டு வாழ்வார்களோ, அங்கே மோட்சத்தின் சாயல் தோன்றும்.



எங்கே அடக்கவொடுக்கம் அநுசரிக்கப்படுமோ அவ்விடத்தில் பிறர் சுகிர்த நேசமென்கிற அக்கினி பற்றி எரிவதைக் காணலாம்.

நீ குற்றஞ் செய்யும்போது நியாயத்தோடும் விவேகத்தோடும் கண்டிக்கப்படுவாயாயின் உன் அதிகாரியின்மேல் அநியாயமாய் முறையிடுவதும் பழி சுமத்துவதும் நியாயமல்ல. "எல்லாக் காரியங்களிலும் சாந்தமுள்ளவனாயிரு. ஏனெனில் சாந்தகுணம் ஒரு உத்தமமான புண்ணியம்" என்று ஞானியொருவர் சொல்லியிருக்கிறார். புத்திமதியை அநுசரிக்கிறவன் ஜீவிய பாதையிலே நடக்கிறான். கண்டனைகளைக் நெகிழ்பவனோ அலைந்து திரிகிறான்.

(தொடரும்.) S. S. G.)

---

Do naught to others which if done to thee would cause thee pain: this is the sum of duty.—

---

## Hard to catch; when caught no good.

## பிடிக்கிறது கஷ்டம், பிடித்தாலும் உதவாது.

அமெரிக்கா தேசத்தில் பெரிய ஆஸ்திக்காரனாகிய ஒரு இலட்சாதிபதி ஒரு நாள் தன் சொந்த ஊரில் கூடின ஒரு கூட்டத்தில் உபந்நியாசஞ் செய்து சொன்னதாவது: கனவான்களே, "உலகத்திலுள்ள சகல மனிதர்களைவிட நான் அதிக செல்வமும், பாக்கியமுமுள்ளவன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் உண்மையாய்ச் சொல்லவேணுமானால் மெய்யான செல்வமும் பாக்கியமும் கிடையாது. உங்களில் இருக்கும் எந்த ஏழைகளும் என்னைவிட அதிக பாக்கியமுள்ளவர்கள். இதோ உங்களுக்கு ஓர் உவமை சொல்லுகிறேன் கேளுங்கள். ஒருநாள் ஒரு வர்த்தகன் தன் குதிரையை விற்க சந்தைக்குக் கொண்டு போனான். குடியானவன் ஒருவன் அந்தக் குதிரையைப் பார்த்து நல்ல குதிரை என்று எண்ணி அதை வாங்கப் பிரியப்பட்டான். ஆனால் அதின் விலையைத் தீர்மானிக்கிறதற்கு முன்

அதின் குணத்தில் ஏதாவது குறை உண்டோவென்று வர்த்தகனைக்கேட்டு விசாரித்தான்.

வர்த்தகன். இந்தக் குதிரைக்கு இரண்டு துர்க்குணங்கள் உண்டு.

குடியானவன். அந்தத் துர்க்குணங்கள் என்ன?

வர்த்தகன். நீ இந்தக் குதிரையை வாங்குமுன் அவைகளில் ஒன்று மாத்திரம், சொல்லுவேன். கிரயங் கொடுத்து வாங்கினபின் வேறொன்றைச் சொல்லுவேன்.

குடியானவன். அப்படியாகட்டும். சொல்லு.

வர்த்தகன். இக்குதிரையின் முதல் துர்க்குணம் என்னவென்றால் இதை கைபோட்டுப் பிடிக்கிறது மகா கஷ்டம்.

குடியானவன். (சிரித்துக்கொண்டு) சரி பரவாயில்லை. இதோ கிரயம் வாங்கிக்கொள். இரண்டாவது துர்க்குணம் என்ன? சீக்கிரம் சொல்.

வர்த்தகன். பணத்தைக் கவனமாய் எண்ணிக்கொண்டு தட்டிகணக்கு சரியென்று நிச்சயப்பட்டு காதோடு காதாய்க் குடியானவனுக்கு சொன்னதாவது :

இக்குதிரையின் இரண்டாம் துர்க்குணம் என்னவென்றால், இதைக் கையோடு பிடித்தபிறகு, இது ஒன்றுக்கும் உதவாது என்று சிரித்துக்கொண்டு போனான்.

கனவான்களே, இந்தக் குடியானவனைப்போல, நானும் ஏமாந்து உதவாத குதிரை வாங்கிக்கொண்டேன். அதாவது, "நான் ஆஸ்திபாஸ்தியை வெகு ஆவலோடு தேடியடையப் பிரயாசப்பட்டேன். எண்ணிலடங்காத ஆஸ்தியைச் சம்பாதித்தேன். அதைச் சம்பாதிக்கிறது வெகு கஷ்டம். அதைச் சம்பாதித்தபிறகு அது வீணிலும் வீண் என்று அறிந்துகொண்டேன். எவன் தன் சுய நன்மையை மாத்திரம் கவனித்துப் பிறருக்கு உதவி, தர்மம் செய்யாமல் போகிறானோ அவனுக்கு மெய்யான செல்வமும், பாக்கியமும் கிடையாது."

(Olim.)

**சுகிர்த வாக்கியம்.** பாவத்தையும், பாவத்துக்கு ஏதுவானதையும் விலக்கி நட. இதற்காக உன் கடைசி முடிவுகளை நினைத்துக்கொள். நீ சாவது நிச்சயம்; சாவுக்குப்பின் தீர்வை, தீர்வைக்குப்பின் நித்திய மோட்ச பாக்கியம் அல்லது நித்திய நரக ஆக்கினை.

"The way of the cross is the way to heaven."

---

# History of the Diocese of Coimbatore.

## கோயமுத்தூர் மேற்றிராசனத்தின் சரிதை.

(முன் தொடர்ச்சி.)

1836-1845-ம் வருஷத்திய காலத்தில் நடந்த கோவா என்னும் பிரிவினைக்கு சமமந்தமாக கோயமுத்தூர் நாட்டில், பட்லராகிய பிலிக்ஸ் ஜோயக்கிம் என்பவன் திருச்சபைக்கு விரோதமாய் சில சச்சரவுகளைச் செய்துகொண்டிருந்தான். அவன் ஒத்தகமந்தில் வசித்திருந்தான். அங்கே பிரிவினைக்காரருக்காக ஒரு சின்னக் கோவிலைக் கட்டி அதில் வேத ஆசாரங்களைத் தன் இஷ்டப்படி நடத்தும் அதிகாரத்தை எடுத்துக்கொண்டான். அங்கிருந்து சுற்றிப்போய் 1842-ம் வருஷத்தில் அத்திக்கோடு, பாலக்காடு, எரிச்சாம்பொதி, சவேரியார் பாளையம் முதலிய ஊர்களில் சில கெட்ட கிறீஸ்துவர்களோடே சேர்ந்து குழப்பம் எழுப்பப் பிரயாசப்பட்டான்.

1846-ம் வருஷம் கனம்பொருந்திய டிப்றெசியாக் (de Bresillac) ஆண்டவர் 4 வேத போதகர்களுடைய உதவியைக் கொண்டு கோயமுத்தூர் மிஷனை விசாரித்துக்கொண்டிருந்தார். அப்போது சுதேச குருவானவர் ஒருவரும் இல்லை. அக்காலத்தில் ஷை மிஷனில் 50 சின்னக் கோவில்களும் 7 பள்ளிக்கூடங்களும் இருந்தன. கிறீஸ்துவர்களுடைய தொகை சுமார் 16,000 பேர். அப்போது கோயமுத்தூர் மிஷன் கருமத்தன்பட்டி, கொடிவேரி, தாராபுரம், சென்னிமலை, கோயமுத்தூர், நீலகிரி, கோவில்பாளையம், பாலக்காடு, வடக்கஞ்சேரி, அத்திக்கோடு, ஆகிய 10 பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவைகளில் கருமத்தன்பட்டி பங்குதான் பிரதானமானது. அதில் 9000 கிறீஸ்துவர்கள், 22 முக்கிய கோவில்களும், 20 ஜெபக்கூடங்களும் இருந்தன. ஒரே குருவானவர் அந்தப் பங்கை விசாரித்துக்கொண்டிருந்தார்.

கொடிவேரி பங்கில் சிறிதும், ஏழையுமான கோவில் ஜெபக்கூடங்கள் 18.

தாராபுரம் பங்கில் கோவில் ஒன்றுமில்லை. பழைய கோவில் பூமி அஞ்ஞானிகளுக்குச் சொந்தமாய்ப் போய்விட்டது.

சென்னிமலைப் பங்கில் 4 கிறீஸ்துவக் கிராமங்கள் சேர்ந்தன. அதில் 2 சின்னக் கோவில்கள். குருவானவர் ஒருமாதமாக அவ்விடத்தில் தங்கி விசாரணை செய்வார்.

கோயமுத்தூர் பங்கில் 4 சின்னக் கோவில்கள் இருந்தன. அதைச்சேர்ந்த சவேரியார்பாளையத்தில் மாத்திரம் குருவானவருக்கு வாசஸ்தலமிருந்தது. அக்காலத்தில் கோயமுத்தூர் பங்கைச்சேர்ந்த கிறீஸ்துவர்களில் அநேகர் மெய்விவாகம் செய்யாமல் அஞ்ஞானக் கலியாணம் செய்துகொண்டார்களாம்.

நீலகிரி பங்கில் 1750 கிறீஸ்துவர்கள். அவ்விடத்தில் இருந்த கோவில் மிகவும் சிறிதும் ஏழையுமானது.

பாலக்காட்டுப் பங்கைச்சேர்ந்த 4534 கிறீஸ்துவர்கள், 42 கிராமங்களில் பிரிந்திருந்தார்கள். அதில் 11 கோவில்களும், 5 ஜெபக்கூடங்களும், 2 பள்ளிக்கூடங்களும் இருந்தன. ஷை பங்கு, கோவில்பாளையம், வடக்கஞ்சேரி, அத்திக்கோடு, பாலக்காடு ஆகிய 4 பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அப்போது பாலககாட்டுக் கோட்டையில் சேனை இருந்தது. அங்கேயிருந்த சேவகர்களில் பற்பல கிறீஸ்துவர்கள் இருந்தார்கள். அக்காலத்தில் கிறீஸ்துவர்களும், குருக்களும் அதிக தரித்திரமுள்ளவர்கள். அநேக பிள்ளைகளைப் பெற்று வளர்க்க, உழைக்கக் கஷ்டப்படும் ஒரு குடும்பத்தைப்போலவே, வேதபோதகர்கள் கோவில்களையும், கிறீஸ்துவர்களையும், நல்ல அந்தஸ்துக்குக் கொண்டுவரவேணுமென்று விரும்பி, பிரயாசப்பட்டு, இங்கும் அங்கும் கூடியமட்டும் சின்னத் துண்டு பூமிகளை 100, 200, 400 ரூபாய்களுக்கு கொஞ்சங் கொஞ்சமாய் வாங்கிக் கொண்டு வந்தார்கள். பிராஞ்சு இராச்சியத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் விசுவாசப் பரம்புதல் சபையிலிருந்து வந்த பண உதவிகள் அத்தனையும் அவசரமான வேலைகளையும் புது ஏற்பாடுகளையும் செய்வதற்குப் பற்றவில்லை.

குருமடம் 1846-ம் வருஷம் ஜனவரி-மீ 21-உ புரோவிக்காரிய மிகவும் சங்கைக்குரிய ஜரிழ் (Jarrige) கோயமுத்தூர் மிஷனை விசாரிக்கும் காலத்தில் ஷை மிஷனில் கருமுத்தன்பட்டி என்ற ஊரில்தான் முதலில் சுதேச குருமடம் கட்டப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அது அர்ச். சூசையப்பரு



டைய பரிபாலனத்தில் வைக்கப்பட்டது. அதில் சேர்ந்த முதல் மாணாக்கர்கள் அருளப்பன், இராயப்பன், சவரிமுத்து, அந்தோணிமுத்து என்பவர்களாம். இந்நான்கு பேரும், குருப்பட்டம் பெற்றார்கள். பிறகு கோயமுத்தூரில்தானே கனம்பொருந்திய டிப்றெசியக் ஆண்டவரால் ஒரு பெரிய கோவிலின் அஸ்திவாரம் கட்டப்பட்டு ஷை ஊர் மிஷனின் தலையான நகரமாக தெரிந்துகொள்ளப்பட்டதினிமித்தம் கனம்பொருந்திய கோடெல் (Godelle) ஆண்டவர் உத்தரவின்படி 1859-ம் வருஷத்தில் குருமடம் கோயமுத்தூருக்கு மாற்றப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டது. அதினிமித்தம் 4000 ரூபாய்க்கு ஒரு வீடு வாங்கப்பட்டது. அப்போது அவ்வூரில் இருந்த கிறீஸ்துவர்கள் வெகு சொற்பம்.

குருமடத்து மாணாக்கர்களுக்குத் தேவையான பல உபாத்திமார்களைத் தேடி அடையும் விஷயத்திலும் மற்ற விஷயங்களிலும் கருமுத்தன்பட்டியைவிட கோயமுத்தூர் தகுந்த இடமென்று விவேகமாய் எண்ணப்பட்டது.

---

## The Correct Things for Catholic Associations.

## கத்தோலிக் சங்கங்களில் அநுசரிக்கும் ஒழுங்குகள்

I. கத்தோலிக் சங்கங்களைச் சேர்ந்தவர்கள், ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒழுங்குகளை சரிவர அநுசரிப்பது ஒழுங்கு.

சங்கத்தின் கூட்டங்களில் கூடுமானமட்டும் ஆஜராயிருப்பது ஒழுங்கு.

ஒவ்வொருவனும் தன்னைத்தான் மேன்மையாக எண்ணாமல் கொஞ்சமாகிலும் தாழ்மையாயிருப்பது ஒழுங்கு.

பங்குக் குருவானவர் அங்கீகரிக்காத எந்த சங்கத்தையும் தாமதமின்றி தள்ளிவிடுவது ஒழுங்கு.

மெம்பர்கள் எல்லோரும் ஒரே சமயத்தில் தலைவராயிருக்க முடியாதென்று எண்ணுவது ஒழுங்கு.

குறிக்கப்பட்டிருக்கும் நாட்களில் திவ்விய நன்மை வாங்குவது ஒழுங்கு.

ஏற்படுத்தப்பட்டிற்கும் சந்தாக்களை தாமதமின்றி செலுத்துவது ஒழுங்கு.

ஒவ்வொருவனும் தன்னைமாத்திரம் நினையாமல், பொது நன்மையை முக்கியமாய்த் தேடுவது ஒழுங்கு.

ஏழைகளும் ஆஸ்திக்காரர்களும் ஒரே சபையில் சேர்ந்து அந்நியோந்நிய நேசமாயிருப்பது ஒழுங்கு.

II. ஒரு சபையின் சட்டங்களை அறியாமல் அதிலே சேருவது ஒழுங்கல்ல.

செக்ரெட்டரிக்கு தெரிவிக்காமலும் சரியான முகாந்தரமில்லாமலும் கூட்டத்துக்கு வராமலிருப்பதும் ஒழுங்கல்ல.

சபையின் ஒழுங்குகளை மீறி உத்தியோகஸ்தர்களுக்கு கீழ்ப்படியாமல், மற்ற சபையோர்களுக்கு துர்மாதிரிகை காட்டுவது ஒழுங்கல்ல.

சபையின் உத்தியோகஸ்தர்கள் தங்கள் மகிமையை மாத்திரம் நினைத்து தங்கள் உத்தியோகத்தைக் கவனியாமல் விடுவது ஒழுங்கல்ல.

சபையோர்கள் உத்தியோகஸ்தர்களிடம் அநியாயமாய்க் குற்றம் கண்டுபிடிப்பது ஒழுங்கல்ல.

ஒரு கையால் சுவாமிக்கு ஊழியஞ் செய்து, வேறொரு கையால் அல்லது வாயினால் பசாசுக்கு ஊழியம் செய்வது ஒழுங்கல்ல.

ஒரு சப்ஸ்கிரிப்ஷன் லிஸ்டில் தன் கையொப்பம்போட்டு குறித்த பணத்தைச் செலுத்தாமலிருப்பது ஒழுங்கல்ல.

அற்ப ஒவ்வாமையினால் இராஜினாமாக் கொடுத்து சபையை விடுவது ஒழுங்கல்ல.

சபையோருக்குள்ளே கட்சியை எழுப்பி பிரிவினை செய்வது ஒழுங்கல்ல.

பங்கு குருவானவரால் அங்கீகரிக்கப்படாத எந்த சபையிலும் சேருவது ஒழுங்கல்ல.

---

## The Marian Congress

### மரியாயின் மகா சங்க வைபவச் சிறப்பு.

சுமார் 7, 8 வருஷங்களாக மிக்க ஆவலுடன் யாவராலும் எதிர் பார்க்கப்பட்டிருந்த மரியாயின் மகாசங்கம் கடைசியாக சென்னைமாநகரில் கூடினது. இந்தியாவின் பலபாகங்களிலிருந்தும், பர்மா, சிலோனிலிருந்தும் ஆயிரக்கணக்கான மரியாயின் பக்தர்கள் சென்னை வந்து சேர்ந்தார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவி புரியவும், அவர்கள் தங்க வேண்டிய இல்லிடங் காட்டவும், "மரியாயின் மகாசங்கம், நமது தேவதாயின் வழிகாட்டிகள்" என்று ஆங்கில பாஷையில் எழுதப்பட்ட கொடிகளைக் கரங்களில் அணிந்திருந்த மரியாயின் வழி காட்டிகள், யாதோர் கஷ்டத்திற்கும், வருத்தத்திற்கும் பின் வாங்காமல், மிக்க சந்தோஷத்துடனும், மலர்ந்த முகத்துடனும் ஸ்டேஷன்களிலும், பட்டணத்தின் பல இடங்களிலும் எந்நேரமும் காத்திருந்தார்கள். இவ்வேற்பாடு பட்டணத்தை முதல் தடவை பார்க்கும் கிறீஸ்துவர்களுக்கு மிக்க பிரயோஜனமாயிருந்தது. பாப்பரசரின் ஸ்தானாபதியான மகா வந்திக்கத்தக்க பிசானி ஆண்டவர் ஸ்பெஷல் வண்டியில் ஜனவரி மாதம் 4 தேதி காலை சென்னை வந்து சேர மிக்க ஆரவாரத்துடன் அவரைச் சங்கசாலைக்கு அழைத்துச்சென்று, அங்கு கனம் ஜெகநாதபிள்ளை அவருக்கு வந்தனோபசாரப் பத்திரம் வாசித்தார். பல்லாயிரம் ரூபாய் செலவு செய்து கிரீக் சிலுவை (+) வடிவாகத் தீவின் மேற்கு பக்கத்தில் கட்டப்பட்ட மரியாயின் மகா சங்கசாலை மிகவும் அலங்காரமாயிருந்தது. மாலைகளாலும், காகித விளக்குகளாலும், பாப்பரசரின் மஞ்சக் கொடிகளாலும், மரியாயின் பச்சக் கொடிகளாலும், இன்னு மற்ற அநேக கொடிகளாலும், விசித்திரமாகச் சோடிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு சாலையும் 2000 பேருக்கதிகமாக உட்காரக்கூடிய அவ்வளவு பெரிதாகயிருந்தது. அதனைக்கண்ட மரியாயின் பக்தனே அதன் சிறப்பலங்காரத்தை நன்கு உணரக்கூடும்.

ஜனவரிமாதம் 4-ம் தேதி மாலை $5\frac{1}{2}$ மணிக்கு நமது பாப்பாண்டவரின் ஸ்தானாபதி மகாசங்கத்தைத் துவக்கினார். மகா வந். சென்னை அதிமேற்றிராணியார் ஆலன் ஆண்டவர்

வரவேற்றல் உபந்நியாசம் புரிந்தார். பிரதிஷ்டைக்குரிய அபிஷேக உபந்நியாசம் மகா வந். பம்பாய் அதிமேற்றிராணியார் கூடியர் ஆண்டவரால் என்றும் மறக்கப்படாத அவ்வளவு நேர்த்தியாகச் செய்யப்பட்டது. அதன் பின்னர் நமது பாப்பாண்டவருக்கும், இராஜ சக்கரவர்த்தி அவர்களுக்கும் இந்திய கத்தோலிக்கருடைய இராஜ பக்தியைக்காட்டும் இரு தந்தியனுப்பப்பட்டது. கூடியிருந்த எல்லோருக்கும் பாப்பரசரின் ஆசீர்வாதம் பாப்பரசரின் ஸ்தானாபதியால் அளிக்கப்பட அன்றைய கூட்டம் கலைந்தது. 5-ம் தேதியாகிய மறுநாளும், 6-ம் தேதியும் சென்னை இருமேற்றிராசனக் கோவில்களிலும், மகா சங்கசாலையிலும் காலை 6½ மணிக்குமேற்றிராணிமார் பெரிய பாடல் பூசை (Pontifical High Mass) நடந்தது. மலையாள சீமையிலிருந்து வந்திருந்த சுதேச மேற்றிராணிமார்கள் சங்கசாலையில் செய்த சீரியன் பெரிய பாடல் பூசைக்கே பல்லாயிரம் ஜனங்கூடியிருந்தார்கள். என்றுங் கண்டிராத அப்பூசையின் சடங்குகளைக் கண்ணுற்ற மரியாயின் பக்தர்கள் அகமகிழ்ந்து தங்களுக்குக் கிடைத்த பாக்கியமே பாக்கியமென்றார்கள். அவ்விருதினங்களிலும் காலை 10 முதல் 12 மணி வரையிலும் மாலை 2 முதல் 4 மணிவரையிலும் மகாசங்கங் கூடப்பட்டுப் பற்பல இடங்களில் பல பாஷையில் வேத சம்பந்தமான காரியங்களைப்பற்றி உபந்நியாசங்கள் நடைபெற்றன. பந்தலின் நான்கு சாலைகளிலும் ஒரே நேரத்தில் ஆங்கில பாஷையில் நான்கு உபந்நியாசங்கள் நடந்தன. தமிழ், மலையாளம், தெலுங்குப் பாஷைகளில் வேறு இடங்களில் உபந்நியாசங்கள் அதே நேரத்தில் நடந்தன. சகலமும் சிறப்பாகவே நடந்து முடிந்தன. இவ்வுபந்நியாசங்களின் சில தீர்மானங்கள் யாதெனில் :—

இந்திய கத்தோலிக்கரனைவரும் எப்போதும் ஒன்றுகச் சேர்ந்து சத்தியவேதம் இந்தியா, பர்மா, சிலோன் முழுவதிலும் பரம்பும்படியாக மரியாயின் மகா சங்கங்காட்டும் வழிப்பாடுகளைக் கையாடி வரவேண்டுமென்றும், (1) ஞான ஒடுக்கம், தங்களால் ஆனமட்டும் கத்தோலிக்குப் பத்திரிகைகள் எங்கும் பரம்பும்படி உதவி புரியவும், சுதேசக் குருக்கள் அதிகரிக்க உதவிசெய்யவும், மரியாயின் நாமத்தை இன்னுமதிகமாகப் பிரபலியப்படுத்தவும், தங்களுக்கும் தங்கள் கூட்டம் குடும்பங்களுக்கும் அத்தேவதாயின் சகாயம் கிடைக்க இன்னது செய்ய வேண்டுமென்றும், (2) மரியாயின் சபை எங்கும ஸ்தாபித்து, அதில சேர்வது, தங்கள் பிள்ளைகளுக்குத் தக்க படிப்பினை



கொடுக்க இன்னின்ன காரியங்களைக் கவனிக்கவேண்டுமென்றும், (3) பிள்ளைகளைக் கத்தோலிக்குப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவது, ஞானோபதேசத்திற்குத் தப்பாமல் அனுப்புவது, வீட்டில் நல்ல மாதிரிகைக்காட்டி வளர்ப்பது......ஆகிய இவைகளைத் தீர்மானித்தது. சங்கத்தின் கடைசி தினமாகிய 6-ம்தேதி மாலை4½ மணிக்கு சகல கிறீஸ்துவர்களும், குருக்களும், மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமார்களும் அணியணியாய்த் தேவதாயைக் குறித்துப் பாடிக்கொண்டும், ஜெபமாலை ஜெபித்துக்கொண்டும், மரினு என்ற கடற்கரை பாண்ட் ஸ்தானத்திலிருந்து சங்கச்சாலைக்குப் புறப்பட்டார்கள். பார்ப்பவர்கள் மனதைக் கவரக்கூடிய அம்மகத்தானதும், அலங்காரமானதும், பக்திக்குரியதுமான அம்மரியாயின் பக்தர்களுடைய சுற்றுப்பிரகாரம், சத்தியவேதமே மெய்யான வேதமென்று பட்டணமறியச் சாற்றி, மரியாயின் மகத்துவத்தை வெளியாக்கினது. சுற்றுப்பிரகாரம் பந்தல் சேர்ந்ததும் தேவதாயின் பேரில் பல பாட்டுகள் பாடினார்கள். பிறகு மகா சங்கத்தின் தீர்மானங்கள் வாசிக்கப்பட்டன. அதன் பின் பாப்பரசரின் ஸ்தானாபதி மகா வந். பிசானி ஆண்டவரவர்கள் சங்கம் நேர்த்தியாக முடிந்ததைப் பற்றி தேவ நாபகித்த நன்றியறிந்த தோஸ்திரம் சொல்லி, இந்தியா, பர்மா, சிலோனின் சகல மதஸ்தரும் சத்திய மதமாகிய ஒரே மந்தையில் சேரும்படியாக சகல கத்தோலிக்கரும் தங்கள் தங்கள் வேத அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிந்து, அவர்களுடன் ஏகோபித்து தங்களாலான உதவிபுரிய வேணுமென்றுசொல்லி, பாப்பரசரின் ஆசீர்வாதங் கொடுத்தார். பிறகு "தேதேயும்" என்ற தோத்திரப் பாடல்பாடி, திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதங் கொடுத்து, மரியாயின் மகா சங்கத்தை முடித்தார். அப்போது அம்மைதானத்தில் கூடியிருந்த ஜனக்கூட்டம் சுமார் ஒரு லக்ஷத்திற்கு அதிகமாயிருக்குமென்று சொல்லலாம். சங்கத்தின் முதல் தினத்திலிருந்து கடைசி பரியந்தம் தஞ்சாவூர் சலேஸியன் பாண்ட் வாத்தியம் நேர்த்தியாகவும் இனிமையாகவும் பல இராகங்கள் வாசித்தது. சங்கம் முடிந்ததும் வாணவேடிக்கைப் பார்க்க ஜனங்களெல்லோரும் மைதானத்தில் திரண்டார்கள். வாணவேடிக்கையும் வெகு நேர்த்தியாகவே இருந்தது. ஆண் பெண் பலரும் அவைகளைக் கண்ணுற்று ஆனந்தித்தார்கள். ஆனால் ஐயோ! வெகு சீக்கிரத்தில ஆனந்தம் துக்கமாக மாறிற்று. ஏனெனில் வாணங்களில ஒன்று ஆகாயத்தில் வெடிக்க இரு தீப்பொறிகள் பந்தலின் ஒரு சாலையின்மேல் விழுந்தது. உடனே மரியாயின் பக்தர்கள் அதனை அவிக்கப் பட்ட வருத்தத்திற்கும், கஷ்டத்

திற்கும் அடங்காமல், 8,000 பேருக்கதிகமாக உட்காரக்கூடிய அப்பிரமாண்டமான பந்தல் பத்தே நிமிஷத்தில் தரைமட்டமாக எரிந்துபோயிற்று. "Sic transit gloria mundi, இவ்வுலக ஆடம்பரங்களெல்லாம் அவ்விதமே அழிந்து போகின்றது." மரியாயின் பக்தர்களெல்லாம் துக்கசாகரத்தில் அமிழ்ந்தினவர்களாய்த் தங்கள் தங்கள் இல்லிடஞ் சென்றார்கள்.

அமலோற்பவ நாயகியே! உமது சங்கத்தை அத்தனை அலங்கார சிறப்புடன் நடத்திய இந்தியா, பர்மா, சிலோன் கத்தோலிக்கர்பேரில் உமது ஆசீரைப்பொழியும். அர்ச். மரியாயின் மாசற்ற இருதயமே! இந்தியா, பர்மா, சிலோனுக்காக வேண்டிக்கொள்ளும்.

கண்டு களித்தோன்.

---

## Village Panchayat Courts.

## கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகள்.

(சென்னை பப்ளிஸிட்டி பீரோவிலிருந்து).

**ஸ்தாபிக்கப்படும் கோர்ட்டுகளின் சங்கியை:**—1920-ம் வருஷாரம்பத்திலே கவர்ன்மெண்டார் ஒரு சட்டம் ஏற்படுத்தினார்கள். அந்தச் சட்டத்தின்படி ஒரு கிராமத்திலாவது அல்லது பல கிராமங்களைச் சேர்த்துத் தொகுதியாக்கி, அந்தத் தொகுதிக்காவது பஞ்சாயத்துக் கோர்ட்டுகளை ஏற்படுத்த கவர்ன்மெண்டாருக்கு அதிகாரம் உண்டாயிருக்கிறது; அந்தப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்கு வல்லப மதிப்புள்ள ஸிவில் கிரிமினல் கேசுகளை விசாரணை செய்ய அதிகாரம் உண்டு. இந்த ஆக்டு ஏற்பட்டபிறகு, இதுவரையிலும் (சென்னை ராஜதானியில்) 79 கிராமங்களில் ஷை பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் ஏற்படுத்த சர்க்கார் உத்தரவு போட்டிருக்கின்றனர். அடுத்த 12 மாதங்களுக்குள் இன்னம் அநேகம பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் ஏற்படப்போவதை நாம் எதிர்பார்க்கலாம்.



**பஞ்சாயத்துக் கோர்ட்டுகளின் அமைப்பு:**—பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் பின்னால் சொல்லப்படும் முக்கியமான நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏற்படுத்தப்படும்.

**யார் யார் பஞ்சாயத்தார்கள் ஆகலாம்:**—பஞ்சாயத்துக்கோர்ட்டு ஏற்படுத்த ஸர்க்கார் உத்திரவு பிறப்பித்ததும், ஜில்லா கலெக்டர், அந்த கோர்ட்டுக்கு எவ்வளவு பஞ்சாயத்தார்கள் நியமிக்கவேண்டும் என்பதை தீர்மானப்படுத்துவார். 5 பேருக்குக் குறைச்சலாகவாவது, 12 பேருக்கு அதிகமாகவாவது பஞ்சாயத்தார்கள் ஒரு பஞ்சாயத்துக் கோர்ட்டுக்கு இருக்கக் கூடாது.

**பஞ்சாயத்தார்கள் தெரிந்தெடுக்கப்படுவது:**—பஞ்சாயத்துக் கோர்ட்டுக்கு மெம்பர்கள், (கிராமத்திலுள்ளவர்களால்) தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

**அவர்கள் எத்தனைகாலம் மெம்பராயிருக்கலாம்:** பஞ்சாயத்துக் கோர்ட்டு மெம்பர்கள் மூன்று வருஷகாலம் பஞ்சாயத்தார்களாக இருக்கலாம்.

**ஷை கோர்ட்டுக்கு அக்கிராசனாதிபதி:**—பஞ்சாயத்துக் கோர்ட்டுக்குத் தேர்ந்து எடுக்கப்பட்ட மெம்பர்கள், தங்களிலிருந்து ஒருவரை அக்கிராசனாதிபதியாகத் தேர்ந்து எடுக்கவேண்டும். எப்போதாகிலும் அப்படி தேர்ந்தெடுக்கப்படும் அக்கிராசனாதிபதி கோர்ட்டுக்கு வராமலிருந்தால், ஆஜராயிருக்கும் இதர பஞ்சாயத்தார்கள், தங்களிலிருக்கும் ஒருவரை அந்தக் காலத்திற்கு அக்கிராசனாதிபதியாகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும்.

பஞ்சாயத்துக் கோர்ட்டார் ஏதாகிலும் நடவடிக்கை நடத்தவேண்டிவந்தால், அந்த கோர்ட்டு அக்கிராசனாதிபதி, பஞ்சாயத்தார்களைக் கோர்ட்டுக்கு வரும்படி செய்யவேண்டும். பஞ்சாயத்தார்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே, நடவடிக்கை நடத்த, மூன்றுநாள் முன்னாடியே அக்கிராசனாதிபதி நோட்டீஸ் அனுப்பவேண்டும்.

**தீர்மானங்கள் செய்யவேண்டிய மாதிரி:**—ஏதாகிலும் ஒரு கேஸை விசாரணைசெய்து தீர்ப்புச்சொல்லவேண்டுமானால், பஞ்சாயத்துக் கோர்ட்டில் மூன்று பஞ்சாயத்தார்களுக்குக் குறையாமல் அவசியம் இருந்தே நடவடிக்கை நடத்தவேண்டும்.

ஆஜராயிருக்கும் பஞ்சாயத்தார்களில் பெரும்பான்மையோர் அபிப்பிராயப்படித்தான் தீர்ப்புச் சொல்லவேண்டியது. எப்போதாகிலும் ஷை பஞ்சாயத்தார்கள் ஒரே மாதிரியாய் தீர்ப்புச் செய்ய முடியாமல் போய், இரு கட்சியாய்ப் பிரிந்து, ஒவ்வொரு கட்சியிலும் பஞ்சாயத்தார்கள் ஓட்டும் சரிசமமாகப் போய்விட்டால், அக்கிராசனாதிபதி பிரத்தியேகமாய் எந்தக் கட்சிக்காகிலும் தான் ஒரு ஓட்டுகொடுத்து, கேஸை தீர்மானம் செய்துவிடலாம்.

பஞ்சாயத்தார்களைத் தேர்ந்தெடுத்தல்:—பஞ்சாயத்தார்களாய் வர என்ன அருகதை வேண்டும் என்பதைப்பற்றியும், யார் யார் பஞ்சாயத்தார்களைத் தேர்ந்தெடுக்கலாம் என்பதைப்பற்றியும், எப்படி அவர்களைத் தேர்ந்தெடுப்பது என்பதைப்பற்றியும் பின்வரும் நிபந்தனைகள் தற்கால அவசரத்திற்கு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன:—

பஞ்சாயத்தார்களின் அருகதை:—பஞ்சாயத்தாராய் ஏற்படுத்தப்படுபவர், ஆண்பிள்ளையாயும், 25 வயதுக்குக் குறையாமலும், எழுதப்படிக்கத் தெரிந்தவருமாய் இருக்கவேண்டும். தவிரவும், (1) பத்து ரூபாய்க்குக் குறையாமல் வருமான வரியாவது, அல்லது (2) வீட்டு வரியாவது, தொழில் வரியாவது கட்டவேண்டும்; அல்லது (3) சர்க்காருக்கு பத்து ரூபாய்க்குக் குறையாமல் நிலவரிகட்டும் பட்டாதாரராகவாவது, அல்லது ஜமீன்தாரராகவாவது, அல்லது, பத்து ரூபாய்க்குக் குறையாமல் 'கிவிட்ரெண்டு' கட்டும் இனாம்தாரராகவாவது இருக்க வேண்டும்; அல்லது (5) 20 ஏகரா நிலத்திற்குக் குறையாமல் பூமி வைத்திருக்கும் இனாம்தாரராகவாவது; அல்லது (6) 50 ரூபாய்க்குக் குறையாமல் குத்தகை கட்டுவதாய் ரிஜிஸ்தர் செய்து பத்திரமூலமாய் ஒப்புக்கொண்டிருக்கும் குத்தகைதாரராகவாவது இருக்கவேண்டும். கிராம உத்தியோகஸ்தர்கள் அல்லாத இதர சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், ஷை பஞ்சாயத்துக் கோர்ட்டுக்கு மெம்பர்களாக வரக்கூடாது. ஏதாகிலும் ஒரு பெருத்த குற்றம் செய்ததற்காக சிக்ஷை விதிக்கப்பட்டிருக்கும் எவனும் ஷை பஞ்சாயத்துக் கோர்ட்டுக்கு மெம்பராக வரக்கூடாது.

பஞ்சாயத்தார்களை யார் யார் தேர்ந்தெடுப்பது:—பஞ்சாயத்தார்களை கிராமத்திலுள்ள பருவம் வாய்ந்த எல்லா ஆண்பிள்ளைகளும் தேர்ந்தெடுக்கலாம்.



ஷை பஞ்சாயத்தார்களைத் தேர்ந்தெடுக்கும் மாதிரி:—எந்தத் தேதியில் எந்த வேளையில் பஞ்சாயத்தார்களைத் தேர்ந்தெடுப்பது என்பதைப்பற்றி கிராம அதிகாரி, கிராமத்தில், சேர்ந்தாற்போல் மூன்று நாளைக்குத் தம்பட்டம் போட்டு கிராமத்தார்களுக்கு அறிவிப்பார். டிப்டி தாசில்தாருக்குத் தாழ்ந்திராத ஒரு ஸர்க்கார் உத்தியோகஸ்தர் முன்னிலையில்தான், கிராமத்தார்கள் சேர்ந்து பஞ்சாயத்தார்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்பேர்ப்பட்ட ஸர்க்கார் உத்தியோகஸ்தரில் ஒருவர், வந்திருந்து பஞ்சாயத்து எலக்ஷனை நடத்தி வைப்பார். எலக்ஷன் செய்வதற்கு ஆஜராய் வந்திருக்கும் கிராமத்தார்களில் யாராகிலும் இரண்டுபேர்களால் பஞ்சாயத்து மெம்பராக வர உத்தேசிக்கும் ஒவ்வொரு நபரும் நேமகம் செய்யப்படவேண்டும். அப்படி நேமகம் செய்வது வாய்மொழியாவாவது எழுத்து மூலமாயாகவாவது இருக்கலாம். எலக்ஷன் காலத்தில் ஆஜராயிருக்கும் கிராமத்தார்கள், தாங்கள் யாரை பஞ்சாயத்தாராக ஏற்படுத்த எண்ணுகிறார்களோ, அவரை ஏற்படுத்துவதற்குத் தங்களுக்கு இஷ்டம் இருக்கிறது என்பதை, தங்கள் கையை உயரத்தூக்கிக் காண்பிக்க வேண்டும். அப்படிக் கையை உயர்த்திக் காட்டுபவர்களை எல்லாம் எண்ணி வோட்டு எடுத்துப்பார்த்து, யாருக்கு அதிக வோட்டு வந்திருக்கிறதோ அவரையே பஞ்சாயத்தாராகத் தேர்ந்தெடுத்ததாகும்.

பஞ்சாயத்து எலக்ஷன் சம்பந்தமான ஆக்ஷேபனைகள்:—பஞ்சாயத்தாராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட யாதாமொரு நபர், அப்படி பஞ்சாயத்தாராய் வருவதற்கு மேற்சொல்லியபடி அருகதை இராமல் இருந்தால், எலக்ஷன் ஆன ஏழு நாளைக்குள்ளே, ரெவினியூ டிவிஷனல் ஆபீஸரிடம், இன்னார் பஞ்சாயத்தாராயிருக்க அருகதை இல்லாதவர் என்று ஆக்ஷேபனை மனு செய்யவேண்டும். அந்த உத்தியோகஸ்தர் அந்த ஆக்ஷேபனை மனுவின்பேரில் விசாரணைபோட்டு, உத்தரவு போடவேண்டும். யாராகிலும் ஒரு நபர், குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டு, அவர்செய்த அக்குற்றம், அவர் பஞ்சாயத்து மெம்பராக இருக்கப்போதுமான நல்ல நடத்தை இராதவராகச் செய்யக்கூடியது என்றும் ஏற்பட்டால், அப்படிக் குற்றம் செய்து சிக்ஷிக்கப்பட்டவர் பஞ்சாயத்து மெம்பராக இருக்கக்கூடாது என்று எலக்ஷனில் ஆக்ஷேபனை செய்யலாம். அந்த ஆக்ஷேபனை மனுவை ஜில்லா கலெக்டர்தான் விசாரணைசெய்து, உத்தரவு போடவேண்டும். இப்படி

ரெவினியூ டிவிஷனல் ஆபீஸரும், ஜில்லா கலெக்டரும் போடும் உத்தரவே உறுதி. அதற்கு அப்பீலே கிடையாது.

---

## Page for the Young.

### பிள்ளைகளின் பக்கம்.

## Joseph, the Errand-Boy; or Integrity.

ஜோசப் என்னும் வேலைக்கார சிறுவன்: அல்லது நேர்மை.

ஒரு காலத்தில் ஜோசப் என்னும் வேலைக்காரச் சிறுவன் ஒரு தங்க நாணயத்தைச் சில்லறை மாற்றுவதற்காகச் சமீபத்திலுள்ள ரஸ்ஸல்ஸ் என்பவருடைய ஜவுளிக்கடைக்கு அனுப்பப்பட்டான். அவன் சில்லறையை வாங்கி ஜாக்கிரதையாய் அதை ஒரு காகிதத்தில் வைத்துச் சுற்றி வீட்டுக்குத் திரும்பும்போது சூரியன் அஸ்தமித்துவிட்டது. பிறகு வீட்டிற்கு வந்தவுடன் ஒரு மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தில் தன்னிடமுள்ள பொட்டணத்தை யவிழ்த்துச் சில்லறையை எண்ணிப் பார்க்கையில் ஒரு ஷில்லிங் வெள்ளி நாணயத்திற்குப் பதிலாக அதில் ஒரு தங்கநாணயமிருப்பதைக் கண்டான். உடனே அதை எடுத்துக்கொண்டு வெகு வேகமாய்க் கடைக்கு ஓடி கடைக்காரனைப் பார்த்து, "ஐயா! தாங்கள் சரியானபடி எனக்குச் சில்லறை கொடுக்கவில்லை" எனக் கடைக்காரன் கொஞ்சம் அவசரமாக, "பையா! என்ன சொல்லுகிறாய்? நான் சில்லறை உனக்குச் சரியானபடி கொடுத்திருக்கிறேன். நீ எங்கேயாவது வழியில் கொட்டிப் பொறுக்கியிருககிறாய்" என்றான். உடனே சிறுவன், "ஐயா! அப்படியொன்றும் செய்யவில்லை, நான் சில்லறையை வெகு ஜாக்கிரதையுடன் ஒரு துண்டு காகிதத்தில் சுற்றி வைத்திருந்தேன். வீடுபோய்ச் சேர்ந்து அதை யவிழ்த்து எண்ணிப்பார்க்கையில்......" என்று தன் வார்த்



தையை முடிப்பதற்குள், அக்கடைக்காரன் அதிக ஆத்திரப்பட்டவனாய், "நீ பார்த்தது என்னவென்று சொல்லத்தேவையில்லை. முன்னமே எண்ணிப்பார்க்காதவர்களுடைய இப்பேர்ப்பட்ட கதைகளைக் கேட்க எங்களுக்குச் சாவகாசமில்லை" என்று சொன்னான்.

இவ்விருவர்களுடைய சம்பாஷணையை முழுவதும் கேட்டுக்கொண்டிருந்த அந்தக் கடையின் எஜமானன் உடனே ஜோசப் என்னும் சிறுவனிடம் வந்து, "என்ன போக்கிவிட்டாய்" என்று கேட்டார். சிறுவன், "ஐயா! நான் ஒன்றையும் போக்கிவிடவில்லை. ஆனால எனக்கு ஒரு ஷில்லிங்குக்குப் பதிலாகத் தப்பிதமாய் அளிக்கப்பட்ட ஓர் தங்க நாணயத்தைத் திருப்பியளிப்பதற்காக வந்தேன்" என்றான். உடனே எஜமானன், "சிறுவனே! உன்னுடைய யோக்கியமான நடத்தையைக் கண்டு நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். உன்னைப் பார்த்தால் ஏழைச் சிறுவனாய்த் தோற்றப்படுகிறாய். நீயாக அந்நாணயத்தைக் கொண்டுவந்து கொடுக்காவிட்டால் அது எப்படிப் போயிற்றென்று எங்களால் கண்டுபிடிக்கமுடியாது. இந்நாணயத்தை வைத்துக்கொள்ளலாமென்கிற ஆசை உனக்கு உண்டாகவில்லையா? அந்த ஆசையை நீ எப்படி அடக்கினாய்?" என்று கேட்க, பையன், "ஐயா! நான் அம்மாதிரி செய்யக் கற்பிக்கப்பட்டிருக்கிறேன். மற்றவர்கள் எனக்கு என்ன செய்யவேண்டுமென்று நினைக்கிறேனோ, அதையே நான் பிறருக்குச் செய்வதுதான் என் கடமை. மேலும் ஒரு பென்னி நாணயம் எனக்குத் தவறுதலாகக் கொடுக்கப்பட்டாலும் நான் அதைத் திருபபிக்கொடுக்கவேண்டுமென்று எனக்குத்தெரியும். ஆனால் இது ஒரு தங்க நாணயமாதலால் உடனே கொடுக்கவேண்டுமென்று அவசரமாய் ஓடிவந்தேன். ஆகையால் நான் அப்பணத்தின் ஆசையால் தூண்டப்படுவதற்குச் சாவகாசமில்லாமற் போயிற்று" என்று தாழ்மையுடன் மொழிந்தான்.

பையனின் யதார்த்தமான மொழிகளைக் கேட்டதும் ரஸ்ஸல்ஸ் என்பவர், "குழந்தாய்! நீ வெகு புத்திசாலித்தனமாகவும் பெருந்தன்மையாகவும் நடந்திருக்கிறாய். ஆகையால் நீ என்றும் இம்மாதிரி நடக்கும்படியாக ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக! மேலும் குழந்தாய்! நீ இவ்வளவு நியாயமாய் நடந்திருப்பதால் உன்னைப்பற்றி நான் என்ன நினைக்கவேண்டுமென்றும், உனக்கு நான் செய்யக்கூடியது என்னவென்றும் சொல்"

என்ருர். உடனே பையனும், "ஐயனே! தாங்கள் என்னை நல்ல யோக்கியமான பையனென்று நினைத்தால் அதுவே போதுமானது" என்ருன். அப்பொழுது அப்பெரியவரும் 'அப்படியே நினைக்கிறேனே' என்று சொல்லி, அப்பையனுடைய குணத்திற்காகவும் யோக்கியதைக்காகவும் தன் கடையில் அவனுக்கு ஓர் குமாஸ்தா வேலை கொடுத்து அவனைக் காப்பாற்றினுர். பையனும் தன் காலத்தை வீண்போக்காமல் கடையில் ஒழிந்த நேரத்தில் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டு கடைசியில் பேர்பெற்ற வர்த்தகனுனன்.

இதனுல் பிள்ளைகளெல்லாரும், 'யதார்த்தமே உத்தம உபாயம்' என்னும் பழமொழியைக் கடைப்பிடித்து நடத்தல் வேண்டும்.

(போதகன்.)

---

## Here and There

### நாநா சங்கதிகள்.

Bishops' Conference :—பெபுருவரி மாதத்தில், ஹாங்காங் (Hong Kong) என்னும் நகரில் அன்னியபோதக சபையைச் சேர்ந்த மேற்றிராணிமார்கள் எல்லோரும், அர்ச். பாப்பானவர் உத்தரவின்படி பொது சங்கத்தில் கூடியிருக்கிருர்கள். அதினிமித்தம் கனம்பொருந்திய கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்கள் கடந்த ஜனவரி-ீ 1-உ புறப்பட்டுப் போனுர். அவர் சுகமான பிரயாணம் செய்து வரும்படியாக சுவாமியைப் பிரார்த்திப்போமாக.

Transfers :—சங். (J. M. Gaucher) கோஷே சுவாமியார் அர்ச். மிக்கேல் மடத்தின் சிரேஷ்டராகவும், அர்ச். சூசையப்பர் கைத்தொழில் பாடசாலையின் உதவி மானேஜராகவும் நியமிக்கப்பட்டிருக்கிருர். சங். (L. Tournier) தூனியர் சுவாமியார் கொளப்பலூர் பங்கு விசாரணைக்கும், சங். (A. Collin)



ஏ. கொலின் சுவாமியார் கோயமுத்தூர் சவேரியார்பாளையத்துக்கும், சங். (G. Boulanger) புலாஞ்சர் சுவாமியார் பெரியகுளத்துக்கும், சங். (J. Kohler) கோலர் சுவாமியார் கொடிவேரிக்கும், சங். S. மாசில்லாமணி சுவாமியார் அர்ச். மிக்கேல் போர்டிங் மடத்துக்கும் நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். Y. M. C. A. என்னும் பதித சங்கத்தில் கத்தோலிக்கர் சேரக்கூடாதென்று அர்ச். பாப்பானவர் கட்டளையிட்டிருக்கிருர்.

Knight of the Order of St. Gregory :—மரியாயின் மகா சங்கக காரியதரிசியாகிய மிஸ்டர் ஏ. ஜெகநாதம் பிள்ளை அவர்களுக்குப் பரிசுத்த பாப்பரசர் அர்ச். கிரிகோரியாரின் நைட் என்ற கத்தோலிக் பிரபு பட்டத்தை அளித்த செய்தியை மாட்சிமைதங்கிய பாப்பானவரின் ஸ்தானுபதி சங்கப் பந்தலில் தெரிவித்தார்.

Census :—நம் இந்தியா கவர்ன்மெண்டார் 10 வருஷத்துக்கு ஒருமுறை ஜனக்கணக்கெடுக்கிற வழக்கம்போல் 1921-ம் வருஷமும் கணக்கெடுப்பார்கள். அப்படி கணக்கெடுக்க வரும் காலத்தில் நம் கத்தோலிக் கிறீஸ்துவர்கள் தங்களை இந்திய கிறீஸ்துவன் என்று சொல்லி விட்டுவிடாமல், கத்தோலிக் இந்திய கிறீஸ்துவன் என்று சொல்லி எழுதிவைக்கவேண்டும். அப்போதுதான் புரோட்டெஸ்டாண்டு கிறீஸ்துவர்களோடு கத்தோலிக் கிறீஸ்துவர்கள் சேர்க்கப்படாமல் தனிக் கணக்கு மொத்தத் தொகையை நாம சுலுவாக அறியலாம்.

Marian Congress :—மரியாயின் மகா சங்கம் ஜனவரி-ீ 4-ம்உ முதல் 6-ம்உ வரை வெகு சிறப்புடன் நடத்தப்பட்டது. 23 மேற்றிராணிமார்களும், 300 குருக்களும், கணக்கில்லாத விசுவாசிகளும் ஆஜரானுர்கள். அநேக பிரசங்கங்களும் உபந்நியாசங்களும் செய்யப்பட்டன. ஷை சங்கத்தால் இந்தியா கத்தோலிக்கருக்கு வெகு பலன் உண்டாகும் என்று நம்பப்படுகிறது. ஆனுல் இது இனிமேல்தான் தெரியும். கடைசியில் வாணவேடிக்கை நேரத்தில் திடீரென காங்கரஸ் பந்தலின் மேல் ஒருவாணம் விழுந்ததினுல் அது தீப்பற்றி பத்து நிமிஷத்துக்குள் வெந்து நாசமானது. தேவமாதாவின் கிருபையால் ஜனங்களுக்குச் சேதமில்லை. ஷை பந்தலை 12,000 ரூபாய்க்கு இன்ஷியூர் செய்திருந்ததாக சொல்லுகிருர்கள்.

Savariarpalayam :—சவேரியார்பாளையத்தில் கடந்த ஜனவரி-ீ சிலுவைச் சபையைச் சேர்ந்த வாலிபர்களுக்கு ஒரு

(Badminton) பாட்மின்டன் கிளப் ஒன்று ஷை யூர் பங்குசுவாமியாராகிய (G. Boulanger) சங். புலாஞ்ஜர் சுவாமியாரால் புதிதாய்ஸ்தாபிக்கப்பட்டது. ஷை சிலுவைச் சபை சங். இஞ்ஞாசிநாதர் சுவாமியாரால் முன் ஏற்படுத்தப்பட்டிருந்து இந்நாள் வரை அநுகூலமாய் நடந்துவருகிறது. அதில் 50 பேர் சேர்ந்து அதின் ஒழுங்குகளைச் சரிவர அநுசரித்துவருகிறார்கள்.

The New Viceroy :—லார்டு ஷெல்ம்ஷ்போர்ட் (Lord Chelmsford) என்பவருக்குப் பதிலாக, லார்டு ரீடிங் (Lord Reading) என்பவர் இந்தியா இராஜ பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

---


# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

**Vol. VII.** **March 1921.** **No. 3.**

**புத்தகம் VII.]** FIDES AC ROBUR. **[நம்பர் 3.**


**"He is risen"... Alleluia.**

**"அவர் உயிர்த்தெழுந்தார்"... அல்லேலூயா.**

ஓய்வுநாள் கடந்தபின் மரியமதலேனம்மாளும், யாகப்பருடைய தாயாகிய மரியம்மாளும், சலோமையம்மாளும் வந்து யேசுநாதருக்குப் பூசும்படியாகப் பரிமளவர்க்கங்களை விலைக்கு வாங்கிக்கொண்டு வாரத்தின் முதலாம் நாள் அதிகாலமே சூரியன் உதயமானபோது கல்லறைக்கு வந்தார்கள். வருகிறபோது கல்லறை வாசலினின்று யார் நமக்குக் கல்லைப் புரட்டித் தள்ளுவானென்று ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். ஏனெனில், அந்தக் கல் மிகவும் பெரிதாயிருந்தது; ஆனால் அவர்கள் ஏறெடுத்துப் பார்க்கையில், கல் புரட்டப்பட்டிருக்கிறதைக் கண்டார்கள்.

பின்னும் அவர்கள் கல்லறைக்குள் பிரவேசித்தபோது, வெள்ளை அங்கியைத் தரித்து, வலதுபக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு வாலனைக் கண்டு திடுக்கிட்டார்கள். அவர் அவர்களை நோக்கி: நீங்கள் அஞ்சவேண்டாம்; சிலுவையில் அறையுண்ட நசரேனுவாகிய யேசுவைத் தேடுகிறீர்கள்; அவர்

உயிர்த்தெழுந்தார். இங்கேயில்லை; அவரை வைத்த இடம் இதுவே. நீங்கள் அவருடைய சீஷர்களிடத்திலும், இராயப்பரிடத்திலும் போய் உங்களுக்குமுன் அவர் கலிலேயாவுக்குப் போகிறாரென்றும், 'உங்களுக்குச் சொல்லியிருந்தபடியே அவரை அங்கே காண்பீர்களென்றும் அவர்களுக்குச் சொல்லுங்கள் என்றார். (மாற்கு XVI. 1-7.)

---

## Good Manners.

## நல்லொழுக்கம்.

**குடும்ப பொதுச்செபம்:**—குடும்ப பொதுச்செபமென்றால் விளக்கு வைத்த பிறகு சிறு பிள்ளைகள் ஏதோ இளிப் பிள்ளைப்பாடமாய் மந்திர ஜெபங்களைச் சொல்வதன்று. ஆனால் தகப்பனும் தாயும் பிள்ளைகளும் மற்றவர்களும் ஒன்றாய் ஒரு இடத்தில் கூடி பக்தி வினயத்துடன் ஜெபிக்கும் ஜெபமேயாம். இப்படி குடும்பத்தின் அங்கத்தினர் யாவரும் மாலை வேளையில் ஒன்று கூடி பொது ஜெபம் ஜெபிப்பது பார்ப்போருக்கும் சிறந்த காட்சி, கடவுளுக்கும் உகந்த வாழ்த்துதல். இப்பேர்ப்பட்ட குடும்பங்கள் அக்கம்பக்கத்தாரால் நன்குமதிக்கப்படும். அப்படிப்பட்ட குடும்பத்தில் ஒழுங்கு கிரமமும், ஒற்றுமையும் செழிப்புமிருக்கும்.

எத்தனையோ குடும்பங்களில் இராச்செபமென்பது மருந்துக்கும் கிடையாது. சில ஒழுக்கற்ற குடும்பங்களில் தகப்பன்மார் வேலை முடிந்து வீட்டுக்கு வரும்போதே குடித்துவிட்டு வந்து வீண்பேச்சுகளைப் பேசி வம்பு வளர்ப்பார்கள். இப்படிப்பட்ட குடும்பங்களில் இராச்செபம் எப்படி நடக்கும்? தினந்தோறும் இராச்செபஞ்செய்ய இனிமேலாவது தீர்மானம் செய்யவேண்டும். இது பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் உரியதென்று நினையாது, குடும்பத்தெஜமானாகிய தகப்பனுக்கே முதல் உரியதென நினைக்கவேண்டும்.



"செங்கோல் கோணினால் எங்கும் கோணும்" என்றபடி கடைத்தெருவெல்லாம் சுற்றித்திரிந்து காலங்கழிக்க, பிள்ளை பெண்டுகள் மாத்திரம் பத்தியோடு ஜெபத்தில் அமர்ந்திருப்பார்களோ? அல்லது ஜெபத்தைப்பற்றிக் குடும்பத்தெஜமானன் அவர்களுக்குப் புத்தி சொல்ல வாயுண்டோ? நேரத்தோடு வீட்டுக்குவந்து பிள்ளைகளை இரவில் விடடங்கியிருக்கத் திட்டஞ்செய்து, புருஷன் ஜெபம் ஜெபிக்க, பெண்சாதி உதவி மந்திரம் சொல்வது எப்படிப்பட்ட ஐக்கியத்தைப் பிறப்பிக்கும்! தகப்பன் ஜெபம் ஜெபிக்க பால்மணம் மாறாத மக்கள் தங்கள் மழலைச்சொற்களால் தேவனை ஸ்துதிப்பது எப்படிப்பட்ட சந்தோஷத்தை விளைவிக்கும். அப்படிப்பட்ட குடும்பங்கள் நல்ல குடும்பங்கள், கிறிஸ்தவப் பயிற்சியுள்ள குடும்பங்கள். "யானைக்கும் அடி சறுக்கும்" என்ற பழமொழியின்படி ஏதோ ஒரு சமயம் நெறிதவறினாலும் தங்களை சீர்படுத்திக் கொள்ளக்கூடிய குடும்பங்கள். ஆனதால் நாம் இச்செபக் கிருத்தியத்தைக் கையாடி வருவோமாகில், நமது குடும்பத்தில் உண்டாகும் மாற்றத்தை வெகு சீக்கிரத்தில் கண்டுகொள்வோம்.

**ஒழுக்கத்தின் சிறப்பு:**—எவரும் பிறப்பு அல்லது ஜாதி வேற்றுமை பாராட்டாது எக்குலத்தில் பிறந்தவராயினும் அக்குடிப் பிறப்புக்கேற்றவாறு அறநெறி ஒழுக்கங்களை அனுசரிப்பார்களேயானால் அவர்களையே உலகம் போற்றும். இதற்கு உதாரணமாக நம் நாடெல்லாம் பிரசித்திப்பெற்ற மஹா ஞானியாகிய திருவள்ளுவரது செய்தியை யறியாதார் மிகச் சொற்பம். அவரை எந்த ஜாதியில் வைத்தாலும் வைக்கலாம். அவர் தந்தையார் **யாளிதத்தன்** என்ற பெயரை யுடைய ஓர் அந்தணன்' அவர் தாயார் கருவூரின் கண்ணிருந்த ஆதி என்ற பெயருடைய ஒரு பஞ்சமப்பெண். இவர்களிடம் பிறந்து இன்ன ஜாதி யென்றறியப்படாத இவரது கல்வியறிவு ஒழுக்கங்களை கண்டுவந்த வேளாளப் பிரபு ஒருவர் தமது ஏக புத்திரியாகிய **வாசுகியை** இவருக்கு மணஞ்செய்வித்துத் தமது செல்வப்பெருக்கையும் இவருக்குச் சேர்ப்பித்தனர். ஆனால் மஹா ஞானியாகிய இவர், தமக்கு வறுமையே செல்வமெனக்கருதி இலவசமாய்க் கிடைத்த பொருளை ஏழைகட்குப் பங்கிட்டுக்கொடுத்துவிட்டுத் தன் முயற்சியால் இல்வாழ்க்கையை நடத்தலே பெருமையும், சிறப்பையும் பயப்பது என்று உலகத்தார்க்கு எண்பிக்கும் பொருட்டு நெசவுத்தொழிலைக் கைக்கொண்டு காலந்தள்ளிவந்தனர்.

இப்பெரிய ஆசிரியர் இருந்த இடத்தாலும், செய்ததொழிலாலும் வள்ளுவர் என்று அறியப்படுகிறார். அக்காலத்து கப்பல் வர்த்தகஞ்செய்து தனவந்தராயிருந்த ஏலேல சிங்கர் என்ற பரதவர் இவர்க்குத் தோழரும் சிஷ்யருமாயினர். பல திசைகளிலுமிருந்து கற்றோர் இவரிருப்பிடம் வந்து ஞானங்களைப்பெற்றுப் போயினர்.

பெரியோர்களே! சகோதரர்களே, இப்போது திருவள்ளுவரது சரித்திரத்தைச் சுருக்கிக் காட்டியதால் அவரது சிறப்பொழுக்கங்களும் குணமேன்மைகளும் அவர்க்கு இவ்வுலகில் உண்டாக்கிய கீர்த்தி பெருமைகளை நீங்களே எளிதில் உணரலாம்.

மற்றும் இதற்குதாரணமாக நமது நாயனாரே சொல்வதைக்கேளுங்கள். "ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினு மோம்பப்படும்." அதாவது ஒழுக்கம் ஒருவனுக்கு அவனுடைய கீர்த்தியைப் பிறப்பிக்கின்றதாதலால் அவ்வொழுக்கத்தை உயிரைப்போல காப்பாற்றவேண்டுமென்பதாம்.

ஒரு தேசத்தின் பலம், தொழில் முயற்சி, நாகரீகம், இவை அனைத்திற்கும் ஆதாரம் அங்குள்ள மனிதர்களுடைய நடத்தையே, அதுபோல நமது வேதத்தை உயர்த்துவதும், பலப்படுத்துவதும், அதன் அதிகாரத்தைப்பரப்பி அதற்குச் செல்வாக்குண்டாகச் செய்து, பிறர் அதை அபிமானிக்கும்படி செய்வதும் நமது குலப்பெருமையல்ல, நாகரீகப்பெருமையுமல்ல, புத்தி விவேகங்களின் திறமையுமாத்திரமுமல்ல, பின்னென்னையோவெனில் நல்லொழுக்கமாகிய யோக்கியதையின் பெருமையேயாம்.

---

"What doth it profit us to rise with Christ
And share with Him new life on Easter-Sunday
If straightway, by the olden snares enticed,
We die to Him by sin on Easter-Monday?"

---



## Three Little Devils.

### மூன்று குட்டிப் பிசாசுகள்.

லூசிபேர்: என் இவ்வளவு தாமதம்? எங்கிருந்து வருகிறீர்கள்?

குட்டிப் பிசாசுகள்: தமிழ் நாட்டிலிருந்து வருகிறோம்.

லூசிப்பேர்: சரி, அங்கே என்ன சமாச்சாரம். ஒவ்வொருவருக்குப்பின் சீக்கிரம் சொல்லுங்கள்.

1-ம் குட்டிப்பிசாசு: நம்முடைய பாடு கொள்ளை. நமது பக்கம் அநேகம் ஆயிரம் பேரை இழுத்துக்கொண்டேன். ஆனால் உமது கட்டளைப்பிரகாரம் கிறீஸ்துவர்களின்பேரில் சதா கண்ணும், கருத்துமாயிருக்கிறேன். அவர்களில் அநேகரை நமது பக்கம் இழுத்துக்கொண்டு வருகிறேன்.

லூசிப்பேர்: சரிதான், ஆனால் இது காரியத்தை எப்படி செய்து முடித்தாய்?

குட்டி: எனக்கு நல்ல சமயம் இருக்கிறது. மகாத்மா காந்தி என்பவன் "ஒற்றுழையாமை" என்னும் குழப்பம் தமிழ் நாட்டில் போதித்து வருகிறான் என்று உமக்குத் தெரிந்த விஷயம். அந்த ஏற்பாட்டின் தலைவர்கள், ஊர் ஊராய்ப் போய் இராஜாங்கத்தார் பொய் என்று மறுத்துவிட்ட விஷயங்களைப்பற்றியே உபந்நியாசம் செய்துகொண்டு வந்து ஜனங்களைத் தூண்டிவிட்டுக்கொண்டு வருவதால் எப்போது வேணுமானாலும் கலகம் ஏற்படும்.

லூசி: அதனால் என்ன? கிறீஸ்துவர்கள் அதிலே சேர்ந்திருக்கிறார்களா?

குட்டி: இல்லை, அவர்கள் சர்க்கார் பக்கத்தில்தான் சேர்ந்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்களும் தங்கள் சபையின் அதிகாரிகளுக்கு அடங்காமை என்னும் புத்தியை நாளுக்குநாள் அடைகிறார்கள். குழப்பம் உண்டுபண்ணுவதுதான் எனது தந்திரம். அவ்விதக் குழப்பத்தால்தான் அல்லோ நாம் கெட்டு மோட்சத்திலிருந்து தள்ளப்பட்டு, இந்த எரி நரகத்தில் விழுந்திருக்கின்றோம்.

லூசிப்: (துக்கத்துடன்) அதை ஞாபகப்படுத்தாதே, அதை நினைக்கும்போது வயிறு எரியுது, தொடர்ந்து சொல்லு.

குட்டி: ஊர்களில் நமது சில சிநேகிதர்களிடம் போய் மதுர வசனங்களைச் சொல்லி அவர்களைக் கைக்குள் போட்டுக் கொண்டு மெதுவாய் அவர்கள் காதுக்குள்: என்ன, நீங்கள் வெள்ளைக்காரருக்கு அடிமைகளா? அவர்களுக்கு இடம் கொடுத்தால் அவர்கள் மடம் பிடிப்பார்கள் என்று உங்களுக்குத் தெரியாதா? எத்தனை காலைக்கு இந்த அதிகாரம் செலுத்துவார்கள்? இனிமேல் சும்மா இருக்கிறது சரியல்ல; ஏன் இப்படி இவர்கள் செய்கிறார்கள்?...ஏன் இப்படி செய்கிறதில்லை என்று ஊதிவிடுகிறேன். சில கத்தோலிக்கர் அதைக் கேட்டு அதைப்பற்றி உபந்நியாசம் செய்து அஞ்ஞானப் பத்திரிகைகளில் எழுதி எனக்கு நல்ல உதவி செய்துவருகிறார்கள். அப்படிக் கிறீஸ்துவர்களுக்கு உரோசம், கோபம், குருக்களுக்கு அடங்காமை பிறந்து, பம்பரம்போல் என் கையில் ஆடுகிறார்கள்.

லூசிப்:- சபாஷ் சபாஷ், ஏவம்மாளைக் கெடுக்க நான் எடுத்த உபாயம் இதுதான். ஆனால் கொஞ்சநாளைக்குமுன் மதுரையில் மரியாயின் மகா சங்கத்தின் சத்தம் இவ்விடத்தில் கேட்கப்பட்டது. அதைப்பற்றி என்ன சமாச்சாரம்?

குட்டி: ஆமாம், நானும் அதற்குப் போயிருந்தேன் பெருங்கூட்டம். மோட்ச இராக்கினி அங்கிருந்ததினால் நான் அதற்குள்ளே பிரவேசிக்கமுடியாமல் தூரத்தில் நின்று நடந்ததை உற்றுப்பார்த்தேன். எனக்குத் தெரிந்த சில சிநேகிதர்களைக் கூப்பிட்டு அவர்களுக்கு புத்தி சொல்லி அச்சங்கத்தின் பலனைக் கெடுக்க சில தந்திரங்களைச் செய்திருக்கிறேன்

லூசிப்: சரி, நல்ல காரியம் செய்தாய். அந்த ஒற்றுமையாமை, சுயராஜ்யம் முதலியவைகளைத் தூண்ட நன்றாய்க் கவனி. இதெல்லாம் நமக்கு உதவி. ஆனால் கத்தோலிக்கர் உன்னுடைய தந்திரங்களை அறியாதபடி ஜாக்கிரதையாயிரு; நேரமாய்விட்டது, போய்விட்டுவா.

லூசிப்: 2-ம் குட்டிப் பிசாசை நோக்கி: நீ என்ன செய்துவந்தாய்?

நானு! கிராமங்களைச் சுற்றி சுற்றி கள்ளுச் சாராயக் கடைகள் சமீபத்தில் உட்கார்ந்து மதுபானம் குடிக்க ஜனங்களை இழுத்துக்கொண்டேன். வாலிபர்களும், விருத்தாப்பியரும், பெண்பிள்ளைகளும் முதலாய் கள்ளுச் சாராயம் குடித்து புத்தி மயங்கி புரண்டு ஆடிப்பாடி சண்டைப் போட்டு அலங்கோலையாய்த் திரிகிறார்கள். அவர்கள் பேசுகிற பேச்சு நான் சொல்லமுடியாது. அதெல்லாம் வேடிக்கையாயிருக்கிறது.



லூசிப்: சிச்சி பன்றிகுட்டியே, வெறுப்பான காரியம்! தொடர்ந்து சொல்லு; அவ்விதமாய் அநேக கிறீஸ்துவர்கள் நமது பக்கத்தில் சேருகிறார்களா?

குட்டி: அதுவும் சொல்லவேணுமா? அவர்களுக்குத்தான் அதிக தந்திரம் செய்துவருகிறேன். குடியினால் அநேக கிறீஸ்துவக் குடும்பங்கள் சீர்குலைந்து நமது வலையில் விழுகின்றன. குடிகாரருக்கு ஜெபமில்லை, தபமில்லை, தர்மமில்லை, தெய்வமில்லை.

லூசிப்: குருக்கள் அதற்கு தடை செய்கிறார்களே. குடியை நீக்கும்படி, சிலுவைச் சபை, வாலிபர் சபை, க்ளப் யூனியன் முதலிய சங்கங்களை ஏற்படுத்துகிறார்களே. நீ அதற்கு என்ன செய்கிறாய்?

குட்டி: அது மெய்தான். சிலவிசை அது நமது வாயிலே மண்ணு. ஆனாலும் சில ஆட்களைக்கொண்டு அந்த சபையோருக்குள் சண்டை காய்மகாரம் ஊதிவிட்டு, அந்தச் சங்கங்களைக் கலைக்கப் பார்த்துவருகிறேன். அந்த வேலை செய்வதில் காய்மகாரம் சுளுவான உபாயம்.

லூசிப்: வெகு சாமர்த்தியம், நல்ல வேலை செய்கிறாய், போய்விட்டுவா.

லூசிப்: 3-ம் குட்டிப் பிசாசைக் கூப்பிட்டு நீ தமிழ் நாட்டில் என்ன தந்திரம் செய்து வந்தாய்? சீக்கிரம் சொல், நேரமாகிறது.

குட்டி: நான் அநேக ஊர்களில் சுற்றி பலவிதமானப் பத்திரிகைகள், புஸ்தகங்கள், படங்கள் முதலியவைகளைக் கொண்டு அநேக கிறீஸ்துவர்களை நமது பக்கம் சேர்த்துக் கொண்டு வருகிறேன். அதினால் நமக்கு வெகு அநுகூலம் ஆகிறது. ஆணும் பெண்ணும் இக்காலத்தில் படிக்கிறார்கள். அவர்கள் கையில் அகப்படும் பதித பத்திரிகைகளையும், அஞ்ஞானக் கதைகளையும் எல்லாம் பிரியமாய் வாசிக்கிறார்கள்,

மேலும் அநேக பக்கங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பயாஸ்கோப் என்னும் படங்களைக்கொண்டு ஓர் பெரிய வலையில் மீன் விழுகிறதுபோல அநேக ஜனங்களைப் பிடித்து வருகிறேன். வாலிப ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும், பிரியமாய்ப் படங்களைப் பார்த்துக்கொண்டு, பொய், திருட்டு, காமம், கொலை முதலிய குணங்களைத் தாராளமாய்ப் பழகுகிறார்கள். அவர்களுடைய காவலான சம்மனசுகள் பயாஸ்கோப் படங்கள் காட்டப்படும் சாலைக்குள் பிரவேசிக்கத் துணியாமல் வாசல் பக்கத்தில் நின்று தங்கள் முகத்தை மூடிக்கொண்டு கூச்சப்படுகிறார்கள். நானோ வருகிறவர்களைத் தூண்டிச் சந்தோஷப்படுத்தி அவர்களுக்கு வேண்டியதெல்லாவற்றையும் ஊதிவிட்டு வருகிறேன். எஜமானே, அதினால் நமக்கு வெகு அநுகூலம்.

லூசிப்: உன்னைத்தான் அதிகமாய்ப் பாராட்டாதே, கத்தோலிக் பத்திரிகைகளும் புஸ்தகங்களும் படங்களும் உண்டு. இவைகள் நமது வேலையைக் கெடுத்துவிடுகிறதில்லையா?

குட்டி: கத்தோலிக் பத்திரிகைகளும், புஸ்தகங்களும் சமுத்திரத்தில் ஒரு துளியைப்போல் வெகு சொற்பம். தவிர, அஞ்ஞான புஸ்தகங்களும், பதிதப் பத்திரிகைகளும் சிற்றின்பக் கதைகளுந்தான் அவர்களுக்கு உருசியாயிருக்கிறது.

லூசிப்: சரி, சரி; ஆனால், வாய்ப்பந்தல் போட்டு பிரயோஜனமில்லை. எத்தனை கிறீஸ்துவர்களை நமது கொடியின் கீழ் சேர்த்திருக்கிறாய்?

குட்டி: கணக்கில்லை; ஜென்மம் முழுவதும், அவ்வழியாய் நமது பக்கம் சேரும். நீங்களே யோசித்துப் பாருங்கள்.

லூசிப்: சபாஷ்! இதுவரை செய்துவந்ததுபோலே இனிமேலும் ஜாக்கிரதையாய்ச் செய்துவருவாயாக. போய்விட்டு வா.

---

"Every home must be a *sanctuary* where *Jesus* is honoured and *a school* where *Jesus* is taught."

---



## History of the Diocese of Coimbatore.

## கோயமுத்தூர் மேற்றிராசனத்தின் சரித்திரம்.

(முன் தொடர்ச்சி.)

### காணிக்கைமாதா கன்னியாஸ்திரீ சபை.

சத்தியவேதமும் நல்லொழுக்கமும் தாய்மார்கள்மூலமாய்க் குடும்பங்களில் நாடி விர்த்தியாகும் என்று எண்ணி எக்காலத்திலும் வேதபோதகர், பெண் கல்வியின் மேன்மையையும் அவசரத்தையும், அறிந்து அதை விருத்திசெய்யப் பிரயாசப்பட்டார்கள்.

1850-ம் வருஷத்தில் இந்திய பெண்பிள்ளைகளுக்கு பெரும்பாலும் கல்வி இல்லை. புதுவை, மைசூர், கோயமுத்தூர் மிஷன்களில் ஒரே ஒரு பெண்பிள்ளைப் பள்ளிக்கூடம் இருந்தது. அது புதுச்சேரி கார்மேல் என்னும் மடத்தில் இருந்தது. பெண்பிள்ளைப் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி நடத்தும்படியாக கன்னியாஸ்திரி சபைகளை ஸ்தாபிக்கவேண்டியிருந்தது.

1855-ம் ௵த்தில் லொரெட்டோ என்னும் ஐரிஷ் கன்னியாஸ்திரிகள் ஒட்டகமண்டலத்தில் கோயமுத்தூர் மிஷன் பண உதவியைக்கொண்டு பெண்பிள்ளைப் பாடசாலை ஒன்றை ஸ்தாபித்தார்கள். ஆனால் ஒரு வருஷத்துக்குப் பிறகு மாணாக்கர்களும் பணமும் போதாததினால் அதை மூடிப்போட்டு வேறே ஊருக்குப்போய்விட்டார்கள். அதற்கு முன் 1853-ம் ௵ சங். இரவெல் (Ravel) சுவாமியார் கருமத்தன்பட்டியில் காணிக்கைமாதா என்னும் நாட்டுக் கன்னியாஸ்திரி சபையை ஸ்தாபிக்க ஆரம்பித்தார். அது எப்படி என்றால் கருமத்தன்பட்டியில் சவேரியம்மாள் என்னும் ஒரு பக்தியுள்ள கன்னியாஸ்திரி இருந்தாள். அவள் முன் ஒருக்காலும் ஒரு கன்னியாஸ்திரியையாவது, ஒரு கன்னியாஸ்திரி மடத்தையாவது பார்க்காமலிருந்தபோதிலும் தன் சிறுபத்திலிருந்து கன்னியாஸ்திரியாகவும், தேவ ஊழியத்துக்கு தன்னை ஒப்புக்கொடுக்கவும், ஆசைப்பட்டாள். சங். இரவெல் சுவாமியார் அவளது நல்ல கருத்தையும் நற்குணத்தையும் அறிந்துகொண்டு பரிசோதித்து, அவளிடத்தில் தேவ அழைப்பைக் கண்டுபிடித்தார்.

1853-ம் வருஷம் நவம்பர்-மீ 21-உ தேவமாதா தேவாலயத்தில் காணிக்கையான திருநாளில் 7 ரூபாய்க்கு வாங்கின ஒரு சின்ன வீட்டை மடமாக ஏற்படுத்தி, அதிலே அந்த பத்தியுள்ள கன்னியை பொஸ்தலண்டாக ஏற்றுக்கொண்டார். அப்போது அந்தப் பெண்ணுக்கு 18 பிராயம், படிப்பு இல்லை, அரிச்சுவடியை ஏறக்குறைய வாசிக்கத் தெரிந்தவள், வாசகம், கணக்கு, தையல்வேலை படிப்பதோடே ஞானக்காரியங்களில் அப்பியாசம் பண்ணினபிறகு தரித்திரம், கற்பு, கீழ்ப்படிதல் என்கிற வார்த்தைப்பாடுகளைக் கொடுத்தாள்.

1854-ம் வருஷத்தில் இளம்பிராயமுள்ள விதவை ஒருத்தியும், மேட்டுப்பாளையத்து பிள்ளிக்காரனுடைய ஏக குமாரத்தியும் பாலக்காடு அருளானந்தம்பிள்ளை பேத்தியும் மூவரும் ஷை கன்னியாஸ்திரி மடத்தில் சேர்ந்தார்கள். இந்த நான்கு கன்னிகைகளுக்கு போதுமான வாசஸ்தலத்துக்காக ஒரு புது வீடு வாங்கப்பட்டது. அவ்விதமே காணிக்கைமாதாவென்னும் கன்னியாஸ்திரி சபை ஆரம்பித்தது. இதை ஸ்தாபித்ததில் சங். இரபேல் சுவாமியாருடைய கருத்து என்னவென்றால், கிறீஸ்துவ பிள்ளைகளுடைய ஆத்ம சரீர நன்மையும், விருத்தாப்பியருடையவும் அனாதப் பிள்ளைகளுடைய ஆதரவு, பெண்கல்வி, நன்மாதிரிகை, ஆத்துமாக்களுடைய சாங்கோபாங்கம் முதலிய நற்கிருத்தியங்கள்தான். ஆனால் ஷை புது சபையில் துவக்கத்தில் சேர்ந்த கன்னியாஸ்திரிகள் படித்து பரீக்ஷை கொடுத்து பள்ளிக்கூடங்களைத் தக்கவிதமாய், நடத்தக்கூடியவர்களாகும் மட்டும் வெகு காலம் ஆயிற்று. ஆயினும் இந்தியாவில் ஒரு கன்னியாஸ்திரிசபை ஸ்தாபிக்கப்பட்டதினால் மெத்தவும் அநுகூலம் என்பதற்கு சந்தேகம் இல்லை. எல்லா ஏற்பாடுகளில் துவக்கந்தான் கஷ்டம். காணிக்கைமாதா கன்னியாஸ்திரி மடம் கொஞ்சம் விர்த்தியானபிறகு கோயமுத்தூருக்கு மாற்றப்பட்டது. அவ்விடத்தில் கன்னியாஸ்திரிகள் படித்து ஜெபம், தியானம் செய்து, வேலை செய்து, மேற்றிராசனத்திலுள்ள பெண்பாடசாலைகளை வெகு பற்றுதலோடு நடத்திவருகிறார்கள்.

விக்கரியட் அப்போஸ்தோலிக்: புதுவை, மைசூர், கோயமுத்தூர் ஆகிய இம்மூன்று மிஷன்களை அர்ச் பாப்பானவர் உத்திரவின்படி மூன்று பங்குகளாகப் பிரிக்கப்பட்டு, 1850-ம் வருஷம் ஏப்ரல்-மீ 3-ம் உ அப்போஸ்தோலிக் விக்கரியாட்களாக ஸ்தாபிக்கப்பட்டன.



மகா விர்த்திக்கத்தக்க டிப்ரெஸியக் (de Bresillac) ஆண்டவர் கோயமுத்தூர் முதல் விக்கர் அப்போஸ்தோலிக்காக நியமிக்கப்பட்டார். இவர் 1855-ம் வருஷம் தேவ சித்தத்தினால் ஏவப்பட்டு, வேறே ஞான நிலத்துக்கு அழைக்கப்பட்டு அர்ச் பாப்பானவர் அநுமதிபெற்று, கோயமுத்தூரை விட்டுவிட்டு பிராஞ்சு இராச்சியத்தில் லீயன் என்னும் பட்டணத்தில் ஆப்பிரிக்கா தேசத்துப் போதகர் சபையை ஸ்தாபித்தார். அவருக்குப் பதிலாக சங். மெத்ரால் (Metral) சுவாமியார் கோயமுத்தூர் விக்கர் அப்போஸ்தோலிக்காக நியமிக்கப்பட்டார்; ஆனால் அவரை நியமிக்கும் பாப்பானவர் நிருபம் இந்தியாவுக்குச் சேருமுன் அந்த நல்ல குருவானவர் காலஞ்சென்றார். ஆகையால் புதுவை ஆண்டவராகிய கனம் பொருந்திய கோடேல் (Godelle) ஆண்டவர் தற்காலம் கோயமுத்தூர் மிஷனை விசாரிக்க அதிகாரம் பெற்றார்.

---

## St. Joseph, Help of Workmen

## அர்ச். சூசையப்பர், கைத்தொழிலாளிகளுடைய தஞ்சம்.

ஸான் என்னும் நதிக்கரையிலுள்ள ஒரு சிற்றூரில் ஒரு தச்சன் இருந்தான். இவன் பெண்சாதியும் குடும்பத்தாரும் சத்திய திருச்சபையைச் சேர்ந்தவர்கள். இவன் மாத்திரம் பதிதன். இவனுடைய சிநேகிதர்களில் அநேகர் கத்தோலிக்கர், இவர்களுக்குள்ளே ஒருவன் புஸ்தகம் கட்டும்வேலை பார்த்துவந்தான். ஒருநாள் இரண்டு சிநேகிதரும் கூடிப் பேசிக்கொண்டிருக்கையில் தச்சனுடைய முகம் களையின்றி, சோம்பி வாடியிருப்பதை புஸ்தகம் கட்டுபவன் கண்ணுற்று, நண்பனே, ஏதோ உனக்கு ஒரு மனக்கிலேசம் இருக்கிறது. அதை எனக்கு அறிவிக்கவேணும் என்று கேட்க, தச்சன் சிநேகிதா, என் நிர்ப்பாக்கியம் என்னென்று சொல்லமுடியுமோ? இரண்டு மாதமாக வேலை எங்கும் கிடைக்காமல் கையிலுள்ள காசையும் செலவழித்துவிட்டு, நானும் என் பிள்ளைகுட்டிகளும் கஞ்சிக்குக் காற்றாய்ப் பறக்கிறோம் என்று சொன்னான். இதைக் கேட்ட சிநேகிதன் இந்த நிர்ப்பாக்கியத்தை நீக்குவதற்கு என

க்கு ஒரு நல்ல வழி தெரியும். ஆனால் நீ கத்தோலிக்கனாயிராததால் அதை உனக்குச் சொல்லலாமாவென்று யோசிக்கிறேன் என, தச்சன் அப்படியல்ல, உன் மனதிலுள்ளதைக் கூசாமல் சொல் என்றான். அதற்கு புஸ்தகம் கட்டுவோன் எனக்கு வேலையில்லாதபோதெல்லாம் கைவேலை செய்பவர்களுக்குப் பாதுகாவலராகிய அர்ச். சூசையப்பரை நோக்கி வேண்டிக் கொள்ளுவது வழக்கம். எப்போதும் அர்ச். சூசையப்பர் என் மன்றாட்டைக் கேட்டருளினார். இதுதான் நான் உனக்கு அறிவிக்க விரும்பின சங்கதி என்றான்.

கொஞ்சநேரத்துக்குப் பின் இருவரும் பிரிந்து தத்தம் இல்லிடத்துக்குச் சென்றார்கள். பதிதன் போகும்வழியில் ஒரு கத்தோலிக் கோவில் இருந்தது. அதைக் கண்டவுடன் அதிலே பிரவேசித்து அங்கிருந்த அர்ச். சூசையப்பர் பீடத்தண்டை முழங்காற்படியிட்டு அர்ச். சூசையப்பரே, எப்படியாகிலும் எனக்கு உதவிபுரிந்து எனக்கு வேலை கிடைக்கச்செய்ய வேணும் என்று மகா பத்தியுடன் வேண்டிக்கொண்டான்.

திரும்பி வீட்டுக்குப் போகையில் வீட்டுக்கு அருகாமையில் சேர, இவனுடைய பெண்சாதி வெகு சந்தோஷத்தோடு ஓடிவந்து இப்போதுதான் மூன்றுபேர் உம்மைத் தேடிவந்து உமக்கு வேலை கொடுப்பதாகச் சொல்லிவிட்டுப் போகிறார்கள் என்றாள். இதைக் கேட்டவுடனே பதிதனுடைய இருதயம் சந்தோஷத்தால் பூரித்தது. ஆயினும் தான் கத்தோலிக் கோவிலுக்குப் போனதைத் தன் பெண்சாதிக்கு அவன் சொல்லவில்லை. ஒன்பது மாதங்கள் கடந்தபின் ஒருநாள் தச்சன் புஸ்தகம் கட்டுபவனைத் தன் வீட்டுக்கு வரவழைத்தான். அப்போது அவனை நோக்கி, நண்பனே, இந்த ஒன்பது மாதக்காலமாக அடிக்கடி மதவிஷயத்தைப்பற்றி ஆராய்ந்து யோசித்துப் பார்த்தேன். கத்தோலிக் கோவிலுக்குப் போய் பல பிரசங்கங்களும் கேட்டேன் கத்தோலிக் வேதமே மெய்யான வேதமென்று இப்போது எனக்கு வெள்ளிடைமலைபோல் விளங்குகிறது. அதில் சேர உறுதியான தீர்மானமுஞ் செய்திருக்கிறேன் என்று உரைத்தான். இதினால் புஸ்தகம் கட்டுவோனுக்கும், தச்சன் பெண்சாதி குடும்பத்தாருக்கும் உண்டான சந்தோஷம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது.

இதை வாசிக்கிற கிறீஸ்துவர்களே! உங்களுக்கு யாதொரு மனக்கிலேசம் கவலையிருந்தால் அர்ச். சூசையப்பரை நோக்கி மன்றாடுங்கள். அவருடைய வல்லமையை நீங்களே அநுபவிப்பீர்கள்.



## The Late Revd. Fr. E. Bachelard.

### காலம் சென்ற சங். E. பாச்சலார்ட் சுவாமியார்.

பாலக்காட்டு பங்குவிசாரணைக் குருவாகிய சங். E. பாச்சலார்ட் சுவாமியார் கடந்த ஜனவரி-மீ 27-ம்வ. பாலக்காட்டில் தமது 61-ம் வயதில் தேகவியோகமானார். அவர் பிரான்சு தேசத்தில் க்லெர்மொண்ட் (Clermont) என்னும் மேற்றிராசனத்தில் 1860-ம் வருஷம் பிறந்தவர். பாரீஸ் பட்டணத்திலுள்ள அந்நியபோதக சபையின் குருமடத்தில் சேர்ந்து 1886-ம் வருஷம் குருப்பட்டம் பெற்று இந்தியாவிலுள்ள கோயமுத்தூர் மேற்றிராசனத்துக்கு அனுப்பப்பட்டார். இந்த ஞானத் தந்தையானவர் தாராபுரத்தில் 6 மாதமும், அத்திக்கோட்டுப் பங்குவிசாரணையில் 18 வருஷமும், பாலக்காட்டுப் பங்கில் 17 வருஷமும் ஆக ஏறக்குறைய 35 வருஷமளவாய் மிகவும் சுறுசுறுப்போடும், பத்தி பற்றுதலோடும் உழைத்தார். தம்மை முழுதும் பரித்தியாகம் செய்து, கிறீஸ்துவர்களின் ஆத்தும சரீர நன்மைகளுக்காகவும், பொது ஜன நன்மைக்காகவும் உழைத்து வந்தார். தமது இடது கை, வலது கை கொடுப்பதை அறியாதென்றாற்போல தர்ம தவப்புண்ணியம் செய்து, மிகவும் தாழ்ச்சியும், புத்திக்கூர்மையும், விவேகமும் தெய்வபத்தியுமுள்ளவர் அத்திக்கோடு, பாலக்காடு இது முதலிய இடங்களிலுள்ள கிறீஸ்துவர்களாலும், சகல மதஸ்தர்களாலும், நன்குமதிக்கப்பட்டிருந்தார். பெண் கல்வி மெத்த அவசரம் என்று எண்ணி பாலக்காட்டில் இந்திய பெண்பிள்ளைகளுக்காக ஓர் விசேஷமும் சிறப்புமான இங்கிலீஷ் பாடசாலையை ஏற்படுத்தி கஷ்டம் நஷ்டம் கவனியாமல் அதை அநுகூலமாய் நடத்திவந்தார்.

சிலகாலமாக அவர் சௌக்கியக் குறைவாயிருந்தாலும் தமது கஷ்டத்தை வெளிக்காட்டாமல் மிகப் பொறுமை

புடனும், சந்தோஷமுகத்துடனும் சகித்தார். அவர் அதிக மதிகமாய் மெலிந்துவருகிறதைப் பார்த்து அவர் அசௌக்கியத்தையும் அறிந்த மகா கனம்பொருந்திய கோயமுத்தூர் மேற்றிராணியார் கோயமுத்தூருக்கு அவரை தற்காலத்துக்கு அழைக்கப் பிரியமாயிருந்தார். ஆனால் அவர் கடைசிபரியந்தம் பாலக்காட்டிலேயே உழைத்து அங்கே தானே காலஞ்சென்றாலும் அது தமக்குப் பாக்கியமென்று எண்ணிக்கொண்டார். திடீரென்று இருதய ஈளையால் வியாதி அதிக கடினமாகி ஜனவரி-மீ 27-உ இரவில் 2 மணிக்கு அமரிக்கையாய் உயிர்விட்டுதேகவியோகமானார். தாம் இவ்வுலகில் செய்த தர்ம தவப் புண்ணியங்களின் பலனைப் பெற பரலோகத்துக்குப் போயிருக்கிறார். இவரை இழந்தது கோயமுத்தூர் மேற்றிராசனத்துக்கு ஒரு பெரிய நஷ்டமே.

R. I. P.

## A Word of Pius X.

### பத்தாம் பத்திநாதருடைய ஒரு வாக்கியம்.

பரிசுத்த பிதா பத்தாம் பத்திநாதர் சில கர்தினால்மார்களோடே சம்பாஷித்துக்கொண்டிருக்கும்போது கேட்டதாவது: நமது நாட்களில் பொது ஜன ஆத்தும சரீர நன்மைக்காக அதிக அவசரமாயிருக்கிறதென்ன?

முதல் கர்தினால்: கத்தோலிக் பாடசாலைகளை அதிகமாய்க் கூட்டுவது என்று மறுமொழி சொன்னார்.

2-வது கர்தினால்: அதிக கோவில்களைக் கட்டுவது.

அர்ச். பாப்பானவர்: இல்லை என்றார்.

3-வது கர்தினால்: குருக்கள் தொகை அதிகரிப்பது.



அர்ச். பாப்பானவர்: இல்லை என்றார். இதெல்லாம் அவசரமென்பதற்கு சந்தேகமில்லை. ஆனால் இவைகளைவிட அதிக அவசரமாயிருக்கிறதென்னவென்றால், ஒவ்வொரு பங்கு விசாரணையிலும், கிறீஸ்துவர்களுக்குள்ளே புத்தியும், பத்தியற்றுதலும், தைரியமும், மெய்யான அப்போஸ்தலருமான சிலரைத் தெரிந்துகொண்டு ஒரு சங்கத்தை ஏற்படுத்துவதுதான் என்று உரைத்தார்.

---

## Hints to Teachers.

### உபாத்திமாருக்கு குறிப்பு.

1921-ம் ௵ பெப்ருவரி-மீ 12-உ கோயமுத்தூர் வீராசாமி முதலியார் எலிமெண்டரி பாடசாலையில், கூடிய உபாத்திமார்களுக்கு, மகா-ள-ள-ஸ்ரீ சப் இன்ஸ்பெக்டர் அவர்கள் சில குறிப்பு முறைகளைச் சொன்னார். அக்கூட்டத்திற்கு பாடசாலை சூப்பர்வைசர் அவர்களும் ஆஜராயிருந்தார். பாடசாலையின் உதவி உபாத்திமார்களுடன் தலைமையுபாத்தியாயரும் ஒத்துழைக்கவேண்டுமென்றும்; ஒவ்வொரு உபாத்தியாயரும் காலதாமதம் செய்யாமல் சரியான நேரத்திற்குப் பாடசாலைக்கு ஆஜராகவேண்டுமென்றும், ஒவ்வொரு தலைமையுபாத்தியாயரும், தன் பெரியவகுப்பைச் சரியாய்க் கவனித்துவருவதுமல்லாமல், தனது உதவி உபாத்திமார்களுக்கு உதவியாய் ஒவ்வொரு வகுப்பின் குறைகளைக் கவனித்து நிவர்த்திசெய்ய வேண்டுமென்றும் சொன்னார்.

ஒவ்வொரு வகுப்பிற்கும், பிள்ளைகளுக்கு வாசகபாடம் ஏற்படவேண்டுமென்றும், இதற்கு மாக்மில்லன் பிரசுரமாகிய மார்ஸ்டன் வாசக புஸ்தகங்கள், அல்லது லாங்மென்ஸ் பிரசுரங்கள்; கணிதத்துக்கு J. S. தேவசகாயம் கணிதம், V. வெங்கிட்டசுப்பையர் தமிழ் கணித புஸ்தகங்கள்; இந்துதேச சரித்திரக் கதைகள், செல்லப்பசாஸ்திரியார் சென்னை ராஜதானி; நமசிவாயமுதலியார் பூகோளம் கணக்குப் புஸ்தகமென்றால்;

பிள்ளைகளுக்கு வேறே, உபாத்திமார்களுக்கு வேறே உபயோகிக்கவேண்டும். உபாத்திமார் கணிதமானது, உபாத்திமார்களுக்கு பாடக்குறிப்பெழுத உபயோகமாகும். நீதி வாக்கியக் கதைகளுடன், உபாத்திமார்களுக்கு ஆதாரமான புஸ்தகங்களையும் சேகரித்துக்கொள்வது உசிதம். அவைகளுக்கு ஆதாரமான உபகரணங்களையும், பொருள்களையும் சேகரித்துக்கொள்ள வேண்டும். செய்யுட்பாடம் நடத்துகையில் பதப்பிரிவு, பத அருத்தம், கருத்து, இவை விளங்கச்சொன்னாற்போதுமானது. முதல் வகுப்பில் கணக்கு 50 க்கு மேற்படக்கூடாது ; 2 அணா அல்லது 4 அணாவுக்குள் கடைக்கணக்கு, 5 x 12 வரை பெருக்கல் வாய்ப்பாடு ; சிறு வகுப்பிலிருந்தே சிறுகச்சிறுக பூகோளம் அதாவது, வீடு, ரோட்டு, முக்கியகடை, பங்களா, எல்லைகள், திசைகள் முதலியதை சுருக்கமாய்க் கற்பிக்கவும் ; இயற்கை பொருட்பாடமும் கற்பிக்கலாம்.

வாரம் வாரம் சிலபஸ் (பாடங்களின் பாகம்) இத்தனை நடந்ததென்று குறித்துவைக்கவேண்டும். தினந்தோறும் ஒவ்வொரு வாசகபாடத்திலும் 10 வரியாவது நன்றாய்க் கற்பித்தால் போதுமானது. அதனுள்ளடக்கமாகிய, பத அருத்தம், வினாவுக்கு விடை, கதைச்சுருக்கம், படிப்பினை முதலியவை நன்றாய் விளங்கப் போதிக்கப்படல்வேண்டும். சம்பாஷணைப் பாடங்களிலும் மற்றும் பாடங்களிலும், பாடத்தின் சாரத்தை ஒரு பையன் கேள்வி கேட்க, மறு பையன் விடை சொல்லும்படி பழகச்செய்யவேண்டும்.

S. M. S. G.

## Jayaseelan.

### ஜயசீலன். 16-ம் அதிகாரம்.

சத்தியானந்தனுக்கு வந்த நிர்ப்பாக்கியத்துக்கும், கேட்டுக்கும் ஜயசீலனே காரணமாதலால் தகப்பனாருக்கு வந்த கதியை நினைத்து உள்ளம் நொந்து துக்க வியாகுலத்தால் வியாதி



யானான். பலநாளாய் யாதொன்றும் புசிக்க அவனால் முடியவில்லை. இரவில் நித்திரையின்றி வாய்க்கு வந்தமாதிரி பேசி சமயா சமயங்களில் புத்தி சுவாதீனமில்லாதவனாயும் காணப்பட்டான். அவன் தங்கை இரஞ்சிதமோ அவள் தகப்பனாருக்கு நேரிட்ட நிர்ப்பாக்கிய ஸ்திதியை நினைத்து நினைத்து விம்மி அழுவாள். அவள் சிந்தின கண்ணீருக்கு அளவில்லை. சில சமயங்களில் அவள் வியாகுலத்தின் மிகுதி எம்மாத்திரமென்றால் அநேக நிமிஷம் மூர்ச்சையிழந்து பிரக்கணையற்றவள்போல் காணப்படுவாள். நடந்த விஷயங்களின் உள்ளரங்கத்தையும், தன் தகப்பனாரின் கேட்டுக்குக் காரணம் யாதொன்றும் இரஞ்சிதம், சரியாய் அறியாதவளாதலால் அவள் கண்கள் சிவக்க, கோபாவேஷத்தோடு தன் அருமைத் தந்தைக்கும் குடும்பத்துக்கும் நிர்ப்பாக்கியத்தை உண்டு பண்ணினவன், என்றும் சபிக்கப்பட்டவன் என்று தூஷிப்பாள்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட ஜெயசீலன் தன் முன் யாரோ பளபளப்பும், கூர்மையுமான, வாளைக் கையில் ஏந்திக்கொண்டு தன்னைப் பழிவாங்க அவ்வாளை ஓங்குவதாகத் தோற்றுவதைப்பார்த்து பயந்து நடுங்கி அச்சத்தினால் புத்திமாறி பலவாறாய் உளறத்துவக்கினான். அவன் புத்தி சுவாதீனத்தையடைந்தபின் இரஞ்சிதம் ஜெயசீலனைப்பார்த்து என் பிரிய சகோதரமே, என்மனதிலிருப்பதை உங்களுக்கு அறிவிக்க ஆசையுள்ளவளாயிருக்கிறேன். நமது அன்புள்ள தந்தைக்கு வரவிருந்த இக்கட்டுகளையும் தீங்குகளையும் நீங்கள் அறிந்திருந்தீர்களே. சில காலமாக உங்கள் முகத்தில் நல்ல சந்தோஷமில்லாமல் துக்கவிசாரத்துடன் நீங்கள் காணப்பட்டது அதன் காரணமன்றோ. தங்களுக்கு தேக சுகமற்று வியாதியாகி சில சமையங்களில் புத்தி தடுமாறிப் பிதற்றுவது நமது அன்பார்ந்த தந்தைக்கு வந்த பொல்லாப்பைப்பற்றியல்லோ அவரைவிட்டுப் பிரிந்திருக்க நேரிட்டிருப்பதோடு தங்களையும இழந்து இந்த நிர்பாக்கிய உலகத்தில் யாருமற்ற பரதேசியாய் காலங்கழிக்கவும் சம்பவிக்குமோவென்று பல தடவைகளில் பயந்து கலங்கினேன். நடந்த விஷயங்களைப் பற்றி தாங்களும் தகப்பனாரும் எனக்கு யாதொன்றும் அறிவிக்காமல் மறைத்து வைத்திருந்தீர்களே. நான் பெண்ணானதால் தைரியமற்றவளென்றும் தங்களுக்கு யாதொரு உதவியும் கொடுக்கக்கூடாதவளென்றும். எண்ணினீர்களாக்கும். இந்தத்தப்பறையான எண்ணத்தால் நீங்கள் மோசம் போனீர்கள்.

நான் ஓர் ஏழைப் பெண்ணாயிருந்தாலும் எனக்கு தைரியம் உண்டு, சாமர்த்தியமும் உண்டு. தகப்பனாருக்கு நேர்ந்த இக்கட்டில் அவருக்கு நான் எவ்வளவோ உதவியாயிருந்து அவர் சிறையில் அடைபடாது தடுத்திருக்க என்னால் கூடுமாயிருந்திருக்கும். இச்சங்கதிகளை எனக்கு முன்னமே தெரிவித்திருந்தால் நான் என்ன செய்திருப்பேனென்று கேளுங்கள். நமக்கு ஆதரவும் துணையும் நம்மைப் போஷித்து காப்பாற்றி வந்தவருமான நமது அருமைத் தந்தையாரைச் சிறைப்படுத்த காரணமாயிருந்த மனிதனைப் பார்த்து அவன் காலில் விழுந்து அவன் கடின நெஞ்சை இளக்கவும், தகப்பனாரைத் தீங்கினின்று காப்பாற்றவும், பின் வருமாறு அவனைக் கெஞ்சி மன்றாடியிருப்பேன். ஐயா, என் தந்தை உமக்கு கடனாளியாயிருந்து அதை உத்தரிக்க அவரால் முடியாவிட்டால் அவருக்குரிய சகலத்தையும் நீர் எடுத்துக்கொண்டு அவரை விடுதலை செய்யும். அவர் செலுத்தவேண்டிய பாக்கிக் கடனுக்கு அவருடைய பிள்ளைகள் வேலை செய்து உத்தரிப்பார்கள். நான் வாலிபமாயும் பலமுள்ளவளாயுமிருக்கிறேன். என் ஜீவியகாலமெல்லாம் உமக்கும் உமது பிள்ளைகளுக்கும் பணிவுடன் ஊழியக்காரியாயிருப்பேன். இந்த வார்த்தைகளைக் கேட்கிற எந்த மனிதனுடைய இருதயமும் இளகாமல் போகாதே. என்மட்டில் பெரிய கொடியனும் பரிதாபப்படுவான். இப்படியாய் நான் நமது தகப்பனார் சிறையில் அடைபடாதபடி செய்து அவருக்கு விடுதலை பெற்றுக் கொடுத்திருப்பேனே என்றான்.

தங்கை இரஞ்சிதத்துக்கு தன் தந்தைமட்டில் இருந்த பட்சத்தையும் விசுவாசத்தையும், ஐயசீலன் கண்டு தான் சத்தியானந்தன் விஷயத்தில் நடந்துகொண்ட விதத்தையும், தன் நன்றிகேட்டையும் நினைத்து பிரளயமாய்க் கண்ணீர் விட்டழுதான். தன்முன் ஓர் சம்மனசுபோல் நிற்கும் இரஞ்சிதத்தின் முகத்தைப் பார்த்து உள்ளம் உருகினான். இவ்வளவு உதார சிந்தையும் பட்ச வாஞ்சையுமுள்ள சகோதரியைக் கொண்டிருப்பதற்குத் தான் எவ்வளவோ அயோக்கியனும் அபாத்திரனுமென்று சொல்லி பிரலாபித்தான். ஐயசீலன் தேக ஆரோக்கியம் முழுதுமடைய சிலகாலம் சென்றது. அச்சமயத்தில் இரஞ்சிதம் தன் நேரத்தைப் பங்கிட்டு தன் சகோதரனுக்கு ஊழியம் செய்வதிலும் காலத்தைச் செலவழிப்பாள். ஐயசீலன் தனியாய் இருக்கும் சமயங்களில் தன் தந்தைவிட்டுப் பிரிவதற்குமுன் தனக்குரைத்த அருமையான



புத்திகளை நினைவுகூர்ந்து அவைகளை அடிக்கடி தியானிப்பான். தகாத சகவாசமும், கெட்ட புஸ்தகங்களும் தன் கேட்டுக்கும் தங்கையின் கஸ்திக்கும், தகப்பனாரின் துன்பத்துக்கும் காரணமென்று தெளிவாய் அறியலானான். சுவாமி தயையுள்ளவராகையால் மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பும் பாவியைப் புறக்கணிப்பதில்லை. ஆகையால் தன் பாவ ஜீவியத்தை மாற்றி, தான் இவ்வளவு நாள் கை நெகிழ்ந்து வந்த வேத ஆசாரங்களைக் கைக்கொண்டு புண்ணிய நெறியைத் தேடவேண்டுமென்கிற நல்ல எண்ணமும் கெட்டியான மனதும் அவனிடத்தில் உண்டானது. இவ்வளவுநாளாய்த் தான் இழந்திருந்த மனச்சந்தோஷமும் இரம்மியமும் ஏற்கனவே அவன் அனுபவிக்கவும் துவக்கினான். (இன்னும் வரும்.)

---

## Here and There.

### நாநா சங்கதிகள்.

H. L. the Bishop of Coimbatore ;—மகா கனம்பொருந்திய கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்கள் தமது பிரயாண விஷயத்தில் சில சமாச்சாரங்களை எழுதி அனுப்பினார். ஜனவரி-மீ 5-உ கொழும்பில் கப்பலேறி அடுத்த 19-உ ஹாங்காங் (Hong Kong) என்னும் நகரில் சுகமாய் போய்ச்சேர்ந்தார் என்று கேள்விப்பட்டு சந்தோஷப்படுகிறோம். அவர் போகும்போது தரிசித்த சிங்கப்பூர், சைகோன், ஹாங்காங் முதலிய இடங்களில் அநேக நேர்த்தியான கோவில்களையும், மடங்களையும் பள்ளிக்கூடங்களையும் பார்த்திருந்தபோதிலும் கோயமுத்தூர்தான் தமக்கு அதிக பிரியமாயிருக்கிறதென்று சொல்லுகிறார்.

Vocations :—ஐரோப்பாக் கண்டத்திலுள்ள குருமடங்களில் படிக்கும் மாணவர்களின் தொகை அதிகரித்து வருகிறதென்ற சுபசெய்தியைக் கேட்டு சந்தோஷிக்கிறோம். விசேஷமாய்ப் பிராஞ்சு தேசத்தில் குருமடங்களில் மாணவர்கள் அதிசயத்துக்குரியவிதமாய் அதிகரிக்கிறார்கள். பாரீஸ் நகரத்தி

லுள்ள ஒரு குருமடத்தில் 68 பேர் பட்டாள உத்தியோகங்களை விட்டுவிட்டு இப்போது குருப்பட்டத்துக்காகப் படித்து வருகிறார்கள்.

நமது இந்தியாவில் குருமடங்களில் மாணவர்கள் அதிகப்படுவது எப்போ?

Plague:—பிளேக் என்னும் கொடிய வியாதி கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள சுமார் 78 இடங்களில் பரவிவிட்டது. கோயமுத்தூர், திருப்பூர், உடுமல்பேட்டை, பொள்ளாச்சி, முதலிய இடங்களிலும் உலாவுகிறது. இப்போது கோயமுத்தூரில் அடங்கியிருக்கிறது. கொள்ளைநோய், பஞ்சம், சண்டை முதலிய தின்மைகளிலிருந்து எங்களைக் காப்பாற்றியருளும் சுவாமி.

More subscribers:—சங். அந்தோனிநாதர் சுவாமியார் எடுத்த நல்ல முயற்சி பிரயாசையினால் உடுமல்பேட்டை, பொள்ளாச்சி, ஆனைமலை முதலிய இடங்களில் நமது சத்திய தூதனுக்கு 50 சந்தாதார் இப்புது வருஷத்தில் சேர்ந்தார்கள். பத்திராதிபர் நன்றியறிதலாயிருக்கிறார்.

A New Convent:—நீலகிரிமலையிலுள்ள கோத்தகிரி என்னும் ஊரில் கோயமுத்தூர் மேற்றிராணியாருடைய நல்ல ஏற்பாட்டினால் ஒரு புது ஐரோப்பிய கன்னியாஸ்திரி மடமும் இங்கிலீஷ் பெண் பாடசாலையும், கொஞ்சநாட்களுக்குள் ஸ்தாபிக்கப்படும் என்ற நல்ல செய்தியைக் கேட்டுச் சந்தோஷப்படுகிறோம். ஷை மடமும் பள்ளிக்கூடமும் மரியாயின் போதகரான பிரான்சீஸ்கு சபைக் கன்னியாஸ்திரிகளால் கோத்தகிரி பங்கு குருவாகிய சங். ஆர். பெல்ஸ் (R. Beyls) சுவாமியார் விசாரணையில் நடத்தப்படும். வாழ்க...

A New Daily:—மதராஸ் டய்ம்ஸ் என்னும் பத்திரிகைக்குப் பதிலாக வேறொரு புதுத் தினவர்த்தமானப் பத்திரிகை கொஞ்சநாட்களுக்குள் மதராசில் பிரசுரிக்கப்படும் என்று பிரஸ்தாபம்.

Transfer:—குன்னூர் பங்குவிசாரணை உதவிக் குருவாகிய சங். S. மரியஜோசப் சுவாமியார் பாலக்காடு பங்குவிசாரணைக் குருவாகவும், சங். S. மாசில்லாமணி சுவாமியார் குன்னூர் பங்கு விசாரணை உதவிக் குருவாகவும் தற்காலத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

---

# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

Vol. VII. April 1921. No. 4.

புஸ்தகம் VII.] FIDES AC ROBUR. [நம்பர் 4.

## CIRCULAR.

Our Holy Father, Pope Benedict XV, in a *Motu Proprio* issued on 25th July 1920, reminds the Catholics throughout the world that the current year marks the 50th Anniversary of the proclamation of St. Joseph as the Patron of the Universal Church, and orders that, within a year from the 8th December 1920, a solemn function be celebrated throughout the Catholic world at the time and in the manner appointed by the respective Ordinaries.

In response to the wish of Our Holy Father the Pope, in all the Churches and Public Chapels of the Diocese of Coimbatore, the Solemnity of St. Joseph, on the 17th April next, shall be celebrated with a High Mass, wherever possible, and a solemn Benediction of the Blessed Sacrament during which the Litany of St Joseph shall be recited. Preparatory to the Feast, a Triduum with special prayers and Benediction of the Blessed Sacrament may be celebrated wherever possible. The details of this celebration, however, are left to the discretion of the Parish Priests to suit the circumstances of each place.

To all the Faithful who will participate in these Festivities Our Holy Father grants a Plenary Indulgence under the usual conditions.

Parish Priests are requested kindly to exhort the faithful under their care to celebrate this Jubilee with fervour, in order to obtain, through the intercession of the glorious St. Joseph, the Blessings of God on our Holy Mother the Church, and our Catholic Families, and also to learn from him the three most important lessons of Christian life: sanctity of home, obedience to authority, and dignity of labour.

*Coimbatore,*
15-3-21.

L. BECHU,
*Vicar General.*

---

## The Good Shepherd.

## நல்ல மேய்ப்பன்.

நானே நல்ல ஆயன்: நல்ல ஆயன் தன் ஆடுகளுக்காகத் தன் பிராணனைக் கொடுக்கிறான். மேய்ப்பனாயிராத கூலியாளோ ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாததினாலே, ஓனாய் வருகிறதைக்கண்டு, ஆடுகளை விட்டுவிட்டுத் தப்பி ஓடிப்போகிறான். அப்பொழுது ஓனாய் ஆடுகளைப் பாய்ந்து பிடித்துச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காரனாயிருக்கிறபடியினாலும், ஆடுகளின்மேல் அவனுக்கு அக்கறையில்லாததினாலும் ஓடிப் போகிறான். நானே நல்ல மேய்ப்பன்: நான் என் ஆடுகளை அறிவேன்; என் ஆடுகளும் என்னை அறியும். என் பிதா என்னை அறிந்திருக்கிறதுபோல, நானும் பிதாவை அறிந்திருக்கிறேன். என் உயிரையும் என் ஆடுகளுக்காகக் கொடுக்கிறேன். இந்த ஆட்டுக் கிடையைச் சேராத வேறே ஆடுகளும் எனக்



குண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும். அவைகளும் என் குரல் சத்தத்தைக் கேட்கும்; அப்பொழுது ஒரே ஆட்டுக் கிடையும் ஒரே மேய்ப்பனும் ஆகும்.

(அருளப்பர் X-11-17.)

" *Thinking* well and *Talking* well are nothing without *doing* well."

---

## The Little Garden of Roses.

## சிறு ரோஜாத் தோட்டம்.

மலர் 16. (முன் தொடர்ச்சி.)

எங்கே பொறுமையுண்டோ அவ்விடத்தில் ஒரு பெரிய சத்துருவை மேற்கொண்டதுபோலாகும். ஆனால் ஒழுங்கீனமும் கலக்கமும் எங்கே இருக்குமோ அங்கேயிருந்து சமாதானமும் பறந்தோடிவிடும்.

ஆகாத வார்த்தைகளைச் சொல்லாதபடி உன் வாயின்மேல் கடிவாளம் போட்டுக்கொள். பேசுவதற்குமுந்தி வார்த்தைகளின் கனத்தையறிந்து அவைகளைச் சொல்லுவாயாக.

உண்மையும் விசுவாசமும் சந்திக்குமிடத்தில் சமாதானம் நிலைநிற்கும். ஆனால் பாவமும் வஞ்சனையும் கூடுமிடத்து மதிகெட்ட எண்ணங்களும், பயனற்ற யோசனைகளுந்தான் உண்டாகும்.

எங்கே தேவசிந்தனையுண்டோ அங்கே திவ்விய இஸ்பிரீத்துசாந்துவானவர் வாசஞ்செய்வார்.

எவனிடத்தில் சந்தேகிக்கிற குணமிருக்குமோ அவனிடத்தில் கோபத்துக்கும் சண்டைக்கும் அளவு கிடையாது. ஆனால் எங்கே உண்மையறிவு உண்டோ அங்கே மனச்சமாதானம் நிலைகொண்டிருக்கும்.

நமது புத்திக்கு மேற்பட்ட காரியத்தைச்செய்ய நாம் சக்தியற்றிருக்கும்போது சர்வேசுரனுடைய அடைக்கலத்தைத் தேடி அவருடைய உதவி சகாயத்தைக் கேட்கவேண்டும்.

அநீதமும் அக்கிரமமுமான வழிகளைத் தேடுகிறவனுடைய முடிவு வெகு பயங்கரமாயிருக்கும். ஆனால் பொறுமையாயிருக்க ஆசித்துப் புண்ணிய சாங்கோபாங்க நெறியில் வழுவாமல் நடப்பவனுக்கு ஞான ஆறுதலும், மனச்சமாதானமும் ஏராளமாய்க் கிடைக்கும்.

துர்மார்க்கனே! உனக்கு ஐயோ கேடாம். பிறருக்கு நன்மைசெய்வதாகக் காண்பிக்கிற வஞ்சகனே! உனக்கும் ஐயோ கேடாம். ஏனெனில் நீங்களிருவரும் உங்களுடைய பாவங்களினிமித்தம் மற்றவர்களைவிட அதிக ஆக்கினையனுபவிப்பீர்கள்.

இருதலைக்கொள்ளியைப்போல் இருமனமுள்ள மனிதன் தன் காரியங்களில் நிலையற்றவனும் துர்மார்க்கனுமாயிருப்பான். ஆனால் நீதியும் களங்கமுமற்ற மனதையுடையவனோ ஆசீர்வதிக்கப்பட்டவனாவான். எப்படியெனில் சர்வேசுரன் இவனருகில் இருந்துகொண்டு எல்லாக்காரியங்களிலும் இவனுக்கு உதவிபுரிந்து இவனைப் புண்ணியவழியில் உறுதிப்படுத்துவார்.

ஒருவன் வெளிக்கு எவ்வளவு நேர்மையுள்ளவனாய்க் காணப்பட்டாலும், தன் பேச்சிலே பிசகிப்போவானேயாகில் பிறகு அவனை யார் நம்புவார்கள்? ஆனால் தான் முன்கொண்ட கெட்ட அபிப்பிராயத்தை நல்ல அபிப்பிராயமாக மாற்றுகிறவனோ சத்தியத்தை என்றும் மீறுகிறவனல்ல.

3. புண்ணிய கிருத்தியங்களைப்பற்றி அடிக்கடி சொல்லக் கேட்பது மிகவும் இன்பகரமானது. ஆனால் அவைகளைப்பற்றி நன்னெறியில் நடப்பவன் என்றும் மாறாத ஞான சந்தோஷத்தையும், இருதய சமாதானத்தையும் கண்டடைந்து நித்திய ஜீவியத்துக்குப் பாத்திரவானாவான்.

ஒருவன் தன் மனச்சாட்சியைக் கவனமாய்ச் சோதித்துப் பார்ப்பது, தன்னடக்கையைத் திருத்தி நன்மையில் வர்த்திக்க ஏதுவாகும். பாவத்தை விலக்கிப் புண்ணிய வழியில் சுமுத்திரையாய் நடந்து மோட்சகரை சேரச்செய்வதுதான் நல்ல ஆத்துமசோதனையின் இலட்சணங்கள்.

தன் மனதைச் சர்வேசுரனோடு ஒன்றித்து, அவரை ஆராதித்து, அவருக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செய்வதுதான் பத்தியுள்ள ஜெபத்தின் பலனாகும்.

ஒருவன் தன் மனதிலிருந்து ஆகாத நினைவுகளைத் தள்ளிவிடுவது பத்தியாய் ஜெபிப்பதுபோலாகும். சேசுநாதர் பாடு



பட்ட சுரூபத்தைத் தன் கண்முன் வைத்திருந்தால் உலக சுக இன்பம் அவன் கண்களை மயக்காது; பசாசு அவன் கிட்ட நெருங்காது; அவன் சரீரம் அவனைத் தீண்டாது. சேசுநாதர் சுவாமி பட்ட பாடுகளை அடிக்கடி தியானிக்கிறவனுக்குப் பாவத்தின்மேல் பகையும், துன்ப வருத்தங்களைப் பொறுமையோடு ஏற்றுக்கொள்ள மனத்துணிவும், சேசுவின்பேரில் உருக்கமான நேசமும் ஏற்படும். நாள்தோறும் சேசுவின் திருக்காயங்களைப் பற்றித் தியானிப்பவன் தன்னாத்தும காயங்களையாற்றுவதற்கு பரம அவுழ்தங்களைப் பெற்றுக்கொள்ளுகிறான்.

உலகத்தையும், அதன் ஆஸ்தி திரவியம், மகிமை பெருமை, இன்பசுகம் எல்லாவற்றையும் அறவே வெறுத்து, அவைகளெல்லாம் வீணிலும் வீண் என்றெண்ணுபவன் சர்வ பரிசுத்த தனத்தோடேயும், நல்ல இருதயத்தோடேயும், தக்க முறையாயும், பத்தியாயும் சர்வேசுரனுக்கு ஊழியஞ் செய்யப் பேறு பெற்றவனாவான். சர்வேசுரனை சர்வத்துக்குமேலாகச் சிநேகித்து, அவரை எக்காலத்திலும் எவ்விடத்திலும் வாழ்த்திஸ்துதித்துக்கொண்டுவருபவன் சிரவணமுள்ள தாழ்ச்சியையும், அடிக்கடி தன் பாவங்களுக்காக அழுது மனஸ்தாபப்படும் வரத்தையும் பெறுவான். மகாத் தாழ்ச்சி விநயத்துடனே தன் குற்றங்குறைகளுக்காக மனஸ்தாபப்படுவது சர்வேசுரனுடைய செவியை ஊடுருவச் செய்ய வல்ல சப்தமாகும்.

4. நீ என்ன நற்கிருத்தியங்களைச் செய்தாலும் அவற்றையெல்லாம் சர்வேசுரனுடைய அதிமிக தோத்திரத்துக்காகச் செய்யவும்.

தான் செய்யும் புண்ணிய கிருத்தியங்களையும், பிறருடைய காரியங்களையும் சர்வேசுரனது மகிமை பெருமைக்காக முழுவதும் தனியே யேற்றிக்கூறுபவனும், எல்லாவற்றையும் அவரிடத்திலேயே சமர்ப்பித்து அவரது அபாரக்கருணைக்கு அவைகளை ஒப்படைத்துக் கூறுபவனும், தன்னதென்ற சிந்தையை முழுதுமகற்றி எல்லா நன்மைகளுக்கும் ஆதிகாரணராகிய அக்கடவுளையே ஒப்புக்கொள்பவனுமான மனிதன், கர்வம், பொறாமை, வீண் டம்பம் முதலிய துர்க்குணங்களையெல்லாம் காலின்கீழ் மிதித்தேறுவதுடன் அவற்றை நாசமும் செய்கிறான். நன்மையேயுருவாய் விளங்கும் கடவுளது கீர்த்தியைப் புகழ்ந்து கூறாது தன்னாலே சர்வமும் முடிவதாகப் பெருமை கூறிக்கொள்பவன் சாஸ்வதமான கவுரவத்தை இழந்தவனாகிறான்.

இதனால் அர்ச். கன்னிமரியம்மாள் தனது இரட்சகரிடமிருந்து பெற்றுக்கொண்ட சகல நன்மை வரப்பிரசாதங்களினிமித்தம் மிக்க நன்றியறிதலுள்ளவளாய்த் தனது இருதயத்திலுண்டான ஆனந்த சந்தோஷத்தினால் ஆண்டவரை வாழ்த்திப் புகழ்ந்து வசனித்தப் பத்து வாக்கியங்களில் இரண்டாவதாக, "என் இரட்சணியமாகிய சர்வேசுரனிடத்தில் என் ஆத்துமம் ஆனந்தமாய் எழுந்து மனமகிழ்கின்றது" என்று இன்பமாய்ப் பாடியிருக்கிறாள்.

"ஒருவன் ஒன்றுமில்லாதிருக்கையிலே தன்னையொரு பொருட்டாய் மதிப்பவன் தன்னைத்தானே கெடுத்துக்கொள்ளுகிறான்" என்று அப்போஸ்தலராகிய அர்ச். சின்னப்பர் வசனித்திருக்கிறார். இவர் போதகத்தினாலும், தாம் எழுதின சுகிர்த வாக்கியங்களாலும் உலகத்துக்கு எவ்வளவோ நன்மை விளையச்செய்திருந்தபோதிலும், அவற்றால் தாம் பெருமை கொள்ளாமல், சர்வேசுரனுடைய விசேஷ உதவியால் இவற்றையெல்லாம் செய்ததாகவும், அதனிமித்தம் இவர், "சர்வேசுரனுடைய இஷ்டப்பிரசாதம் என்னிடத்தில் வீணாயிருந்ததில்லை. எப்படியெனில் எல்லாரையும்பார்க்க நான் அதிகமாகப் பிரயாசைப்பட்டிருக்கிறேன். ஆனால் நானல்ல, என்னிடத்திலுள்ள சர்வேசுரனுடைய இஷ்டப்பிரசாதந்தான் இப்படிச் செய்தது" என்று கூறியிருக்கிறார்.

(இன்னும் வரும்.) S. S. G.

---

## This is no Joke.

## இது விநோதமல்ல.

ஒரு ஊரில் இராமசாமி என்பவன் வக்கீல் உத்தியோகம் செய்துகொண்டிருந்தான். இந்த நாட்களில் வழங்கிவரும் ஒற்றுமையாமை என்னும் குழப்பத்தில் சேர்ந்து, அதைப் பற்றி ஜனக்கூட்டங்களில் உபந்நியாசம் செய்வான். திடீ



ரென்று 16 பிராயமுள்ள அவனுடைய ஏக குமாரன் வியாதியாய் விழுந்து அவஸ்தையானதினால், அவனுக்கும் அவன் பெண்சாதிக்கும் மிக கஸ்தியும், சஞ்சலமும் உண்டாயிற்று. காலையில் தாமதமின்றி வைத்தியனை வரவழைக்க நினைத்து, தன் சொந்த மோட்டார்காரில், சீக்கிரம் போகலாமென்று, ட்ரைவரைக் கூப்பிட்டு வண்டியை ஓட்டச்சொன்னான். ட்ரைவரோ, ஐயா! ட்ரைவிங் காலத்தில் நான் ஒற்றுமையாமை என்னும் கட்டுமானம் செய்துகொண்டிருக்கிறேன். ஆனதால், வண்டி ஓட்டமாட்டேன் என்று சொல்லிவிட்டான். இராமசாமி வீண் பேச்சு பேசாதே, என் பிள்ளை அவஸ்தையாயிருக்கிறது. சீக்கிரம் வண்டியைக் கொண்டுவா? ட்ரைவர் எனக்கென்ன? ஒற்றுமையாமை என்பது ஒன்றுதான் எனக்குத் தெரியும்.

இராமசாமி கடுங்கோபமடைந்து திட்டிக்கொண்டு, வாடகை கொடுத்தாவது ஜட்கா வண்டியில் போகலாமென்று எண்ணி, சமீபமாயிருக்கும் வண்டிப்பேட்டைக்கு வேகமாய்ப் போய், அங்கே ஒரு ஜட்கா வண்டிக்காரனைக் கண்டு, நீ தயவு செய்து உன் வண்டியைச் சீக்கிரம் கட்டி, என்னை டாக்டர் வீட்டுக்கு ஓட்டிக்கொண்டுபோ என்றான். வண்டிக்காரன் சிரித்துக்கொண்டு, ஐயா! நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாமை என்னும் உடன்படிக்கை செய்திருக்கிறோம். இன்று வண்டி ஒன்றும் கிடையாது. நீர் நடந்து போகலாம். இராமசாமி ஐயையோ! என்பேரில் இரக்கமாயிரு. என் மகனுக்கு கடும் வியாதி. நீ என்ன வாடகை கேட்டாலும் கொடுக்கிறேன். போக வர நான்கு மைல் தூரம் இருக்கும். வண்டிக்காரன் வண்டியோட்டமாட்டேன், எனக்கு ஒற்றுமையாமைக் கட்டுப்பாடு இருக்கிறது.

இராமசாமி அதிகமாய்ப் பேசினால், அதிக காலதாமதமாகும் என்று நினைத்து, நடந்துபோகத் தீர்மானித்தான். பிறகு, வேர்வை வேர்க்க, ஓட்டமாய் ஓடி, பெருமூச்சு விட்டுக்கொண்டு, டாக்டர் வீட்டிற் சேர்ந்து, டாக்டரைக் கூப்பிட்டான். அப்போது அவர் சாப்பிட்டுக்கொண்டிருந்தார். சாப்பிட்டானபிறகு வெளியில் வந்து, இராமசாமியைப் பார்த்து, என்ன சமாச்சாரம் என்று கேட்க, இராமசாமி தான் வந்த சங்கதியைச் சுருக்கமாய்ச் சொன்னான். டாக்டர் சிரித்துக்கொண்டு, சிநேகிதா, நான் ஒற்றுமையாமை என்னும் கட்டுப்பாடு செய்துகொண்டிருக்கிறபடியால், உன் வீட்டுக்கு வர முடியாது.

இராமசாமி குப்புறவிழுந்து டாக்டருடைய காலைப்பிடித்துக்கொண்டு, டாக்டரே! என்மேல் இரக்கமாயிரும், நான் பெரும்பாவி, ஆனால் என் மாசில்லாத குழந்தையைச் சாகவிடாதேயும். என் சொத்து உமது சொத்து, வாருங்கள் ஐயா! என்றான்.

டாக்டர்: உன் சொத்து வேண்டாம். நீ போதித்த, ஒற்றுமையாமையின் கட்டுப்பாட்டை டாக்டர்களாகிய நாங்கள் எல்லோரும் அநுசரித்து வருகிறோம். இதுதான் உன் போதனையின் பலன். உன் போதனையினால் எத்தனையோ ஜனங்கள் மோசம் போகிறார்கள். எத்தனையோ குழந்தைகள் தக்க உணவில்லாமல் சாகிறார்கள். எத்தனையோ பேர் வேலையில்லாமல் திரிந்து கஷ்டப்படுகிறார்கள். எத்தனையோபேர் தெரியாமல் கலாபனையில் அகப்பட்டு, சண்டைசெய்து காயப்பட்டுச் செத்துப்போயிருக்கிறார்கள். நீயும் உன்னோடே சேர்ந்திருக்கிறவர்களுந்தான் அதற்குக் காரணம் என்று சொல்லி, கதவைச் சாத்திவிட்டு உள்ளே போய்விட்டார்.

இராமசாமி: வெகு மனஸ்தாபப்பட்டு, தான் வந்த வழியில் திரும்பிப்போனான். போகும்போது ஒரு மருந்துக்கடைப் பக்கத்தில் சேர்ந்தான். அதன் கதவு சாத்தப்பட்டிருந்ததால், அதன் கதவைத் தட்டி தட்டி, கடைக்காரனைக் கூப்பிட்டான். சற்று நேரத்துக்குப் பிறகு ஒரு வேலைக்காரன் வந்து சங்கதியை விசாரித்து, இன்றைக்கு ஒற்றுமையாமையைப்பற்றி, இங்கே மருந்து விற்கிறதில்லை என்று சொல்லிப்போனான். இராமசாமி களைப்பினாலும், அவநம்பிக்கையினாலும், கலியினாலும் பலவீனப்பட்டு மயங்கி, நடக்கமுடியாமல் வழியோரத்தில் உட்கார்ந்து தேம்பியழுதான். அப்படியிருக்கும்போது இரண்டு திருடர்கள் கையில் கத்தியை ஏந்திக்கொண்டு ஓடிவந்து அவன்மேல் விழுந்து அவன் வைத்திருந்த தங்க கடிகாரத்தையும், பணத்தையும் திருடிக்கொண்டு ஓடிப்போனார்கள். இராமசாமி போலீஷாரைக் கூப்பிட்டான், ஆனால் போலீஷாரும் ஒற்றுமையாமையின் கட்டுப்பாடு செய்திருந்ததினால் திருடர்களைப் பிடிக்க, யாதொரு முயற்சியும் செய்யவில்லை. புகைவண்டியும், குதிரைவண்டியும், மோட்டார் காரும், தபாலும், சகலமும் நின்றுபோயிற்று. கடைகள் எல்லாம் சாத்தப்பட்டிருந்தன. வேலையும், வியாபாரமும், நின்றுபோயின. இராமசாமி கொஞ்சம் இளைப்பாறி மயக்கம் தெளிந்த பிறகு எழுந்திருந்து, வீட்டுக்குப் போகும்போது, கடைவீதியில் ஒரு பெரும் ஜனக்கூட்டத்தைக் கண்டான். அதில்



ஒருவன் உபந்நியாசம் செய்து, ஒற்றுமையாமையைப் போதித்திருந்தான். இராமசாமி பயமின்றி அவனை நிறுத்தி. "இனி ஒற்றுமையாமையைப்பற்றிப் பேசவேண்டாம், 'ஒற்றுமையாமை' என்றால் ஜீவியத்தின் நிர்மூலம், ஒழுக்கத்தின் கேடு, தேசத்தின் நாசம், என்று உரத்த சத்தமாய்ச் சொல்லி, தன் வீட்டுக்கு வேகமாய்ப் போனான். வீட்டிற் சேர்ந்தவுடனே தன் ஏக குமாரன் செத்துக்கிடக்கிறதைக் கண்டான்.

அதினால் இராமசாமி, மிகுந்த துக்கமும் நஷ்டமுமடைந்து, அன்று தொடங்கி, நல்ல படிப்பினையடைந்து, ஒற்றுமையாமையை வெறுத்து, அதை விட்டு விடும்படி யாவர்க்கும் நற்புத்தி சொல்லிவந்தான்.

(சத்திய நேசன்.)

---

## History of the Diocese of Coimbatore.

### கோயமுத்தூர் மேற்றிராசனத்தின் சரிதை.

(முன் தொடர்ச்சி.)

**புதுக்கோவில்கள்** :—1860-ம் ௵ முதல் 1870-ம் ௵ வரை கோயமுத்தூர் மிஷனில், அநேக புதுக்கோவில்களும் ஜெபக்கூடங்களும் கட்டப்பட்டன. 1862-ம் ௵த்தில் சங். பெர்த்தோன் (Berthon) சுவாமியார் நகலூரிலும், சங். பார்து (Bardou) பள்ளப்பாளையத்திலும், பாலக்காட்டிலும், 1863-ம் ௵ சங். தெ ஜெலிஸ் (De Gelis) சுவாமியார் குன்னூரிலும், 1864-ம் ௵ சங். இரவெல் (Ravel) சுவாமியார் வெல்லிங்டனிலும், 1866-ம் ௵ சங். பஜோ. (Pageaull) சுவாமியார் மேட்டூரிலும் சின்னப்பள்ளத்திலும், 1867-ம் ௵ சங். பார்து (Bardou) ஈரோட்டிலும் கோவில்களைக் கட்டினார்கள். தவிர கோத்தர்கிரி, பசுபதிபாளையம், மேட்டூருக்கு அடுத்த சவேரியார் பாளையம் முதலிய ஊர்களில், ஏறக்குறைய அதே காலத்தில் புதுக்கோவில்கள் கட்டப்பட்டன. கோயமுத்தூரில் கனம்பொருந்திய தெ ப்ரேசியக் (De Bresillac) ஆண்டவ

ரால் 1850-ம் வருஷத்தில் ஆரம்பிக்கப்பட்ட மேற்றிராசனக் கோவில் 1867-ம் ௵ ஏப்பிரல் ௴ 28-ம் உ கனம்பொருந்திய தெ போமியே (Depommier) ஆண்டவரால் அபிஷேகம் பண்ணப்பட்டது. அதில் மரி சவேரி என்னும் நாமத்தால் ஒரு மணி அபிஷேகம் பண்ணப்பட்டது. மேலும் கனம்பொருந்திய தெ பொமியே ஆண்டவருடைய நல்ல ஏற்பாட்டால் ஒத்தகமண்டில் 1871-ம்௵ ஒரு நல்ல கோவில் கட்டி முடிவு பெற்றது.

அக்காலத்திலேயே, கோயமுத்தூர் மிஷனில் இங்கும் அங்கும் வேறே அநேக சிறு கோவில்கள் கட்டப்பட்டன. அவைகளில் சிலது சிறப்பின்றி ஏழையாயிருந்தபோதிலும், திருச்சபையின் விர்த்திக்கு அடையாளமாயிருந்ததுமல்லாமல் திவ்விய இரட்சகராகிய சேசுநாதர்சுவாமி பெத்லகேமில் மாட்டுக் கொட்டாயில் பிறந்ததுபோல, அவைகளில் வாசம் பண்ணி, ஞான ஜீவியமடைந்த கிறீஸ்துவர்களுக்கு ஞானப் போசனமாகத் தம்மைக் கொடுக்கச் சித்தமானார்.

**தர்ம மடங்களும், பள்ளிக்கூடங்களும்:**—1859-ம் ௵ கருமத்தன்பட்டியில், அநாத ஆண்பிள்ளைகளுக்காக ஒரு தர்ம மடமும், கோயமுத்தூரில் அநாத பெண்பிள்ளைகளுக்காக ஓர் தர்மமடமும் ஸ்தாபிக்கப்பட்டன. முதல் வருஷத்தில் அவ்விரண்டு மடங்களிலும் 19 பிள்ளைகள் சேர்ந்தார்கள். 1864-ம் ௵ ஆண்பிள்ளைகள் மடத்தில் 60 பேர் இருந்தார்கள். ஷை வருஷமுதல் வர வர அதிகமதிகமாய்ச் சேர்ந்ததினாலேயும், பொருள் உதவி போதாததினாலேயும் அவ்விரண்டு மடங்களையும் தற்காலத்துக்குக் கலைத்துவிடும்படி நேரிட்டது. அவைகளிலிருந்த பிள்ளைகள் காப்பாற்றி வளர்க்கும்படியாக ஒப்புக்கொண்ட சில நல்ல கிறீஸ்துவ குடும்பங்களுக்கு ஒப்படைக்கப்பட்டார்கள். ஆயினும் அந்த அநாத பிள்ளைகளைக் கைவிடாமல், அவர்கள் வேலைசெய்து குடும்பங்களை ஸ்தாபித்து பிழைக்க உதவியாயிருக்கும்படி, காவேரி நதிக்கரையில் இருக்கும் சின்னப்பள்ளம் என்னும் மிஷன் பூமியை வாங்கி புது மடங்களை ஏற்படுத்தினது, அவ்விடம் சௌக்கியமில்லாததினால் தர்மமடங்கள் அங்கே விர்த்தியாகவில்லை.—ஆனதைப்பற்றி சில வருடங்களுக்குப்பிறகு அவைகள் கோயமுத்தூருக்கு மாற்றப்பட்டன.

1865-ம் ௵ கனம்பொருந்திய தெ பொமியெ (Depommier) ஆண்டவர் கோயமுத்தூர் விக்கர் அப்போஸ்தொலிக்காக நியமிக்கப்பட்டு, ஆண்டவர் பட்டம் பெற்றார். அவர் அதே



வருஷத்தில் கோயமுத்தூரிலும், ஒத்தகமண்டிலும், பாலக்காட்டிலும், முதல முதல் பாடசாலைகளை ஏற்படுத்தினார். ஷை 1865-ம் ௵ தெ ஜெலிஸ் (De Gelis) சுவாமியார் குன்னூரிலும் ஒரு பாடசாலையை ஸ்தாபித்தார்.

அவ்விதமே, சுவாமி கிருபையினாலும் வேதபோதகருடைய விடாமுயற்சியினாலும் சத்திய வேதம் கோயமுத்தூர் நாட்டில் எல்லாவிஷயத்திலும் அதிகமதிகமாய் விர்த்தியானதுபற்றி நாம் சர்வேசுரனுக்கு நன்றியறிதலாக தோத்திரம் செலுத்தக்கடவோம்.

" 'Tis better for to try and fail
Than just to sit around and wail."

---

## Female Education

### மாதர் கல்வி.

கல்வி மனிதருக்கு சர்வேசுரன் இயல்பாயளித்திருக்கும் மனம், புத்தி, சித்தம், ஆகிய மூன்றையும் விர்த்திக்குக் கொணர்ந்து, இதினால் கற்றோர் உலகில் புத்திசாலிகளாயும், நற்குண நற்செய்கைகள் பூண்டுமே ஒழுகி, சர்வேசுரனுக்கு உகந்த பிள்ளைகளாய், தங்கள் ஜீவியத்தில் அவரது மகத்துவத்தையும், இலட்சணங்களையும் மற்றோருக்கு விளக்கும் கண்ணாடிகளாகவும் நடந்து, பரதேசமாகிய இவ்வுலகத்தை விடுங்கால் சர்வேசுரனால் மோட்சபதவி பெறுதற்கு ஏதுவானதாம்.

கல்வியின் நோக்கம் இவ்வளவு உன்னதமானதாலும், கல்வியறிவில்லாதார் தம் இயற்கை அறிவினால் மாத்திரம் சர்வேசுரனுக்குச் செய்யும் கடமைகளைச் செய்ய முடியாமையாலும், நமது தாயாகிய திருச்சபை எக்காலத்திலும் கல்வியின் ஊறணியாய், நாகரீகமற்றோரை நாகரீகப்படுத்தியும், எங்கும் கல்விச்சாலைகளையும், சிறுவர் பள்ளிக்கூடங்களையும் ஏற்படுத்தி வருகிறது.

நமது சென்னைமாகாணத்திலும், கத்தோலிக் கல்விச்சாலைகளுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் மேலான கல்விச்சாலைகளும், பள்ளிக்கூடங்களும் காண முடியாது.

திருச்சபை பள்ளிக்கூட விஷயமாய் இப்படிக் கண்ணும் கருத்துமாயிருப்பானேன்? இயற்கையறிவுடனிருக்கும் மனிதன் விலங்குகட்குச் சற்று மேலாயினும், அவைகளினின்று அதிக வேறுபாடின்றியிருக்கிறான். முதல் முதல் இம்மனிதன் கல்வி நிபுணர்களாலும் கரை காணா இலட்சணங்களுள்ள சர்வேசுரனை எவ்விதம அறியக்கூடும்? உலகத்தில் கணக்கில்லாத ஜனங்கள் வானத்தில் மின்னலும் இடியும் உண்டாவதைக் கண்டிருந்தும், அவை எவ்விதம் உண்டாகின்றனவென்று அறியார்கள். சகல சாஸ்திரங்களுக்கும் மேலாகிய பரம்பொருளை இவர்கள் எவ்விதம் அறியக்கூடும்?

இப்படி சர்வேசுரனை அறியக்கூடாத இவர்கள் அவரை எவ்விதம் நேசிக்கக்கூடும்! ஒரு பொருளை இன்னதென்றும், அதன் நிறம், வாசனை, ருசி முதலிய குணங்கள் இவையென்றும் தெரிந்தாலல்லோ, அதன் விஷயத்தில் பட்சமுண்டாகும். ஒன்றும் தெரியாதிருக்கையில் அதைப்பற்றி நாம் நினைப்பதே இயல்பல்லாதிருக்க, அதன்மேல் இச்சை வைப்பது எப்படி? ஆகவே சர்வேசுரனை அறியக்கூடாதார் அவரை நேசிப்பது எவ்விதம்?

சர்வேசுரனை நேசியார் அவருக்கு ஊழியம் செய்யக்கூடுமோ? இப்படிச் சர்வேசுரனை அறிந்து, சிநேகித்து, சேவியாதார் அதன் பயனாகிய பிறர்சிநேகத்தைப் பாராட்ட முடியுமோ? சற்றும் முடியாது.

எத்தேசங்களிலும் உண்டாகும் எவ்விதக் குழப்பங்களும், கலாபனைகளும், நியாயஸ்தலங்களுக்குக் கொண்டுவரப்படும் பிரியாதுகளும், இக்கல்வி அறிவில்லாரால் நடக்கிறதென்பது உண்மை. இதினால்தான் தேசாதிபதிகள் பாமர ஜனங்கள் கல்வி கற்கவேண்டுமென முயற்சி செய்து, கட்டாயம் செய்கிறார்கள். இல்லையேல் இவ்வறிவிலிகளால் உண்டாகும் சேதம் இவர்களெல்லோரையும், அவர்களது பொருளுதவியின்றி கல்விகற்பிக்கும் தொகையைவிட பன்மடங்கு அதிகமாகும். இதையறிந்தே திருச்சபை எங்கும் கத்தோலிக்கருக்குப் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்திருக்கிறது.

உலகில் சர்வேசுரனையும், பிறனையும் சிநேகிக்கும் எவ்வித மனிதனும், யாருக்கேனும், எச்சமயத்திலும் தீங்கு செய்ய



முடியுமோ? இல்லை. இம்மனிதன் சர்வேசுரன் கற்பனைகளுக்கு விரோதம் செய்ய முடியுமோ? அப்படியானால் கலகமும் குழப்பமும் உண்டாகுமோ?

நாம் பிரதிதினமும் "தன்னைத்தான் சிநேகிக்குமாப்போலே மற்றெல்லோரையும் சிநேகிக்கிறோம்" எனச் சொல்லிக்கொண்டே பிறர் சிநேகத்துக்கு விரோதமாய், பொய், பகை, வர்மம், கோள், குண்டணி முதலிய எத்தனை குற்றங்களைச் செய்து, புறத்தியாரது சொத்துக்கும், மதிப்புக்கும் அழிவு வருத்துகிறோம்? சர்வேசுரன் இன்னோரது ஜெபத்தை எவ்விதம் கேட்பார்?" எங்கள் கடன்காரருக்கு நாங்கள் பொறுக்குமாப்போல எங்கள் கடன்களை எங்களுக்குப் பொறும்" எனச் சொல்லும்போது "நாங்கள் எம் கடன்காரருக்கு பொறுத்தல் கொடாவிடில் எங்களுக்குப் பொறுத்தல் கொடவேண்டாம்" எனச் சொல்லுகிறதல்லவோ? இப்படியே ஓர் மனிதன் ஜீவித்தால் இவன் எவ்விதம் மோட்சபாக்கியமடைவான்?

ஆனால் இம்மனிதன் தனது அறியாமையினாலல்லவா இப்படி நடக்கிறான். இதே மனிதனை அழைத்து, பெரிய வெகுமானம் கொடுக்கிறேன், பொய் சொல்லாதே" என்றால் வெகுமானத்துக்காகப் பொய்சொல்லாதிருப்பானல்லோ? மோட்ச நித்திய பேரின்பத்தை வெகுமானமாயடையக்கூடிய மனிதன், தனது அறிவின்மையினாலன்றோ அதை அறியாது உலக வெகுமானத்தை நாடி சுயபட்சத்தினால் பிறருக்குக் கெடுதி செய்கிறான்.

ஆகவே எல்லா மனிதருக்கும், விசேஷமாய் சர்வேசுரன் பிள்ளைகளாகிய கத்தோலிக்கருக்கு, சர்வேசுரனை அறிந்து, சிநேகித்து சேவிக்கவும், மோட்சமடையவும், கல்வி அத்தியாவசியமென்பதை ஒவ்வொருவரும் அறியவேண்டியது.

(இன்னும் வரும்)

## Hints to Teachers.

### உபாத்தியாயருக்கு குறிப்பு.

தொடர்ச்சி.

முன் சொன்னபடி கற்பிக்கப்பட்ட பத்து வரியிலும் பத அர்த்தம், சொல்வதெழுதல் முதலிய விஷயங்கள் நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டும். ஒவ்வொரு பாடத்திற்கும் பாடக் குறிப்பு, சுருக்கமாய்த் தயார் செய்துகொள்ளவேண்டும். ஒரு சிறு நோட்டில் அன்றாடம் பாடத்தைச் சுருக்கமாய்க் குறித்துக்கொண்டு, பிறகு பாடக்குறிப்பில் குறித்துக்கொள்ளலாம். விரிவான பாடக்குறிப்பு எழுதிக்கொண்டு, வீண்காலம் செலவழிப்பது அநாவசியம். வாசகம், கணக்கு, பூகோளம், (இயற்கையறிவு) பொது அறிவு, டிராயிங், கதை, கதைக்குச் சம்பந்தமான பாட்டு, இவற்றிற்கு வாரம் வாரம் டைரி, இவ்வளவு அல்லது இத்தனை வரி நடந்ததென்று குறித்து வைப்பதுமன்றி, வாசகம், கணக்கு, பூகோளம், பொது அறிவு, இவற்றிற்கு சுருக்கமான பாடக்குறிப்பு எழுதலாம்.—ஒவ்வொரு மாதமும் சம்பளம் பாக்கியாயிருக்கிற பிள்ளைகளையும், சரியாய் ஆஜராகாமல் (Absent) ஆப்சென்றாயிருக்கிற பிள்ளைகளையும் மாதக் கடைசியில் பெயரை ரிஜிஸ்தரிலிருந்து எடுத்துவிடவேண்டும். வியாதி அல்லது (லீவு) விடைபெற்று நிற்கும் பிள்ளைகளை அடுத்தமாத ரிஜிஸ்தரில் பெயர் பதிய வைக்கலாம். ஆப்ஸென்ற் முதலிய காரணங்களுக்குப் பெற்றோரால் தகுந்த முகாந்தரம் தெரிந்துகொண்டால், சேர்க்கைச் சம்பளம் நீக்கி மாதச் சம்பளத்துடன் பாக்கி சம்பளத்தையும் வசூல்செய்துகொண்டு, திரும்பவும் பையனுடைய பெயரை ரிஜிஸ்தரில் பதிவு செய்யலாம். (சேர்த்துக்கொள்ளலாம்.) ; சின்னவகுப்பில் 5 வருடத்துப் பிள்ளையானாலும், நன்றாய் விபரம் தெரிந்துகொள்ளாதவர்களைப் பாடசாலையிற் சேர்த்துக்கொள்ளப்படாது. அப்படிப்பட்ட பிள்ளைகள் தங்கள் பெயரும், தங்கள் தகப்பனார் பெயரும், தாங்கள் குடியிருக்கும் வீடு, தெரு, எந்தப் பக்கத்தில் குடியிருப்பது, தாங்கள் குடியிருக்கும் வீட்டுக்குப் பக்கத்தில் யார் வீடு, தங்கள் வீதியில் என்ன விசேஷித்த கட்டடம்



முதலிய விசேஷித்த கேள்விகளுக்கு பதில் சொல்லக்கூடுமானவர்களைப் பாடசாலையிற் சேர்த்துக்கொள்ளலாம். அவர்கள் பாடசாலையிற் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு முன் அவர்கள் கையில் சிலேட்டும், புஸ்தகமும், பென்ஸலும் தயாராய் வைத்திருக்கிறார்களாவென்று பார்த்துக்கொள்ளவேண்டும். அப்படியில்லாத பட்சத்தில் பையன் பெயரை அட்மிஷன் ரிஜிஸ்தரில் பதிவு செய்யப்படாது. S. M. S. G.

---

## Avoid drink.

### "குடிக்காதே."

**குடியினால் ஏற்படும் தீமைகளோ அநந்தம். அவற்றுள் சிலவற்றை இங்கு கூறுவோம்.**

1. குடித்தவன் தன் புத்தி சுவாதீனத்தை இழந்து வெறி கொண்டவனாகிறான்.
2. தான் வெறிகொண்டவுடன் தன் கன்னியத்தை இழந்து போகிறான்.
3. பிறரிடத்திலிருந்து அவமதிப்பைப் பெற்றுக்கொள்ளுகிறான்.
4. மற்றவர்களுக்குக் கேவலமாகிவிடுகிறான்.
5. தான் வாயில்வந்தபடி உளறி நாணயத்தைக் கெடுத்துக் கொள்ளுகிறான்.
6. யாவர்க்கும் விரோதியாகிறான்.
7. தன் பெற்றோருக்கும் பந்துக்களுக்கும் பாம்பின் விஷத்துக்கொப்பாகிறான்.
8. தன் பெண்டுபிள்ளைகளுக்கு வேடன் எய்யும் அம்புக்குச் சமானமாகிறான்.

9. உணவிற்கும், உடுப்பிற்கும் சம்பாத்தியமில்லாததினால் தக்க காலங்களில் கஸ்திக்கு உள்ளாகிறான்.

10. தனக்குள்ளும் தன் குடும்பத்தினுள்ளும் சமாதான மற்றவனாகிறான்.

11. தன் சகோதரர்களுக்கும், சிநேகிதர்களுக்கும் ஜென்ம விரோதியாகிறான்.

12. குடிவெறியினால் கொலை நேரிடுகிறது.

## குடியினால் ஏற்படும் குணதோஷங்கள்.

| | |
|---|---|
| 1. சிறுமை | 7. எச்சில் |
| 2. ருசி | 8. போகும்வழி |
| 3. வாசம் | 9. தங்குமிடம் |
| 4. செலவு | 10. வரும்விதம் |
| 5. குணம் | 11. நடை |
| 6. பாத்திரம் | 12. கொலை |

1. சிறுமை:—மகனே!—மதுபானமானது கேவலமான வஸ்து, வெறுக்கத்தக்க வஸ்து; அதை உபயோகித்தவனே (குடித்தபின்) அதைப்பற்றிக் கசப்பாய்ப் பேசுவான். கள்ளும் சாராயமும், ஊருக்குள் 'இருக்க யோக்கியமான வஸ்து அலல வென்று வெறுத்து ஊருக்கு அப்புறமாய்த் தள்ளிவைக்கப் பட்ட வஸ்துக்கள்.

2. ருசி:—அதனுடைய ருசியோ பிரியமற்றது, வெறுக்கத்தக்க புளிப்பு காரம் முதலியவற்றை அடைந்ததுடன் மனதைப் பிரட்டத்தக்கதான பொருள்.

3. வாசம்:—கெட்டவாசம், முகந்தவர் மூக்கைப் பிடித்துக் கொள்ளும் விதமான சாமர்த்தியத்தைக் காட்டக்கூடியது. எவ்வளவு தூரம் போனாலும், நான் உன் பக்கந்தான் இருக்கிறேன். உனக்கு முகர மூக்கில்லையோ, எனது நாற்றம், இன்னும் உனக்கு எட்டவில்லையோ, என்று கேள்விகேட்டுக் கேலி செய்யும் வஸ்து.

4. செலவு:—குடிக்கவேண்டுமானால குறைந்தது 4 அணாவாவது வேண்டும். கூட தீனி தின்னாமல் குடிக்கமுடியாது. ஆதலால் தீனிக்கு 1 அணா, பீடி, சுருட்டு, சிகரட், வெற்றிலை பாக்கு, ஜிண்டான் முதலிய வாசனைப் பொருள்கட்கு 1 அணா



ஆக 6 அணா வேண்டும். 6 அணா செலவுசெய்தும் திருப்திப்பட குடிக்க முடியாது. நிறையக் குடிக்கவேண்டுமானால், முன் செலவுக்கு இருமடங்கதிகம் வேண்டும். இவ்விதமாக 12 அணாச் செலவுசெய்யும் சமயத்தில், தன் இஷ்டர்கள் வந்து விட்டாலோ, ஆகும் செலவுக்கு சொல்லவே தேவையில்லை.

5. குணம்:—குடி, கெட்ட முன்கோபி, பெருமையற்றது; பொறாமைகொண்டது, சண்டைக்குத் தயாரானது, தடியெடுக்க அஞ்சாது; நியுசன்ஸ் கேஸுக்கு ஹேதுவானது, தவிர ஜெயிலுக்கும் சொந்தமானது.

6. பாத்திரம்:—குடிப்பதற்கு எடுத்துக்கொள்ளும் பாத்திரமோ, மண் சொப்பு, சுத்தமில்லாதது, கடைக்குள் கீழே அங்குமிங்கும் கண்டபக்கம் எறிந்து கிடக்கக்கூடிய மண் பாண்டம்.

7. எச்சில்:—மேற் சொன்ன பாத்திரமோ, எத்தனையோ பேர், குடித்துவிட்டுக் கழுவாமல் எச்சிலுடன் எறிந்துவிடப் பட்டது; அது சேற்றிலும் விழுந்து கிடக்கிறது. மற்றவர்கள் உமிழ்ந்த எச்சிலிலும், விழுந்து கிடப்பதுடன், எத்தனையோ தொத்து வியாதிக்காரர்களாலும் தொடப்பட்ட பாத்திரம்.

(தொடரும்.) D. P. A.

---

## Page for the young.
## பிள்ளைகளின் பக்கம்.

### Three Friends.

### மூன்று சிநேகிதர்கள்.

ஒரு மனிதனுக்கு மூன்று பிரதான சிநேகிதர்கள் இருந்தார்கள். அதில் இருவர் மாத்திரம் இவனுக்கு உயிருக்குயிரான பிராண சிநேகிதனைப்போல ஓயாமல் இவனைச் சுற்றிக்கொண்டே இவன் காலாலிட்ட வேலையைக் கையால் செய்யத் தயாராயிருப்பார்கள். மற்றோர் சிநேகிதனோ அப்படியல்ல பேருக்கு மாத்திரம் சிநேகிதனாயிருந்தான்.

இப்படியிருக்கையில் இவனுக்கு திடீரென மகா நிர்ப்பாக்கியமான ஓர் ஆபத்து வந்து நேரிட்டது. அப்போது இவன் மனங்கலங்கி என்ன செய்வதென்றறியாமல், தன் மூன்று மித்திரரையும் வரவழைத்துத் தனக்கு நேர்ந்த ஆபத்தை ஆதியோடந்தமாய் அவர்களுடன் சொல்லி எப்படியாவது இந்த துன்பகாலத்தில் அவர்களாலான உதவி செய்யவேண்டுமென்று கெஞ்சி மன்றாடினான். அதற்கு இம்மூவரும் அப்படியே செய்வோமென்று உறுதிமொழி கூறினார்கள்.

நீதிஸ்தலத்துக்குப் போகக்குறிக்கப்பட்ட நாளில் அவன் பிராண சிநேகிதர்களிலொருவன் வந்து அவனைப் பார்த்து, "மித்திரா! நான் இன்று உனக்குச் செய்யவேண்டியது மகா சொற்ப உபகாரமாயினும் அதைச் செய்யக்கூடாத அந்தஸ்தில் இருக்கிறேன். அதிக அவசரமான ஒரு காரியத்தினிமித்தம் ஊருக்கு வெளியில் போகவேண்டியிருக்கிறது" என்று சொல்லி, மெள்ள நழுவிப்போய்விட்டான். இம்மனிதன் இதைக்கேட்டு மெத்தவும் கலங்கி, நீதிஸ்தானத்தை நோக்கிச் செல்லுகையில், இரண்டாஞ் சிநேகிதன் எதிர்ப்பட்டு அவனை நோக்கி, "ஓ! மித்திரா, நீ ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். நானிருக்கும்வரையில் உனக்குப் பயமென்ன? நியாயாதிபதி முன் போய் பல நியாயங்களை எடுத்துப்பேசி உனக்கு மலைபோல வந்த இவ்வினையைப் பனிபோல நீக்கிவிடுகிறேன்" என்று அவனைத் தட்டிக்கொடுத்து நீதிஸ்தலத்துக்கு அழைத்துப்போனான். நீதிஸ்தலத்தில் பிரவேசித்தமாத்திரத்தில் குற்றவாளி திரும்பி தன் சிநேகிதனைப் பார்த்தான். ஆனால் அவனோ தேனொழுகப்பேசித் தெரு நெடுக வழிவிட்டுப்போய்ச் சேர்ந்தான். அவனைக் காணாததினால் இவன் தன் நிர்ப்பாக்கியத்தை நினைத்து வருந்தி கஷ்டப்பட்டு, வருவது வரட்டும் என்று எண்ணிக்கொண்டு உள்ளேபோய் நியாயாதிபதிமுன் நின்றான். அவ்விடத்திலே இவனது மூன்றாஞ் சிநேகிதன் இவனுக்கு முந்தியே வந்து காத்திருந்தான். இவன் வந்திருப்பானென்று குற்றவாளி கனவிலும் நினைத்தவனல்ல. உடனே இச்சிநேகிதன் நியாயாதிபதியிடம் குற்றவாளியாக்கப்பட்டிருக்கும் தன் சிநேகிதன் மாசற்றவன் என்று பல நியாயங்களை எடுத்துக்காட்டி எல்லோருங் காண அவனை விடுதலை செய்தான். பின்பு சிநேகிதனை வீட்டுக்கழைத்து வந்து அவனுக்கு விருந்தளித்து மகா சந்தோஷத்துடன் அவனுடைய இல்லத்துக்கு அனுப்பிவிட்டான்.



பிள்ளைகளே! இக்கதையால் எப்போதும் ஒருவனுடைய சிநேகத்தை ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தபின்மாத்திரம் அவனோடு சிநேகம் செய்யவேண்டும். மேலும் உங்களில் ஒவ்வொருவருக்கும் மூன்று சிநேகிதர்கள் உண்டு. எப்படியெனில் வீட்டில் விட்டு சாக்குப்போக்குச் சொல்லிப்போகிற சிநேகிதன் யாரென்றால் நீங்கள் பாடுபட்டுத் தேடவிருக்கும் பணங்காசு முதலியவைகளே. உங்களுக்குப் பெரிய ஆபத்தான மரணம் வந்து சம்பவிக்கும் காலத்தில் முதல் முதல் உங்களை விட்டுப் பிரிகிறது அதுவே. இரண்டாம் மித்திரனோ உங்களை நேசித்துப் போற்றிப்புகழும் தாய் தந்தை, சகோதரன் சகோதரி முதலிய உற்றாரே. இவர்கள் கல்லறைமேடு மட்டும் கடமை கழித்ததும், உங்களை விட்டுப் போகிறவர்கள். மூன்றாஞ் சிநேகிதனோ உங்கள் ஜீவியகாலத்தில் செய்யும் ஜெப தப தான தர்ம முதலிய புண்ணியங்கள்தான். இவைகளே பரம நியாயாதிபதியுடன் மறு உலகத்தில் உங்களுக்காக மனுப்பேசி உங்களை இரட்சிக்க வல்லது.

'அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே விழியம்பொழுக
மெத்திய மாதரும் வீதி மட்டே விம்மி விம்மியிரு
கைத்தலைமேல் வைத்தழு மைந்தருஞ் சவச்சாலைமட்டே
பற்றித்தொடரு மிருவினைப் புண்ணிய பாவங்களே'

**போதகன்.**

"Virtue vanishes when one wishes to parade it."

---

## Here and There.

### நானா சங்கதிகள்.

St. Joseph's Jubilee :—அர்ச். சூசையப்பர் திருச்சபையின் பரிபாலகராய் ஏற்படுத்தப்பட்டு 50-வருஷமாயிற்று. அதினிமித்தமாக அர்ச். பாப்பானவர் சகல கத்தோலிக்கர்களுக்கும் அளித்த உத்தரவுப்படி கோயமுத்தூர் மேற்றிராசனத்திலுள்ள ஒவ்வொரு பங்குக் கோவிலிலும் ஏப்ரல்-மீ

17-உ அர்ச். சூசையப்பருடைய பூரிபூரணத் திருநாள் விசேஷ ஆடம்பரத்தோடே கொண்டாடப்படும். அன்று நல்ல பாவ சங்கீர்த்தனம் செய்து, திவ்ய நன்மை வாங்கி, அர்ச். பாப்பானவர் சுகிர்த கருத்துகளுக்காக வேண்டிக்கொள்ளும் விசுவாசிகள் ஒரு பரிபூரண பலனை அடையலாம்.

Kotagiry :—கடந்த மாதத்தில் நமது பத்திரிகையில் அறிவிக்கப்பட்டதுபோலே மார்ச்சு-மீ 1-ம் உ கோத்தர்கிரியில் ஒரு ஐரோப்பிய கன்னியாஸ்திரி மடமும், அதைச் சேர்ந்த ஒரு இங்கிலீஷ் பாடசாலையும் தர்ம வைத்தியசாலையும் ஸ்தாபிக்கப்பட்டன. மேலும் கூடிய சீக்கிரம் இந்திய பெண்பிள்ளைகளுக்காக ஒரு பாடசாலையும் ஸ்தாபிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. இதெல்லாம் கோத்தர்கிரி பங்குவிசாரணைக்குப் பெரும் உபகாரம் என்று அறிந்து, அவ்வூரிலுள்ள ஐரோப்பியர்களும் இந்தியர்களும், கத்தோலிக்கர்களும் மற்ற இதர மதஸ்தர்களும் சந்தோஷப்பட்டார்கள். ஆகையால் ஷை ஸ்தாபக நாள் பெரிய திருநாளைப்போல வெகு சிறப்பாய்க் கொண்டாடினார்கள்.

8. மணிக்குப் பூசையும், தேவ நற்கருணை ஆசீர்வாதமும் முடிந்த பிறகு, புதுமடம் St. Mary's Convent என்னும், அர்ச். மரியாயின் நாமத்தால் கோயம்புத்தூர் விக்கர் ஜெனரல் அவர்களால் ஆடம்பரமாய் மந்திரிக்கப்பட்டது. சில குருப்பிரசாதிகளும், கன்னியாஸ்திரிகளும், அநேக ஜனங்களும் அந்தத் திருச்சடங்குக்கு ஆஜரானார்கள். இங்கிலீஷிலும், தமிழிலும் உபந்நியாசங்கள் செய்யப்பட்டன. கோயம்புத்தூர் மேற்றிராணியார் செய்த இந்த நல்ல ஏற்காட்டை நடத்துவதில், கோத்தர்கிரி பங்குக் குருவாகிய சங். R. பெல்ஸ் (Beyls) சுவாமியாரும், ஐரோப்பிய கன்னியாஸ்திரிகளும் இது விஷயத்தில் வெகு பிரயாசப்பட்டார்கள். சென்ற். மேரீஸ் மடமும், அதற்கான நற்கிருத்தியங்களும் விர்த்தியடையும்படி சுவாமி கிருபை செய்வாராக.

War Penalties:—ஜெர்மனியர் சமாதான உடன்படிக்கையின் சில கனத்த விஷயங்களை நிறைவேற்றத் தவறிப் போனதினாலேயும், மகா யுத்தத்தில் நேசகட்சியார் அனுபவித்த நஷ்டத்துக்குத் தகுந்ததுபோல, நஷ்ட ஈடு கொடுக்க ஒத்துக் கொள்ளாததினாலேயும், நேசகட்சியார் ஒன்றாய்ச் சேர்ந்து, அவர்களைக் கட்டாயம்பண்ணும்படி, சில வழிபாடுகளைச் செய்யத் தீர்மானித்து, அதன்பிரகாரம் நேசகட்சியார் படைகள்



ஜெர்மன் தேசத்திலுள்ள சில பிரதான நகரங்களையும், நாடுகளையும் பிடித்திருக்கிறார்கள். பிறருக்கு நஷ்டம் வருவித்தவன், முழுதும் உத்தரிக்கக் கடமைப்பட்டவன் என்பது சுவாமியுடைய கற்பனை.

Catholic Union :—பெப்ருவரி-மீ 20-ம் உ கோயம்புத்தூர் கத்தோலிக் யூனியன் மெம்பர்கள் ஒரு பாட்மிண்டன் கோர்ட் புதிதாய் ஏற்படுத்தி ஸ்தாபித்தார்கள். அச்சமயத்தில் டீபார்ட்டி வைத்து குரூப் போட்டோ படம் பிடித்து, வெகு சந்தோஷமடைந்தார்கள். அந்த யூனியன் உண்டாகி ஒரு வருஷமாயிற்று. இது நிலைகொண்டு இன்னும் வரவர அபிவிர்த்தியாகும் என்று நம்புகிறோம்.

The Standard :—“தி. ஸ்டாண்டர்ட்” என்னும் நல்ல கத்தோலிக் இங்கிலீஷ் பத்திரிகை சுமார் 1½ வருஷகாலமாக மதுராசில் பிரசுரிக்கப்பட்டு திடீரென கடந்த மார்ச்சு-மீ நின்றுபோயிற்று. அதற்குக் காரணம் என்னவென்றால், கத்தோலிக்கருடைய ஒத்துழையாமைதான்.

Coonoor :—குன்னூர் முனிசிபல் சங்கத்தில் இரண்டு கத்தோலிக்கர்கள் வோட்டுகளால் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். இவர்கள் ஜான் ஹோகன் என்னும் துரையும், அர்ச். அந்தோனியார் பாடசாலையின் தலைமை உபாத்தியாயராகிய மிஸ்டர் S. இராஜு பிள்ளையும் ஆக இருவருந்தான்.

Self determination :—ஐரோப்பா கண்டத்தில் சுயராஜ்ய ஆவலால் பல பொல்லாப்புகள் உண்டானதென்றும் இந்தியா தேசத்திலும், மற்ற அஞ்ஞான தேசங்களிலும், சுயராஜ்யம் ஏற்பட்டால் சத்திய வேதம் சீக்கிரம் நிர்மூலமாவதற்கு வழியாயிருக்குமென்றும், மகா கனம்பொருந்திய போர்ன் (Bourne) காதினல ஒரு நிருபத்தில் எழுதியிருக்கிறார்.

Obituary :—கடந்த மார்ச்சு-மீ மைசூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். A. மார்கோன் (Marcon) சுவாமியார் தமது 60-ம் பிராயத்திலும், புதுவை அதிமேற்றிராசனத்தைச் சேர்ந்த சங். L. ஹேடொன் (Haydont) சுவாமியார் தமது 35-ம் பிராயத்திலும் காலஞ்சென்றார்கள். R. I. P.

# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

**Vol. VII.** **May 1921.** **No. 5.**

**புத்தகம் VII.**] FIDES AC ROBUR. [**நம்பர் 5.**


**He will teach you all things.**

**சகலத்தையும் உங்களுக்குப் படிப்பிப்பார்.**

அப்போது இஸ்காரியோத்தல்லாத யூதா என்பவர் யேசுநாதரை நோக்கி, ஆண்டவரே! உம்மை உலகத்துக்கு வெளிப்படுத்தாமல், எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தப் போவதற்கு ஏது காரணமாயிற்று என்க, யேசுநாதர் அவருக்கு மறுமொழியாக: ஒருவன் என்னைச் சிநேகித்தால், என் வாக்கியத்தை அனுசரிப்பான்: என் பிதாவும் அவனைச் சிநேகிப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனுக்குள் வாசம் பண்ணுவோம். என்னைச் சிநேகியாதவன் என் வாக்கியங்களை அனுசரியான். நீங்கள் கேட்டிருக்கிற வாக்கியம் என்னுடையதல்ல; என்னை அனுப்பின பிதாவின் வாக்கியமாமே. நான் உங்களிடத்தில் தங்கியிருக்கையிலே இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.

ஆனால் என் நாமத்தினாலே பிதாவானவர் அனுப்பப்போகிற தேற்றுகிறவராகிய இஸ்பிரீத்துசாந்துவானவர் சகலத்தையும் உங்களுக்குப் படிப்பித்து, நான் உங்களுக்குச் சொன்ன யாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். சமாதானத்தை உங்களுக்கு வைத்துவிட்டுப் போகிறேன், என் சமாதானத்தை உங்களுக்குத் தருகிறேன், உலகம் கொடுக்கிறதைப் போல நான் அதைக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும், அஞ்சாமலும் இருப்பதாக. நான் போய் மீண்டும் உங்களிடத்தில் வருகிறேனென்று நான் உங்களுக்குச் சொன்னதைக் கேட்டீர்களே, நீங்கள் என்னைச் சிநேகித்தால், நான் பிதாவினிடத்தில் போகிறதைப்பற்றி மெய்யாகவே சந்தோஷப்படுவீர்கள். ஏனெனில் பிதா என்னிலும் பெரியவராயிருக்கிறார்.

மேலும் இது நடக்கும்போது நீங்கள் விசுவசிக்கும்படியாக, நடப்பதற்குமுன் இப்பொழுதே உங்களுக்குச் சொன்னேன். இனி நான் உங்களோடு அநேக காரியங்களைப் பேசுவதில்லை. அதேதெனில் இவ்வுலகத்தின் தலைவன் வருகிறான்; ஆகிலும் என்னிடத்தில் அவனுக்கு ஒன்றுமில்லை. ஆனால் நான் பிதாவைச் சிநேகிக்கிறேனென்றும், அவர் எனக்குக் கற்பித்தபடி செய்கிறேனென்றும் உலகம் அறிந்துகொள்ளும்படி இப்படியாகும். எழுந்திருங்கள், இவ்விடம் விட்டுப்போவோமாக. (அருளப்பா 15-22-31)

---

## The School of St. Joseph.

### அர்ச். சூசையப்பரின் நன்மாதிரிகை.

1. ஆதித்தாய் தகப்பன் செய்த பாவத்துக்குத் தண்டனையாக, நெற்றி வேர்வை நிலத்தில் விழ, மனிதன் உழைத்து தன் ஜீவனத்துக்கு வேண்டிய பொருளைச் சம்பாதிக்கவேணுமென்று சர்வேசுரன் சித்தமாயிருக்கிறார். அநேகர் வேலையி



னால் கஷ்டப்பட்டு முறையிடுகிறார்கள். விசுவாசமும் தேவ நம்பிக்கையும் இல்லாதவர்களுக்கு வேலையானது மிகவும் கஷ்டமான காரியம் என்பதற்குச் சந்தேகமில்லை. இக்காலத்தில் ஆண்பிள்ளைகளும், பெண்பிள்ளைகளும், சிறுவர், சிறுமிகளும், கணக்கில்லாத கைத்தொழிலாளிகள் (Mills) யந்திரசாலைகளில் வேலை செய்துவருகிறார்கள். அநேகந்தடவை அவர்கள் கூலி போதாதென்றும் வேலை அதிகமென்றும் முறையிட்டு, தங்கள் எஜமான்களுக்கு விரோதமாய்க் கலாபனை எழுப்பி, "வேலையை நிறுத்துதல்" என்னும் கட்டுப்பாடு செய்துகொண்டு, தங்கள் எஜமான்களுக்கும், தங்களுக்கும் நஷ்டம் வருவிக்கிறார்கள்.

அர்ச். சூசையப்பர் தாழ்மையும், கஷ்டமுமான தச்சுவேலை செய்தார். காலை வேலை துவக்குமுன், அந்த வேலையைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்து, சேசுநாதருக்காகவும், தேவமாதாவுக்காகவும் வேலை செய்துவந்ததினால், அவருடைய கஷ்டம் இனிமையாய் மாறினது. நாமும் அவரைக் கண்டு பாவிப்பது நலம். "உலகமெல்லாம் சம்பாதித்துக்கொண்டபோதிலும், நமது ஆத்துமத்தைச் சேதப்படுத்திக்கொண்டோமானால் பிரயோஜனமென்ன?" என்று நன்றாய் யோசித்து, நமது அன்றன்றுள்ள அப்பத்தைச் சம்பாதித்துக்கொள்ளும்பொருட்டு வேலைசெய்து, அவ்வேலையைச் சர்வேசுரனுக்கு சுத்த மனதுடன் ஒப்புக்கொடுக்கக்கடவோம்.

2. லூசிப்பேரென்னும் கெட்டுப்போன சம்மனசு பரலோகத்தில் கலாபனை எழுப்பி, கடவுளை எதிர்த்து, "ஊழியஞ் செய்யமாட்டேன்" என்று சொன்னதுபோலே, அநேக அவிசுவாசிகள் கடவுளுடைய அதிகாரத்தைத் தள்ளி ஊழியஞ் செய்யமாட்டேன் என்கிறார்கள். அநேக பிரஜைகள் இராஜாவின் அதிகாரத்தைத் தள்ளி ஊழியஞ் செய்யமாட்டேனென்று கலாபனை செய்கிறார்கள். சில கெட்ட கிறீஸ்துவர்கள் திருச்சபையின் அதிகாரத்தை நிந்தித்து ஊழியஞ் செய்யமாட்டேன் என்கிறார்கள். மக்கள் தங்கள் பெற்றோர்களுடைய அதிகாரத்தைக் காலால் மிதித்து, நிந்தித்து, ஊழியஞ் செய்யமாட்டேன் என்கிறார்கள். இவ்விதமாக கீழ்ப்படியாமையும், அடங்காமையும் எங்கும் பரம்பி வருகிறதைக் காண்கிறோம்.

அர்ச். சூசையப்பர் தேவ ஊழியத்திலும், வேத ஆசாரங்களை அனுசரிப்பதிலும், கீழ்ப்படிதலிலும் பிரமாணிக்கராய்

நடந்துவந்தார். ஓய்வு நாட்களில் வேலையை நிறுத்தி, "ஜெனகோக்" என்னும் ஜெபக்கூடத்துக்கு, சேசுநாதரோடும், தேவமாதாவோடும் போகத் தவறமாட்டார். கிறீஸ்துவர்களாகிய நாமும் அவரைக் கண்டுபாவித்து, நம்முடைய வேத ஆசாரங்களைச் சரிவர அநுசரித்து, ஞாயிற்றுக்கிழமைகளிலும், கடன் திருநாட்களிலும், விலக்கப்பட்ட வேலைகளை நிறுத்தி, திவ்விய பூசை கண்டு, தினந்தோறும் செய்யவேண்டிய ஜெபங்களைச் செய்து, திருச்சபையின் ஸ்தானாதிபதிகளுக்குக் கீழ்ப்படிந்து சர்வேசுரனுக்குப் பிரமாணிக்கராய் நடக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

3. சேசுக்கிறீஸ்துநாதர் தமது பரிசுத்த வேதத்தை இவ்வுலகத்தில் போதிப்பதற்குமுன், குடும்பமானது வெகு நிர்ப்பாக்கியமான அந்தஸ்தில் இருந்தது. ஓர் குடும்பத்தில் புருஷனானவன் கொடுங்கோலன், பெண்சாதியானவள் அவனது நீச அடிமை, பிள்ளைகளோ பெற்றோர்களுடைய கைகளில் கொடுக்கப்பட்ட விளையாட்டுப் பண்டமுபோலாகி அநேகந் தடவை தகப்பன் இஷ்டப்படி கொல்லப்பட்டார்கள். சேசுக்கிறீஸ்துநாதரோ குடும்பத்தின் பரிசுத்தத்தனத்தையும், அதிலுள்ள ஒவ்வொருவனுடைய கடமைகளையும் கற்பித்தார்.— புருஷனுக்கு:—"நீ உன் குடும்பத்தின் தலைவனாயிருந்தாலும், அதில் கொடுங்கோன்மை செலுத்தப்படாது" என்றும், பெண்சாதிக்கு:—"நீ உன் புருஷனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கக் கடமைப்பட்டவளாயிருந்தாலும், அவனுக்கு அடிமையாயிருக்காமல், நேச துணைவியாயிருக்கக்கடவாய்" என்றும், பிள்ளைக்கு:—"நீ உன் பெற்றோர் வீட்டிலே அடைக்கலம் அடைவாய், ஆனால், அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கக்கடவாய்..." என்றும் சொல்லிக் கற்பித்தார்.

அர்ச். சூசையப்பர் அன்போடும், பிரமாணிக்கத்தோடும் சேசுநாதரையும், தேவமாதாவையும் ஆதரித்துக் காப்பாற்றினார். எரோது இராஜன் கோபத்துக்கு திவ்விய பாலன் தப்பித்துக்கொள்ளும்படி, எஜிப்து தேசத்துக்கு ஓடி, அவரையும், தேவமாதாவையும் கவனமாய்க் காப்பாற்றி ஆதரித்தார். கடவுள் உங்களுக்குக் கொடுத்திருக்கும் பிள்ளைகளை, நன்றாய்க் கவனித்து, அவர்கள் சரீரத்துக்கும், முக்கியமாய் அவர்கள் ஆத்துமத்துக்கும், தின்மை வருவிக்கக்கூடிய சத்துராதிகளிடமிருந்து, அவர்களைக் காப்பாற்றுங்கள்.



அர்ச். சூசையப்பர் பரிசுத்த தேவமாதாவுக்குக் காவலாளியாயிருந்து, அவளுடைய கற்பைக் காப்பாற்றினார். இருவரும் சேசுநாதரோடு ஒற்றுமையாய் வாழ்ந்து, உழைத்து, சம்பாதித்த பணத்தை நியாயமாய்ச் செலவழித்து, தபத்திலும், ஜெபத்திலும் பாக்கியமாய் ஜீவித்தார்கள்.

அர்ச். சூசையப்பர் சில கெட்ட கிறீஸ்துவர்களைப் போலே, கெட்ட கூட்டங்களுக்கும், கெட்ட நாடகங்களுக்கும், வேடிக்கை விநோதம் பார்க்கவும் போனவரல்ல; மற்ற சில கிறீஸ்துவர்களைப்போலே, வீட்டிலே தாயும், பிள்ளைகளும், சாப்பாடில்லாமல் பட்டினியாய் விட்டு, சம்பாதித்த பணத்தையெல்லாம், குடியினால் ஒருபோதும் செலவழித்தவரல்ல.

இதோ கிறீஸ்துவ சகோதரர்களே! நீங்கள் ஆஸ்திக்காரராயிருந்தாலும் சரி, ஏழைகளாயிருந்தாலும் சரி, அர்ச். சூசையப்பரிடத்தில் போய், வேலையின் மகிமையையும், பரிசுத்தத்தனத்தையும் (அவரிடத்தில்) கற்றுக்கொள்ளுங்கள். இதுதான் உங்களுக்கு உத்தம மாதிரிகை. வாலிபர்களே! நீங்கள் அர்ச். சூசையப்பரிடத்திற் போய், பரிசுத்த ஜீவியம் ஜீவிக்கவும், கற்பைக்காப்பாற்றவும் (அவரிடம்) கற்றுக்கொள்ளுங்கள். இதுவே உங்களுக்கு மகா சுகிர்தம். தாய் தகப்பன்மார்களே! நீங்கள் அர்ச். சூசையப்பரிடத்தில் போய், உங்கள் குடும்பத்தை தர்ம வழியில் நடப்பிக்க (அவரிடம்) கற்றுக்கொள்ளுங்கள். இதுவே உங்களுக்கு மகா மேன்மை. மேலும், உங்கள் வீட்டில் பரிசுத்ததனமும், நேசமும், தெய்வ பக்தியும் விளங்கும்படியாய் அடிக்கடி அவரைப் பார்த்து வேண்டிக்கொள்ளுங்கள்.

---

"My hope art thou, O Mary blest,
Sweet star of life's dark sea;
Ah, guide me safe to port of rest,
And open Heaven to me."

---

# Female Education.

## மாதர் கல்வி.

சிலர், "கல்வியில்லாதவர்கள்தானா, கல்வியுள்ளோர் தீங்கு செய்வதில்லையோ? கலகமும் குழப்பமும் இவர்களால் விளைகிறதில்லையோ?" என்பார்கள்.

இன்னோர், கல்வியென்றால் என்னவென அறியாதிருக்கிறார்கள். இத்தேசத்தில் நூற்றில் தொண்ணூற்றொன்பது பேருக்குமேல், கல்வி எழுதப்படிக்கத் தெரிந்துகொள்வதென்றும், அதினால் ஓர் உத்தியோகமடைவதென்றும் நினைக்கிறார்கள். ஆதலினால் சில வருஷங்கள் பள்ளிக்கூடத்தில் செலவழித்தால் கல்வி கற்றாயிற்று என நினைக்கிறோம். இது மிகத் தப்பெண்ணம்; இது கல்வியல்ல. இவ்வித எண்ணத்தால்தான் ஏறக்குறைய எல்லாப் பெற்றோரும், பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புவதும், ஓர் உத்தியோகம் சம்பாதிக்கவென நினைக்கிறார்கள்.

இது கல்வியின் இரண்டாவது நோக்கமாம். இதை முதல் நோக்கமாகக் கொண்டிருப்பதினாலேயே, கத்தோலிக்கர் கல்வியில் அதிக விர்த்தியடையவில்லை. ஏனெனில் நாம் கல்வியைத் தேடாமல், எழுதப்படிக்கத் தெரிவதால் வரும் உத்தியோகத்தைத் தேடுகிறோம். இதினால் பிள்ளைகள் கொஞ்சம் சம்பாதிக்கும் சக்தியடைந்ததும் அவர்களை நிறுத்துகிறோம். அவர்களும் அதே நோக்கமுள்ளவர்களாதலால், உத்தியோகத்தை முன்னிட்டு சீக்கிரம் படிப்பை விடுகிறார்கள்.

இது சுத்தத் தப்பறை. சகல சாஸ்திரங்கட்கும் மேலான சர்வேசுரனை சரியாய் அறிந்து, சிநேகித்துச் சேவிக்க, எவ்வித மேலான கல்வியை மனிதன் கொண்டிருந்தாலும், இன்னும் போதாமையாயிருக்கும். ஞானக்கல்வியில்லாத ஓர் இந்து கல்வியைப்பற்றிப் பின் வருமாறு கூறியுள்ளார்.



வாழ் மனை தனக்கழகு குலமங்கை
குலமங்கை வாழ் வினுக்கழகு சிறுவர்
வளர் சிறுவருக்கழகு கல்வி
கல்விக்கழகு மாநிலம் துதி செய் குணமாம்.

தலைப்பில் சொன்னதுபோல் நற்குண நற்செய்கைகள் பூண்டு ஒழுகச்செய்யும் படிப்பே கல்வியாம். பெரிய பட்டங்களைப் பெற்றதினாலும், மகத்தான பிரபந்தங்களை இயற்றியதாலும், முற்கூறிய குணங்களில்லாதவன் கல்வியுடையவனல்ல. அவன் எழுதப் படிக்கக் கற்று தன் சமர்த்தைக் காட்டி பிறரை வஞ்சிக்கிறவன். இப்படிப்பட்டவர்கள் கலகமும் குழப்பமும் செய்வதுடன், தங்கள் கத்தோலிக்கரல்லாத நடத்தையால், மற்றவர்களுக்குத் துர்மாதிரிகையாயும், சத்திய வேதத்துக்கு அவமரியாதையாயும், திருச்சபைக்குத் துன்பம் செய்யும் கோடாலிக் காம்புகளாயும் ஆகிறார்கள்.

இப்பிள்ளைகளை வளர்க்கும் பெற்றோர்கள், சர்வேசுரனுக்கு என்ன கணக்கு கொடுப்பார்கள். "செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு" என்று செத்தால்தான் தெரியும்.

நாம் இவ்விதம் பிள்ளைகளை வளர்க்காமல், சர்வேசுரனுக்கு உகந்த பிள்ளைகளை வளர்க்க, அவர்களுக்கு உண்மையான கல்வி புகட்ட, அதன்மேல் அதிகபற்றுதலும், சிரத்தையும் உடையவராகவேண்டும். இவர்களே உண்மையான கத்தோலிக்கர்.

இவ்விதமாய் நாம் கற்பிக்கும் கல்வியே, பிள்ளைகளது அழியாப்பொருளாகி ஆத்துமத்துக்குச் செய்யும் நன்மை. பொருள்தேடிவைக்கலாம், உத்தியோகம்தேடி, நன்றாய்ச் சாப்பிட்டு, உடுத்தி உலக சுகங்களை அடைய எவ்வித ஏற்பாடும் செய்யலாம். நடு நிலையில் நிறுத்தி உண்மையுள்ள கத்தோலிக்களுக்கும் கல்வியைப் புகட்டாவிடில், நாம் நமது பிள்ளைகளுக்கு செய்யும் நன்மையெல்லாம் அவர்களுக்குத் தின்மையாயும், நமக்கு அவமானமாயும் ஆகும் என்பது உறுதி.

ஆகையால் பிள்ளைகளுக்கு நல்ல கல்வி கற்பிக்கப் பிரயாசப்படுவோமாக. எனினும், "தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்" எனச் சொல்வதற்கிணைய, நம் பிள்ளைகள் தொட்டிலிலிருக்கும்போதே அவர்கள் பிற்கால நடத்தைக்குத் தக்க கல்வியைப் புகட்டவேண்டும். சிறு குழந்தைகளாய் மழலைச் சொற்களை உச்சரிக்கும் அச்சமயமே சர்வேசுரனுக்கு உகந்த

வார்த்தைகளையும், நல்ல ஒழுக்கங்களையும் புகட்டவேண்டும். ஏனெனில் "விளையும் பயிர் முளையில் தெரியும்"—முளையில் செழிப்பில்லாத பயிர் நன்றாய் விளையாது. சிறுவர்கள் மூளையும், புத்தியும் எவ்வித உருவங்களையும் பதித்தவுடன் ஏற்றுக் கொள்ளும் உருகிய மெழுகுக்குச் சமானமாய், பார்ப்பவையும், கேட்பவையும் சடுதியில் பதிப்பித்துக்கொள்ளும். ஆகையால் இக்காலத்திலேயே இவர்களைப் பின்னால் நன்றாய் விளையும் பயிராகச் செய்யவேண்டும். இல்லையேல் "நற்கனி கொடாத மரம் வெட்டுண்டு அக்கினியில் போடப்படும்.'

இக்காலமுதல் இளமைப்பருவம் முடியுமட்டும் அநேகமாய் சிறுவர், சிறுமிகள் தாயுடனிருப்பதாலும், அவர்கள் அறிவெல்லாம், தாயிடமும் சகோதரர் சகோதரிகளிடமும் முக்கியமாய் அறிவதாலும், அவர்களது பிற்கால நடத்தை இக்காலடைந்த மனோவிர்த்திக்குத் தக்கதாயிருக்கும்.

ஆகையினால் இச்சிறு பிராயத்தில் கல்வி கற்பிப்பவள் அல்லவா சாமர்த்தியமுள்ளவளாயிருக்கவேண்டும். உலகில் ஆண் கல்வியைக்காட்டிலும், குடும்பங்களை வளர்க்கும் தாயுக்கல்லவோ கத்தோலிக்க கல்வி அவசரம். மேலும் இக்கல்வி எவ்வித உன்னத அந்தஸ்துள்ளதோ அவ்வளவும் அக்குடும்பத்துக்கு நன்மையன்றோ? ஆகையால் பெண்களுக்கு எவ்வித மேலான கல்வி புகட்டக்கூடுமோ அவ்வளவும் நாம் செய்வது நமது கடமை. (இன்னும் வரும்.) A. P.

---

## The tribulations of a Parish Priest.

## ஒரு பங்குவிசாரணைக் குருவானவருடைய கவலைகள்.

சிலுவைபுரம் என்னும் பங்கு விசாரணையைச்சேர்ந்த கிறீஸ்துவர்கள் 900 பேர். அவ்வூரில் இரண்டு எலிமெண்டரி பாடசாலைகள் உண்டு. கோவிலுக்கு வருமானம் ஒன்றும் கிடையாது. கிறீஸ்துவர்களோ மிக ஏழைகள். அவர்கள் கொடுக்க



வேண்டிய வருஷத்திய தலைக்கட்டுப் பணத்தை கஷ்டத்தோடே கொடுத்து வருகிறார்கள். ஞாயிற்றுக்கிழமைப் பூசை நேரத்தில் எடுக்கப்படும் தர்மத்தணடல் பெட்டியில் சராசரி அரை ரூபாய்தான் விழும். பங்குசுவாமியார் தமது விசாரணையைச்சேர்ந்த வேறு 3 சின்ன கோவில்களை சமயத்துக்குச் சமயம் விசாரிக்கப் போவதற்கு மாட்டு வண்டி ஒன்று வைத்திருக்கிறார். பங்கு விசாரணையின் காரியங்களை நடத்துவதற்கு அவசரமான செலவுசெய்து மிகக் கஷ்டப்படுகிறார். தமது துனபங்களை ஒருத்தருக்கும் சொல்லாமல், கடவுளை நம்பி பொறுமையாய் அவைகளை அநுபவித்து வருகிறார். அவைகளை வெளிப்படுத்தினாலும் பிரயோஜனம் என்ன? அவருக்கு உதவி செய்வார் ஒருவருமில்லை.

காரியம் அப்படியிருக்க, மாதக்கடைசியில் உபாத்தியாயர்களும், கோவில் ஊழியர்களும், தங்கள் சம்பளத்தை பங்குசுவாமியாரிடம் கேட்க வரும்போது, ஒரு நாள் நடந்த சம்பாஷணையாவது :—

தலைமை உபாத்தியாயர் :—(தன் சம்பளத்தை வாங்கிய பின்)—சுவாமி, உபாத்திமார் எல்லோரும், தங்களுக்குச் சம்பளம் போதாதென்று முறையிடுகிறார்கள். அவர்களில் சிலர் சர்க்கார் பள்ளிக்கூடங்களில் வேலை தேடுகிறார்கள் என்று கேள்விப்பட்டேன். எனக்கு இருக்கும் கஷ்டம் உங்களுக்குத் தெரியும். எனக்கு 5 பிள்ளைகள். சம்பளம் 15-ரூபாய். ரூபாய்க்கு 5 படி அரிசி. நான் சர்க்கார் பள்ளிக்கூடத்தில் உத்தியோகம் செய்தால், 25-ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்கலாம். நீங்கள் தயவுசெய்து, 2-ரூபாய் சேர்த்துக் கொடுத்தால் நான் கஷ்டப்பட்டபோதிலும், இன்னும் சிலகாலம் தங்களுக்கு ஊழியஞ் செய்யலாம்.

குருவானவர் :—உபாத்தியாயரே, நான் என்ன செய்வேன், உனக்கும், மற்ற உபாத்திமார்களுக்கும், சம்பளம் அதிகம் வேண்டுமென்கிறாய். இன்ஸ்பெக்டா கூடியசீக்கிரத்தில் (நமது பள்ளிக்கூடத்திற்கு) வேறொரு உபாத்தியாயரை நியமிக்க வேணுமென்றும், தரைக்கு கடப்பைக்கல் தளம்போட்டு, புது பெஞ்சுகள் (விசுப்பலகைகள்) செய்யப்படவேண்டுமென்றும் சொல்லுகிறார். இந்த வருஷம் கிராண்டு தொகை குறைக்கப்பட்டது. நான் என்ன செய்யட்டும், நீயே சொல்லு. போன வருஷம் தொடங்கி எல்லா உபாத்திமார்களுக்கும் சம்பளத்

துடன் ஒரு ரூபாய் அதிகம் கொடுத்து வருகிறேன். இனிமேல் வருகிற வருஷம் பார்த்துக்கொள்ளலாம். பள்ளிக்கூடத்துக்கு கிராண்ட் வந்தால் ஏதோ ஒருவழி பார்க்கலாம்.

உபதேசி:—(தன் சம்பளத்தை வாங்கியபின்) சுவாமி நான் இந்தக்கோவிலில் 10 வருஷகாலமாக வேலை செய்து வருகிறேன். என்னுடைய வேலையும், கஷ்டமும் யோக்கியமும், உங்களுக்கு முன் இருந்த பங்குசாமியாருக்குத் தெரியும்; நீங்களும் சென்ற நான்கு வருஷமாய் அறிந்திருக்கிறீர்கள். என் வீட்டில் அதிக கஷ்டம். இந்தப் பஞ்சகாலத்துக்கு என் சம்பளம் போதாது. இனி நீங்கள் எனக்கு ஒரு ரூபாயாவது சேர்த்துக்கொடுத்தால, மிகவும் நன்றியறிதலுள்ளவனாயிருப்பேன்.

குருவானவர்:—உபதேசி, நமது கோவில் வரவு, செலவு இன்னதென்று உனக்குத் தெரியும், நான் என்ன செய்வேன். என்னத்தைக்கொண்டு, நான் உன் சம்பளத்தை அதிகரித்துக் கொடுக்கமுடியும்?—கொஞ்சம் பொறுக்கவேணும், வருகிற வருஷம் சீமையிலிருந்து பொருள் உதவி வந்தால், உன் சம்பளத்தோடு ஏதாவது சேர்த்துக்கொடுக்கலாம். போய்விட்டுவா.

சோம்பாய் வருகிறான்:—குருவானவர் தமது பணப்பையில் இருக்கும் சில்லறைகளையெல்லாம் காசு காசாய்ச்சேர்த்து சோம்பாயிக்குச் சம்பளம் கொடுக்கிறார்.

சோம்பாய்:—சுவாமி, இப்போது என் சம்பளம் கட்டிவராது, வயிற்றுக்கே பற்றாது. பிள்ளைகுட்டிகள் 4 பேர். நான் கூலி வேலை செய்தாலும் ஒரு நாளைக்கு 12 அணா சம்பாதிக்கலாம், மேலும், நான் எப்போதும் அடுப்புக்குப் பக்கத்தில் இருக்கிறதினால், எனக்கு நெஞ்சுவலியுண்டாகும் என்று சிலர் சொல்லுகிறார்கள். நீங்கள் ஒரு ரூபாயாவது அதிகமாய்க் கொடுக்காவிட்டால் நான் எப்படிப் பிழைக்கமுடியும்?

குருவானவர்:—என்ன மரியசூசை, போனவருஷ முதல் உனக்கு 2 ரூபாய் அதிகமாய்க் கொடுத்துவருகிறேன். இன்னம் போதாது என்கிறாய். உனக்கும், உன் குழந்தைகளுக்கும் துணி மணி வாங்கிக்கொடுத்தேன். உனக்கு வீடுவாடகை இல்லை. உன் குடும்பத்தை ஆதரித்து வருகிறேன். நீ முறையிடுவதற்கு நியாயமில்லை. இன்னும் என் சாப்பாட்டில ஏதாவது குறைக்க வேணுமென்கிறாயா? எனக்கு வாரத்துக்கு ஒரு



தடவை மாத்திரம் கறிக்குழம்பு வைக்கிறாய். அதையும் தள்ளி, இனிமேல், நான் வெறும மிளகு தண்ணீர் சாப்பிட்டு உனக்குச் சம்பளம் கொடுக்கவேணுமா? போய்விட்டுவா.

கோவில் பெருக்கி:—சுவாமி, நான் 25 வருஷகாலமாக, கோவில் பெருக்கி வேலை செய்து வருகிறேன். நான் பட்ட கஷ்டம் சுவாமிக்குத்தான் தெரியும். நான் கோவிலுக்குச் செய்த தர்மத்தை அர்ச். அந்தோனியார் அறிவார். இப்போது பஞ்சகாலம். நீங்கள், இனிமேல் வருஷத்துக்கு இரண்டு சீலை வாங்கிக் கொடுக்கவேணும; தவிர வாரத்துக்கு நாலு அணா கொடுக்கவேணும; கொடுப்பீர்களா சாமி. ?

குருவானவர்.—நீயும், ஒற்றுமையாமை என்னுங் குழப்பத்தில் சேர்ந்திருக்கிறாயா, மரியம்மா? இந்த நாள் வரையில் கோவிலுக்கு நல்ல ஊழியஞ் செய்து வந்தாய்; சுவாமிக்காகத்தான் இந்தப் புண்ணியம் செய்தாய் அல்லவா? அவர்தான் உனக்குச் சம்பாவனை கொடுப்பார். இனிமேல், நமது ஊர் கிறீஸ்துவர்கள் தலைக்கட்டுப் பணம் சரியாய்க் கொடுத்து வந்தால், ஒரு சமயம் உனக்குக் கொஞ்சம் அதிகம் கொடுக்கலாம், ஆனால் நீ கோபித்துக்கொண்டு வேலையை விட்டுப் போனால் நான்தான் கோவிலைப் பெருக்கவேண்டியிருக்குமாக்கும்.

அப்படியே அந்தத்தடவை பங்குசுவாமியார் நல்ல வார்த்தைகளைச் சொன்னதினாலேயும், வேலைக்காரருடைய நல்ல மனதினாலேயும், பெருங்கிலேசத்துக்குத் தப்பித்துக்கொண்டார். அது எத்தனை நாளைக்கு என்னமோ தெரியாது.

**சத்திய நேசன்.**

---

## History of the Diocese of Coimbatore.

### கோயமுத்தூர் மேற்றிராசனச் சரிதை.

1873ம்-வருஷத்தில் கனம் பொருந்திய டெபொமியே ஆண்டவர் காலஞ்சென்றார். அவருக்கு பதிலாக சங். J. பார்து (Bardou) சுவாமியார் தமது 40-ம் வயதில் நியமிக்கப்

பட்டு 1874-ம்௵ ஆகஸ்டு௴ 23ம்-உ ஆண்டவர் பட்டம் பெற்றார். அப்போது கோயமுத்தூர் மிஷனில் இருந்த கிறீஸ்துவர்களுடைய தொகை 21,000 பேர்.

1876-ம்௵ முதல், 1878-ம்௵ வரை, தென் இந்தியாவில், ஓர் கொடும் பஞ்சம் உண்டானது. சத்திய வேத போதகர்கள் ஜனங்களுக்கு சரீர விஷயத்திலும், ஆத்தும விஷயத்திலும் மிகுந்த பக்திப் பற்றுதலுள்ள உதவி செய்தார்கள். ஆங்கிலேய சர்க்காரும், பிராஞ்சு சர்க்காரும், கஷ்டப்பட்ட ஜனங்களுக்கு பலவிதமான பொருள் உதவிகளைத் தாராளமாய்ச் செய்தார்கள். ஆனாலும் கணக்கில்லாத ஜனங்கள், பசியினாலும், விஷபேதி, வயிற்றுக்கடுப்பு, காய்ச்சல் முதலிய வியாதிகளாலும் செத்துப்போனார்கள். கோயமுத்தூர், அத்திக்கோடு, பாலக்காடு, மேட்டூர், நாயமபாடி முதலிய பிரதான ஊர்களில், ஜனங்களுக்குத் தங்கும் இடங்களையும், சாப்பாடு கொடுத்துதவும்படியான தர்ம சாலைகளை (கஞ்சித் தொட்டிகள்) யும் ஏற்படுத்தினார்கள்.

சங். பேருள் (Beroulle), பூபேர் (Foubert), பாக்ரோ (Pacreau), பஜோ (Pageault) முதலிய குருமார்கள், பசியால் வருந்தி வந்த நிர்ப்பாக்கிய ஜனங்களுக்கு, மிகவும் தைரியத்தோடும், பிறர்சிநேகத்தோடும் ஆறுதலான உதவி செய்தார்கள். அவர்களுடைய ஒத்தாசையினால், அநேகர் சாவுக்குத் தப்பித்துக்கொண்டார்கள். குருக்கள் ஜனங்களுடைய சரீரத்துக்கு நன்மை செய்யும்போது, அவர்களுடைய ஆத்துமத்தின் நன்மையை மறக்கவில்லை.

பஞ்சகாலத்தில் கோயமுத்தூர் மிஷனில் 6000 அஞ்ஞானிகள் ஞானஸ்நானம் பெற்றார்கள். இவர்களில் மூன்றில் ஒரு பாகம், அவஸ்தை சமயத்தில் ஞானஸ்நானம் பெற்றுச் செத்துப்போனார்கள். சிறு பிள்ளைகள் தர்ம மடங்களில் சேர்க்கப்பட்டார்கள். ஆனால், மரணத்துக்குத் தப்பித்துக்கொண்டவர்களில், அநேக புதுக் கிறிஸ்துவர்கள், பஞ்சம் முடிந்தபின்பு, சத்தியவேதத்தை மறுதலித்துப்போனார்கள் என்பது மிகவும் துக்கத்துக்குரியது; இவர்கள் அப்படிச் செய்ததைக் கண்ட அஞ்ஞானிகள் முதலாய் அவர்களைக் கண்டித்து, உங்கள் உயிரைக் காப்பாற்றி வந்த தெய்வத்தையும், வேதத்தையும், குருக்களையும் மறுதலித்த நீங்கள், தேவ கோப ஆக்கினைக்குப் பயப்படுகிறதில்லையோ வென்று சொன்னார்களாம்; குருக்கள்



அந்த ஊதாரிப் பிள்ளைகளைக் கைவிடாமல், அவர்களைத் திருச்சபையின் திருமந்தையில் மறுபடியும் சேர்க்கப் பிரயாசப்பட்டார்கள். ஏற்கனவே சிலர் மனந்திரும்பினார்கள்.

கனம் பொருந்திய பார்து ஆண்டவர், சுதேச குருக்களை அபிவிர்த்தி செய்யக் கூடியமட்டும் பிரயாசப்பட்டார். கோயமுத்தூரில் 1880-ம்௵ ஒரு குருமடம் புதிதாய்க் கட்டப்பட்டது. 1883-ம்௵ சங். அருள்நாதரும், 1885-ம்௵ சங். மரியசூசைநாதரும், 1886-ம்௵ இஞ்ஞாசிநாதரும், மரியசவேரிநாதரும் குருப்பட்டம் பெற்றார்கள்.

1877-ம்௵ சின்னப்பள்ளத்திலிருந்த அநாதப் பிள்ளைகள் தர்மமடம் கோயமுத்தூருக்கு மாற்றப்பட்டது.

1886-ம்௵ கோயமுத்தூரில் அர்ச். மிக்கேல் பாடசாலை, எலிமெண்டரி வகுப்பிலிருந்து, ஹைஸ்கூலாக, ஏற்படுத்தப்பட்டதுமல்லாமல, அர்ச். மிக்கேல் போர்டிங்கு ஸ்தாபிக்கப்பட்டது. ஷை மடங்களையும், பள்ளிக்கூடத்தையும், மிகவும் சங். சோண்டி சுவாமியார் விசாரித்து நடத்தி வந்தார். 1887-ம் வருஷத்தில் அர்ச். மிக்கேல் பள்ளிக்கூடத்தில் வெளிப்பிள்ளைகளும், உட்பிள்ளைகளும், 167 பேர் படித்துக்கொண்டிருந்தார்கள்.—1885-ம வருஷத்தில் குன்னூர் அர்ச். அந்தோனியார் பாடசாலையில் 200 மாணாக்கர்கள் இருந்தார்கள்; ஒத்தகமண்டு, பாலக்காடு, பள்ளப்பாளையம், அத்திக்கோடு முதலிய ஊர்களிலுள்ள பாடசாலைகளும் அநுகூலமாய் நடந்து வந்தன.

1874-ம்௵ மரியாயின் போதகரான அர்ச். பிரான்சிஸ், ஐரோப்பிய (சீர்மை) கன்னியாஸ்திரிகள், ஒத்தகமண்டில் நசரேத் என்னும் ஒரு மடத்தை ஸ்தாபித்தார்கள். ஒரு வருஷத்துக்குப் பின் ஷை ஊரில், ஒரு இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தையும், 1879-ம்௵ இந்து பெண்பிள்ளைகளுக்காக ஒரு பாடசாலையையும், 1878-ம்௵ கோயமுத்தூரில், வேறொரு இங்கிலீஷ் பள்ளிக்கூடத்தையும், அநாத பிள்ளைகளுக்காக தர்மமடத்தையும் ஸ்தாபித்தார்கள்.

தவிர ஷை கன்னியாஸ்திரீகள், 1886-ம்௵ கனம் பொருந்திய பார்து ஆண்டவர் கருத்தின்படி, ஒத்தகமண்டிலும், கோயமுத்தூரிலும், தர்ம வைத்தியசாலைகளை ஸ்தாபித்

தார்கள். அதற்குள்ளாக காணிக்கைமாதா மடத்தின் சுதேச கன்னியாஸ்திரீகள், 1874-ம் வருஷத்தில் பள்ளபாளையத்திலும் 1876-ம் வருஷத்தில் குன்னூரிலும், 1878-ம வருஷம் அந்தியகோட்டிலும புதுப் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்தார்கள்.

1886-ம் வருஷத்தில் கோயமுத்தூர் மிஷனின் நிலைமையாவது :—

| | |
|---|---|
| மேற்றிராணியார் ... ... ... ... | 1 |
| கத்தோலிக்கரின் தொகை ... ... ... | 28040 |
| கோவில்கள் ... ... ... ... | 76 |
| ஐரோப்பிய வேதபோதகர்கள் ... ... | 25 |
| சுதேச குருக்கள் ... ... ... ... | 8 |
| உபதேசிகள் ... ... ... ... | 19 |
| சின்ன குருமடத்திலிருந்த வித்தியார்த்திகள் ... | 8 |
| பெரிய குருமடத்தில் ,, ... | 4 |
| ஐரோப்பிய கன்னியாஸ்திரிகள் ... ... | 30 |
| சுதேச கன்னியாஸ்திரிகள் ... ... ... | 45 |
| பாடசாலைகள் ... ... ... | 53 |
| அவைகளிலிருந்த மாணாக்கர்கள் ... ... | 2800 |
| தர்ம மடங்கள் ... ... ... | 4 |
| அவைகளிலிருந்த அநாத பிள்ளைகள் ... . ... | 245 |

சத்திய வேத போதகர்கள் எத்திசையிலும் சுவிசேஷத்தைப் போதித்து படிப்படியாய் திருச்சபைக்கு வழியை முன்திப்பு செய்து அதை ஸ்திரமாய் ஸ்தாபித்த பிறகு, அர்ச். பாப்பானவர் அவ்விடங்களில் மேற்றிராசனங்களை ஸ்தாபிப்பது வழக்கம். அதன்பிரகாரம், 1886-ம் வருஷத்தில், செப்டெம்பர்-மீ 1-வ அர்ச். பாப்பானவராகிய 13-ம் சிங்கராயர் இந்தியாவிலுள்ள மிஷன்களுக்கு மேற்றிராசனம் என்னும் சுதந்தரப் பட்டத்தைக் கொடுத்தருளினார். அந்நாள் முதற்கொண்டு கோயமுத்தூர் மிஷன் கோயமுத்தூர் மேற்றிராசனம் என்னும் பேர் அடைந்ததுமல்லாமல், விகார் அப்போஸ்தொலிக்கரான கனம் பொருந்திய பார்து ஆண்டவர் கோயமுத்தூர் மேற்றிராணியார் என்னும சுதந்தரப் பட்டம் பெற்றார். "சர்வேசுரன் செய்தருளின வாக்குக்கெட்டாத உபகாரத்துக்காக, அவருக்குத் தோஸ்திரமுண்டாகக்கடவது."

(2. கொரிந்தியர், IX. 15.)

---



161298

## Anniversary of the Catholic Club, Coimbatore.

## கோயமுத்தூர் கத்தோலிக் கிளப்பின் வருடாந்தரக் கொண்டாட்டம்.

மேற்படி கிளப்பின் வருடாந்தரக் கொண்டாட்டமானது சென்ற மாதம் 10-4-21 ஆகிய ஞாயிறுவாரத்தன்று நடைபெறலாயிற்று. அன்று, பிற்பகல் சுமார் 4-மணிக்கு கிளப்பின் மெம்பர்கள் யாவரும் கிளப்பின் சாலையில் வந்து கூடினதும், எவ்வித விகற்பமுமின்றி கூட்டுறவுச் சாரான சிற்றுண்டி முதலியன அருந்திக் களிப்புற்றனர். பின்னர், சுமார் 6-மணிக்கு, அக்கொண்டாட்டத்தின் முக்கிய சம்பவங்களை நிறைவேற்றுமாறு ஆரம்பித்தனர். அதற்குச் சபாநாயகராகத் தற்போது இந்த ஜில்லாவின் பேரில் வந்திருக்கும் மகா-ா-ா-ஸ்ரீ டாக்டர் ஜெகராயலு முதலியார் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். வழமைபோல், மேற்படி முதலியார் அவர்கள் அக்கிராசனம் வகித்ததும், அறையைக் கொண்டாட்டத்தின் சாரமாய் சுருக்கத்தில் சில வார்த்தைகளை உரைத்து, கிளப்பின் காரியதரிசியாகிய மகா-ா-ா-ஸ்ரீ அந்தோனிமுத்து செட்டியார் B.A., அவர்களை வருடாந்தர ரிப்போர்ட்டை வாசிக்கும்படியாக ஆக்யாபிக்க, மேற்படி செட்டியார் ரிப்போர்ட்டை வாசித்தனர். அதின் முக்யாம்சம் யாதெனில், மேற்படி கிளப்பானது, அதின் பிரசிடெண்டு மிகவும் சங். பெஷா சுவாமி அவர்கள் V. G., வைஸ் பிரசிடெண்டு மகா-ா-ா-ஸ்ரீ A. பெரியநாயக முதலியார் அவர்கள் B.A., L.T., தான் தனது உத்தியோக நிமித்தம் வெளியூர் சென்றிருந்த காலத்து, தனக்கு உதவி காரியதரிசியாக இருந்த மகா-ா-ா-ஸ்ரீ D. மங்களசாமிபிள்ளை அவர்கள், ஆகிய இவர்களின் கண்காணிப்புடன் கூடிய விடா முயற்சி, ஊக்கம முதலிய சிறப்பு வாய்ந்த தன்மைகளின் காரணமபற்றி, தினைதினை விருத்தியடைந்து, அதின் அறிகுறியாக, ஆரம்ப வருடத்தன்றே கிளப்பின் மெம்பர்களின் தொகை 45 ஆக இருக்கிறதென்றும், மெம்பர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட சந்தாத் தொகையில், சமயோர்ச்

ஜிதமாகச் செய்யப்பட்டதும், கிளப்புக்கு ஆவசியகமான சம்மந்த விஷயமாய் வரவழைக்கப்பட்ட சமாச்சாரப் பத்திரிகைகள் முதலிய விஷயமாய் நேரிட்டதுமான செலவுகளின் தொகையை நீக்கி, கையிருப்பு முதல் ரூ. 3!-14-0 என்றும், இவ்விஷயங்கள் கிளப்பின் விர்த்திக்கு அறிகுறியான சாதனங்களாகக் கொள்ளப்படலாம் எனவும், ஆரம்ப வருடத்தின் இறுதிவரையில் ஏறக்குறைய 13 உபன்னியாசங்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் நடைபெற்றனவென்றும், அவ்வுபன்னியாசங்களில் ஒன்று, இத்தென்னிந்தியாவின்கண் மிகச் சிறப்புற்றிலங்குபவரும், கற்றோரும் மற்றோரும் அறிந்தவருமாகிய திவான் பஹதூர் L. D. சுவாமிக்கண்ணுப்பிள்ளை அவர்களால் செய்யப்பட்டதுபற்றியும், இவ்வுத்தம கனவான் இம்மோற்றிராசனத்திற் பிறந்தவரானதினாலும் இவ்விஷயம கிளப்பின் சிலாக்கியத்துக்கு ஏற்றதெனக் கருதப்படலாம் எனவும் எடுத்துக்கூறி, கிளப்பின் அபிவிர்த்தியைக் கருதி, நன்கொடையாலும், மற்ற வகையாலும் உதவிபுரிந்து வருபவராகிய மிகவும் சங். பிரசிடெண்ட் அவர்களுக்கும், ஊக்கம், உற்சாகம், விடாமுயற்சி முதலிய இன்றியமையாத் தன்மைகளால் உழைத்து வந்த வைஸ்பிரசிடெண்டு, உதவி காரியதரிசி முதலியவர்களுக்கும் கிளப்பின் பேரால், தான் மிக்க நன்றி பாராட்டுவதாகவும் சொல்லி முடித்தனர்.

உடனே சபாநாயகர், அன்று உபன்னியசிக்கவிருந்தவர்களில் ஒருவராகிய உபாத்தியாயர் மகா-ா-ா-ஸ்ரீ சி. எஸ். தேவசகாயம்பிள்ளை அவர்களுக்கு, தன் உபன்னியாசத்தைத் தொடங்கும்படி ஆக்யாபித்தனர். அவர் பின்வருமாறு உபன்னியசித்தனர்:—

“இன்று என்ன விஷயத்தைப்பற்றி உபன்னியசிக்கிறதெனச் சிந்தனை செய்ததில், தற்கால கிளாசுக்குத் தக்கதான விஷயமொன்றைத் தெரிந்தெடுத்தல் உசிதமும், இன்றியமையாததுமாயிருத்தல்வேண்டும் என உணர்ந்தும அதற்காக ‘கத்தோலிக்கரின் முன்னேற்றம்’ என்னும விஷயத்தைத் தெரிந்துகொள்ளலானேன். ஆனால், அதை உடனே ஆரம்பிக்குமுன்னர், ஒன்று சொல்லக்கொள்ள விரும்புகின்றேன். அஃதியாதெனில, ‘இன்ன நாளில், இன்ன இடத்தில், இன்னவரால், இன்ன விஷயத்தைபபற்றி, உபன்னியாசம் நடைபெறப்போகிறது’ என்று விளமபரம் ஆனதும், அதைக்



கேட்குமாறு செல்பவர்களில் பெரும்பான்மையோர், ‘உபன்னியாசகர் எவ்விதம் பேசுகிறார் பார்க்கலாம், மட மட, கட கட, என்று பேசுகிறாரா? உயர்ந்த பாஷா நடையில் பேசுகிறாரா, (in a fluent and good style) என்று அறியும் பொருட்டுப் போகிறது சாதாரண வழமை. இது சற்றேனும் சரியன்று. அதற்கு மாறாக, ‘உபன்னியாசகர் தன் உபன்னியாசத்தில், என்ன விஷயங்களை எடுத்துச்சொல்லப் போகின்றார்? அவைகளால் நன்மை ஏற்படுமா? ஏற்படுமாயின், அதை நாம் அனுசரிக்க முயலவேண்டும். பிறரும் அதை அனுசரித்து நடக்கும்படி செய்ய முயலவேண்டும்,’ என்னும் இவைபோன்ற நற்கருத்துடன் சென்று, சொல்வதைச் செவ்வனே கேட்டு, அதின்படி செய்து, அதினால் ஏற்படக்கூடிய நன்மைகளை அடைய முயலவேண்டும். அவ்வாறின்றி, உபன்னியாசம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே, ஒருவர்க்கொருவர் தங்கள் கண் ஜாடையால், ‘ஜமாய்க்கிறார்’ அதாவது சாதுரியமாய்ப் பேசுகிறார் என்று பேசிக்கொண்டு, உபன்னியாசம் முடிந்து, தங்கள் இல்லம் ஏகுங்கால் சாதாரணமாகத் தங்களுக்குள் பேசிக்கொள்ளுகிறது என்ன? ‘நன்றாய்ப் பேசினார்! என்னமாய்ப் பேசினார்! மாட்டு மாட்டு என்று மாட்டிவிட்டார். ஆ! ஆ!! வாங்கு வாங்கு என்று வாங்கிவிட்டார்! வெளு வெளு என்று வெளுத்துவிட்டார். தீட்டு தீட்டு என்று தீட்டிவிட்டார். பிள பிள என்று பிளந்துவிட்டார். கெட்டிக்காரன் ஐயா! First class man, என்று, இதுபோன்றவைகளே. ஆனால், அவர் சொன்ன விஷயங்களைப்பற்றிக் கவனிப்பாருண்டோ? அவைகள் என்ன ஆயின? செவிடன் காதில் ஊதின சங்குநாதம்போலும், வனாந்தரத்திலிட்ட குரலொலிபோலும் நிஷ்பலனாகிவிட்டன. ஏன்? அவைகளைப்பற்றி யோசிப்பாருமில்லை, அதன்படி செய்வாருமில்லை. ‘பழைய குருடி, கதவைத் திறடி’ என்பது போல, காரியங்கள் நடக்கத் துவக்குகின்றன. அவ்வாறாயின், உபன்னியாசத்தின் பயன் எங்கே? நமது காரியாதிகள் எவ்வாறு முன்னேற்றமடையும்? இத் துர்வழக்கம் நம்மில் நிலைக்கொண்டிருக்குமட்டும், நாம் ஒருபோதும் முன்னுக்கு வரமாட்டோம் என்பது திண்ணம்.

ஆகையால், கனவான்களே, நீங்கள் அவ்வாறு செய்யாமல், நான் சொல்லப்போகும் விஷயங்களை நன்றாய்க் கவனித்து, அதின்படி செய்யவேண்டிய முயற்சிகளைத் தாமதியாது

செய்யத் தொடங்கி, அம்முயற்சியின் பயனாக நாம் அடைய வேண்டிய நன்மைகளை அடைந்து, புறமதஸ்தர்களாகிய இந்துக்கள், முஹம்மதியர், புரொடெஸ்டாண்டார் அடைந்துகொண்டுவரும் மேன்மையான அந்தஸ்தை நாமும் ஒருவாறுவது அடைந்து, அதின் காரணமாக நமது பரிசுத்த வேதத்தை இவ்வஞ்ஞான நாட்டின்கண் அதிக ஸ்திரமாக நிலைநாட்டுவோமாக.

(தொடரும்.)

---

## Origin of May Devotion.

## மே மாத வணக்க மாதத்தின் ஆரம்பம்.

சுமார் 100 வருஷங்களுக்குமுன் உரோமாபுரியில், ஒரு சிறு ஏழைச் சிறுமி, தெரு வீதியில், திருப்பாலகனைக் கையிலேந்திய பாவனையாக, தேவதாயாரின் ஒரு திருச் சுரூபம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததைக் கண்டு, அச்சுரூபத்திற்குமுன் மே மாதத்தில் ஒருநாள் சாயங்காலம், மகா பத்தியுடன் முழந்தாட்படியிட்டு தான் கோவிலில் பாடக்கேட்ட மாதாப் பிரார்த்தனையை, தன் மழலைச் சொற்களாற் சொல்லிற்று. அடுத்த நாட் காலையிலும் அந்தப்பிள்ளை அதே சுரூபத்துக்கு முன்பாக வந்து, மாதாப் பிரார்த்தனையைப் பாடிற்று. அச்சமயத்தில் அவ்வழியாய்ப் போய்க்கொண்டிருந்த இன்னொரு சிறுமியும் அங்கே முழந்தாளிட்டு, முந்தின பிள்ளைக்கு உதவியாகப் பாடினாள். அன்று சாயந்திரம் மறுபடியும் அவ்விடத்தில், அந்த இரண்டு பிள்ளைகளும் கூடி, மாதாப் பிரார்த்தனையைப் பாடிக்கொண்டிருக்கும்போது, அங்கே விளையாட்டு நோக்கமாய் வந்த மூன்று, நான்கு பிள்ளைகளும், ஷை சுரூபத்துக்குமுன், முழந்தாளிட்டு மாதாப் பிரார்த்தனைப் பாட்டைச் சேர்ந்து பாடினார்கள். இப்படியாகச் சிலநாள், இப்பிள்ளைகளெல்லாம் அநுதினம் பாடிவருவதைக்கண்ட, அவர்களுடைய பக்தியுள்ள தாய்மார்கள் சந்தோஷித்துத் தாங்களும், தங்கள் பிள்ளைகளுடன்போய், ஷை திருச் சுரூபத்துக்குமுன் முழந்தாளிட்டு, தங்கள் பிள்ளைகளுடன் ஏகோபித்து, மாதாப் பிரார்த்தனையைப் பாடினார்கள்.



ஷை திருச் சுரூபத்துக்குச் சமீபத்திலிருந்த கோவிலை விசாரித்துவந்த குரு சுவாமியார், அந்தப் பிள்ளைகளுடைய பக்தி முயற்சியைக் கண்டு, ஆனந்தித்து, தாய்மார்களையும், பிள்ளைகளையும் கோவிலுக்குள் அழைத்துக்கொண்டுபோய், அவ்விடம் மாதாச் சுரூபத்துக்குமுன், சில மெழுகுதிரிகளைக் கொளுத்தி, அவர்களுடன் தாமும் சேர்ந்து மாதாப் பிரார்த்தனையைப் பாடினார். பாடியபின் தேவமாதாவினுடைய சுகிர்த புண்ணியங்களைப்பற்றி ஒரு சிறு பிரசங்கஞ் செய்தார். இதுதான் மே மாத வணக்கமாதத்துக்கு ஆரம்பம். அன்று முதல் மேற்படி பக்தி முயற்சிகள் உலகமெங்கும் பரவி சில வருஷங்களுக்குள், திருச்சபையில் பிரபல்யமானது. இந்த வரலாற்றால், சிறு பிள்ளைகளைக்கொண்டு தேவதாயின் பக்தி பரம்பின அதிசயத்தை அறிகிறோம்.

---

## Correct things for school children.

## பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் அனுசரிக்கவேண்டிய ஒழுங்குகள்.

தம்பி! உன் பாடங்களில் நீ தேறும்படி விரும்பினால் அதிகாலையில் எழுந்திரு.—“ முந்தியே படுத்து, முந்தியே எழுந்திரு; சுகமும, பணமும், படிப்புக்கு ஆதாரம்”

படுக்கையைவிட்டு எழுந்தவுடனே கடவுளை நினைத்து காலை ஜெபம்பண்ணு.

அவர் உனக்குச் செய்த உபகாரங்களை மறவாதே. உன் சரீரமும், உடையும், மனமும் சுத்தமாயிருக்கவேண்டும்.—“ அகத்தின் அழகு முகத்திற் தெரியும்.”—பள்ளிக்கூடத்துக்குப் போகக் கள்ளத்தனம் பண்ணாதே.—சரியான நேரத்தில் ஆஜராயிரு.—உன் தாய் தகப்பனைப்போலே உன் உபாத்தியாயரையும் சங்கித்திருப்பாயாக.

ஒவ்வொரு காரியத்திலும் உன்னோடே படிக்கும் பிள்ளைகட்கு நன்மாதிரிகை காட்டவேணும். அவர்களோடு நேசமாயிரு.

துஷ்டத் தோழர்களோடு ஒருபோதும் சேராதே. உன் பாடங்களைச் சுறுசுறுப்போடு படிக்கவேணும். சோம்பேறிக்குச் சாத்தான் வேலை கொடுப்பான். வேலை நேரம் வேலை செய், ஆட்ட நேரம் ஆட்டமாடு. உன் தோழர்களுடைய பொருளைத் திருடாதே. நீ படிக்கவேண்டிய முதல் பாடம் சத்தியத்தைப் பேசுவதே; எல்லாவற்றிலும், எப்போதும் உண்மையாயிரு. "சத்திய உதடுகள் என்றென்றைக்கும் நிற்கும்;—பொய்யுதடுகள் ஒரு நிமிஷம் மாத்திரம்." கெட்ட வார்த்தையொன்றும் உன் வாயிலிருந்து புறப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. உன் பாட நேரத்தில் உன் தோழருடன் பேசவும், சடுத்தம் பண்ணவும் ஆகாது; கற்பிப்பதை கவனித்துக்கொள்.

நீ பாடசாலையிற் படித்த நல்ல ஒழுக்கத்தை வீட்டிலேயிருக்கும்போது மறந்துபோகாதே. எலலாருக்கும் ஓர் நல்ல தீபம்போல், உன் நல் நடத்தையினால் பிரகாசிக்க முயலு.—உன் நல்லொழுக்கத்தினால் உன் பெற்றோரை மனமகிழப் பண்ணு; உன் சகோதரர், சகோதரிகளோடு அன்பாயிரு.

நீ படிப்பை விட்டபிறகு, எந்த வேலையைச் செய்தாலும், நீதியானதைச் செய்து, கடவுளுக்குப் பிரமாணிக்கனாயிருந்து, மோட்ச இராச்சியத்தைத் தேடி நடப்பாயாக.

"விளையும் பயிர் முளையிலே தெரியும்."

---

## A Catholic and a Protestant.

### ஓர் கத்தோலிக்கனும் பதிதனும்.

புரோட்டெஸ்டாண்ட்:—ஓ! ரோமானித்தரே, வாரும்.

கத்தோலிக்கர்:—சலாம் ஐயா; என்ன விசேஷம்?

புரோட்:—சலாம்—நீர் ஏன் எங்களுடைய பைபிள் புஸ்தகத்தைப் படிக்கும்படி கொடுத்தால் அதை வாசிக்கமாட்டேன் என்கிறீர், அதைக் கண்ணுற்பார்க்கவும், கையாற் தொடவும் பயப்படுகிறீர். அது ஏன்?



கத்தோ:—அது எனக்குப் பிரியமில்லை, ஐயா!

புரோ:—ரோமானித்தாருக்கு வெகுசாய் வேதமே தெரியாது, அதை உங்கள் குருக்கள் சரியாய் எடுத்து போதிப்பதில்லை; ஆனதால் உங்களுக்கு வேதமே தெரியாது.

கத்தோ:—தெரியாதா? உங்களுக்கு பைபிள் எப்படிக் கிடைத்தது; ஆதியிலிருந்து நாங்கள்தானே காப்பாற்றி வருகிறோம; நீங்கள் இடை நடுவிற் பிரிந்துபோனவர்கள்தானே; எங்களிலிருந்துதானே உங்களுக்கு பைபிள் கிடைத்தது.

புரோட்:—அப்படியானால் ஏன் அதைப் படிக்கப்படாது.

கத்தோலி:—உங்கள் பைபிளில் அநேக மாற்றங்களுண்டு, அதை வாசிப்பதற்கு உத்தரவில்லை. ஆனாலும் எங்களுக்கு, சுருக்கமான குறிப்பிடமுண்டு, அதில் வேதமெல்லாம் தெரிந்து கொள்ளலாம. அதை எங்கள் குருக்கள் விபரித்துக் காட்டுவார்கள். அதே போதுமானது.

புரோட்:—வேதப் புஸ்தகத்தைப் படித்து, அதை நன்றாய் ஆராய்ச்சி செய்யவேண்டுமென்று, பைபிளில் சொல்லியிருக்கிறது. ஆனதால், நீங்கள் அதை மொழி பெயர்த்தும் படிப்பதுமில்லை, உங்கள் குருக்கள் சொல்லிக்கொடுப்பதுமில்லை என்ன வேதம் அறியாதவர்கள்!

கத்தோ:—என்ன வீண் வம்பு வளர்த்துகிறீர். கால தாமதமாகிறது. நாங்கள் உங்கள் பைபிளைப் பார்க்கமாட்டோம் நீ கட்டாயம் ஆராய்ந்து படி என்கிறாய்! அது எப்படியிருக்கிறதென்றால், ஒருவன் என்னைப் பார்த்து, ஓர் புற்றைக்காட்டி, இதில் உன் கையை விட்டு நன்றாய் ஆராய்ந்து தேடிப்பார், இதில் ஒரு பொன் கட்டி கிடக்கிறது; அதை எடுத்துக் கொண்டால் மகாராஜனாய்விடலாம் என்கிறான். அவன் பேச்சைக்கேட்டு, புற்றில் கைவிடப்போக, ஓர் நாக சர்ப்பம் என்னைத் தீண்டிவிட்டது. நான் செத்துப்போகிறேன். சொன்னவனுக்கென்ன? என்னுடனா சாவான். ஆகையால் உங்கள் பைபிளை நான் படிக்கவும் வேண்டாம், நான் நரகத்துக்குப்போகவும் வேண்டாம் என பதில் சொன்னான்.

---

## Here and There.

### நானா சங்கதிகள்.

H. L. the Bishop :—கடந்த மாதம் 14-ம் உ மகா கனம் பொருந்திய கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்கள், சீன தேசத்திலிருந்து கோயமுத்தூருக்குச் சுகமாய்த் திரும்பி வந்து சேர்ந்தார். கோயமுத்தூர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து, கத்தோலிக் யூனியன் பாண்டு வாத்தியம் சந்தோஷமாய் வாசிக்க, கோவில் மணிகள் ஒலிக்க, வரவேற்கப்பட்டார். அவர் வருகையில் அநேக கிறீஸ்துவர்கள் அவருடைய ஆசீர்வாதத்தை அதிக ஆவலுடன் பெற்றார்கள். அவர் மே மாதத்தில் நீலகிரி மலைக்குப் போய், உறுதிபூசுதல் என்னும் தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றுவார்.

The new Viceroy :—இந்திய இராஜப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட லார்ட் ரீடிங் பிரபு எப்பிரல் மாதம் 1-ம் உ இந்தியாவில் சேர்ந்தார்.

District Educational Council :—சர்க்கார் உத்தரவின்படி ஒவ்வொரு ஜில்லாவிலும், ஒரு கல்வி சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. கோயமுத்தூர் ஜில்லா கல்வி சங்கத்தில் மிகவும் சங். L. பேஷா சுவாமியாரும், நீலகிரி ஜில்லா சங்கத்தில் சங். V. மோரின் சுவாமியாரும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

Anniversary :—கோயமுத்தூரில் கத்தோலிக் கிளப், கத்தோலிக் யூனியன் இவ்விரண்டு சங்கங்களைச் சேர்ந்த மெம்பர்கள் கடந்த மாதம் 10-ம் உ வருஷோற்சவம் கொண்டாடி தங்கள் தங்கள் ஒழுங்கின்படி புது உத்தியோகஸ்தர்களைத் தெரிந்துகொண்டு நியமித்தார்கள்.

Municipal Council :—ஒத்தகமண்டில் முனிசிப்பல் சங்கத்தில் இரண்டு கத்தோலிக்கர் வோட்டுகளால் தெரிந்தெடுக்கப்பட்டார்கள், என்று தெரியவருகிறது.



New Postal rates :—எப்பிரல் மாதம் 18-ம் உ துவக்கி இனிமேல் அநுசரிக்கப்படும தபால் கட்டணமாவது:—

½ தோலாவுக்கு அல்லது ½ ரூபாய்க்கு அதிகப்படாத எடையுள்ள கடிதங்களுக்கு ½ அணா.

½ தோலாவுக்கு மேல், 1. தோலா வரையில் 9 காசு;

1 தோலாவுக்கு மேல், 2½ தோலாவரையில் 1 அணா;

2½ தோலாவுககு மேலுள்ள ஒவ்வொரு 2½ தோலாவுக்கும், 1 அணா;

புக் போஸ்ட் அல்லது பாட்டர்ன் போஸ்டுகளுக்கு 5 தோலாவுக்கும் அதற்குக குறைந்த எடைக்கும் ½ அணா; அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு 5 தோலாவுக்கும் ½ அணா;

உள்ளூர் மணியார்டர்கள் :—

10 ரூபாய்க்கு அதிகப்படாத எந்தத் தொகைக்கும் கமிஷன் 2 அணா;

10 ரூபாய்க்கு மேற்பட்டு 25 ரூபாய்வரைக்கும் 4 அணா;

25 ரூபாய்க்கு மேற்பட்ட ஒவ்வொரு முழு 25 ரூபாய்ககு 4 அணா.

---

Religious Competition. பாடசாலை வெகுமதிகள் :—

நிகழும் எப்பிரல்-மீ கோயமுத்தூர் பங்கைச் சேர்ந்த 6 கத்தோலிக்க எலிமெண்டரி பாடசாலைகளில் ஞானோபதேசப் பரீட்சை நடத்தப்பட்டு 20-உ ஷை பாடசாலைகளின் மாணாக்கர்கட்கு மிக. சங். L. பேஷா சுவாமியாரவர்களால் வெகுமானமளிக்கப்பட்டது. 6 பள்ளிக்கூடங்களைச் சேர்ந்த ஒவ்வொரு வகுப்பிலுள்ள 4 பிள்ளைகட்கு இனாம் கொடுக்கப்பட்டது.

இனாம் கொடுக்கப்பட்ட பாடசாலைகளின் விபரம் :—

1. காணிக்கைமாதா சபைக் கன்னியாஸ்திரி மடத்து ஹையர்கிரேட் பெண்பாடசாலையில் VIII, VII, VI, வகுப்புகள் நீங்கலாக, மற்ற வகுப்புகளுக்கு ... ... 8 பிரைஸ்.

2. கோட்டை பெண் பாடசாலைக்கு ... 4 „

3. உப்பிலிபாளையம் அர்ச். அந்தோனியார் பெண்பாடசாலைக்கு ... ... ... 2 „

4. மட்டக்காரச்சேரி அர்ச். சவேரியார் பெண் பாடசாலைக்கு ... ... ... ... 3 பிரைஸ்.

5. உப்பிலிபாளையம் அர்ச். அந்தோனியார் ஆண் பாடசாலைக்கு ... ... ... 1 ,,

6. கோவிற் கம்பவுண்டு நல்லாயன் ஆண்பாடசாலைக்கு ... ... ... ... 2 ,,

இவைகளில், காணிக்கைமாதா ஹையர் கிரேட் எலிமெண்டரி, பெண் பாடசாலைக்கு முதல்தர பிரைஸ் கொடுக்கப்பட்டது.

---

Ordination:—கோயமுத்தூர் மேற்றிராசனக் கோவிலில் மே-மீ 26-உ தேவநற்கருணைத் திருநாளன்று தியாக்கோன் பட்டம் பெற்ற 3 பேருக்கு, மகா கனம் பொருந்திய கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்களால் குருப்பட்டம் அளிக்கப்படும். சபையார் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளக் கோரப்படுகிறது.


# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

Vol. VII. June 1921. No. 6.

புத்தகம் VII.] FIDES AC ROBUR. [நம்பர் 6.


## The lost sheep.

## காணாமற்போன ஆடு.

அப்பொழுது அவருடைய வாக்கியங்களைக் கேட்க வேண்டுமென்று ஆயக்காரர்களும் பாவிகளும் அவரண்டையில் வந்தார்கள். அதினாலே பரிசேயரும் வேதபாரகரும் முறுமுறுத்து, இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு, அவர்களோடே அசனம்பண்ணுகிறார் என்பார்கள். ஆகையால் அவர் பின்வரும் உவமையை அவர்களுக்குச் சொல்லி வசனித்ததாவது: உங்களில் நூறு ஆடுகளை உடைய எவனாகிலும் அவைகளில் ஒன்று காணாமற்போனால், மற்றத் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்தில் விட்டுவிட்டு, காணாமற்போன ஆட்டைக் காணுந்தனையும் தேடித்திரியானோ? அதைக் கண்டுபிடித்தபின்பு, சந்தோஷமாய் அதைத் தன் தோள்களின்மேல் போட்டுக்கொண்டு வீட்டுக்கு வந்து, தன் சிநேகிதரையும், அயலகத்தாரையும் கூட வரவழைத்து: காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடித்தேன், ஆகையால் என்னோடுகூடக் களிகூருங்களென்று சொல்லுவானல்லோ? அவ்விதமே தவஞ்

செய்ய அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைப்பற்றி உண்டாகிற சந்தோஷத்தைவிட, தவஞ்செய்கிற ஒரு பாவியினிமித்தம் மோட்சத்திலே அதிக சந்தோஷமுண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

(லூக்காஸ் 15-1-7)

“Our care should be not so much to live *long* as to live *well*.”

---

## Devotion to the Blessed Sacrament.

### ‘திவ்ய நற்கருணைப் பத்தி.’

பூர்வம் ஆங்கிலேய தேசத்துப் பழைய கிறீஸ்துவர்களுக்குள் பக்தியான ஓர் வழக்கமிருந்தது. அதாவது, திவ்யபூசையிலே சற்பிரசாத எழுந்தேற்றத்தைக் காணுவதினால், இருதயத்துக்கு ஆனந்தமும, சகல ஆசீர்வாதங்களும் உண்டாகும் என்று அவர்கள் எண்ணிக்கொள்ளுவார்கள். ஆதலால் நடுப்பூசையிலே, குருவானவர் திவ்ய சற்பிரசாதத்தை எழுந்தேற்றம் பண்ணும்போது, சற்பிரசாதத்தைக் கண்ணாற் கண்டுகொள்ளும்படியாக ஒவ்வொருவரும் இடித்திடித்துக்கொண்டு, முழந்தாளிலெழுந்து நிற்பார்கள். உயர்த்திய சற்பிரசாதத்தைக் கண்டுகொண்டே, பின்பு குப்புற விழுந்து ஆராதிப்பார்கள். எழுந்தேற்ற நேரத்தில் சற்பிரசாதத்தையும், பாத்திரத்தையும் காண விரும்புவது மிகவும் உத்தமமேயாம். கிறீஸ்துவர்கள் கண்டு ஆராதிக்கும்பொருட்டே, குருவானவர் அப்பத்தின் குணங்களையும், இரசத்தின் குணங்களையும் உயர்த்திக் காட்டுகிறார். ஒரு நூலாசிரியர் குறிப்பிட்டிருக்கிறபடி: “திரு அப்பமும், அர்ச்சிக்கப்பட்ட பாத்திரமும், பீடத்தின்மேல் உயர்த்தப்படும் காட்சி, எவ்வளவு அழகான உன்னதமான காட்சி!



பரலோக சபையார் மத்தியிலே ஆனந்த கீதங்கள் ஒலிக்க, உலகம் இரட்சணிய வரங்களாற் தேங்கி நிறைய, உத்தரிக்கும் சபையார் ஆறுதலடைய, நரகவாசிகள் திகிலுற்று நடுநடுங்கும் வேளை அவ்வேளைதான் அல்லவோ.” ஆகையால் எழுந்தேற்ற நேரத்தில நாம் திவ்விய சற்பிரசாதத்தை பக்தி நிறைந்த கண்களாற் தரிசித்துக்கொண்டு, அதி ஆசாரத்தோடும், பயபக்தியோடும் தலைகுனிந்து, தாழ விழுந்து நமஸ்கரிக்கக்கடவோமாக. முற்காலத்திலே பூசை காணப்போகிறவர்கள், ஆண்டவரைக் காணப்போகிறோமென்று சொல்லிக்கொண்டு போவார்கள். உள்ளபடியே, பக்தியோடு பூசைக்குப் போய், திரு சற்பிரசாத எழுந்தேற்றத்தைக் காண்கிறவர்களெல்லாரும், யாக்கோபு என்னும் நமது அதிபிதா சொன்னதுபோல, “நான் சர்வேசுரனை முகமுகமாய்க் கண்டுகொண்டேன், என் ஆத்துமமும் இரட்சணியமடைந்துகொண்டது” என்று சொல்லிக்கொள்ளலாம் என்பதற்குச் சந்தேகமில்லை ஆகையாற் பிரிய சகோதரரே, பூசையில் சற்பிரசாத எழுந்தேற்றத்திலும், தேவநற்கருணை ஆசீர்வாதத்திலும், தேவநற்கருணைச் சுற்றுப்பிரகாரத்திலும், நற்கருணைப் பேழையுள் அடங்கியிருக்கும்போது, குருவானவர் வியாதிக்காரருக்கு (ஏந்திக்கொண்டு) போகும போதும், நாம் யாரைத் தரிசிக்கிறோம், யாரை வணங்குகிறோம்; தேவனும் மனிதனும் ஒன்றான யேசுநாதர்சுவாமியென்னும் இரண்டாமாளாகிய சுதனாகிய சர்வேசுரனைத்தானே. அவர் தாமே ஆறு இலட்சணம் வகித்த, எங்கும் நிறைந்துள்ள சர்வேசுரன். அவர்தாமே நம்மையும், மற்ற வஸ்துக்களையும் படைத்தவர், இராவும் பகலுமாய் நம்மைக் காப்பவர், நம்மை நடுத்தீர்ப்பவர். அப்படியிருக்க அவர் தேவநற்கருணையில், மறைந்து, நம்மை ஆவலாய்த் தேடிக் காத்திருக்குங் காலத்திலும், அவர் நமதுமுன் பிரசன்னமாகுங் காலத்திலும், நாம் எவ்வளவு நடுநடுக்கத்துடனும், ஆவல பயபக்தியுடனும் முழந்தாட்படியிட்டு ஆராதனைசெய்யக் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். பரலோகத்திலுள்ள சுத்த அரூபிகளாகிய சம்மனசுக்கள் முதலாய் தேவ சிம்மாசனத்தின் முன் நடுநடுங்கி நிற்கிறார்களே. அப்படியிருக்க நாம் அவருக்கு எவ்விதமான ஆசார ஆராதனை செய்யவேண்டுமென்பதை நன்றாய் யோசிக்க வேண்டும.

S. M. S. G.

---

# The good old days.

## கடந்த நல்ல காலம்.

என் உத்தியோக நிமித்தமாக நான் தூரதேசம் போய் அநேக ஊர்களைத் தரிசித்து, 20 வருஷத்துக்குப்பிறகு என் சொந்த ஊருக்குத் திரும்பிவந்து சேர்ந்திருக்கிறேன். இப்போது என் ஊரில் நடக்கிற காரியங்களைப் பார்த்தால், அந்தக் காலத்துக்கும் இந்தக் காலத்துக்கும் வெகு பாரதூர வித்தியாசமுண்டு.

அந்தக் காலத்தில் சின்னவர்கள் பெரியவர்களைச் சங்கித்து, பெற்றோர் சொல்லுக்கு அடங்கி நடந்துவந்தார்கள். அவர்கள் சொற்பப் படிப்புள்ளவர்களாயிருந்தபோதிலும், ஞானோபதேசத்தை நன்றாய்ப் படித்து, ஞாயிற்றுக்கிழமை, கடன் திருநாட்களில் தவறாமல் திவ்ய பூசைகண்டு அடக்க ஒடுக்கத்தோடு நடந்து வந்தார்கள்.

மேலும் மக்கள் தங்கள் பெற்றோருடைய தொழிலை ஏற்றுக்கொண்டு, விவசாயமோ, வியாபாரமோ, கைத்தொழிலோ, எவ்வித வேலைகளோ செய்து, குடும்பத்தின் சொத்தைக் காப்பாற்றி விர்த்தியாக்குவதிலும், ஜீவனத்துக்குவேண்டிய பொருளைத்தேடிச் சம்பாதிப்பதிலும், தங்கள் தாய் தகப்பனுக்கு உதவியாயிருந்தார்கள்.

அந்தக் காலத்தில் என் ஊர்க் கிறீஸ்துவர்களுக்குள் ஏதாவது சண்டை உண்டானாலோ பத்துப்பேர் பங்கு சுவாமியார் சந்நிதியில்கூடி நியாயம்பேசி சமாதானம் செய்வார்கள். பங்குக் குருவானவர் பேச்சை மீறிப்போனவர்கள் ஒருவருமில்லை. அந்தக் காலம் போய்விட்டது.

ஆனால், இந்தக் காலத்திலோ, பத்துப்பேர் என்னும் கூட்டம் கிடையாது. முக்கியமாய் வாலிபர்களே தலையாட்டிக்கொண்டு ஊரை ஆளுகிறார்கள். இவர்கள் பெரியவர்களைச் சற்றும் மதியாமல், தங்கள் மனம்போனபடி தெரிந்தும், தெரியாததுமான விஷயங்களைப்பற்றி அதிகாரத்துடன் பேசுகிறார்கள். அவர்களிற் சிலருடைய வார்த்தைகளின் கருத்தைக் கண்டுபிடிக்கிறது மகா கஷ்டம். துரிதமாய்ப் படபடவென்



றும், கொச்சையும், அசங்கிதமுமான பேச்சுகளை மிக இழிவான வார்த்தைகளாற் பேசுகிறார்கள். அவர்களில் அநேகர் சின்னக் குறிப்பிடத்திலுள்ள வேத சத்தியங்களைப் படியாதவர்களாயிருந்தாலும், கோவில் காரியங்கள் விஷயத்தில், இப்படி, அப்படி செய்யவேணுமென்று, பங்கு சுவாமியாரிடம் அதிகாரத்துடன் சொல்லுகிறார்கள். "அரைக்குடம் தளம்பும், நிறைகுடம் தளம்பாது" என்பதுபோல, கன்னாபின்னாவென்று வாயாடுகிறார்கள். வாலிபர்களில் அநேகர் தங்கள் பெற்றோர்களுடைய தொழில் தங்களுக்கு ஆகாதென்று எண்ணி, பட்டணங்களுக்குப்போய் வேறு ஏதாகிலும் சோம்பலுக்குரிய தொழிலைத் தேடுகிறார்கள். அவ்விடங்களில் துஷ்ட சிநேகிதர்களுடன்கூடி, தாங்கள் சம்பாதிக்கும் சொற்ப சம்பளத்தைக் குடியிலும், சூதாட்டத்திலும், விபசாரத்திலும், பயாஸ்கோப், சர்க்கஸ், நாடகம் முதலிய வீண்வேடிக்கைகளில் வீணாய்ச் செலவழிக்கிறார்கள். சமயத்துக்குச் சமயம் அவர்களுககு இஷ்டமானபோது, திரும்பி ஊருக்கு வருகிறார்கள். பீடி, சிகரட் முதலியவற்றைக் குடித்து, வாசனை பூசி, மிகவும் மெலிந்து, ஆப்பிரிக்கா தேசத்துக் குரங்குபோல, தங்கள் தலைமயிரை விநோதமாய்ச் சோடித்துக்கொண்டு, வெகு கர்வமாய்த் தலையாட்டி நடக்கிறார்கள். அவர்கள் பட்டணத்திற் கண்ட விநோதமெல்லாம், பயாஸ்கோப்பில் கண்ட தகாத படங்களையெல்லாம், தாங்கள் செய்த பைத்திய செய்கைகளைப் பாராட்டிக்கொண்டு, ஊரிலுள்ள வாலிபர்களுடன் எடுப்பாய்ப் பேசுகிறார்கள். மர்மம் தெரியாதவர்கள் இந்தக் கதைகளையெல்லாம் கேட்டு, நம்பி, அதிசயப்பட்டு, தாங்களும் வீணாய்க் கெட்டலைய, பட்டணங்களுக்குப் போக ஆசைப்படுகிறார்கள்.

மேற்சொன்ன நிலைமையின் பலன் என்ன? பெற்றோர் தேடிவைத்த சொத்து அழிந்துபோகிறது. மக்கள் தங்கள் பிதாப் பிதாக்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பூமியை விற்று, ஊரைவிட்டுப் பட்டணங்களுக்குப் போகிறார்கள். வயது சென்ற தாய் தந்தையர்கள் பட்டணங்களிலிருக்கும் தங்கள் மக்களிடத்தில் இருக்க விரும்பி, தங்கள் சொந்த வீட்டை விற்று ஊரைவிட்டு நீங்குகிறார்கள். இப்போது நடக்கிறதைப் பார்த்தால், கொஞ்சக் காலத்துக்குள், நான் பிறந்த ஊர் முழுவதும், கலைந்துபோகும் என்று தோன்றுகிறது. இக்காலத்தில் இருக்கும் ஸ்திதிக்கு முக்கிய காரணம் என்னவென்றால்,

நமது நாட்களில் பெற்ரோர்கள் தங்கள் மக்கள் மட்டில், செலுத்தவேண்டிய அதிகாரத்தைச் செலுத்தாமல் விட்டுவிடுகிரூர்கள். குடும்பத்தில் அந்நியோந்நிய நேசமும், சங்கையும், கீழ்ப்படிதலும் குறைந்துபோயிற்று. பண ஆசை, வீண் சலாக்கியம், சுகபோகம் அதிகமதிகமாய் உண்டாகிவிட்டது. தெய்வமில்லாத நமது பள்ளிக்கூடங்களில், ஆத்துமத்துக்கடுத்த மேலான காரியங்கள் படிப்பிக்கப்படுகிறதில்லே. ஆகவே, நமது நாட்களில், தெய்வத்துக்கும், இராஜாவுக்கும் அஞ்சாத ஜென்மம் உண்டாகிறது. (சத்திய நேசன்.)

---

## The Correct Things in business.
## அலுவலில் அநுசரிக்கவேண்டிய ஒழுங்குகள்.

எந்த நேரத்திலும், எல்லாவற்றிலும் யோக்கியமாயிருக்கவேண்டும்; நேர்மைத்தனம் மனிதனுடைய மகிமை; யோக்கியமே எல்லாவற்றிலும் பெரிய விவேகமாமே; ஆஸ்திக்காரர் எல்லோரும் கள்ளர் என்றும், ஏழைகள் எல்லோரும் மாசற்ற சம்மனசுக்கள் என்றும் நினைக்கவேண்டாம்.

அலுவலில் தேறவேணுமானுல், நல்ல சமயங்களே உபயோகிக்கவேண்டும்; ஆனுல், தான் செய்திருக்கும் நல்ல ஏற்பாட்டுக்கு அநுகூலமில்லாமல் போனுலும், எல்லாம் கெட்டுப்போய்விட்டதென்று அவநம்பிக்கைப்படவேண்டாம்.

ஒரு காரியத்துக்குக் குறிக்கப்பட்ட நேரத்தில், ஆஜராகவேண்டும்; ஐந்து நிமிஷம் தாமதஞ்செய்து, நேரந்தப்பி வந்ததினுல் அநேகருடைய செல்வம் தவறிப்போய்விட்டது.

வேலே செய்யவேண்டிய நேரத்தில் வேலே செய்யவும், ஓய்வு நேரத்தில் இளேப்பாறவும் வேண்டும்; எல்லாவற்றையும் தக்க நேரத்தில் செய்யவேண்டும்.

வியாபாரத்திலும், உத்தியோகத்திலும், எந்த அலுவலிலும் உண்மையாயிருக்கவேண்டும்.

ஆஸ்திக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும், யாவருக்கும் தக்க மரியாதை செய்வது ஒழுங்கு.



அநியாயத்தை விலக்கிவிடவும், நீதியானதைச் செய்யவும், எஜமான்களும், ஊழியர்களும் கடன்பட்டிருக்கிரூர்கள் என்பதை மறக்கவேண்டாம்.

ஒருவன் தான் கொடுத்த வாக்கை எழுதப்பட்ட பத்திரத்தைப்போலவே பிரமாணிக்கமாய் நிறைவேற்றவேண்டும்.

ஆஸ்திக்காரரை இச்சகம் பேசுவதும், ஏழைகளே நிந்திப்பதும், இவ்விரண்டும் நீசக்குணத்தின் அடையாளமென்று அறியவேண்டும். ஆஸ்திபாஸ்தியானது பாக்கியமாய் ஜீவிப்பதற்கு அவசரமென்று எண்ணிக்கொள்வது தப்பறை; பேர்போன மனிதர்கள் அநேகர் ஏழைகளாய் ஜீவித்து மரித்தார்கள் என்பதை மறக்கவேண்டாம்.

வல்லமையைப் பார்க்கிலும் நீதியானது அதிக மேன்மையுள்ளதென்பதை மறக்கவேண்டாம்.

வியாபாரத்திலும், உத்தியோகத்திலும், எந்தவேலேயிலும், பிறரை ஏமாற்றுவதும், கைலஞ்சம் வாங்குவதும், திருட்டுக்குச் சமானம் என்பதை மறக்கவேண்டாம்.

அக்கிரமம் செய்தால் தண்டனேக்குத் தப்பித்துக்கொள்ளலாம் என்று நினேக்காதே.

அநியாயமாய்ச் சம்பாதித்த பொருள் பலிக்காதென்றும், அது மரண சமயத்தில் தலேயணேயில் தங்கியிருக்கும் ஓர் பாம்பைப்போலாகும் என்றும் எண்ணிக்கொள்.

---

## திரு இருதயக் கீர்த்தனம்.

சிநேகத்தின் பலியாம் திரு இருதயமே!
இணேயிலா நித்ய மோக்ஷாநந்தமே!
இனிய ஆறுதல் நீ மானிடர்க்கென்றும்
மனிதர்க்கு நீதான் மாரு நம்பிக்கை.
சுத்த லீலீ உன்னிடம் மலரும்
பத்தினி கன்னிகள் உன்னுல் ஜொலிப்பார்
அத்தர் ரோஜாவும் சிவந்தொளி வீச
சத்திய வேத சாட்சிகள் ஒளிர்வார்.
தேனினும் இனிதே சேசு உன் இருதயம்
பாசமில்லாத தூயோர் நேசா
மாசில்லா மனத்தோர் உனேயே தேட
நீ சமஸ்தோரின் இருதய அரசே.

---

## What Missionaries are doing
### சத்திய வேத போதகர் செய்கிற வேலை.

இந்தியாவில் வேத போதகர் சத்திய வேதத்தை அபிவிர்த்தி செய்கிறதில்லை என்று சொல்லுகிறவர்களுக்கு ஒரு கபடமற்ற மறுமொழி.

**கத்தோலிக்கர்களுடைய தொகை.**

| வருஷம். | 1851 | 1856 | 1860 | 1870 | 1880 | 1887 | 1888 | 1895 | 1904 | 1912 | 1914 | 1921 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மேற்றிராசனம். புதுவை ... | 96,550 | 99,226 | 1,00,046 | 1,24,530 | 1,81,651 | 2,06,396 | 2,06,396 | 2,00,728 | 1,41,024 | 1,43,125 | 1,45,772 | 1,47,710 |
| மைசூர் .. | 19,000 | 17,110 | 17,227 | 25,000 | 26,800 | 29,028 | 29,028 | 38,100 | 45,450 | 50,603 | 51,136 | 55,155 |
| கோயமுத்தூர் .. | 20,000 | 17,700 | 17,000 | 18,000 | 24,027 | 24,027 | 28,040 | 31,307 | 36,700 | 38,900 | 39,178 | 44,014 |
| கும்பகோணம் .. | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | 87,742 | 95,778 | 98,608 | 1,02,416 |
| மொத்தம் ... | 1,35,550 | 1,34,036 | 1,34,273 | 1,67,530 | 2,32,478 | 2,59.451 | 2,63,464 | 2,70,135 | 3,10,916 | 3,28,406 | 3,34,694 | 3,49,285 |

1889-ஷு கும்பகோணம் மேற்றிராசனம், புதுவை அதி மேற்றிராசனத்திலிருந்து பிரிக்கப்பட்டது.



## Avoid Drink.
### "குடிக்காதே"

*முன் தொடர்ச்சி.*

8. போகும் வழி:—குடிக்கப் போகுமுன் தன் சுவாதீனப் புத்தியுடன் எவ்வளவோ மரியாதையாய் தன்னை ஒருவருக்கும் காட்டாமல், யோக்கியதையாய்ப் போவதற்கு வேண்டிய ஒழிமறைவான தடம் பார்த்துப் போகிறான்.

9. தங்குமிடம்:—அங்கு கடைக்குள் தங்குவதோ நிறை முக்காடு போட்டுக்கொண்டு, அசுத்தமான இடத்தில், இழிகுலத்தாரோடும், கெட்ட வியாதி, ரணஸ்தாகளோடும், சமமான ஆசனத்தில் அமர்ந்துகொள்ளுகிறான்.

10. வரும் விதம்:—குடித்துவிட்டு வரும்போது பப்ளிக் ரஸ்தாவில் போகிற வருகிற நாலுபேரும், கேவலப்படுத்தும் படியாய் அசங்கிதமான பேச்சுப் பாட்டு மூதளிய மதிப்பற்ற ஆடம்பரத்துடன் செல்லுகிறான்.

11. நடை:—(சர்வேயளப்பதுதான்)—குடித்து வரும்போது நடப்பதைப் பார்த்தாலோ சொல்லவேண்டியதில்லை; இந்த ரோட்டுக்கும், அந்த ரோட்டுக்கும் (போதை ஏற ஏற) கல்லின்மேலும், முள்ளின்மேலும், பள்ளத்திலும், மேட்டிலும், வழியில் வருவாரிவரொன்றறியாது ஜனங்கள்பேரிலும் ஆட்டத்துடன் விழுந்தெழுந்து சர்வேயளந்துகொண்டு போகிறான்.

12. கொலை:—சிலர் குடித்துவிட்டு வந்தவுடனே, தன் எதிராளியுடன் வம்புவளர்த்து, வாதுக்குநின்று, கண்டபடி பேசி, கத்தி, தடிகளுடன் சிலம்பமாடிக் கொலைசெய்துவிடுகிறான். (சிலர் தங்கள் பகையாளியை எதிர்த்துச் சண்டை போடவேணுமென்றே குடித்துவிட்டு வருகிறார்கள்.

ஆ! குடியே உன்னால் என்ன சுகம்.

இதுமட்டும் தானா? இன்னும் :—

ஆங்காரம், கோபம், மோகம், காய்மகாரம், சோம்பல் முதலிய தலையான பாவங்களுக்கும் பாத்தியஸ்தனாகிறான்.

ஒருசந்தி, சுத்தபோசனம், முதலிய பரிசுத்த நாட்களை விரோதிக்கிறான்.

குடிகாரனுடைய கோவில், கள்ளுக்கடை, பீர், சாராயக் கடைகள் தான்.

நல்ல புத்திமதி சொல்லவும், தெரியாதவர்களுக்குப் படிப்பிக்கவும், தப்பிப்போகிறவர்களை நியாயமாய்க் கண்டிக்கவும், கஸ்திப்படுகிறவர்களுக்குத் தேறுதல் சொல்லவும், நிந்தைகளைப் பொறுமையுடனே சகித்துக்கொள்ளவும், பொல்லாப்புகளைப் பொறுமையுடன் பொறுத்துக்கொள்ளவும், பக்தி முதலிய ஆத்தும சம்பந்தமான தர்மக் கிரிகைகளைச் செய்யவும், அவற்றைச் சரிவர நடத்தவும் குடிகாரன் சக்தியற்றவனாகிறான்.

D. P. A.

---

"The wise knows that he does not know;
the ignorant thinks he knows."

## Anniversary of the Catholic Club, Coimbatore.

## கோயமுத்தூர் கத்தோலிக் கிளப்பின் வருடாந்தரக் கொண்டாட்டம்.

(தொடர்ச்சி.)

"கத்தோலிக்கரின் முன்னேற்றம்." "முன்னேற்றம்" என்றால் அர்த்தமென்ன? கத்தோலிக்கராகிய நாம், நமது அரசாங்கத்தாரிடம் செல்வாக்குடையவர்களாய், (அதாவது நாம் சொல்வதை ஏற்றுக்கொண்டு அதின்படி செய்தல்.) இந்துக்கள், முஹம்மதியர், புரோட்டெஸ்டாண்டார் ஆகிய மற்றவர்களைப்போல கத்தோலிக்கராகிய நாமும் மேம்பாடடைதல்தான் "முன்னேற்றம்" என்று சொல்லப்படும்



அவ்வாறாயின், இம்முன்னேற்றத்தை நாம் கொண்டிருக்கிறோமா? இல்லை. வெகு வெகு சொற்பம், அதாவது, இல்லையென்றே சொல்லவேண்டியதான அவ்வளவு சொற்பம். எவ்வாறு நாம அதைக் கொண்டிருக்கிறதில்லை? நாம வசிக்கும் இவ்விந்து தேசத்தின் ஜனத்தொகை சற்றேறக் குறைய முப்பத்துமூன்று கோடி. இப்பெருந் தொகை கொண்ட மனிதர், இந்துக்கள், முஹம்மதியர், கத்தோலிக்கர், புரோட்டெஸ்டாண்டார் என்னும கிறீஸ்துவர்கள், ஆகிய மூன்று முக்கிய பிரிவினராயிருக்கிறார்கள். இம்மூவகுப்பாரில் கிறீஸ்துவர்களின் தொகை மற்ற இரு பிரிவினரின் தொகைக்கு எம்மட்டோ கீழ்த்தரமுடையது. அவர்களில் கத்தோலிக்கக் கிறீஸ்துவர்களாகிய நம்மவரின் தொகையை மற்றவர்களின மொத்தத் தொகையுடன் ஒப்பிட்டுப் பார்க்குங்கால், நம்மவரின் தொகை வெகு சொற்பமென்றே சொல்லவேண்டியதாயிருக்கிறது. அத்தொகையில், நமது தென்னாட்டின்கண் வசியாநிற்கும் கத்தோலிக்கரின் தொகையை மதிப்பிட்டுப் பார்க்குங்கால், இன்னும் அதிகமாய்க் குறையுமல்லவா? அங்ஙனமாயின், இவர்களில் உயர்தரப் படிப்பாளிகளின் தொகையைக் கவனித்துப் பார்க்குங்கால், ஐயோ! வெகு பரிதாபத்துக்குரிய விஷயமாய்க் காணப்படுகின்றது. எவ்வாறெனின், திருச்சினாப்பள்ளியின்கண் உள்ள அதிகீர்த்தி பெற்ற நமது அர்ச். சூசை முனீந்திரரின் கல்லூரியில் 1918—19-ம வருடத்தில் பிரசுரமான வருடாந்தரக் குறிப்பு (St. Joseph's College Annual Record 1918—19) என்னும் புத்தகத்தினின்று கணக்கெடுத்ததில் உயர்தரப் படிப்பாளிகளின்—அதாவது B. A., M. A., பரீட்சையிற் தேர்ந்தவர் தொகை சற்றேறக்குறைய 200 எனத் தெரியவருகிறது. இத்துடன் இதர பாரிய கல்லூரிகளிற் படித்துத் தேறியிருக்கக் கூடியவர்களின் தொகையும் சேர்த்து ஒருவாறு 250 பேர் என்று வைத்துக்கொள்ளலாம். இந்தியாவின் மொத்தத் தொகையில் நம்மவரின் தொகையை ஒப்பிடுங்கால், நம்மவரின் தொகை சொற்பமாய்க் காணப்படுமாயினும், அன்னோரின் தொகையுடன் உயர்தரப் படிப்பாளிகளின் தொகையை ஒப்பிடுங்கால, வெகு பரிதாபத்துக்குரிய விஷயமாய்க் காணப்படுகிறது. எத்தன்மையோவெனில், இத்தென்னிந்தியாவின் கத்தோலிக்குக் கிறீஸ்துவர்களின் தொகை ஏறக்குறைய 10 லக்ஷம் எனத் தெரியவருகிறது. இதில் உயர்தரப் படிப்பாளிகள் 250 என்றால், 4000 கிறீஸ்துவர்களில் ஒருவர்

உயர்தரப் படிப்பாளி எனும் விகிதம் ஏற்படுகிறது. இதை என்னென்று சொல்லலாம் என நீங்களே ஆலோசித்துக் கொள்ளுங்கள். இந்த 250 பேரை, இத்தென்னிந்தியாவிலுள்ள ஜில்லாக்களுக்கும், ஜில்லாவினின்று தாலூக்காக்களுக்கும், தாலூக்காவினின்று முக்கிய பட்டணங்களுக்கும் பிரித்தெடுக்குங்கால், ஒவ்வொரு பிரிவுக்கும் என்ன தொகை ஏற்படுகிறதென்று நன்கு புலப்படுமே. கனவான்களே, இது மிகவும் பரிதாபத்துக்குரிய விஷயமன்றோ? இவ்விரு நூற்றைம்பது உயர்தரப் படிப்பாளிகள் யாவருமே அரசாங்கத்தில் மேன்பதவியடைந்திருக்கின்றனரோவென யோசித்துப் பார்க்குங்கால், அதிலுங் குறைவு ஏற்படுகிறது. எவ்வாறெனின், என்னைப்போல் (நான் உயர்தரப் படிப்பாளியல்ல) உபாத்திமைத் தொழில் பூண்டவர் எத்தனை? கம்பெனிகளிலும் சங்கங்களிலும் நுழைந்திருப்பவர் எத்தனை? இன்னோரின் தொகையைக் கழித்துப் பார்க்கில், அரசாங்கத்தில் மேன்பதவி பூண்டிருப்பவரது தொகை இன்னுங் குறைய வேண்டியதல்லவோ?

அரசாங்கத்தில் மேன்பதவியென்றால் என்ன? மாதம் மாதம் ரூபாய் 50, 100 சம்பளம் வாங்கிக்கொண்டு, கிளார்க்குகள் என்றும், சப் இன்ஸ்பெக்டர், சப் ரிஜிஸ்தரார், எட் கிளார்க், சப் மாஜிஸ்டிரேட் என்னும இவைபோன்ற உத்தியோக நாமம் பூண்டவர்கள் அல்லவே. இவர்கள் யாவரும் அரசாங்கத்தில் பிரதம நிலையுடையவர்கள் என்று சொல்ல வேண்டியதே. சப் ஜட்ஜ், டிப்டி கலெக்டர், முன்சீப், டிஸ்டிரிக்ட் ரெஜிஸ்டரார் எனும் பதவி பூண்டவர்கள் மத்திப நிலைமையுடையவரெனச் சொல்லலாம். இவற்றைப் போன்ற நிலைமைகளைத் தவிர்த்து, கலெக்டர், ஜட்ஜ், டாக்டர், பாரிஸ்டர், இஞ்சினியர், டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல், இன்ஸ்பெக்டர ஜெனரல், போர்ட் மெம்பர், கவர்னரது ஆலோசனைச் சபை மெம்பர் என்னும் பதவியைக்கொண்டிருப்பவர்கள் அரசாங்கத்தில் மேன்பதவிகொண்டவர்களெனக் கூறலாம். அவ்வாறாயின், நம்மில் எத்தனைபேர் இவ்வித மேன்பதவி பூண்டிருக்கிறார்கள்? அத்தி பூத்ததுபோல், திசைக்கு ஒருவரைக் காணக்கூடியதாயிருக்கிறதேயொழிய மற்றப்படியன்று. நோக்கிப்பார்க்கின், கிழக்கில் ஒரு சாமிக்கண்ணுப்பிள்ளை, மேற்கில் ஒரு ஆரோக்கியசாமி முதலியார், வடக்கில் ஒரு மிஸ்டர் பின்டோ, தெற்கில் ஒரு மிஸ்டர் லோபோ என்



பதாக இங்கொருவர், அங்கொருவர் காணப்படுகிறதேயொழிய மற்றப்படியல்லவே. அதற்கு விரோதமாய், எங்கே பார்த்தாலும் பெரிய உத்தியோகங்களில் இராமசாமி ஐயர் என்ன, கிருஷ்ணசாமி ஐயங்கார் என்ன, கோபாலராவ் என்ன, என்று இப்படியாக வரவர இராமனும், கிருஷ்ணனும், கோபாலனுமாய் நிரம்புகிறார்களேயல்லாமல், அப்படிப்பட்ட பெரிய அலுவல்களிலெல்லாம், நமது சகோதரர்களான இராயப்ப பிள்ளை இல்லையே, யாக்கோபு முதலியாரைக் காணோமே, யோசேப்பு செட்டியார் எங்கே, கபிரியேல் நாடாரைக் கண்டதில்லையே. இவற்றையெல்லாம் கேட்ட நீங்கள், நம்மவர் முன்னேற்றம் அடைந்திருக்கின்றார் எனச்சொல்ல இப்போது துணிவுகொள்ளுவீர்களோ. ஆனதுபற்றி, நமது முன்னேற்றத்தின் ஸ்திதி எத்தன்மையதாயிருக்கிறதென நாம் செவ்வனே அறிந்துகொள்ளலாம். (இன்னும் வரும்.)

C. S. D.

---

## Give honour to whom honour is due.

### வணங்கத்தக்கவரை வணங்கு.

ஓர் ஊரில் புதிதாய் ஞானஸ்நானம் பெற்ற குடும்பம் ஒன்று ஐந்தாறு பிள்ளைகளுடன் கஷ்ட ஜீவனஞ்செய்து பிழைத்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தங்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி கூடியமட்டில் பக்தி விசுவாசமுடையவர்களாயிருந்தார்கள். அந்த ஊரில் புரோட்டெஸ்டாண்டர்களும் இருந்தார்கள். அவ்வூரில் அம்மதத்தைப்பற்றி வீடுவீடாய்ச் சென்று குடும்பங்களுக்குப் பதித மதத்தைப்பற்றி போதித்துக்கொண்டுவந்த ஜெனனா மிஷியொருத்தி ஷெ புதிதாய் ஞானஸ்நானம்பெற்ற கத்தோலிக்க குடும்பத்தாரிடம் அடிக்கடிசென்று, உரோமான் மதத்தில் என்ன உதவி கிடைக்கும்?

எங்கள் மதத்தில் சேர்ந்துகொண்டால், பிள்ளைகள் படித்து முன்னுக்கு வருவதற்கு வழிசெய்வார்கள், உங்களுக்கும் சாப்பாட்டுக்கு குறைவில்லை, நல்ல சம்பளம் கிடைக்கும், உங்களுக்கு ஏன் இந்தப்பாடு என்றும், வேதத்தைப்பற்றியும் பலவாறாகப்பேசி அவர்கள் புத்தியைக் கலைத்துக்கொண்டு வருவாள். இது இப்படியிருக்க, அந்த ஊரில் அர்ச். அந்தோனியார் கோவில் உற்சவம் சமீபித்து விட்டதால், ஷை ஊர் உபதேசியார் வரி வசூலுக்கு ஷை குடும்பத்தார் வீட்டுப் பக்கமாய்ப் போனார். போகும்போது, முன்சொன்ன ஜெனனா மிஸியானவள் அந்தக் குடும்பத்தாருக்குப் போதித்துக் கொண்டிருந்தாள். உபதேசியார் அதுகண்டு, யாரம்மா வீட்டிலே, அந்தோனியார் திருவிழா நெருங்கிவிட்டது, ஏதோ உங்களாற் கொடுக்கக்கூடுமானதைக் கொடுங்கள் என்றார். இதற்குள், ஜெனனா மிஸியானவள் அந்தோனியாவது கிந்தோனியாவது, இதுவுமன்றி, தேவமாதா முதலிய நீசமனிதர்களை அஞ்ஞானிகளைப்போல தெய்வமாகப் பாவிக்கிறீர்கள், அவர்களை வணங்குகிறீர்கள். அவர்களும் என்னைப்போலவே மனிதர்கள்தானே, நீங்கள் வணங்குவது சுத்தப்பிசகு. யேசு ஒருவரே இரட்சகர் என்றாள். அதற்கு உபதேசியார் மலர்ந்த முகத்துடன், தாயே ஜெனனா மிஸி, உன்னைப்போல பைபிள் வூமன் நான் அல்ல. ஆனால், என் புத்திக்கெட்டியதைச் சொல்லுகிறேன், அதைச் சற்றுக் கவனம் செய்யவேணுமம்மாவென்று, குளிர்ந்த வார்த்தையாய்ப் பேசினார். சரி, அப்படியானால், கோபமில்லை சொல்லும் பார்க்கலாம் என்றாள்.

அம்மா ஜெனனாமிஸி கோபிக்காமல் கவனித்துக் கேள் :— நீயும் உன் புருஷனும் கூடி ஓர் ஆண் குழந்தையைப் பெற்றீர்கள், அவனைக் கண்ணுக்குக் கண்ணாய் நேசித்து, நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக வளர்த்து, தக்க உபாத்தியாரிடம் கலைகளைக் கற்கச் செய்து, பிள்ளையாண்டான் பல பாஷைகளிலும், பற்பல வித்தைகளிலும் நன்றாய்ப் படித்துத் தேறி, B. A., M. A., முதலிய சாஸ்திரங்களில் மேன்மையான பட்டம்பெற்று, கடைசியாய் சீர்மைக்குப்போய் I. C. S. முதலிய அத்துக்கடந்த கித்தாப்புக்களைப்பெற்று, சீர்மையிற் பார்லிமெண்ட் சங்கத்திலும் காரியதரிசியாகி, ‘லார்டு’ என்னும் பதவிக்கு உயர்த்தப்பட்டு, முடிவில், நமது தேசத்தின் பிரதிநிதியாக, நமது மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தியால் அனுப்பப்பட்டார் என்றால், அதைக் கேட்கவும், அவ்விதம்



கௌரதைபெற்றுவரும் உன் மகனைப் பார்க்கவும் எவ்வளவு ஆவல்கொண்டிருப்பாய்; உன் மகன் சீர்மையில் இருக்குந்தனையும் உன் சிந்தையெல்லாம் உன் மகன் பேரிலேயே, அதனால் வாரம் வாரம் கடிதம் போடுவாய்; உன் மகனுக்கோ எந்தப்படிப்பு, எந்தக் கவலையிருந்தபோதிலும், அடிக்கடி தாயார் கடிதம் எப்போது வருமோவென்று, எதிர்பார்த்திருந்து, உன் கடிதம் கிடைத்தவுடனே பதில் எழுதிவிட்டு மறுவேலை பார்ப்பான். ஆகவே, தாயுடைய எண்ணம், மகன் பேரிலும், மகனுடைய நினைவு தாய்மேலும் என்றால், உங்களுக்குள் இருக்கும் பேரன்பின் மகத்துவத்தைப்பற்றி, யார்தான் குறைவு சொல்லமுடியும்? நோக்குங்கால், ஒருத்தரை விட்டொருத்தர் பிரியவுமாட்டீர்கள்; நீ சொன்னபடியெல்லாம் மகன் நடந்தே தீருவார்.

இப்படியிருக்க, உனது குமாரன் இராஜப்பிரதிநிதி (Governor) உத்தியோகம் பெற்று, மதுராஸ் சோருக்கு நியமிக்கப்பட்டு, மதுராஸில் வந்திறங்கினார். எத்தனையோ உத்தியோகஸ்தர்களும், இராஜாக்களும், தனவந்தர்களும் அவரை மரியாதை செய்து வரவேற்றார்கள் என்றால், உனக்கு எவ்வளவு சந்தோஷமும், ஆனந்தமுமாயிருக்கும்; அவருக்கு பாரி உத்தியோகமும், அதிகமான சம்பளமும், அரண்மனையும், ஆசாரங்களும் இருந்தபோதிலும், உன்னை மறந்துபோனாரா? உனக்குத்தான் அதிக மரியாதை செய்வார்.

இப்படியிருக்க, ஓர் பெரிய இராஜாவின் வீட்டில் கலியாணம் ஒன்று நடந்தது; உன் மகன் கவர்னர் உத்தியோகத்திலிருந்ததினால், ஷை ராஜா உனது மகனுக்கு கலியாண அழைப்புச் சீட்டு அனுப்பியிருந்தார்; உனக்கு அழைப்புச் சீட்டு வராவிட்டாலும், உன் மகன் உன்மேல் வைத்த பட்சத்தினால், அம்மா நீயும் வா, போகலாம், ஸ்பெஷல் வண்டி தயாராயிருக்கிறது என்று கூப்பிட்டான். நீயும், உன் மகனும் இராஜா வீட்டுக் கலியாணத்துக்கு ஸ்பெஷல் வண்டி ஏறி, ஷை இராஜாவின் ஊர் ஸ்டேஷனில் போய்ச் சேர்ந்தீர்கள். உன் மகனை அழைத்துப்போவதற்கு, இராஜ பரிவாரங்களும், நேர்த்தியான மோட்டார்கார்களும் வந்திருந்தன. அந்த இடத்தில் யாரும், உன்னை கவர்னருடைய தாயார் என்று நினைக்கவுமில்லை, உனக்கு மரியாதை செய்யவுமில்லை. ஆயினும் நீ உன் மகன் கூடவே போய் மோட்டார்காரில் ஏறிக்கொண்டாய்; கார்

இராஜ அரண்மனை சேர்ந்தவுடனே இராஜாவும், பிரதானிகளும் உன் மகனுக்கு நல்வரவு கொடுத்து அழைத்துக்கொண்டு போகிறார்கள்; அந்த இடத்திலும் உன்னைச் சட்டை பண்ணினார் ஒருத்தருமில்லை. மகனும் நீ பின்னால் வருகிறாய் என்று தான் எண்ணிப்போகிறார். அச்சமயத்தில் உன்னை ஒருத்தரும் விரும்பாததினால், விசனத்துடன் காரில் உட்கார்ந்து கொண்டிருந்தாய்; டிரைவர் உன்னைப்பார்த்து, நீயாரடி உட்கார்ந்திருப்பவள், கீழே இறங்கு என்று, மயிரைப்பிடித்து இழுத்து உன்னைக் கீழேதள்ளி, பீத்த முறத்தாலும், சிவக்கட்டையாலும் செருப்பினாலும் அடிக்கும்போது, நீ உதை பொறுக்கமுடியாமல் அலறுகிற சத்தத்தைக் கேட்டுத் திரும்பிப்பார்த்த உன் மகன், கழுதைமுண்டையை இன்னும் இரண்டடி செருப்பினாலடி என்பானா? நீ தாயல்லவென்று, உன்னைத் தூஷிப்பானா? என்ன செய்வான், நீயே சொல்; அதுபோலவே கடவுளுடைய தாயாரை நிந்தையவமானமாய்ப் பேசும் பதிதர்களை, அவர்கள் எத்தனைதரந்தான் ஏசு, ஏசு என்று உரக்கக் கூப்பிட்டபோதிலும், அந்த ஏசு அவர்களைச் சும்மாவிடப் போகிறதில்லை. இதை நன்றாயறி. மற்ற அர்ச்சியசிஷ்டவர்களைப்பற்றி தூஷிப்பவர்களுக்கும் அதுதான் கெதி; இனி நீ இவ்விதம் பேசி வருவாயானால், மோட்டார் டிரைவர் செய்த மரியாதை உனக்கு இப்போதே கிடைக்கும், எழுந்துபோ என்றார். அதுமுதல் அவளங்கு வருவதில்லை. புது குடும்பமும் விசுவாசத்தில் நிலைக்கொண்டது. S. M. S. G.

---

## Here and There.

## நானா சங்கதிகள்.

**The New Superior of the Foreign Missions Paris :-** கடந்த மார்ச்சு மாதம் கனம்பொருந்திய J. B. தெ கெபிரியான் (de Guebriant) ஆண்டவர் அன்னியதேச போதகர் சபையின்



சிரேஷ்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் பிராஞ்சுதேசத்தில் பாரிஸ் பட்டணத்தில் பிரபு கோத்திரத்தில் 1860-௵த்தில் பிறந்தார். பாரிஸ் பட்டணத்திலுள்ள 'ஸ்தனிஸ்லாஸ்' என்னும் வித்தியாசாலையிலும், சென்ற் சுல்பிஸ் என்னும் குருமடத்திலும், படித்தபிறகு, அந்நியதேச போதகர் சபையின் குருமடத்தில் 1883-ம்௵ சேர்ந்து, 1885-ம்௵ குருப்பட்டம் பெற்று, சீன தேசத்துக்கு அனுப்பப்பட்டார். "தென் கஷு-இயென்" என்னும் நாட்டில், சிலகாலம் சத்திய வேதத்தைப் போதித்து உழைத்தபிறகு, 1911-௵ "இயென்ஷாங்" என்னும் கத்தோலிக்கு மிஷனுக்கு, விக்கர் அப்போஸ்தொலிக்கராக நியமிக்கப்பட்டு, ஆண்டவர் பட்டம் பெற்றார். 1913-ம்௵ மகிமைப்படையின் பிரபு (Knight of the Legion of Honour) என்னும் பட்டம் பிராஞ்சு சர்க்காரால் அவருக்கு அளிக்கப்பட்டது. 1917-ம்௵ காண்டன் (Canton) கத்தோலிக்க மிஷனின் விக்கர் அப்போஸ்தொலிக்கராக நியமனம் பெற்றார். 1919-ம்௵ சீன இராச்சியத்திலுள்ள கத்தோலிக்கு மிஷன்களையும் அதற்கு அடுத்த சிபேரியா தேசத்திலுள்ள மிஷன்களையும், தரிசித்து விசாரிக்கும்படியாக அர்ச். பாப்பானவர் அவருக்கு விசேஷ அதிகாரத்தைக் கொடுத்து அனுப்பினார். கனம்பொருந்திய தெ கெபிரியான் ஆண்டவர் அர்ச். பாப்பானவருக்கும், மற்ற யாவருக்கும் மிகவும் திருப்தியாக அந்த மேலான உத்தியோகத்தை நிறைவேற்றி வந்தார்; அதைப்பற்றி மிக மேன்மைபொருந்திய வன் ரொசம் என்னும் கர்தினால் அவர்கள் கனம்பொருந்திய தெ கெபிரியான் ஆண்டவரை மெச்சி, அவர் நடத்திவந்த ஞான விசாரணையினால் திருச்சபைக்கு உண்டான உபகாரம், எவ்வளவு மேன்மையபிவிர்த்தியடைந்திருக்கின்றதென்பதை சீன தேசத்தில் சத்திய வேதத்துக்கு, புதிய அபிவிர்த்தியின் ஆரம்பமாயிருந்து, சொல்லிலடங்காத பிரயோஜனம் உண்டாகும் என்று, அவருக்கு அனுப்பிய ஓர் நிருபத்தில் எழுதியிருக்கிறார்.

இவ்வளவு மகிமைபெற்ற ஆண்டவர் அந்நிய தேசத்துப் போதகர் சபையின் சிரேஷ்டராக நியமிக்கப்பட்டதினால், அந்தச் சபை பெரும் பாக்கியம்பெற்றதாகும.

**Coimbatore:**—கடந்த மே-௴ 8-உ கோயமுத்தூர் மேற்றிராசனக் கோவில் பாதுகாவலரான அர்ச். மிக்கேல் அதிதூதர் திருவிழா வெகு சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது. அன்று

காலை 8 மணிக்கு சங். J. M. கோஷே (Gaucher) சுவாமியார், தியாக்கோன், சப் தியாக்கோன்மாருடன் பெரிய பாட்டுப் பூசை செய்தார். அதன்பிறகு சங். மிக்கேல்நாதர் சுவாமியார் மிகுந்த வாய்ச்சாலகமாய்ப் பிரசங்கம் செய்தார். சாயங்காலம் $6\frac{1}{2}$ மணிக்கு மிஷன் கம்பவுண்டுக்குள் தேர் சுற்றுப்பிரகாரம் நடைபெற்றது. கத்தோலிக் கிளப் மெம்பர்கள் தேவமாதா சப்பரத்தையும், கத்தோலிக் யூனியன் மெம்பர்கள் அர்ச். சூசையப்பர் சப்பரத்தையும், அர்ச். மிக்கேல் மடத்துப்பிள்ளைகள் அர்ச். மிக்கேல் சம்மனசு சப்பரத்தையும் வெகு அழகாய்ச் சிங்காரித்து ஒன்றன்பின் ஒன்று தொடர்ந்து செல்ல, கத்தோலிக் யூனியன் பாண்டுவாத்தியம் இன்பமாய் வாசிக்க, கிறீஸ்துவர்கள் பக்தியுடன் ஜெபமாலை ஜெபித்துவர, பாட்டுக்காரர் செவிக்கினிமையான கீர்த்தனைகளைப்பாட, வெகு சிறப்பாய்த் தேர் சுற்றுப்பிரகாரம் நடைபெற்றது. அது முடிந்த பிறகு தேவநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது. அதன் பின் அத்திருவிழாவின் மகிமைக் கொண்டாட்டத்திற்காக வாணவேடிக்கைகள் காட்டப்பட்டது. அன்று, எப்போதும் போல அர்ச். மிக்கேல் அதிதூதர் அகங்காரங்கொண்ட பசாசைக் காலால் நசுக்கி ஜெயங்கொண்டார் என்பது உறுதி.

The finger of God :—சில நாட்களுக்குமுன் இத்தாலிய பத்திரிகைகளில் பின்வரும் செய்தி எழுதப்பட்டிருந்தது: அதாவது: 'ப்ளோரன்ஸ் நாட்டில்' ஜியகோமெல்லி என்னும் வாலிபன் ஒருநாள் ஒரு சிநேகிதனோடு உலாத்தப்போனான். போகும் வழியில் ஒரு வீட்டுச் சுவற்றில் தேவமாதா சுரூபம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அதைக்கண்டு அவன் சிநேகிதன் தன் தொப்பியைக் கழட்டி பக்தியுடனே வணக்கம் செய்தான். ஜியகொமெல்லி என்பவனோ பரிகாசம் செய்ததுமல்லாமல், தான் கூட்டிவந்த நாய்க்குட்டியைப் பிடித்து, அது தன் மூக்கினால் சுரூபத்தைத் தடவும்படிச் செய்தான். அந்தத் துஷ்டன் அப்படிச் செய்தவுடனே, பேச்சில்லாமலும், கைகால் அசையாமலும், மரக்கட்டையைப்போல் அதே இடத்தில் மூளைப்பாய் நின்றான். அவ்வழியாய் வந்த ஜனங்களிற் சிலர், ஒன்றும் செய்யமுடியாமல், அவனை வீட்டுக்குத் தூக்கிக்கொண்டு போனார்கள். போகிதிபங்கிலிய என்னும் டாக்டரைக் கூப்பிட்டு மருந்து கொடுக்க, 2, 3 மணி நேரத்திற்குப் பிறகு, அவனுடைய கைகால் அசைவுபெற்றது. 'ஆனால் என்ன அதிசயம்! அந்த நிர்ப்பாக்கிய துஷ்டனை ஜியகொமெல்லி என்பவன், திடீரென ஒரு நாயைப்போலவே, பயங்கரமான விதமாய் குலைக்க ஆரம்பித்தான். இவ்விதமாகவே இரவும், பகலும் ஓயாமற் குலைத்துக்கொண்டிருப்பதை, அநேகர் வந்து பார்த்து, அது தேவ கோபாக்கினை என்று தெரிந்துகொண்டார்கள்.



War indemnity :—நேச கட்சியார் ஒற்றுமையாய்ச் சேர்ந்து செய்த உறுதியான தீர்மானங்களுக்கு, ஜெர்மானியர் மே-மீ 11-உ கடைசியாய் உட்பட்டு, அந்தந்தத் தேசத்துக்குத் தாங்கள் வருவித்த நஷ்டத்துக்குப் பரிகாரமாக, உள்ள கடனை ஒப்புக்கொண்டு சம்மதித்துவிட்டார்கள். இனி யாதொரு கபடு சூதில்லாமல் அதைச் செலுத்துவார்களோ வென்று எதிர்பார்க்கப்படுகிறது.

Piliankulam :—பிலியகுளம் அர்ச். பதுவா அந்தோனியார் திருவிழா அறிக்கை:—1921-ம்-ௗ ஜூன் மாதம் 12-ம் தேதி ஞாயிற்றுக்கிழமைக் காலையில் திவ்ய பலிபூசைக்குப் பின்பு 9-மணிக்கு அர்ச். அந்தோனியார் திருவிழாக் கொடி, மந்திரித்து ஏற்றப்படும். 17-ம்உ வெள்ளி, 18-ம்உ சனிக்கிழமைகளில் காலையில் 6 மணிக்குத் திவ்ய பூசையும், சாயந்தரம் 7 மணிக்கு கோவிலைச்சுற்றி அர்ச். அந்தோனியார் சப்பரம் எழுந்தேற்றமும், 19-ம்உக்குச் சரியான தமிழ் துன்மதி வருஷம் ஆனி-மீ 6-உ ஞாயிற்றுக்கிழமை அர்ச். பதுவா அந்தோனியார் திருவிழா அன்று காலையில் பூசையும், 8-மணிக்குப் பாட்டுப்பூசையும், சாயந்தரம் 5 மணிக்கு ஜெபமாலையும், அதன்பின் சேசுவின் திரு இருதய வணக்கமாதமும், திவ்யநற்கருணை ஆசீர்வாதமும், இரவு 8 மணிக்கு அர்ச் அந்தோனியார் பெரிய சப்பரம், சிறப்புடன் ஊர் சுற்றுப்பிரகாரமும் நடைபெறும். வேண்டுதல் சப்பரம் சுற்றுப்பிரகாரத்திற்கு வழக்கம்போல் $2\frac{1}{2}$ ரூபாய் வாங்கப்படமாட்டாது. மேற்றிராசன உத்தரவுப்படிக்கு, ஒரு சுற்றுக்கு ரூபாய் 4 வீதம் கட்டவேண்டும். அர்ச். அந்தோனியார் தேவாலயத்திற்கு தாங்கள் கேட்ட வேண்டுதல்களால், வரும் மன்றுட்டின் பலனை அடையத் திருயாத்திரிகளாக வரும் கிறீஸ்துவ நேயர்களுக்கு, தங்க வசதியான இடமும், தண்ணீர் சௌக்கியமும் கொடுக்கப்படும்.

இப்படிக்கு,

பங்கு விசாரணைக் குரு, G. Boulanger.

Municipal Council:—கோயமுத்தூர் முனிஸிபல் சங்கத்தில், அர்ச். மிக்கேல் ஹைஸ்கூல் உபாத்தியாயராகிய மிஸ்டர் A. பெரியநாயக முதலியார் அவர்கள் B. A., L. T. சர்க்காரால், கவுன்ஸலராக நியமிக்கப்பட்டிருப்பதினால் சந்தோஷிக்கிறோம்.

Progress of the church:—நடந்த 1920-ம் வருஷத்தில் இங்கிலாந்து தேசத்தில் 10592 பதிதர்கள் மனந்திரும்பித் திருச்சபையிற் சேர்ந்தார்கள். இப்போது இங்கிலாந்து தேசத்தில் 24,61,475 கத்தோலிக்கர்கள் இருக்கிறார்கள்.

# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

Vol. VII. July 1921. No. 7.

புத்தகம் VII.] FIDES AC ROBUR. [நம்பர் 7.

**"By their fruits you shall know them."**
**அவர்களுடைய கனிகளைக்கொண்டே அவர்களை அறிவீர்கள்.**

ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு உள்ளத்திலே பறிக்கிற ஓநாய்களாய் உங்களிடத்தில் வருகிற கள்ளத் தீர்க்கதரிசிகள்மட்டில் எச்சரிக்கையாயிருங்கள்; அவர்களுடைய கனிகளைக்கொண்டே அவர்களை அறிவீர்கள். முட்செடிகளில் திராட்சப் பழங்களையாவது முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையாவது பறிப்பாருண்டோ? அவ்வாறே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும். கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது. கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது. நற்கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்.

ஆதலால் அவர்களுடைய கனிகளைக்கொண்டே அவர்களை அறிவீர்கள். என்னை நோக்கி ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லுகிறவர்கள் எல்லோரும் மோட்ச இராட்சியத்

திற்குள் பிரவேசிப்பதில்லை. ஆனால் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுகிறவனே மோட்ச இராச்சியத்தில் பிரவேசிப்பான். (மத்தேயு. 7. 15-21.)

---

## Money *vs.* Brain.

## பணத்தினால் புத்தி கெடும்.

முத்துசாமி, உபாத்தியாயராகிய சத்தியநாதனுக்கு எழுதிய கடிதமாவது :—

புஷ்பபுரி.
2—6—21.

பிரிய சிநேகிதா,

நான் கருப்புப்பலகையைத் தள்ளிவிட்டு, மோட்டார் காரில் ஏறிவிட்டேன், என்கிற சமாச்சாரத்தை, நீ கேள்விப்படும்போது, ஒரு சமயம் ஆச்சரியப்படுவாய். ஆமாம், உபாத்தியாயர் உத்தியோகத்தை விட்டுப்போட்டு, மோட்டார் டிரைவர் வேலையை இப்போது செய்துவருகிறேன். நான் 4-வது பாரம் படித்து, ட்ரெய்னிங் ஸ்கூலில் தேர்ந்து, கடந்த 5 வருஷகாலமாக, 20 ரூபாய் சம்பளத்துக்காக உபாத்தியாயர் உத்தியோகம் செய்துவந்தேன் என்பது, உனக்குத் தெரிந்த விஷயம்; என் ஸ்கூல் மானேஜருக்கும், இனிஸ்பெக்டர் அவர்களுக்கும் கூடியமட்டும் திருப்திகரமாகவே அலுவல் பார்த்து வந்தேன். பள்ளிக்கூடத்தில் அநேக மாணாக்கர்களைச் சேர்த்துக்கொண்டு, ரெஜிஸ்தர்களைக் கிரமமாய் வைத்து, பாடக் குறிப்புகளைச் சரிவர எழுதி, தினந்தோறும், 5-மணி நேரம் பாடங்களை நடத்தி, என் கடமைகளைச் சரிவர நிறைவேற்றினேன். ஆனால், இந்தப் பஞ்சகாலத்தில், 20 ரூபாய் சம்பளம் வாங்கி எப்படிப் பிழைக்கமுடியும். என் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு மோட்டார் டிரைவர் இருந்தான். அவன் படிப்பில்லாதவனானாலும், 45 ரூபாய் சம்பளம் வாங்குகிறான். அவன் நோவாளி. அடிக்கடி வியாதியாயிருந்ததினால், சமயாசமயங்களில் தான் வேலைசெய்யும் இடத்துக்குப் போக அவனால்



முடியவில்லை. ஆகையால், அவனுடைய எஜமானுக்கு வெகு தொந்தரவுகள் நேரிட்டது. எஜமான் அவனை வேலையிலிருந்து தள்ளிப்போட யோசனை செய்ததாக நான் கேள்விப்பட்டேன். அந்த வேலையில் நான் சேர்ந்துகொள்ளலாமென்று, ஆசைப்பட்டு, உபாத்தியாயர் உத்தியோகத்தை இராஜினாமா கொடுத்துவிட்டேன். ஒரு கைத்தொழிற்சாலையிற் போய்ச் சேர்ந்து, டிரைவர் வேலையைக் கற்றுக்கொள்ள, 30 ரூபாய் கொடுத்து, ஒரு மாதத்திற்குள்ளாக, பிட்டிங் வேலையும், டிரைவிங் வேலையும் பழகிக்கொண்டு, பரீட்சையிலும் தேர்ந்து, டிரைவிங் செர்ட்டிபிக்கேட்(லைசென்ஸ்)பெற்றுக்கொண்டேன். என் வீட்டுப் பக்கத்திலிருக்கும் டிரைவர் முழு அசௌக்கியமாய் விழுந்ததினால் வேலையினின்று நின்றுபோனான். நான் அவனுடைய எஜமானனிடம் போய், என் செர்ட்டிபிக்கேட் எல்லாம் காண்பித்து வேலை கேட்டுக்கொண்டதால், எஜமான் திருப்தியடைந்து, 45 ரூபாய் சம்பளம் கொடுக்கச் சம்மதித்து, வேலையும் கொடுத்தார். இவ்விதமாகத்தான் நான் மோட்டார் டிரைவரானது. இப்போது சுகமாக இருக்கிறது. துரை அடிக்கடி, ஊத்தகமண்டு, குன்னூர், ஈரோடு, மதராஸ் முதலிய ஊர்களுக்கு ஸர்க்யூட்டு போகிறார். நானேதான் கார் ஓட்டிக்கொண்டு போகிறேன். வாரத்தில் 2 அல்லது 3 நாள் காரைச் சுத்தம்பண்ணவேண்டியதே தவிர வேறே வேலையில்லை. நல்ல சம்பளந்தான் கிடைக்கிறது. வேலையும் கஷ்டமில்லை. இந்தச் சமாச்சாரத்தைத்தான் உனக்குத் தெரிவிக்க இக்கடிதம் எழுதினேன்.

நான் க்ஷேமமாயிருக்கிறேன். உன் க்ஷேமத்தை அறிய ஆசைப்படுகிறேன்.

இப்படிக்கு,
பிரிய நேசன், முத்துசாமி.

சத்தியநாதன் முத்துசாமிக்கு எழுதிய மறுமொழியாவது :—

தர்மபுரம்.
6—6—21.

பிரிய சிநேகிதா,

நீ எனக்கு எழுதிய கடிதத்தைப் பார்த்தவுடனே, எனக்கு மிகுந்த ஆச்சரியமும், விசனமுமுண்டாய்விட்டது. நான் உன்பேரில் வெகு பரிதாபப்படுகிறேன். மோட்டார் டிரைவர்

வேலைக்காக, கருப்புப்பலகையை விட்டுவிட்டதாக எழுதுகிறாய்; பணத்துக்கு வேண்டி, உன் மூளையை விற்றுவிட்டது போலாச்சுதே. மேலான உத்தியோகமாகிய, உபாத்தியாயர் உத்தியோகத்தை விட்டுவிட்டு, தாழ்ந்த வேலையாகிய டிரைவர் வேலையைத் தேடிப்பிடித்தாய். இது பரிதாபமல்லவோ. நீ மகா கோழைத்தன்மையுடையவன். சூரியன் எப்படி பூமிக்குப் பிரகாசமும், உஷ்ணமும் கொடுக்கிறதோ, அவ்விதமாகவே, கல்வியானது மனிதர்களுக்கு பிரகாசமும், ஜீவியமும் போலிருக்கிறது. கல்வியானது மனிதனுடைய மகிமை, அழகும், மேன்மையும் என்னத்தகும்.

பள்ளிக்கூட சிறுவர்களுக்கு படிப்பு, மரியாதை, நல்லொழுக்க முறை முதலிய நற்குணங்களைக் கற்பிப்பது உபாத்தியாயருடைய எவ்வளவோ மேன்மையான அலுவல்; உபாத்தியாயர் குருவைப்போலிருக்கிறான். உபாத்தியாயனென்று ஒருவன் ஏற்பட்டிராவிட்டால், ஒருவரும் கல்வி கற்றிரார்கள். ஒருவருக்கும் எவ்வித மேன்மையான உத்தியோகமும் கிடைத்திருக்கமாட்டாது. சிறந்த கவிவாணர்களும், பேர்போன சாஸ்திரிகளும், உபாத்தியாயராகிய குருவைக்கண்டு, வணங்கிக் கேட்டுப் படித்துத்தான் மேன்பதவியடைந்தார்கள் என்பதறிவோம். எல்லாரும் உபாத்தியாயர்களையே மதிக்கிறார்கள். பணத்தினால் அல்ல, ஆனால் மரியாதையினாலும், சுய பரித்தியாகத்தாலும் மனிதன் கனம்பெற்றவனாகிறான். நீ பண ஆசையினால், இப்பேர்ப்பட்ட மகிமைகளையெல்லாம் மறுதலித்துவிட்டு, கொழுப்பு, எண்ணெய் பூசுகிற வேலையிற் சேர்ந்துகொண்டாய். நீ உபாத்தியாயர் உத்தியோகம் செய்யும்போது, நீ பொது நன்மையை நாடி வேலை செய்தாய்; ஆனால் இப்போது, உன் சுய நன்மைக்காக உழைக்கிறாய். இது எவ்வளவு நீசத்தனம். நீ பணத்துக்கே நீச அடிமையாகிவிட்டாய். எல்லாரும் உன்னைப்போலவே செய்வார்களானால், கல்வியின் மகத்துவம் எப்படி ஓங்கி விர்த்திக்கு வரும்? இப்பூலோகத்திலே எவ்விதமாய் நட்சத்திரங்களைப்போல் பிரகாசிக்கும்? இலௌகீக சாஸ்திரமும், வேத சாஸ்திரமும், மற்றும் சகல சாஸ்திரங்களும், இவை யாவும் என்னமாய்ப் போகும். ஆகையால, நீ கொழுப்பு வேலையைக் கருதி, உபாத்தியாயரென்னும் மேலான உத்தியொகத்தை விட்டுவிட்டது மகாப் பிசகு; முப்பது வெள்ளிக்காசைக் கருதி, யூதாஸ் ஆண்டவரைக் காட்டிக்கொடுத்ததுபோல, நீயும் 45 ரூபாயைக் கருதி



உன் உபாத்திமைத் தொழிலை வெறுத்துவிட்டாய். இப்படிச் செய்தது மகா அக்கிரமம்.

இப்போது டிரைவர் வேலை செய்கிறதினால், உனக்கு வெகு இலாபம என்று நினைக்கிறாய். அது, உனக்கு வெகு நஷ்டம என்று நான் உறுதியாய்ச் சொல்லுகிறேன். நன்றாய் நினை. "உலகத்தையெல்லாம சம்பாதித்தபோதிலும, உனக்கு இலாபம் என்ன." பண ஆசையை வெறுத்துத் தள்ளவும், மோட்சராச்சியத்தைத் தேடியடையவும் முகிகிய சாதனமாகிய கல்விதான் உதவுகின்றதென்று தெரிந்துகொள்ளக்கடவாய். ஓர் கவிவாணர் சொல்வது: "கற்றோர்க்குக் கல்வி நலனே கலன்"—இவ்வாக்கியத்தை மறக்கவேண்டாம்.

இப்படிக்கு,

உன்பேரில் பரிதாபப்படுகிற உன் சிநேகிதன்,

சத்தியநாதன்.

---

## Examination of Conscience of A Father.

## ஓர் தகப்பன் செய்த ஆத்தும சோதனை.

பிள்ளைகளுடைய படிப்பு:—கத்தோலிக் பள்ளிக்கூடத்துக்கு என் பிள்ளைகளை அனுப்பிவைப்பது எனது கடமை. இதர மதத்துப் பள்ளிக்கூடங்களுக்கு அவர்களை அனுப்பக்கூடாதென்று, திருச்சபை கற்பிப்பது நியாயந்தான். என் பிள்ளைகள் கத்தோலிக் பள்ளிக்கூடத்தில் படித்தாலும், அவர்கள் நன்றாய்ப் படிக்கிறார்களா இல்லையாவென்று நான் விசாரிக்கிறேனா? அவர்கள் தினந்தோறும் பள்ளிக்கூடத்துக்கு கிரமமாய்ப் போகிறார்களோ, இல்லையோ? அவர்கள் இங்கும் அங்கும் திரிந்து, விளையாடாமல், தக்க நேரத்தில் ஆஜராகிறார்களா? அல்லது, அவர்கள் தங்கள் இஷ்டப்படிக்குச் சரியான முகாந்தரமில்லாமல், வீட்டிலே நின்றுவிடுகிறார்களோ? நான் இவற்றையெல்லாம் விசாரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் அவர்கள் பள்ளிக்கூடத்துக்குப் போகும் போதும், பள்ளிக்கூடம்விட்டுத் திரும்ப வீட்டுக்கு வரும் போதும், எப்பேர்ப்பட்ட பிள்ளைகளோடு, சேர்ந்து வருகிறார்கள் என்றும், விளையாடுகிறார்களென்றும் விசாரிக்கவேண்டும.

அவர்கள் படிப்பில் தேறுகிறார்களோ, இல்லையோ வென்று, நான் அடிக்கடி உபாத்தியாயரிடம் கேட்கவேணும்; உபாத்தியாயர் தண்டித்தார், அடித்தார் என்று, என் பிள்ளைகள், என்னிடம் சொல்லும்போது, நான் இவர்களுடைய பேச்சை நம்பி, உபாத்தியாயர்பேரில் கோபங்கொள்ளப் படாது. என் பிள்ளைகள் குற்றஞ்செய்தால் அவர்களைத் தண்டித்துத் திருத்தவேண்டியதுதான் முறை.

ஞானோபதேசம்:—இதுவே மேலான படிப்பென்று, நான் உணர்ந்து எண்ணிக்கொள்ளவேணும்; என் பிள்ளைகள் ஞானோபதேசத்தை நன்றாய்ப் படித்து வருகிறார்களோ இல்லையோவென்று அறிய நான் பங்கு சுவாமியாரிடம் கேட்டு விசாரிக்கவேணும். ஞாயிற்றுக்கிழமை குருவானவர் செய்கிற பிரசங்கத்தைக் கவனித்துக் கேட்கிறார்களோ? குருவானவர் பிரசங்கத்தில் விபரிக்கிற முக்கிய பொருட்கள் இன்னதென்று, நான் என் பிள்ளைகளைக் கேட்பேன்? நானும் அவர்களுக்கு நன்மாதிரிகையாக பிரசங்கம் நடக்கும்போது, சில புத்தியில்லாத கிறிஸ்துவர்களைப்போலே செய்யாமலும், கோவிலை விட்டுப் போகாமலும், பிரசங்கத்தைக் கவனித்துக் கேட்பேன். என் பிள்ளைகள் புத்தி விபரம் அடைந்தபின்பு, அவர்கள் கூடிய சீக்கிரம், பாவசங்கீர்த்தனம் செய்யவும், புது நன்மை வாங்கவும் முஸ்திப்பு செய்திருக்கிறேனோ?

நல்லொழுக்கம்:—இரவில் குடும்ப ஜெபத்தில், பிள்ளைகள் எல்லாரும், ஆஜராயிருக்கிறார்களோ? ஞாயிற்றுக் கிழமைகளிலும், கடன் திருநாட்களிலும், அவர்கள் கோவிலுக்குப்போய், பக்தி வணக்கத்துடன் முழுப் பூசை காண்கிறார்களா? சிறு பிள்ளைகள் கோவிலிலிருக்கும்போது, இங்கும், அங்கும், பராக்காய்ப் பார்த்து, ஓடியாடி, பேசி விளையாடுகிறதில்லையோ? புது நன்மை வாங்கின என் பிள்ளைகள் அடிக்கடி பாவசங்கீர்த்தனம் பண்ணி, திவ்ய நன்மை உட்கொள்ளுகிறார்களோ? நானும் இது விஷயத்தில் எப்போதும் அவர்களுக்கு நன்மாதிரிகை காண்பிக்கிறேனோ?



வீட்டிலே எப்போதாவது தகாத வார்த்தைகளைக் கேட்கிறதில்லையோ? பேசுகிறதில்லையோ? என் பிள்ளைகள் கெட்ட பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடாதபடிக்கு நான் கவனிக்கிறேனோ? வேதத்துக்கு விரோதமாய், அல்லது குருக்களுக்கு விரோதமாய், வீட்டிலே யாதொரு பேச்சு, பரிகாசம், உதாசனம் யாராகிலும் சொல்லாதபடிக்கு நான் கவனிக்கவேணும். பிள்ளைகள் பொய், திருட்டு முதலிய துர்க்குணங்களில் பழகுகிறதில்லையோ? வேறே ஏதாகிலும் துர் வழக்கம் அடைகிறதில்லையோ? அவர்கள் குற்றம் செய்யும்போது, நான் அவர்களைத் தக்கபடி தண்டிக்கிறேனோ? என் பிள்ளைகளைப் புண்ணிய வழியில் நடப்பிக்கக் கடவுள் அவர்களை எனக்கு ஒப்புவித்திருக்கிறார். இது விஷயத்தில் நான் சுவாமிக்குக் கண்டிப்பான கணக்கு ஒப்பிக்கவேண்டியதாயிருக்கும். ஆகையால் சுவாமி உதவியினால், நான் என் பிள்ளைகள்மட்டில், சுமந்திருக்கிற கடமைகளை, இனிமேல் சரிவர நிறைவேற்றும்படி உறுதியான பிரதிக்கினை பண்ணுகிறேன். (சத்திய நேசன்.)

---

## Female Education.

### மாதர் கல்வி (தொடர்ச்சி.)

பெண்களுக்கு எவ்வித மேலான கல்வி புகட்டக்கூடுமோ அவ்வளவும நாம் செய்வது நமது கடமையென முன் காட்டியிருக்கிறது.

ஆனால் எப்படிப்பட்ட கல்விவேண்டும்? அவர்கள் முதன் முதல் கற்கவேண்டியது தங்களது நித்திய வாழ்வைப் பற்றியதால், போதுமானமட்டும நமது கத்தோலிக் மதத்தை அறியவேண்டும். பின்னர் வேத ஆசார முறைப்படி நடப்பிக்கப்படவும் வேண்டும். கத்தோலிக் குடும்பங்கள் எவ்விடத்திலும் இக்காரியங்கள் சரிவர நிறைவேறும்பொருட்டு கூடியமட்டில் கோவில்களுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் அருகிலுள்ள கிறிஸ்துவர்களுக்கிடையில் வசிக்கவேண்டும். அவர்

களும் தங்கள் சிறுவர் சிறுமிகள் ஒழுக்கமுள்ள குடும்பப் பிள்ளைகளுடன்மட்டும் சேரும்படி கண்காணிக்கவேண்டும்.

ஏனெனில் சிறுவரது மூளை காய்ந்த ஆறிவரும் மெழுகுக்குச் சமானமானதாலும், நன்மை தின்மையைப் பகுத்து அறிய சக்தியற்றிருப்பதாலும், காண்பவையும், கேட்பவையும் அவர்கள் மனதில் சுளுவாய்ப் பதிந்துகொள்ளும். "தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்ற பழமொழிக்கொப்ப, இக்காலத்தில் எவ்வித பழக்கங்களுண்டாகுமோ, அவ்விதமே பிற்காலத்தில் இவர்கள் நடப்பது உறுதி.

மேலும் சிறுவர் சிறுமிகள் மூத்தோர் வாக்குகளையும், செயல்களையும் கண்டு ஒழுகுவாரானாலும், தங்களைப்போன்ற சிறுவரது நடத்தையையே சுளுவாய்ப் பின் தொடர்வது சகஜம். ஆகையால் இவர்கள் நற்குணமும், நல்லொழுக்கமுள்ள சிறுவருடன்மட்டும் சேரும்படி பார்ப்பது பெற்றோர் கடமை.

பெண்பிள்ளைகள் வேதப்படிப்பும், ஆசாரங்களும் எப்படிச் சுளுவாய்க் கற்கலாம். தற்காலம் ஜீவியம் மிகவும் கடினமானதால் தகப்பன்மார்கள் போதுமான கல்வி கற்றவர் எனினும், பிள்ளைகளுக்கு கல்வி கற்பிக்க சமயம் வாய்ப்பதில்லை. அநேகம்பேர்களுக்குப் போதுமான கல்வியுமில்லை. தாய்மார்களோ இன்னும் மோசம்.

பல குடும்பங்களில் தாய்மார்கள் தங்கள் அலுவல்களை முடித்து வீண் பேச்சுப்பேசி அல்லது வீண் விளையாட்டு விளையாடி காலங்கழித்து, தங்கள் பிள்ளைகளையும் அப்படியே பழக்குவதின்றி, அவர்கட்கு வேத ஒழுக்கங்களைக் கற்றுக் கொடுக்கச் சற்றும் நினைப்பதில்லை. ஆகையால் சிறுவர்கள் கற்கவேண்டிய இடம் பள்ளிக்கூடமே.

அப்படியானால் எப்பள்ளிக்கூடம் அவசியம்? சிறுமிகள் ஒன்றித்துக்கூடி வேத ஆசாரங்களைச் சரிவர அனுசரிக்கப் பழகுவதற்கு கன்னியர்களால் நடத்தப்படும் போர்டிங் பள்ளிக்கூடங்களே விசேஷமானவை. அப்படிப்பட்ட ஏற்பாடு முடியாவிடில் கத்தோலிக் பள்ளிக்கூடங்களே அவசியமானவை. ஏனெனில் சர்வேசுரனை அறிந்து சேவிப்பதே ஜீவியத்தின் முக்கிய நோக்கமாகையால் கத்தோலிக் பள்ளிக்கூடங்களின்றி வேறு எங்கே அவற்றைக் கற்கக்கூடும்.



ஆகையால் பின்னால் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய இவர்களை ஒருபோதும் பதிதப் பள்ளிக்கூடங்கட்கும், அஞ்ஞானப் பள்ளிக்கூடங்கட்கும் அனுப்பலாகாது. ஓர் கிறீஸ்துவ சிறுமி அஞ்ஞானப் பள்ளியில் 'எல்லா மதமும் கடவுளையறிவிக்கும் மதங்கள்' என்ற படிப்பினையைப் படித்தபின், அதைப் பின்னர் மாற்றி, கத்தோலிக் வேதமே உண்மை, மற்றெல்லாம் தப்பறையென அறியச்செய்வதும், அவள் அதை விசுவசிப்பதும் பிரயாசை. இது பின்னால் சுத்தஞ்செய்யலாமென்று சேற்றுத் தண்ணீரில் குளித்த மாதிரியாம். பதிதப் பள்ளிக்கூடங்களோ நமது வேதத்துக்கு முற்றிலும் விரோதமானவற்றையே புகட்டிப் பதிதராகச் செய்பவைகள்.

கத்தோலிக் பள்ளிக்கூடங்களில் சிறுவர்கட்கு வேண்டிய வேதாசாரக் கல்வி புகட்ட ஏற்பாடு செய்யப்படுவதால், பெற்றோர் பிள்ளைகளை அப்பள்ளிக்கூடங்களின் ஒழுங்குப்படி நடத்த பிரயாசை எடுத்தால் போதும்.

பள்ளிக்கூடங்களில் பெண்கள் வேதாசார விஷயமாய் எவ்வித ஒழுக்க நடத்தை கற்கவேண்டுமென்பது குருக்களைச் சார்ந்ததால் அதை விட்டுவிட்டு, இலௌகீக விஷயமாய் இவர்கள் அடையவேண்டிய கல்வியைமட்டும் எடுத்துப்பேசவேண்டும். (இது பின்வரும்.) A. P.

---

## An address to three New Priests of Coimbatore.

### கோயமுத்தூர் மேற்றிராசனத்தைச்சேர்ந்த சங். பெலவேந்திரநாதர், பிராஞ்சீஸ்கு சவேரிநாதர், அம்புரோஸ்நாதர், குருப்பட்டம்பெற்ற சுபதினத்தில் சுற்றத்தாரும் சிநேகிதர்களும் சமர்ப்பித்த உபசாரப் பத்திரம்.

நீங்கள் இவ்வுன்னத பதவிக்கு ஏற்றவரென்று தெரிந்தெடுக்கப்பட்டு முதல பட்டம்பெற்ற காலமுதல எதிர்பார்த்திருந்த சம்பவம் இன்று நிகழ்ந்தது. இதினால் மிக்க அடங்கொண்ணா சந்துஷ்டியுடன் நாங்கள்கூடி உங்களைக்கண்டு ஆனந்தம் கொண்டாட இங்கு வந்தோம்.

இந்த நாட்டில் சர்வேசுரனுடைய திராட்சத் தோட்டமோ மிகப்பெரிது, அதில் வேலை செய்பவரோ மிக சொற்பம். ஆகையால் இச்சொற்ப தொகையோருடன் நீங்கள் இன்று சேர்க்கப்பட்டதால் நீங்கள் அடைந்த பாக்கியமே பாக்கியம்!

உலகில் பலவித அந்தஸ்துகளிருந்தும் குருத்துவத்துக்கு மேலான அந்தஸ்து இல்லாமையால், உங்கள் பதவியைக் கண்டு களிகூராதாரும் இருப்பாரோ.

ஆகையினால் இம்மேலான அந்தஸ்துக்கு உங்களைத் தெரிந்து பாத்திரவான்களாக்கியதற்கு விசேஷ ஏதுவாயிருந்த நமது மிகவும் வந்திக்கத்தக்க மேற்றிராணியாண்டவருக்கு எங்களது அன்பார்ந்த வந்தனமளிக்கின்றோம். சுதேசக் குருக்களை விருத்திசெய்து விசாலமான இம்மேற்றிராசனத்தைத் திருத்தும் கருத்துக்கொண்டவராய் பிரதிவருஷமும் புதுக்குருககளுக்குப் பட்டம் அளித்து நமக்கு கவரதைசெய்து வருகிறதால் மேற்றிராசன அபிவிர்த்திக்காக அவருக்கு எப்போதும் நன்றிபாராட்டவும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

பின்னர் நீங்கள் மூவரும் சென்றவழியே நல்வழியாதலால் இன்னும் நமக்குள் அநேகம்பேர் சென்று நமது மேற்றிராணியாண்டவரது விருப்பத்தை நிறைவேற்றுவார்களென்று நம்புகிறதுமல்லாமல், அவர் கருத்துக்கிசைந்து நாங்களும் எங்களது சிறுவர்களில் அநேகரை இவ்வந்தஸ்துக்கு ஏற்பாடு செய்ய பிரயாசைப்படுவோம்.

கடைசியாய், இக்கருத்துகள் நிறைவேறவும், அதற்காக சர்வேசுரனுடைய வரப்பிரசாதங்கள் எங்களுக்கு அதிகமதிகமாய் ஈந்தருளவும், தங்கள் ஜெபதபங்களில நினைவுகூர்வதுடன் விசேஷமாய் நாளைய முதல் பூசையில் வேண்டிக்கொள்ளவும், தற்போது எங்களெல்லோரையும் ஆசீர்வதிக்கவும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கோயமுத்தூர்,<br>26—5—1921.

இங்ஙனம்,<br>தங்களது அன்புக்குரிய<br>சுற்றத்தாரும், சிநேகிதரும்.

The largest room in the world is room for improvement.

---



# The uplift of the Catholic Community.

## கத்தோலிக்கரின் முன்னேற்றம்.

(தொடர்ச்சி.)

இவ்வாறு நம்மவர் முன்னேற்றமடையாதிருப்பது ஏன்? ஆங்கில அரசாட்சிக்கு முன்னதாக நம் நாட்டில் ஏற்பட்டிருந்த ஹிந்து, முஹம்மதிய அரசாட்சிகளின்போது, வாஸ்தவம், கிறீஸ்துவர்களாகிய நம் முன்னோர் அவ்வாறு ஏற்றம் பெறுமற் போனதற்கு பல காரணங்கள் உண்டு. அக்காரணங்களை தற்போது எடுத்துரைப்பின் எனது உபன்னியாசம் நீண்டுவிடுமென அஞ்சி அவற்றை இப்போது விட்டொழிக்கின்றேன். ஆனால் அதற்குமாறாக, தற்கால ஆங்கில அரசாட்சியில் அவ்வாறன்றோ? அங்ஙனமாயின், நம்மவரின் முன்னேற்றம் மேற்காட்டியவண்ணம் க்ஷீணதசை கொண்டிருப்பதேன்? அது நமது சொந்தக் குற்றமேயல்லாது மற்றப்படியல்ல. எவ்வாறு? அதற்கான காரணங்கள் யாவை? எனக்குத் தெரிந்தமட்டில், காரணங்கள் பல உளவாயினும், முக்கிய காரணங்கள் மூன்றெனக் கருதுகின்றேன். அவை யாவன—(1) நம்மில் உள்ள அசமந்தம், (2) ஒற்றுமை இல்லாமை, (3) பிறர் சிநேகக்குறைவு.

**அசமந்தம்:**

> கண்கூடாப்பட்டது கேடெனினுங் கீழ்மக்கட்
> குண்டோ வுணர்ச்சி மற்றில்லாகும்—மண்டெரி
> தாள்வாய் மடுப்பினும் மாசுணங்கண்டுயில்வ
> போராப்பெரு மூச்செறிந்து.

என்று நீதிநெறி விளக்கத்திற் செப்பியிருப்பதுபோல், நமக்கு நேரிடவிருக்கும் தின்மைகளையும், அவற்றால் நமது பரிசுத்த வேதத்துக்கு ஏற்படக்கூடிய தாழ்வையும் நாம் சற்றும் சிந்தியாது, உல்லாசமாய் உண்டு கழித்து யாதும் பயமற்றவர்களாய்த் திரிகின்றோம். ஆழ்ந்து யோசித்துப் பார்க்கின், இது நன்கு புலப்படும். எவ்வாறெனில், மற்ற மதங்களின்

பற்பல வகுப்பினர் தம் முன்னேற்றத்தின் விஷயமாய் எடுத்து வரும் முயற்சிகள் எம்மாத்திரம்? எங்கு பார்த்தாலும், சொசைட்டி; எங்கு பார்த்தாலும் கூட்டம்; எங்கு பார்த்தாலும் உபன்னியாசங்கள்; எங்கு பார்த்தாலும் முன்னேற்றப்பேச்சு; எங்கு பார்த்தாலும் முன்னேற்றக் கிளர்ச்சி; இவ்வாறிருக்க, நாம் மட்டும், இவைகள் யாவற்றையுங் கண்கூடாகப் பார்த்துவரினும், யாதொரு இயக்கமுமின்றி, அசமந்தம் எனும் ஆகாத துர்க்குணம் நம்மைவிட்டகலாது; இறுக நம்மைப் பிடித்திருப்பதுபோலும் "உள்ளதைக் கொண்டு திருப்தியாயிரு" என்னும் ஞானவாக்கை நன்குணர்ந்த ஞானிகள்போலும் நம்மில் இருக்கும் அற்ப சொற்ப நன்மைகளை முன்னிட்டு, நமது அசமந்த குணத்தைக் களையக் கருதாது, அதில் நாம் துயில்கொண்டொழுகுவது நமது முன்னேற்றத்திற்குப் பெருத்த ஒரு ஆணி. இதை எண்ணி, அத்துர்க்குணத்தை நம்மில் நின்று பற்றற நீக்கிவிட்டு, மற்றவர்களைப் பின்பற்றி, நாம் முன்னேற்றம் அடையக்கூடிய வழியில் விரைவுடன் செல்லுவோமாக.

ஒற்றுமை இல்லாமை:

இச்சிறப்புற்ற தன்மை எவ்வளவோ முக்கியமானதென நம்மில் ஒவ்வொருவரும் நன்கு அறிவோமே. "ஒற்றுமை பலம்" எனும் மூதுரை வாக்கு எவ்வளவோ சிரேஷ்டமானது. இவ்வொற்றுமை இல்லாத காரணம்பற்றியல்லவோ, எத்தனையோ சங்கங்கள் சீர்குலைந்து நிஷ்பலமாகிவிடுகின்றன. எத்தனையோ குடும்பங்கள் நசித்துப்போகின்றன. எத்தனையோ கம்பெனிகள் உடைந்துபோகின்றன.. இராஜாங்கங்கள் முதலாய்த் தகர்ந்து விழுந்துபோயின. உதாரணமாக, ஆங்கில அரசாட்சிக்கு முன்னதாகவிருந்த முஹம்மதிய அரசாட்சியின் காலத்தில், கீர்த்திபெற்ற அக்பர் பாதுஷாவின் அரசாட்சியின்போது, அவருக்கும் அவரது குடிகளுக்கும் (விசேஷமாய் ஹிந்துக்கள்) உண்டாயிருந்த ஒற்றுமையைப்பற்றியல்லோ அவரது அரசாட்சி 50 வருடமளவாக உலகப் பிரசித்தியடைந்து, அருணன் ஆகாயத்தில் பிரகாசிக்கும் தன்மைபோல, நம் நாட்டின்கண் ஜெகஜோதியாய் விளங்கிவந்தது. அதற்கு மாறாக, ஒளரங்கஜேபு பாதுஷாவின் அரசாட்சியோ, அக்பர் பாதுஷாவின் அரசாட்சிக்கொப்ப ஏறக்குறைய 50 ஆண்டளவாய் நீடித்திருந்ததெனினும், ஒளரங்கஜேபுக்கும், அவர் குடிகளுக்கும் (விசேஷமாய் ஹிந்துக்களுக்கும்) உண்டாயி



ருந்த ஒற்றுமைக்குறைவால், அவரது அரசாட்சி, ஆரம்பத்தில் மிகச் சிறப்புற்ற மேன்மைகொண்டிருந்தும், நாளுக்கு நாள் க்ஷீணதிசையடைந்து இறுதியில் எவ்வளவு பலனற்றுப் போயிற்றென்றால், அவருக்குப்பின்வந்த அரசர்களால் அவ்வரசாட்சியை நிலைநாட்ட முடியாமல், முஹம்மதிய அரசாட்சி நம் நாட்டில் தலைகாட்டாவண்ணம் அழிந்தொழிந்துவிட நேரிட்டது. அரசாங்கத்துக்கே இவ்வாறு நேரிட்டிருக்க, 33 கோடி ஜனங்களில் மிகச் சிறுபான்மையோராகிய நமக்கு என்னதான் நேரிடாது. "வெள்ளம் வருமுன் அணைகட்டவேண்டும்" என்னும் பழமொழிக்கொப்ப, நமக்குக் கெடுதி நேரிடா முன்னமே நாம் தக்க ஜாக்கிரதையுடன் அக்கெடுதலை அகற்றி, நன்மைப் பயனை அடையுமாறு, ஒற்றுமை என்னும் கேடயத்தைத் தரித்து, நம்மை மேற்கொள்ள முயலும் மற்றோரை வென்று சித்திபெறுவோமாக.

C. S. D.

---

## The lost Heritage

## அழிந்துபோன பிதிரார்ஜிதம்.

முன்காலத்தில் பொம்பாய் பட்டணத்தில் இராமசாமி முதலியார் என்னும் மிகுந்த பணக்காரன் ஒருவன் இருந்தான். அவனுக்குப் பிள்ளைகள் கிடையாது. தனக்குத் தள்ளாத வயது வந்ததென்று யோசித்து, தன் ஆஸ்திபாஸ்திகளைத் தனக்குச் சொந்தமாகிய ஒரு ஏழைப் பையனுக்குக் கொடுக்கப் பிரியப்பட்டான். அவனுக்குக் கடிதம் எழுதி அவனைத் தன்னிடத்தில் வரவழைத்தான்.—குப்புசாமி என்னும் அந்தப் பையன் வந்த பிறகு, கிழவன் அவனை வெகு பட்சத்துடன் ஏற்றுக்கொண்டு: "மகனே! என் ஆஸ்திகளையெல்லாம் உனக்குக் கொடுக்க மனதானேன். அதனால், நீ எனக்கு ஆறுதலாயிருந்து, சந்தோஷமாய் நடப்பாய் என்று நம்புகிறேன்," என்றான். பையன் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, "உங்கள் இஷ்டப்படி நடப்பேன்" என்று சொன்னான்;

எட்டு நாள் வரைக்கும், பெரியவர் சொற்படிக்கு நடந்து வந்தான். ஒன்பதாம் நாள் பொம்பாய் விநோதங்களைப் பார்க்கப் புறப்பட்டுப்போய், கிழவன் இராப்படுக்கைக்குப் போனபிற்பாடு, இராத்திரி 9-மணிக்குமேல் விட்டுக்குத் திரும்பி வந்து சேர்ந்தான். மறுநாட் காலமே கிழவனுடன் சற்றுநேரம் பேசியபின், நடக்கப்போகிற வேடிக்கையைப் பார்க்க, மறுபடியும் புறப்பட்டான். அந்நாள்முதற்கொண்டு பொம்பாயில் நடக்கும் நாடகம், ஸர்க்கஸ், பயாஸ்கோப் முதலிய வேடிக்கைகளையெல்லாம் பார்க்கிறதும், தனக்கு சிநேகிதர்களாகிய சில வாலிபர்களுடன் கூட்டுறவு செய்து, அவர்களுடன் கண்டபடி திரிகிறதுமே தவிர, அவன் கிழவனைச் சரியாய்க் கவனிப்பதே கிடையாது. இதுவுமன்றி, பொன் சங்கிலி, சரிகை வஸ்திரம், நகை முதலியவற்றைக் கடனாக வாங்கி டம்பாசாரித்தனம் செய்துகொண்டு திரிவான். கடைக்காரர்கள் இராமசாமி முதலியாருடைய ஆஸ்தி அவனுக்குக் கிடைக்குமென்று நம்பி, ஷை வாலிபனுக்கு அவன் கேட்பதையெல்லாம் கடனாகக் கொடுத்துவந்தார்கள். கிழவன் அதெல்லாம் கண்டு விசனப்பட்டு முறுமுறுத்து வருவான். பலபேர் பல தடவைகளில், சிறுவனுக்கு நற்புத்தி சொன்னாலும் அவற்றைக் கவனிக்கவுமாட்டான், கேட்கவுமாட்டான். ஒருநாள் அவன் வழக்கப்படியே புறப்பட்டுப்போய், திரும்பி வீட்டுக்கு வரும்போது, வீட்டில் ஜனங்கள் துக்கத்துக்குரிய முகத்துடன் இருக்கிறதையும், மேளக்காரர் சாவு மேளம் அடிப்பதையும் பார்த்து, இது என்னவென்று விசாரிக்கையில், பெரியவர் இறந்துபோனார் என்றும், தனக்கு இஷ்டமான ஒருவனுக்கு, தன் சொத்துகளையெல்லாம், எழுதிக் கொடுத்துவிட்டார் என்றும் அறிந்துகொண்டான். குப்புசாமி அதைக் கேட்டு, இடி விழுந்தாற்போற் திடுக்கிட்டு கலங்கி கஸ்திப்பட்டு மயங்கினான். மறுநாள் அவனுக்குப் பொருள்களைக் கடனாகக் கொடுத்த வியாபாரிகள், பெரியவருடைய ஆஸ்திகள் அவனுக்குக் கிடைக்கவில்லையென்று கேள்விப்பட்டு, அவன் மேல் பிரியாது செய்தார்கள். அவன் கையில் பணமில்லையென்று கண்டு, நியாயாதிபதி அவனைச் சிறைச்சாலையிற் போட்டார்.

குப்புசாமியென்பவன் சில மாதங்களுக்குள்ளாக, தனக்குக் கிடைக்கவேண்டிய ஆஸ்திகளை இழந்துபோன விசனத்தாலும், சிறைச்சாலையிற் பட்ட வருத்தத்தாலும், நிர்ப்பாக்கிய



னாய் இறந்துபோனான். அழிந்துபோகிற ஆஸ்தியைப் போக்கடித்ததைப்பற்றி, இப்பேர்ப்பட்ட வருத்தத்தை அடைவார்களென்றால், தங்கள் ஜீவியகாலத்தை வீணாய்ப் போக்கி, மோட்ச இராச்சியத்தைப் போக்கடித்த மனிதர்கள், நரகமென்கிற சிறைச்சாலையில் நுழையும்போது, படும் மனஸ்தாபம் எவ்வளவென்று சொல்லமுடியுமோ? (Olim.)

---

## Like father like son.

## தகப்பனெப்படி மகனப்படி.

தென்னாட்டிலே தோஷநேசம் என்ற ஓர் ஊர் இருந்தது; அதில் புட்டிக்குடியன் என்ற குடியானவன் ஒருவனிருந்தான். அவன் போதுமான ஆஸ்தியும், நிலபுலமும், கால்நடைகளும் வைத்துக்கொண்டு க்ஷேமமாய் வாழ்ந்து வந்தான். அவனுக்குச் செல்வப்புதல்வர்களாய் இரண்டு ஆண்மக்கள் இருந்தார்கள். இவன் தினந்தோறும் கள்ளோ, சாராயமோ குடியாதபடிக்கு வீட்டுக்கு வருவதோ அபூர்வம்; குடித்துவிட்டபிறகோ, தள்ளாடித் தள்ளாடி நடப்பதும், வழியில் வருபவர்மேல் விழுந்து எழுந்து போவதும், போகிற வருகிறவர்கள் கொடுக்கும் அடியுதைகளைப் பட்டுக்கொண்டு வாயில வந்தமாதிரியெல்லாம் பேசிக்கொண்டு போவான். யார் என்ன நற்புத்தி சொன்னாலும், கேட்பதில்லை; இவன் இவ்விதமாகச் செய்துவரும் நூஸன்ஸ் காரணமாக, டாணாக்காரர் அவனைப் பிடித்துக்கொண்டுபோய் சிறைச்சாலையில் அடைத்து, அடி உதை கொடுத்து, அபராதம் விதித்து, அன்பான புத்தி சொல்லியனுப்பிவைத்தாலும், நிமிஷத்தில் அதை மறந்துவிட்டு, கேட்பவர்களுக்கு—"குடியாத வீடு விடியாது", பெரிய பெரிய உத்தியோகஸ்தரெல்லாம், தனவந்தர்களெல்லாம், பிராமணர்கள் முதலாய், ஐரோப்பியர் முதலாய் குடித்துவருவதுதானா உங்களுக்குத் தோஷம்,—நீ எனக்குக் குடிக்கவேண்டாமென்று புத்தி

சொல்லுகிறாய், அன்றையத்தினம் நான் உன்னை இராமசாமியுடனே கள்ளுக்கடையுள்ளே பார்த்தேனே, மகா யோக்கியன் தான் போ,—என்று புத்தி சொல்லுகிறவாகளையும் விரட்டி விடுவான். வீட்டில் வந்து சேர்ந்துவிட்டபிறகு, பெண்சாதியானவள்—ஏனிந்தமாதிரி செய்கிறீர்கள், இது நமது வமிசத்துக்கும், நம்ம அந்தஸ்துக்கும் அழகா—என்று கேட்டுவிட்டாலோ, அவள் தலை மயிரோ போச்சுது, முன்பின் யோசியாமல் விழுகிறது உதையும் கும்மாங்குத்துந்தான்.

(தொடரும்). S. M. S. G.

---

## Page for the young.

### பிள்ளைகளின் பக்கம்.

## On gratitude.

### செய் நன்றியறிதல்.

ஒரு பட்டணத்தில் ஒரு வர்த்தகனிருந்தான். ஒரு நாள் அவன் தெருவீதியின் வழியே போகும்போது இருநூறு ரூபாய் அடங்கிய ஒரு பையைக் கண்டெடுத்து அதைக்குறித்துப் பிரசித்தப்படுத்தினான். அதைப் போக்கடித்துக்கொண்டவன் சமாச்சாரங் கேள்விப்பட்டு வர்த்தகன் வீட்டுக்கு வந்து ரூபாய் தன்னது என்று ருசுப்படுத்தினான். பின்பு, வர்த்தகன் அவன் கையில் ரூபாயைக் கொடுத்துவிட்டான். அதை வாங்கிக்கொண்டவன் மிகவும் நன்றியறிதலுள்ளவனாய் வர்த்தகனுக்கு இருபது ரூபாய் கொடுக்கப்போனான். ஆனால் வர்த்தகன் தனக்கு வேண்டாம் என்றான். அவன் மறுபடியும் பத்து ரூபாயாவது வாங்கிக்கொள்ள வேண்டுமென்று மன்றாடினான். வர்த்தகன் அதையும் வேண்டாமென்று தடுத்துவிட்டபடியால், அவன் ஐந்து ரூபாயாவது வாங்கிக்கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்தித்தான். வர்த்தகன் அதையும் தடுக்கக்கண்டு பணம் போக்கடித்துக்கொண்டவன் மிகவும் கோபமடைந்து தான் வாங்கிக்கொண்ட ரூபாயை பையோடு



வர்த்தகன் முன்னாலெறிந்துவிட்டு, அவனைப் பார்த்து “நீயோ மகா நிசஸ்தன். உன்னுடைய சத்தியமென்னும் நற்குணத்தால் எனக்கு இப்பணங் கிடைத்தது. நான் நன்றியறியாதவனல்ல. ஆதலால் நீ செய்த நன்றிக்குப் பிரதிசெய்ய விரும்புகிறேன். இந்தப் பிரதி உபகாரத்தை நீ ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் இப்பணம் என்னுடையதல்ல; உடையவனை விசாரித்து அவன் கையில் கொடுத்துவிடு. நான் போகிறேன்” என்று சொல்லி எழுந்தான். அதைக்கண்டு வர்த்தகன் ஐந்து ரூபாயை வாங்கிக்கொண்டு அதை உடனே தருமத்தில் செலவழித்துப்போட்டான்.

ஆதலால் ஒருவன் செய்த உபகாரத்தை மறவாமல் கவனித்துக்கொண்டிருப்பதும், அதற்காகக் கூடுமானவரையில் பிரதி உபகாரஞ் செய்வதும், மிகவும் சிறந்த சுகுணம் என்று யாவராலும் கொண்டாடப்படும். ஒருவன் துன்பமுற்ற காலத்தில் அவனுக்குச் செய்த உதவி எவ்வளவு அற்பமாக இருந்தாலும், அவன் அதை எப்பொழுதும் மறவாதிருப்பானாகில், அவனை நன்றியறிந்த மகா புருஷன் என்று நல்லோர்கள் புகழ்வார்கள்.

ஆகையால் பிள்ளைகளே! உங்களுக்குச் செய்யப்படும் நன்றியை உணர்ந்து அதற்குத் தகுதியான பிரதியுபகாரம் செய்யும் தன்மையை மேற்கொண்டு நடக்கவேண்டும். மேலும் உங்களுக்கு ஒருக்கால் உபகாரமும், பின்பு அநேக அபகாரங்களும் செய்யப்பட்டிருந்தாலும், அபகாரத்தை மறந்து உபகாரத்தைமட்டும் பெரிதாக எண்ணி நடப்பீர்களானால், இவ்வுலகில் புருஷோத்தமர்கள் என்று பெயர் வாங்குவீர்கள். உங்கள் மாதா, பிதா, குரு முதலிய பெரியோர்கள் நாடோறும் உங்கள் ஆத்துமத்துக்கும் சரீரத்துக்கும் வேண்டிய நன்மை உபகாரங்களை உங்களுக்கு ஓயாமற் செய்துவருகிறார்களல்லவா? இந்த நன்றிக்குப் பதிலாக நீங்கள் அவர்களுக்குப் பணிந்து அத்தியந்த பத்திவிநயத்தோடு மெய், வாக்கு, கிரியை என்ற சகலத்தாலும் அவர்களுக்கு உத்தமமான வணக்கமும் ஊழியமும் புரிவதுதான் பிரதிநன்றி செய்வதுபோலாகும். இப்படிச் செய்துவருவீர்களேயாகில் இவ்வுலகில் சந்தோஷமாய் ஜீவித்து பத்தியுடன் மரித்து மறுவுலகில் சகல அர்ச்சியசிஷ்டவர்களோடு நித்தியமாய் வாழ்வதற்குப் பாத்திரவான்களாவீர்கள்.

(போதகன்.)

---

## Here and There.

### நானா சங்கதிகள்.

Ordination:—கடந்த மே-மீ 26-ம் உ கோயமுத்தூர் மேற்றிராசனக் கோவிலில், மகா கனம் பொருந்திய கோயமுத்தூர் மேற்றிராணியார் அவர்கள், சங். பெலவேந்திரநாதர், பிராஞ்சிஸ்கு சவேரிநாதர், அம்புரோஸ் நாதர் இம் மூவருக்கும் குருப்பட்டத்தையும், சங். மரியசூசை நாதருக்கு சப்தியாக்கோன் பட்டத்தையும் கொடுத்தருளினார். குருப்பட்டத்தின் மகத்துவமான திருச்சடங்கைத் தரிசிக்க அநேக குருப்பிரசாதிகளும், கிறீஸ்துவர்களும் உள்ளூரிலிருந்தும், அசலூரிலிருந்தும் வந்திருந்தார்கள். பிறகு, அநேக சுற்றத்தாரும், சிநேகிதர்களும், கத்தோலிக் கிளப் மெம்பர்களும் புதுக் குருக்களைச் சந்தித்து, உபசார பத்திரங்களை வாசித்து, அவர்களுடைய ஆசிர்வாதங்களைப் பெற்று ஆனந்தித்தார்கள். அன்றையத்தினத்தில், கோயமுத்தூர் மேற்றிராசனம் தேவ கிருபையால் பெரும் பாக்கியம் பெற்றது. புதுக்குருக்கள் நெடுநாள் வாழ்ந்து, திருச்சபையில் அநுகூலமாய் உழைக்கும்படி கடவுள் கிருபை செய்வாராக.

Good example:—வட பிராஞ்சு தேசத்திலுள்ள லீல் என்னும் பட்டணத்து மேற்றிராணியாரவர்கள் ஒரு துரையோடு சம்பாஷிக்கும்போது சொன்னதாவது:—"நமது மேற்றிராசனத்திலுள்ள பாடசாலைகளெல்லாம், ஐரோப்பிய மகா யுத்தத்தில் ஜெர்மானியர்களால் பாழாக்கப்பட்டன. சண்டை முடிந்தவுடன், அந்தப் பள்ளிக்கூடங்களைத் திரும்பிக் கட்டவேணுமென்பது நமது முக்கிய கருத்து. இந்தக் கருத்தை விசுவாசிகளுக்கு வெளிப்படுத்தி, (எல்லாவற்றிற்குமுன்) அதாவது, இடித்தழிக்கப்பட்ட உங்கள் வீடுகளைக் கட்டுவதற்கு, முதல் அஸ்திவாரக் கல்லைத் தூக்கி வைப்பதற்கு முன்னேயே, எல்லாப் பாடசாலைகளையும் கட்டி முடிக்கும்படி அவர்களைக் கேட்டேன்:—கேட்டபிரகாரமே நல்ல மனதுடன் செய்துவிட்டார்கள்; இப்போது நமது மேற்றிராசனத்தில் சகல பாடசாலைகளும், ஒன்றும் தவறாமல், புதிதாகவே கட்டப்பட்டிருக்கின்றன. இதோ இந்திய கத்தோலிக் கிறீஸ்துவ சகோதரர்களுக்கு ஒரு நல்ல மாதிரிகை!



Progress of the Church:—அமேரிக்கா தேசத்தில் சில காலத்துக்குமுன் எடுக்கப்பட்ட ஜனத்தொகையில் கத்தோலிக்கர் 250 லட்சம் என்று கணக்கெடுக்கப்பட்டிருந்தது. ஆனால், நூறு வருஷங்களுக்குமுன், அத்தேசத்தில் 15000 கத்தோலிக்கர் மாத்திரம் இருந்தார்கள். கடந்த பத்து வருஷ காலத்துக்குள்ளாக, 50 லட்சம் கத்தோலிக்கர் அதிகமானார்கள். இப்போது ஷை தேசத்தில் இதர மதஸ்தரைப் பார்க்கிலும் கத்தோலிக்கர்தான் அதிகம். நமது இந்தியா தேசத்தில் திருச்சபையானது அவ்வளவு சீக்கிரம் விர்த்தியாகும்படி கடவுள் கிருபை செய்வாராக.

S. I. Ry:—ஜூலை மாதம் 1-ம் தேதி முதற்கொண்டு மெயில் வண்டியில் யாத்திரை செய்பவர்கள், தற்காலம் கொடுக்கப்பட்டுவரும் கட்டணத்தைப் பார்க்கிலும், ஒரு பங்கு அதிகமாய்க் கொடுக்கவேண்டியுள்ளார். லோக்கல் வண்டிகளில் செல்வோர் நூற்றுக்கு 50 விழுக்காடு அதிகமாய்க் கொடுக்கவேண்டியுள்ளார். அதினால் விசேஷமாய் ஏழை ஜனங்களுக்குத்தான் அதிக வருத்தம் உண்டாகும்.

A Warning—ஒரு எச்சரிக்கை:—கிலாபத் நோட்டுகள் இப்போது இந்த (சென்னை) இராஜதானியில் வந்திருக்கின்றன; ஒன்று, ஐந்து, பத்து, நூறு, இந்த எண்கள் குறிக்கப்பட்ட நோட்டுகளை (நாணயச் சீட்டுகளை) கிலாபத் கமிட்டியார் வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது. இவை சர்க்கார் நோட்டுகளைப் போன்றவையல்ல. இவைகளில் ஒரு ரூபாயின் உருவம் வரைந்து, (அவற்றில்) 'ஒரு ரூபாய், இந்தியா 1920' என்று, இங்கிலீஷில் எழுதியிருக்கிறது. அவற்றில், எழுதப்பட்டிருக்கும், மற்ற விஷயங்கள் அரபி பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. ஷை கிலாபத் நோட்டுகளுக்கு, பணத்தைப்போன்ற மதிப்பு இல்லை. (சென்னை பப்ளிஸிடி பீரோ.)

Menace to public health:—கடந்த ஜூன் மீ துவக்கத்தில் இரம்சான் என்னும் மகம்மதியர் பண்டிகை சமயத்தில், மலையாள தேசத்திலிருந்து சுமார் 6000 பிச்சைக்காரர் நீலகிரி மலைக்குப் புறப்பட்டுப் போனார்கள். ஏனெனில் உதகமண்டலத்தில் (Ooty) வசிக்கும் பஹீர் மஹமத் குடும்பத்தார் இந்த வருஷம் ஒவ்வொரு பிச்சைககாரனுக்கும் ஒரு சவரன் கொடுப்பார்களென்று பிரஸ்தாபமாயிற்று. திடீரென பிச்சைக்காரர் கூட்டத்தில் விஷபேதி பரம்பி, உதகமண்டலத்தில் 40 பேரும், குன்னூரில் 36 பேரும் செத்துப்போனார்கள்.

இனிமேல் பொது ஜனங்களுக்கு இப்பேர்ப்பட்ட ஆபத்து நேரிடாதபடிக்கு நீலகிரி ஜில்லா அதிகாரிகள் ஏற்பாடு செய்யப்போகிறார்களாம்.

Transfers:—சங். ஞானப்பிரகாசம் சுவாமியார் மேட்டூர் பங்கு சுவாமியாராகவும், சங். மார்ஷல் சுவாமியார் கொளப்பளூர் பங்கு சுவாமியாராகவும், மாற்றப்பட்டார்கள். சங். மரிய அம்புரோஸ் சுவாமியார் குன்னூர் உதவி பங்கு சுவாமியாராகவும், சங். சவேரியார் சுவாமியார் வெல்லிங்டன் உதவி பங்கு சுவாமியாராகவும், சங். மாசில்லாமணி சுவாமியார் அர்ச். மிக்கேல் போர்டிங் மடத்தின் ப்ரிபெக்ட் ஆகவும், நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சங். G. புலான்ஜெ சுவாமியார் சௌக்கியத்தை நோக்கி பிரான்சுக்குப் போயிருக்கிறார். சங். பொசியெர் சுவாமியாரும், சங். கொல்லின் சுவாமியாரும், சங். கிரிதனா சுவாமியாரும் தற்காலம் அசௌக்கியமாய் இருக்கிறார்கள். சங். கொல்லின் சுவாமியார் சௌக்கியமாகுமட்டும், தற்காலம் சங். ஆரோக்கியநாத சுவாமியார் சவேரியார்பாளையம் பங்கு விசாரணையைப் பார்த்து வருவார். சங். பெலவேந்திரம் சுவாமியார் தற்காலம், அர்ச். மிக்கேல் போர்டிங் மடத்தின் உதவி ப்ரிபெக்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

Vatican:—ஜொனார் துரை அவர்கள், அர்ச். பாப்பரசரிடம் பிரான்சு சர்க்காரால் ஸ்தானாபதியாகவும், மாட்சிமை தங்கிய செரெட்டி ஆண்டவர் பிரான்சு சர்க்காரிடம் அர்ச். பாப்பானவரால் ஸ்தானாபதியாகவும், நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனால், சகல கத்தோலிக்கரும் சந்தோஷமடைவார்கள்.

---

## Kodiveri.

### பெரிய கொடிவேரி கோவில் பஞ்சாங்கம்.

### 1921-ம் ௵ ஜூலை-௴

1-ம் ௳ சேசுநாதருடைய திரு இரத்தத்தின் திருநாள். மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமை. காலை 6 மணிக்கு பூசை. பூசைக்குப் பிறகு திவ்விய நற்கருணை ஆசீர்வாதம்.

2-ம் ௳ தேவமாதா எலிசபெத்தம்மாளை மினவின திருநாள். காலை 6 மணிக்கு பூசை. பூசைக்குப் பிறகு திவ்விய நற்கருணை ஆசீர்வாதம்.

3-ம் ௳ மாதத்தின் முதல் ஞாயிறு. காலை 8 மணிக்குப் பாட்டுப் பூசை. மாலை 5 மணிக்குச் சுற்றுப்பிரகாரம்.

---


# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

Vol. VII. August 1921. No. 8.

புத்தகம் VII.] FIDES AC ROBUR. [நம்பர் 8


AUG 1921

**"You cannot serve God and Mammon."**

**சர்வேசுரனுக்குந் திரவியத்திற்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.**

எவனானாலும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்யக் கூடாது. ஏனெனில், ஒருவனைப் பகைத்து, மற்றொருவனை நேசிப்பான். அல்லது ஒருவனைச் சார்ந்துகொண்டு மற்றொருவனைப் புறக்கணிப்பான். சர்வேசுரனுக்குந் திரவியத்திற்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது. ஆதலால் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: உங்கள் உயிர்பிழைக்க எதை உண்போமென்றும், உங்கள் உடலை மூட எதை உடுப்போமென்றும் ஏக்கமாயிராதேயுங்கள். உணவைவிட உயிரும் உடையைவிட உடலும் மேன்மையானதல்லவோ?

ஆகாயப் பட்சிகளை நோக்கிப் பாருங்கள், அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் குவிக்கிறதுமில்லை. ஆகிலும் அவைகளை உங்கள் பரம பிதா போஷித்து வருகிறாரே. அவைகளிலும் நீங்கள் மிகவும் மேன்மையுள்ளவர்கள் அல்லவோ? மேலும் யோசித்துக் கவலைப்படுவதினால்

தன் உயரத்துக்கு ஒரு முழம் கூட்ட உங்களில் எவனாலே கூடும்? ஆகையால் உடைக்காக நீங்கள் கவலைப்படுவானேன்? வயல் வெளிகளிலுள்ள லீலிப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை. ஆயினும் சலோமோன் முதலாய்த் தனது சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலென்கிலும் உடைபூண்டதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

ஆகையால் இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்குச் சர்வேசுரன் இத்தன்மையாய் உடை உடுத்துவித்தால், அற்ப விசுவாசமுள்ளவர்களே, உங்களுக்கு எவ்வளவோ அதிகமாய் உடை உடுத்துவிப்பார்? ஆதலால் என்னத்தை உண்போம் அல்லது என்னத்தைக் குடிப்போம் என்று கவலைப்படாதிருங்கள். ஏனெனில், இவைகளெல்லாவற்றையும் அஞ்ஞானிகளே தேடுகிறார்கள். உங்கள் பிதாவானவரோவென்றால் இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகளென்று அறிவார். ஆகையால் சர்வேசுரனுடைய இராச்சியத்தையும் அவருடைய நீதியையும் முந்த முந்தத் தேடுங்கள். அப்போது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூட்டிக்கொடுக்கப்படும். (மத். 6-24-33).

---

## The Little Garden of Roses.

## சிறு ரோஜாத் தோட்டம்.

மலர் 17.

"As long as you did it to one of them, my least brethren, you did it to me." (Matt. xxv-40.)

"மிகவும் சிறியரான சகோதரர்களாகிய இவர்களிலொருவனுக்கு நீங்கள் செய்தபோதெல்லாம் எனக்கே அதைச் செய்தவர்களாவீர்கள்." (மத்தேயு. 25-ம் அதி. 40-ம் வச.)



1. இது கிறீஸ்துநாதருடைய திரு வாக்கியமாமே. இத்திரு வாக்கியத்தை நன்றாய்க் கவனித்து, அதில் மறைந்திருக்கும் ஞானாமிர்தத்தைக் கண்டடைந்து அதன்பிரகாரம் நடக்கப் பிரதிக்கினைசெய்துகொள்வோமாக.

தன் சகோதரன் துயரத்தையாற்றுகிறவன், சேசுவுக்குத் தன் கையை நீட்டுகிறவன் போலாவான்.

சர்வேசுரன் கட்டளையிடும் கஸ்தி துன்பங்களைப் பொறுமையோடு அநுபவிப்பவன், சேசுவையும் அவருடைய சிலுவையையும் தன் தோளின்மேல் சுமக்கிறவனாவான்.

துக்கசாகரத்திலமிழ்ந்தி இருப்பவர்களுக்கு ஆறுதலும் தேறுதலுமான வார்த்தைகளைச் சொல்பவன், சேசுவுக்கு அன்பான முத்தங்கொடுக்கிறவனாவான்.

தன் சகோதரன் செய்யும் குற்றங் குறைகளைக் கண்டு விசனப்பட்டு மன்னிப்படைய அவனுக்காக மன்றாடுபவன், சேசுவின் பாதங்களைக் கழுவித் துடைக்கிறான்.

தன் சகோதரனுடைய கோபத்தைச் சமாதானமாக மாற்றுகிறவன், தன் ஆத்துமத்தில் சேசுவுக்கு ஒரு பூப்படுக்கையைத் தயார் செய்கிறவனாவான்.

மேஜையில் தனக்கென்று வைத்திருக்கும் ருசியான போஜன பதார்த்தங்களின் பெரும் பாகத்தைத் தனது சகோதரனுக்குப் பகிர்ந்து கொடுப்பவன், தருமமென்கிற அப்பத்தைக் கொண்டு சேசுவைப் போஷிக்கிறான்.

கடவுளின் வணக்கத்துக்குரிய பரிபூரண குணங்களை ஆழ்ந்த பத்தியோடும் மிகுந்த உற்சாகத்தோடும் தியானிப்பவன், சேசுவைத் தனது ஆத்துமத்தில் இரகசியமான அறைகளில் நுழையச் செய்கிறான்.

ஞானமென்கிற புஸ்தகத்தைத் தனது சகோதரனுக்குத் திறந்து காண்பிக்கிறவன், சேசுவுக்குத் தகுதியான பானத்தைக் குடிக்கக் கொடுக்கிறான்.

நிஷ்பிரயோஜனமான சம்பாஷணையைத் தடுக்கிறவன், சேசுவின் மேஜையிலிருந்து ஈக்களைத் துரத்துபவனாகிறான்.

அபவாதத்துக்குக் காதுகொடாமல் தகாத பேச்சுகளைக் கண்டித்து விலக்குபவன், சேசுவின் இல்லத்தில் நுழையும் துஷ்ட மிருகத்தைத் துரத்துவதற்கு வேண்டிய ஆயுதத்தைக் கைக்கொள்ளுகிறவனாவான்.

போஜன சாலையில் தன் சகோதரர்கள் நன்றாயறியும்படியாகப் பிழையில்லாமல் திருத்தமாய் ஞான வாசகம் வாசிப்பவன், சேசுவின் விருந்தினருக்குத் திவ்விய போஜன பாத்திரங்களைக்கொண்டு திருப்தியாக்கிறதுமல்லாமல், சந்தோஷமென்கிற பானத்தால் அவர்களை நிரப்புகிறான். ஆனால் தப்பும் தவறுமாய் வாசிப்பவன் சாப்பாட்டின் ருசியைக் கெடுக்கிறான். இக்கித்திக்கி வாசிப்பவனோ சேசுவின் மேஜையின்மேல் விரித்திருக்கும் வெள்ளாடையைக் கறைப்படுத்துகிறான்.

தனது அயலான் தூஷிக்கப்படுவதைக் கேட்கும்போதெல்லாம் மனதிரங்கி அவனுக்காக மிகுந்த வியாகுலமும் அநுதாபமும் படுகிறவன், சேசுவின் திருக்காயங்களைப் பரம அவுஷதங்களால் அபிஷேகம்பண்ணுகிறவனாவான்.

2. தன் சகோதரனின் நன்னடக்கையைப்பற்றியும், நற்குண நற்செய்கைகளைப்பற்றியும் பிரஸ்தாபிப்பவன், சேசுவுக்கு நல்ல அழகான வாசனையுள்ள பூங்கொத்தைக் கொடுக்கிறவன் போலாவான்.

பத்தி சிரத்தையுடன் வாசிப்பவனும், சேசுவின் திரு வாக்கியங்களை விநயத்துடன் பலரறிய எடுத்துச் சொல்பவனும், தாம் சொல்வதைக் கேட்பவர்களுடைய நாசித்துவாரங்களில் சுகந்த பரிமளத்தை முகரச் செய்கிறார்கள்.

பிறருடைய குற்றங்களை நல்ல மனதோடு பொறுத்துக்கொண்டு அவைகளைப் பாராட்டாமல், அவர்களுக்காக வேண்டிக்கொள்பவன், சேசுவின் இரக்கத்தை உடனுக்குடனே அடையப் பாத்திரவானாவான்.

பிறருடைய அபவாதங்களையும் துர்க்குணங்களையும் மறைத்து வைப்பவன், சேசுவின் திரு மேனியை ஒரு பரிசுத்த வஸ்திரத்தால் மூடுகிறவனாவான்.

சேசுவின் அதிசய அற்புதங்களையும் அவருடைய தாழ்ச்சியுள்ள ஜீவியத்தையும்பற்றி இடைவிடாமல் தியானித்து அவைகளால் தனது ஆத்துமத்துக்கு நல்ல ஞானப் பிரயோஜனத்தைத் தேடுபவன், சேசுவின் வாயினின்று தேனையும் பாலையும் உட்கொள்ளுகிறான்.

மேற்படி வாக்கியத்தை வசனித்தவளும் அதன்பிரகாரம் நடந்தவளும் அர்ச். அஞ்ஞேசம்மாள் ஆவான். இப்புண்ணியவதி சேசுவின்பேரில் வைத்திருந்த அணைகடந்த அன்பின்



பெருக்கால் அவருக்காகத் தனது இரத்தத்தைச் சிந்தும்படியான பாக்கியம்பெற்றாள்.

பலவீனமும் வியாதியுமுள்ள சகோதரனுக்குப் பதிலாகத் தான் பாடவாவது, வாசிக்கவாவது முன்வருபவன், குழந்தை சேசுவின் தொட்டிலுக்கருகாமையில் சம்மனசுக்களோடு சேர்ந்து இன்பமாய் வீணை வாசிப்பவனாவான்.

பத்தி உருக்கமாய்ச் செபித்து, ருசியான பதார்த்தங்களையும் தனது ஆஸ்திபாஸ்திகளையும் அறவே வெறுத்துத் தள்ளுபவன், திருப்பாலனாகிய சேசுவைத் தரிசிக்க மூன்று இராஜாக்களோடு கூடவந்து அவருடையத் திருக் கரங்களில் விலையுயர்ந்த காணிக்கைகளை வைக்கிறவனாவான்.

தனது சகோதரர்களுடைய கால்களைக் கழுவி, அவர்களுடைய வஸ்திரங்களைச் சுத்தஞ் செய்து, அவர்களுக்கு இன்னும் மற்ற தாழ்ந்த ஊழியங்களைச் செய்பவன், அர்ச். ஸ்நாபக அருளப்பரோடு சேர்ந்து சேசுவுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறவன்போலாவான்.

மவுனத்தையும் ஏகாந்தத்தையும் விரும்புகிறவன், தபசு செய்ய சேசுவோடு வனாந்தரத்தில் பிரவேசிக்கிறவனாவான்.

தனது ஆசாபாசங்களை அடக்கித் தனது சரீரத்தைத் தண்டிப்பவன், சேசுவோடு உபவாசஞ் செய்கிறான்.

இரட்சண்ணியத்துக்கடுத்த போதனைகளைத் தன் சகோதரனுக்குப் போதிப்பவன், சேசுவோடு சேர்ந்து மோட்ச இராச்சியத்தைப்பற்றிப் போதிக்கிறவனாவான்.

துர்ப்பலர்களாய்த் தந்திர சோதனைகளில் அகப்பட்டு வெருவாய்க் கலங்கி நிற்கும் சகோதரர்களுக்காக இடைவிடாமல் சர்வேசுரனைப் பிரார்த்திப்பவன், சேசுவோடுகூட லாசரின் கல்லறைக்குப்போய் அங்கே மார்த்தம்மாள், மரியம்மாள் இவர்களோடு சேர்ந்து பிரலாபிப்பவன் போலாவான்.

(தொடரும்.) S. S. G.

"The man who wins is the man who works,
Who neither trouble nor labour shirks,
Who uses his hands, his head, his eyes ;
The man who wins is the man who tries."

---

## The day of the Lord and the day of the Devil.

## கர்த்தருடைய நாளும், பிசாசினுடைய கிழமையும்.

பிசாசானது ஓர் துஷ்ட குரங்கைப்போல் கடவுளைப் பாவனைசெய்யப் பிரயாசப்பட்டு, கள்ள வேஷம்போட்டு மனிதர்களை ஏமாற்றப் பார்க்கிறது.

கர்த்தர் ஞாயிற்றுக்கிழமையை தமது விசேஷ நாளாகத் தெரிந்துகொண்டார்.

பிசாசோவெனில் தனக்கு விசேஷ நாளாக சந்தை நாளைத் தெரிந்துகொண்டது.

ஞாயிற்றுக்கிழமைதோறும், கிறீஸ்துவர்கள் வேலையை நிறுத்தி, கோவிலுக்குப் போய்ப் பூசை கண்டு, பிரசங்கத்தைக் கேட்டு, தம்மை ஆராதிக்கவேணுமென்று சர்வேசுரன் கற்பிக்கிறார்.

சந்தை நாட்கள்தோறும், ஜனங்கள் கள், சாராயம், பீர் கடைகளுக்குப் போய் அத்துமீறி, புத்தி மயங்கி, வெறிகொள்ளவும், பற்பல விதமான பாவங்களைக் கட்டிக்கொள்ளவும், இவ்விதமாய்த் தனக்கு ஊழியஞ் செய்யவேணும் என்றும் பிசாசு ஆசைப்படுகிறது.

ஞாயிற்றுக்கிழமையில் பத்தியுள்ள கிறீஸ்துவர்கள் திவ்ய பூசைகண்டு, சர்வேசுரனைப் பிரார்த்தித்து, சம்மனசுகளுக்குச் சமானமாகிறார்கள்.

சந்தை நாளில் மனிதர்கள் குடி வெறியினால், புத்தியில்லாத மிருகங்களுக்கு ஒப்பாகிறார்கள்.

ஞாயிற்றுக்கிழமையின் ஓய்வானது, 6 நாள் வேலையின் சம்பாவனை.

சந்தை நாளின் ஓய்வு, 6 நாள் வேலையில் மீந்த மீதியின் நாசம்.

ஞாயிற்றுக்கிழமையின் ஓய்வு, மற்ற நாட்களில், சுறுசுறுப்பான வேலையைச் செய்யும்படி, உற்சாகப்படுத்தி, நல்ல கிறீஸ்துவர்களைத் தூண்டுகிறது.



சந்தைக் கிழமையின் ஓய்வு, சோம்பலுக்குக் காரணமாயிருக்கிறது.

ஞாயிற்றுக்கிழமையின் ஓய்வு செலவின் ஒடுக்கத்தை உண்டுபண்ணுகிறது.

சந்தை நாளின் ஓய்வு, வீண் செலவுக்கும், சொத்தின் நிர்மூலத்துக்கும் காரணமாயிருக்கிறது.

ஞாயிற்றுக்கிழமையின் ஓய்வு தேவ ஆசீர்வாதத்துக்கும், குடும்ப சமாதானத்துக்கும் காரணமாயிருக்கின்றது.

சந்தை நாளின் ஓய்வு, குடும்பத்தில் சண்டை சச்சரவு, பகை வர்மத்தையும், தேவ கோப ஆக்கினையையும் விளைவிக்கிறது.

ஞாயிற்றுக்கிழமை வாரத்துக்குக் காவலான சம்மனசைப் போலாகிறது.

சந்தை நாளோவெனில் வாரத்துக்குப் பசாசைப்போலாய் விடுகிறது. (சத்திய நேசன்.)

---

## The Uplift of the Catholic Community.

## கத்தோலிக்கரின் முன்னேற்றம்.—(தொடர்ச்சி).

### பிறர் சினேகக் குறைவு :

“ பிறர் சினேகம்” என்பது எவ்வளவு மேலான புண்ணியம் என்று நான் சொல்லாமலே உங்களுக்கு நன்றாய்த் தெரிய வேண்டிய விஷயம். ஏனெனில், நம்மில் ஒவ்வொருவருக்கும், சர்வேசுரன் நமக்குக் கொடுத்திருக்கும் பத்துக்கற்பனை இன்னவையென, நன்றாய்த்தெரியுமல்லவா ? அந்த பத்துக்கற்பனைகளும் இரண்டு கற்பனைகளில் அடங்கும் என்றும், அவற்றில் இரண்டாவது, “ தன்னைத்தான் சினேகிக்குமாப்போல் மற்றவர்களையும் சினேகிக்கிறது” என்றும் நன்றாய்த்தெரியும். இந்த இரண்டாங்கற்பனையை நாம் நுணுக்கமாய் அனுசரிப்பது நமது

முன்னேற்றத்திற்கு இன்றியமையாத சாதனமென நாம் நன்றாய் அறிந்துகொள்ளவேண்டும். எவ்வாறெனில், ஒவ்வொரு வகுப்பாரிலும் மூவித அந்தஸ்தினர் உண்டு: அதாவது, பிரதம, மத்திய, உயர்தர அந்தஸ்தினர் ஆக மூவகுப்பார். இம்மூவரில் உயர்தர அந்தஸ்தினர்மட்டும் தங்களுக்குள்ள செல்வாக்கால், மேன்பதவி அடையக்கூடும். பிறர் உதவி அவர்களுக்கு அவ்வளவாகத் தேவையிராது. மத்திய அந்தஸ்தினர் தங்கள் அந்தஸ்தைத் தங்களது முயற்சியாலேயே உயர்த்திக்கொள்ள ஒருவாறு கூடுமேயன்றி முற்றிலும் கூடா. உயர்தர அந்தஸ்தினரின் உதவி அவர்கட்கு வேண்டியதாயிருக்கும். ஆனால் பிரதம அந்தஸ்தினரின் பதவி உயரவேண்டுமாயின் மற்றிருவருடையவும், விசேஷமாய் உயர்தர அந்தஸ்தினருடைய உதவி ஆவசியகத்திலும் ஆவசியகமே.' அவ்வுதவியின்றி அவர்கள் மேம்பாடடைவது குதிரைக்கொம்பாய்த்தானிருக்கும். காரியம் இவ்வாறிருக்க, அவ்வுயர்தர அந்தஸ்தினர் செய்வதென்ன? "யார் எக்கேடு கெட்டால் என்ன? நாம் நன்றாய் வாழ்ந்தாற்போதும்" என்கிற எண்ணமுடையோராய் தங்கள் காரியத்தைமட்டும் கவனித்துக்கொள்ளும் சுயநலப் புலிகளாய் இருக்கின்றார்கள். இதிலும் ஒரு விசேஷமுண்டு. தங்கள் உறவினர் விஷயத்தில்முதலாய் கவலையற்றிருப்பார்கள். இது விஷயம் விந்தையன்றோ? இதிலும் விந்தையான விஷயம் ஒன்று உளது. அஃதேதெனில், தாங்கள் பெற்ற பிள்ளைகள், இப்பிள்ளைகளின் பிள்ளைகளாகிய பேரப்பிள்ளைகள் ஆகிய இவர்கள் விஷயத்தில்முதலாய் கவலையற்றிருப்பார்கள். அவர்களில் யாரிடமாவது, ஒருவர் சென்று 'என்ன ஐயா, தங்கள் பிள்ளை சுந்திரசாமி, பேரப்பிள்ளை துரைசாமி, இவர்கள் விஷயத்தில் தாங்கள் ஒரு கவலையும் எடுத்துக்கொள்ளாதிருக்கின்றீர்கள். அப்படி இருந்தால் வீணில் அவர்கள் கெட்டுத் தாழ்மையடைய நேரிடுமே" என்றால், அவர் கொடுக்கும் பதில் என்ன? "போம் ஐயா, உமக்கென்னவேலை? படித்தால் படிக்கிறார்கள், இல்லாவிட்டால் மாடுமேய்க்கிறார்கள். இவர்கள் படித்து முன்னுக்குவந்து உத்தியோகம்செய்து சம்பாதனைசெய்யும்வரையில் நான் இருக்கப்போகிறேனாக்கும்? என்ன கதை பேசுகிறீர்? இவர்கள் சம்பாதனைசெய்து போடுவார்களென்று நான் எனது வாயை அகலத் திறந்துகொண்டு காத்திருக்கப்போகிறேனாக்கும். அல்லது இவர்கள் மேலான உத்தியோகம் செய்வதை நான் என் கண்களை உருட்டிக்கொண்டு பார்க்கப்போகிறேனாக்கும்" என்கிற இவைபோன்ற முற்றிலும்



விவேகமற்ற வார்த்தைகளேயன்றி வேறல்ல. இவ்வளவு மௌடீகமுடைய உயர்தர அந்தஸ்தினர் அநேகருண்டு. இவர்களுக்குத் தக்க புத்தி கற்பிக்கும்படியான ஒரு சிறு சரித்திரம் உண்டு. அதைச்சொல்லுகிறேன் கேளுங்கள்.

(தொடரும்). C. S. D.

## Female Education.

### மாதர் கல்வி (தொடர்ச்சி.)

இனி பெண்கள் அடையவேண்டிய இலௌகீக கல்வியைக் கவனிப்போம். இவர்கள் ஆண்களைப்போல் சன்னியாசமாகவோ, குடும்பஸ்தர்களாகவோ வசிக்கவேண்டியவர்கள். குடும்ப அந்தஸ்துக்கு வரவேண்டியவர்களென்றே இவர்கட்குக் கல்வி புகட்டவேண்டும். குடும்பத்தில் பெண்ணானவள் தன் புருஷனுக்கு உகந்த உயிர்த்துணையாகி, நசரேத்தூரில் நமது தேவதாய் தன்பதியுடனும், குழவியுடனும் எங்ஙனம் நடந்து வந்தனரோ அவ்விதமே ஒழுகவேண்டியவள்.

புருஷனுடைய கஷ்ட நஷ்டங்கட்கும், துன்பதுரிதங்கட்கும், ஆலோசனைக்காரியும் துணையுமாயிருந்து, அவனது வரவைச் சிக்கனவே செலவிட்டு கெட்டகாலத்துக்கும் கிழத்தனத்துக்கும், வியாதி வருத்தத்துக்கும், கலியாணம் கல்வி முதலிய செலவுகட்கும் போதுமான மீதிவைத்து, அக்காலங்களில் புருஷனை அங்குமிங்கும் கடன்பட்டு பின் கடன்காரரிடத்தில் தலைகுனிந்து நாணி, அத்துடன் நில்லாது ஜெயிலுக்கும் போகவொட்டாமல் காக்ககடவாள். எத்தனையோ குடும்பங்களில் சாதாரண செலவுக்குமேல் ஏதும் நேர்ந்தால் கடன் வாங்கியே செய்ய ஏற்படுவதும், புருஷன் பெண்சாதி கூடிப்பிழைத்து இருக்கமுதலாய் ஓர் இல்லிடமின்றி வாழ்நாளெல்லாம் பிறர் வீட்டிலேயே பிறப்பும் இறப்பும் கழித்து பிள்ளைகளையும் அதோகதியாய் விட்டுவிடக் காரணம், பெண்கள் சிக்கனம் என்பதைச் சற்றும் கையாடாத குறைதான். சிறு வயதிலேயே இதைச் சிறுமிகட்குக் கற்றுக் கொடுத்துப் பழக்கவேண்டும்.

பிள்ளைகளை வளர்க்கிறவள் அவர்களை எங்கும் திரியவிட்டு, எதையும் தின்று, தெருக்களில் துஷ்டப்பிள்ளைகளுடன் கூடி, சிறுபத்திலேயே பொய், திருட்டு, பீடி, சிகரெட் முதலிய பழக்கங்களைப்பழகி, கொஞ்சம் வயதானதும் தாய்க்கும் தகப்பனுக்கும் அடங்காது அவர்களைக் கொடுமையாய் ஏசிப்பேசி உதைத்து, புறத்தியாருக்கும் இம்மாதிரியாய் நடந்து கோடேறிக் குற்றவாளிகளாகும்படி வளர்க்கிறதற்கு இவள் படியாத குறையன்றி வேறென்ன ?

ஆகையால் பெண்கள் பின்னால் தங்கள் காரியாதிகளை யோசித்துப் புத்திசாலிகளாய் நடந்துகொள்ள இவர்கள் அறிவை விர்த்தி செய்யும் கல்வி மிக்க அவசியம். இதினும் அறிவை ஓர் நிலையில் நிறுத்தி தன்னைச் சார்ந்தவர்களையும் அவ்விதமே நடத்த ஒழுக்கக் கல்வியே இன்னும் விசேஷம்.

கல்வியில் மூன்றுவிதமுண்டு. அவை பிரதம கல்வி, மத்திபக் கல்வி, உயர்தரக் கல்வி என்பவையாம். இவற்றில் சாதாரணமாய்க் கிறீஸ்துவச் சிறுமிகள் பிரதம கல்வியே கற்று வருகிறார்கள். மத்திபக் கல்வியும், உயர்தரக் கல்வியும் தற்போதுதான் ஆங்காங்கு சற்று கொண்டாடப்படுகின்றன. மங்களூரில் உயர்தரக் கலாசாலையொன்றும், சென்னையிலும், திருச்சிராப்பள்ளியிலும் மத்திபக் கல்விச் சாலைகளும் கத்தோலிக் பெண்களுக்கென ஏற்பாடாயிருக்கின்றன.

பிரதமக்கல்வி வாசகம், கணிதம், எழுதல், சொற்ப தையல், அம்மாதிரி சித்திரம் வரைதல், பாடல், குடும்ப சாஸ்திரம் சுகாதாரம், இயற்கையறிவு முதலியனவாம். அநேகர் இக்கல்வியுடன் நின்று விடுவார்களாதலால், வாசகம், கணிதம், எழுதல் முதலானவை பின்னால் இவர்கட்கு உபயோகமாயிருப்பதுமன்றி, தங்கள் பிள்ளைகட்கும் கற்றுக்கொடுக்கும்படியாயுமிருக்க வேண்டும். ஆகையால் இவர்கள் கற்கும்போதே இவர்களினும் சிறுவர்கட்கு கல்வி கற்றுக்கொடுக்கப் பழக்கவேண்டும்.

தையல் வேலையோ சாதாரணமாய் குடும்பங்களில் தையலுக்கு இருக்கும் சட்டை, சராய், பாவாடை, ரவுக்கை, ஜாக்கெட் முதலிய எதுவும் சுலபமாய் வெட்டவும் தைக்கவும் கற்கவேண்டும். படித்த பெண்கள் இதுவொன்றும் தெரியாமையால் தையல்காரருக்கு பணத்தைச் செலவிட்டு ஓய்வுநேரத்தை வீண்விளையாட்டிலோ, அக்கம் பக்க பெண்களுடன் கூடி வீண் வார்த்தையாடுவதிலோ செலவழிக்கிறார்கள். இதினால் ஆத்துமத்துக்கு



கெடுதியும் பொருள் நஷ்டமுமடைகிறார்கள். பள்ளிக்கூடங்களில் கற்றுக்கொடுக்கும் கன்னியர்கள் இதில் போதுமான பயிற்சியின்றி இருப்பது பெருத்த குறை. ஒவ்வோர் பள்ளிக்கூடத்திலும் ஓர் சிறிய தையல் யந்திரம் வைத்துப் பழகுவதுடன், விசேஷமாய் கைத்தையலைக் கையாடவேண்டும். பரீட்சைக்காகவென்று பழகாமல் ஜீவியத்துக்கென்றே பழக்கவேண்டும். இத்துடன் காலுறை, குல்லா, வலை, பனீன் முதலியவும் செய்யப் பழக்கமாகவேண்டும். ஐரோப்பிய கல்விச்சாலைகளில் இவற்றைக் கையாடியும், நமது பள்ளிக்கூடங்களில் இவற்றைக் கவனியாதிருப்பது மிகத் தப்பறை.

சுபகாலத்தில் மட்டுமின்றி விதவைகளானால் தங்களைப் பராமரித்துக்கொள்ள உதவும் தொழில்களை அத்தியாவசியம் இவர்கட்கு பள்ளிக்கூடங்களில் கற்றுக் கொடாததால், ஆத்துமக்கேடு நேரிட வெளியேறி ஈனமான தொழில்களைச் செய்ய நேரிடுகிறது. இவ்விதமாய் ஆத்துமக் கெடு அடைவதுமின்றி, உலகிலும் நிலைகுலைந்து நீசமாய் நடத்தப்பட்டு இருப்பிடமும் சுற்றமுமிழந்து, கடைசியாய் வேதத்தையும் புறக்கணித்து, அநேகர் அதோகதியாய் மரிக்கிறார்கள்.

(தொடரும்). A. P.

---

## A Tribute to Catholic Charity.

*(From " The Hindu Nesan.")*

## கத்தோலிக் தர்மத்தின் புகழ்ச்சி.

(" இந்து நேசனி " லிருந்து.)

## Nuns' Hospital at Coimbatore.

### கோயமுத்தூரில் கன்னியர் ஆஸ்பத்திரி.

**(ஸ்ரீமான் பி. எஸ். கே. ஐயங்கார் எழுதுவது).**

இந்தப் பெரியபட்டணத்தில் பொதுப்பணத்திலிருந்து நடத்தப்பட்டு வருகிற தர்ம ஆஸ்பத்திரிகள் இரண்டுதான்: டிஸ்டிரிக்டு போர்டாரால் நடத்தப்பட்டு வருகிற (General) ஜெனரல்

ஆஸ்பத்திரி ஒன்று, முனிசிபாலிட்டியாரால் நடத்தப்படும் ஆஸ்பத்திரி மற்றொன்று. இதைத் தவிர இன்னும் அநேக (private) பிரைவேட் ஆஸ்பத்திரிகளும் இருக்கின்றன. இந்த பிரைவேட் ஆஸ்பத்திரிகளால் ஏழை ஜனங்களுக்கு யாதொரு பிரயோஜனமும் கிடையாது. துட்டு உள்ளவர்களுக்குத்தான் இந்த ஆஸ்பத்திரிகளால் உபயோகம்.

இவ்வளவு பெரிய ஊருக்கு இந்த இரண்டு ஆஸ்பத்திரிகள் மட்டும் ஒருபோதும் போதாது. இன்னும் குறைந்தது மூன்று நான்கு ஆபஸ்த்திரிகள் தகுந்த இடங்களில் வைக்கவேண்டியது மிகவும் அவசியம். எவ்வளவு ஆஸ்பத்திரிகள் இருந்தாலும் அவ்வளவுக்கும் நோயாளிகள் இருப்பார்கள்; இதனால் ஆஸ்பத்திரிகள் அதிகப்பட,அதிகப்பட நோயாளிகளும் அதிகப்படுவார்களென்றும், ஆஸ்பத்திரிகள் குறைந்தால் நோயாளிகளும் குறைவார்கள் என்றும் எண்ணுவது தவறு. ஆஸ்பத்திரிகள் இல்லாததால் எவ்வளவோ நோயாளிகள் சரியான வைத்திய உதவி (medical aid). இல்லாமல் தவிக்கிறார்கள் என்பது இதனால் தெரியவரும்.

இந்தப் பெரிய முனிசிபாலிட்டிக்கு இப்படி ஆஸ்பத்திரிகள் இல்லாமல் இருப்பது பெரிய குறையேயன்றோ?

இந்தக் குறையை ஒருவாறு நிவர்த்திக்க கத்தோலிக் மிஷனைச் சேர்ந்த சில கன்னியர்கள் சேர்ந்து ஓர் ஆஸ்பத்திரி ஏற்படுத்திக்கொண்டு, அதில் தருமத்துக்கு ஜாதி மதம் வித்தியாசம் அன்னியில் வருகிற நோயாளிகளுக்கெல்லாம் மருந்துகொடுத்து வருகிறார்கள். இந்த ஆஸ்பத்திரியை சிஸ்டர் நேஸனானும் அவருக்கு உதவியாக இன்னுமொரு சிஸ்டரும் சேர்ந்து பார்த்துவருகிறார்கள். சிஸ்டர் நேஸனான் ஒவ்வொரு நோயாளியையும் தானே நேரில் பார்த்து விசாரித்து நேயாளியின் வியாதியை நேரில் பரிசோதித்து இன்ன வியாதியென்று தெரிந்துகொண்ட பின்தான் மருந்து கொடுக்கிறார்கள். நோயாளியைப் பார்க்காமல் மருந்து கொடுப்பதில்லை; இவர்கள் முகத்தில் எப்பொழுதும் புன்சிரிப்பும், அன்பும் பக்ஷமான பார்வையும் குடிகொண்டிருக்கின்றன. கொஞ்சங்கூட அலுப்பு என்பது இவர்களுக்குக் கிடையாது போலும். முகத்தில் கடுகடுப்பு என்பதே கிடையாது. இவர்கள் குழந்தைகளுக்கு மருந்து அன்போடு போடும் விதம் குழந்தையைப் பெற்றவர்களுக்குத் தெரியும் என்பது சந்தேகம். இவர்கள் வியாதியைத் தெரிந்துகொண்டுதான் பிறகு மருந்து



கொடுக்கிறதாலும், இவ்விடம் வந்த நோயாளிகள் தவறாமல் எந்த நோயாயிருந்தாலும் சொஸ்தமடையாமல் போவது இல்லையாகையாலும், ஜனங்களுக்கு இந்த ஆஸ்பத்திரிக்குப் போனால் கண்டிப்பாக சொஸ்தமடைவோம் என்கிற பூரண நம்பிக்கை ஏற்பட்டு விட்டபடியாலும், தினந்தோறும் காலை மாலை இரு வேளைகளிலும் ஏராளமான ஜனங்கள் இவ்விடத்திற்கு வருகிறார்கள். அதிலும் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இந்த ஆஸ்பத்திரியில் சேரும் கூட்டத்தைப் பார்த்தால் ஒரு திருவிழா என்றே தோன்றும். இவர்கள் எத்தனை நாள் மருந்து கொடுத்தாலும் சரி, வைத்தியம் பார்த்தாலும் சரி, அதற்காக ஒரு தம்படி கூட வாங்குவதில்லை. ஆயிரக் கணக்கான மைலுக்கு அப்பாலுள்ள தேசத்திலிருந்து முன்பின் தெரியாத இந்த தேசத்துக்கு வந்து இந்தத் தேசத்து பாஷைகளைத் தெரிந்துகொண்டு, தருமத்தையே விரதமாகக்கொண்டு நமக்கு உதவி புரியும் மேற்கண்ட இரண்டு பேருக்கும் கோயம்புத்தூர் வாசிகள் மிகவும் கடமைப்பட்டவர்களாயிருக்கவேண்டும். மற்ற இடங்களிலும் இவர்களுடைய நன்மாதிரிகை பின்பற்றப்படக்கடவதாக.

---

## A Lesson in Equality.

### சரிசமானத்தைப்பற்றி ஓர் படிப்பினை.

புஷ்பபுரி என்னும் ஊரில் கத்தோலிக் கோவிலில், கோவில் மணி அடிக்கும் சின்னப்பப் பண்டாரம் என்பவனும், கோவில் கின்னாரம் வாசிக்கும் துரைசாமிப்பிள்ளை என்பவனுமாகிய இரண்டு பிரதான உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். பங்குசுவாமியார் கின்னாரம் வாசிக்கிறவனுக்கு 15 ரூபாயும், மணி அடிக்கிறவனுக்கு 10 ரூபாயும் சம்பளம் கொடுத்துவருகிறார். ஒத்துழையாமையைப் போதிக்கும் யாரோ ஒருவன் மணியடிக்கிற சின்னப்பனிடம் போய், சகல மனிதர்களும், எல்லாவற்றிலும் சரிசமானமாயிருக்கிறார்களென்று போதித்துச் சொல்லியிருந்தான். அதை நம்பி சின்னப்பன் ஒருநாட் காலையில், பங்குசுவாமியாரிடம் போய், சொன்னதாவது :—“ சுவாமீ, உங்களுக்கு ஒரு காரியம் சொல்லவந்தேன்; சகல மனிதர்களும்

எல்லாவற்றிலும் சரிசமானமாயிருக்கிறார்கள், என்று சொல்லுகிறார்கள். அதற்கு விரோதமாய் நமது கோவிலில் ஒரு காரியம் நடக்கிறது.”

பங்குசுவாமியார்—“என்னப்பா அந்தக் காரியம்?” சின்னப்ப பண்டாரம்:—“கோவில் மணி யடிக்கும் வேலை கஷ்டமான வேலையாயிருந்தபோதிலும், என் சம்பளம் வெகு குறைவாயிருக்கிறது; கின்னரம் வாசிக்கும் துரைசாமி பிள்ளை சுளுவான வேலை செய்தாலும், 15 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொள்ளுகிறார்; நான் தினந்தோறும் தகுந்த நேரத்தில் மணி அடிக்க, கயிற்றில் என்னைத் தொங்கவிட்டு, கயிற்றை இழுத்து, தலை குனிந்து, இடுப்பு சாய்ந்து, கீழ்மேல், இந்தப் பக்கம், அந்தப் பக்கம் ஆடி, வேர்வை வேர்த்து கஷ்டப்படுகிறேன். கின்னரம் வாசிக்கிற துரைசாமி பிள்ளை சுகமாய் உட்கார்ந்துகொண்டு, தமது கை விரல்களை இங்குமங்கும் ஆட்டிக்கொண்டு கின்னரம் கொட்டி யாதொரு கஷ்டமில்லாமல் 15 ரூபாய் சம்பளம் வாங்கிக்கோள்ளுகிறார். எனக்குச் சம்பளம் அதிகம் கொடுக்கவேணும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன், சுவாமீ.”

பங்குசுவாமியார்:—“நீ சொல்லுகிறது ஒரு விதமாய் நியாயமாயிருக்கிறது. இதைப்பற்றி யோசனை செய்வேன், போய்விட்டு வா, சின்னப்பா.” சிலநாட் கழித்து பங்குசுவாமியார், சின்னப்ப பண்டாரத்தைக் கூப்பிட்டு, அவனை நோக்கி, “சின்னப்பா, நீ அன்று எனக்குச் சொன்ன காரியத்தைப்பற்றி யோசனை செய்துகொண்டு, அதைப்பற்றி துரைசாமிபிள்ளையிடம் பேசினேன். அவனுக்கு சின்ன வயது; வாலிபன்; உனக்கு வயது ஆகிறதுமல்லாமல், இந்த நிலைமை எல்லாருக்கும் இருக்க வேண்டிய சரிசமானத்துக்கு விரோதமாயிருக்கிறதென்று, அவனே ஒத்துக்கொள்ளுகிறான். ஆகையால் அவன்தானே, மணி அடிக்கும் வேலை செய்துவரவும், நீ கின்னரம் வாசித்து வரவும் ஒப்புக்கொண்டான். கின்னரத்தின்மேல் உன் கை விரலகளை ஆட்டிக்கொண்டு, உன் வயதுக்குத் தகுந்த வேலை செய்து 15 ரூபாய் சம்பளம் வாங்கிக்கொள்ளலாம்,” என்றார்.—அதைக்கேட்டு, சின்னப்ப பண்டாரம் கொஞ்சம் திகைப்படைந்து, “சுவாமீ, நான் என்ன செய்வேன், என் கைவிரல்களை கின்னரத்தின்மேல் ஆட்டுவது, எவ்விதம் என்று, எனக்குத் தெரியாது” என்றான். பங்குசுவாமியார்:—சிரித்துக்கொண்டு “அது ஒரு வித்தியாசந்தான் அல்லவா? ஆனால் நீ துரைசாமி பிள்ளை செய்கிறதுபோல, உன் கைவிரல்களை ஆட்டும்படி செய்ய



முடியாது, என்று ஒருவரும் நினைக்கவில்லை ஏனெனில் சகலருக்கும், இருக்கவேண்டிய சரிசமானத்துக்கு இது ஒரு விரோதம் அல்லவா!” என்று சொன்னார்.

சின்னப்ப பண்டாரத்துடைய சம்பளம் அந்தச் சமயத்தில் அதிகரிக்கப்படவில்லை. (Olim.)

---

## Like father, like son.

### தகப்பனெப்படி மகனெப்படி (தொடர்ச்சி.)

இவ்விதமாகத் தந்தையானவன் யார் சொன்னாலும் கேட்பதுமில்லை. பெண்சாதியானவள் தன் குடும்பத்தின் நிலைமையையும், கஷ்டத்தையும், பின்பு குடியினால்வரும் கெடுதியையும், எவ்வளவுதான் எடுத்துச் சொன்னாலும், செவிடன் காதில் குசுகுசு மந்திரம் ஓதினதுபோல, ஒன்றையும் சட்டைபண்ணாமல் தன் மனப்போக்கிலேயே திரிந்து, கடைசியாக தன் குடும்பத்திற்கு அபகேடும், உலக நிந்தையும் வருவித்துக்கொண்டதுமன்றி, தானே தன் பிள்ளைகட்கு துர்மாதிரிகை காட்டுபவனுமானான். இரு பிள்ளைகளில் ஒருவன் தாய் சார்பாகவும், ஒருவன் தந்தை சார்பாகவும் நடந்துவந்தார்கள். தாய் சொற்கு அடங்கி நடந்த பையனோ, சரியாய்ப் பாடசாலைக்குப் போய் உபாத்தியாயர் கற்பித்த பாடங்களையும் நல்லொழுக்க முறைகளையும் கற்றும் கேட்டும், கல்வியிற் சிறந்து, பெரிய மகான்களுடைய புத்திமதிகளைக் கேட்டு, பெரிய உத்தியோகஸ்தனாகி, யாவராலும் கண்யமாய் மதிக்கப்பெற்றவனுமாகி, தன் குடும்பத்திற்கு ஓர் குன்றின்மேலேற்றிய தீபம்போற் றுலங்கினான்.

ஆனால், தகப்பன் சொற்கேட்ட பையனோ தகப்பனுடன் கூடி கள்ளுக்கடை, சாராயக்கடைகட்குப் போய் குடி பழகி, தகப்பன் புட்டிக் குடியன் கலயக்குடியனென்றால், மகன் காலன் குடியன் முடாக் குடியன் என்று சொல்லும்படி பேர் வாங்கினார்கள். இப்பையனுக்கு தாயானவள், இதவார்த்தை சொல்லி கட்டாயப்படுத்தி பாடசாலைக்கு அனுப்பிவைத்தாலோ, அங்கு கிரமமாய்ப் போகாமல் ஓடி, ஒளிந்து, துஷ்டர்களுடன்

கூடி, சூதாட்டத்திலும், திருட்டிலும், பொய் பேசுவதிலும் வல்லவனாகி, வம்புச் சண்டை வளர்ப்பதிலும், விபசாரத் தொழிலும் மேன்பட்டவனாகி யாவருக்கும் அடங்காமல், தகப்பனிலும் இருமடங்கு துஷ்டனென்று பெயரெடுத்தான். இதுவெல்லாம் சிறுபோதே தகப்பன் கொடுத்த செல்லத்தினாலும், இளக்காரத்தினாலும், துர்ப்பழக்கத்தினாலுமேயன்றி வேறல்ல. அது எப்படியென்றால், சமயா சமயங்களில், தகப்பன் தான் கள்ளுக்கடைக்குக் குடிக்கப் போகும்போது, தனது மகனையும் கூடவே கூட்டிப்போவதும், மகன் எப்படி நடந்தாலும், என்ன செய்தாலும் அவனைக் கண்டியாமல்விட்டதும், தான் குடிக்கும்போது மகனுக்கும் கொடுத்துக் குடிக்கப் பழக்கினதுமே காரணமாகும்;—பையன் ஆரம்பத்தில் குடிக்கப் பழகும்போது, மகன் தகப்பனைப் பார்த்து, அப்பா, சீ! இது நாறுகிறது நானிதைக் குடிக்கமாட்டேன் என்றாலோ, தந்தை,—இல்லையடா மகனே கொஞ்சம் குடி. இது உடம்புக்கு நல்லது என்று கட்டாயப்படுத்திக் கொடுக்கக் குடி பழகினான்.—இப்படியே பையன் தந்தையாற் கெட்டுப் பெருங் குடியனாகி, வயது ஏற ஏற சகல துர்க்குணங்களிலும் மிதமிஞ்சிப் போனான். கடைசியாய் தாய்தந்தையர்க்கடங்காமல் அவர்களுக்கு உதையும் குத்தும் கொடுக்க ஆரம்பித்துவிட்டான். கடைசியாய் வீட்டுச் சொத்தைத் திருடவும், சூதாடவும், மனம்போல் நடக்கவும் ஏற்பட்டு, பெருந்திருட்டில் அகப்பட்டு ஜெயிலுக்கும் போய்ச்சேர்ந்தான்.—இவ்வளவுக்கும் காரணம் தாய் தந்தையரே என்று சொல்லலாம். பெற்றோர்களே, நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள், நீங்கள் உங்கள் பாலகர்களுக்கு முன்பாக சண்டை போட்டாலும், கண்டபடி பேசினாலும், குடித்தாலும், குடிபழக்கினாலும், துஷ்டர்களுடன் சேரவிட்டாலும், மற்றும் எதையும் (மனம்போல்) செய்யவிட்டாலும், அவர்கள் சிறுபத்தில் நன்றாய்ப் பழகிக்கொள்வார்கள். மரமானது சிறு நாற்றாயிருக்கையில், நன்றாய் வளைக்கவும், வேருடன் பிடுங்கிவிடவும் செய்யலாம்; ஆனால், மரம் வளர்ந்து பெரிதாகி முற்றிச் சேகு ஏறிப்போனாலோ, யாவராலும் வளைக்கவாவது பிடுங்கவாவது முடியாதல்லவா? அதுபோலவே, பையனானவன் பெரியவனானபிறகு, தான் ஆரம்பத்தில் எவ்விதப் பழக்கத்திற் பழகினானோ அவ்விதப் பழக்கத்திலிருந்து மாறுவது மிகவும் கஷ்டமாமே. தன் மனம்போன போக்கின்படியல்லவா நடக்கப்பார்ப்பான்.—"ஐந்தில் வளையாதது, ஆயிரத்தில் வளையுமா?" "தொட்டிற் பழக்கம், சுடுகாடுமட்டும்"



என்ற பழமொழிப்படி நடந்தேறும்; அப்புறம் என்னசெய்வது. "சொற்கேளாப் பிள்ளை இருந்தென்ன போயென்ன, எட்டிமரம் காயாயிருந்தென்ன காய்த்துப் பலனென்ன இப்பாருலகில்" என்பதையொப்ப.

பெற்றோர் அப்பிள்ளையால், பெருந் துன்பத்தையும், சஞ்சலத்தையும், அவமானத்தையுமல்லவோ அடையவேண்டும். ஆகையால், பெற்றோர்களே, நீங்கள் மிருகங்களைப்போல் பெற்று வளர்த்த குழந்தைகளால் வந்த லாபம் என்ன? எல்லாருடைய ஆத்துமங்களுக்கும் கெடுதிதானே. இதனால், நீங்கள் எந்த வேலை செய்தபோதிலும், உங்கள் மக்களை நல்வழியில் நடத்தி, அவர்கட்கு நன்மாதிரி காட்டி, தெய்வபயத்துடன் சன்மார்க்கத்தைச் சார்ந்தொழுகும்படி அல்லும் பகலும் அவர்கள்மட்டில் கண்ணோக்கமாய் இருக்கவேண்டும்.—"குடியினாற் குடி கெட்டுப்போகும்".

S. M. S. G.

---

## Page for the Young.
### பிள்ளைகளின் பக்கம்.

### A noble example.

ஓர் உன்னத நன்மாதிரிகை.

அநேக வருஷங்களுக்குமுன் ஜெர்மனி தேசத்தை ஆண்டுவந்த பேர்போன பிரொடெரிக் மகா சக்கரவர்த்தியினிடத்தில் ஓர் சிறந்த கத்தோலிக் தளகர்த்தர் சேவித்தார். இவர் அநேக யுத்தங்களில், விசேஷமாய் ஏழு வருஷ சண்டை என்னும் யுத்தத்தில், ஜெயமும் கீர்த்தியும் பெற்று, தன் அரசனுக்கு மிகவும் பிரியப்பட்டவராயிருந்தார். ஓர்நாள் பிரொடெரிக் மகா சக்கரவர்த்தியானவர் தன்னோடு விருந்தமர வரும்படியாய் இவருக்கு அன்போடு ஓர் அழைப்புக் கடிதம் அனுப்பினார். ஆனால் விருந்துக்காகக் குறிக்கப்பட்ட நாள் இவர் வழக்கமாய் திவ்யநன்மை வாங்கும் நாளாயிருந்தமையால், இவர் அந்த சங்கதியை அரசனுக்கு வெளிப்படுத்தி, அன்றையத்தினம் விருந்தமர்ந்தால் தனக்கு பாசாங்குக்கு இடமுண்டாகுமாகையால் தான் வரமுடியா

தென்றும், அதனிமித்தம் தன்னை மன்னிக்கவேண்டுமாயும் மிகவும் வணக்கத்துடன் கேட்டுக்கொண்டார்.

இது நடந்து கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, அரசன் இவரை நோக்கி, "ஐயா! தளகர்த்தரே! அன்றையத்தினம் உமது திவ்ய நன்மைக் கடமை சுகமாய் நடந்தேறியதா? என்று கேட்க, சுற்றிலுமிருந்த இராஜ பரிவாரங்கள் குலுங்கச் சிரித்தார்கள். ஆனால் நமது தளகர்த்தரோ, அஞ்சா வீரத்துடன், அரசனை அணுகி, வணங்கி, "மகா இராஜாவே! உமக்காகவும் என் தேசத்துக்காகவும் அநேக ஆபத்துக்களில் என் உயிருக்கு முதலாய் அஞ்சாமல் நான் போர் செய்திருப்பதை நீர் அறிவீர். இன்னும் அப்படியே எத்தனை தடவையானாலும் செய்யக் காத்திருக்கிறேன். ஆனால் உமக்கும் எனக்கும் இந்த மனித குலத்துக்குமே மேலான அதிவல்லபமுள்ளவர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு நாம் ஊழியஞ் செய்யவேண்டியது எல்லாவற்றிலும் மேலான கடமையாயிருக்கிறது. அவரோ என் ஏக நம்பிக்கையும், என் உயிருமாயிருக்கிறார். ஆகையால் என் முன்பாக அவருக்கு உம்மாலும் மற்ற யாதொருவனாலும் அவசங்கை நேரிடவிடேன்" என்று திடாரிக்கமாய் உரைத்தார். இவ்வார்த்தைகளை செவியுற்ற அரசன் மனங்கரைந்து, "ஐயா, நீரே பாக்கியவான். உமது பரிசுத்த வேதத்தில் மென்மேலும் ஊன்றியிரும். அதை நான் வெகுவாய் மதிக்கிறேன். இனி அதை நகைக்க நான் ஒருபோதும் இடங்கொடேன்" என்று பதிலுரைத்தார்.

ஆகையால், பிள்ளைகளே! உங்கள் வார்த்தைகளிலும், கிரியைகளிலும், தனித்தும், மற்றவர்களுக்கு முன்பாகவும், நீங்கள் சேசுக்கிறீஸ்துவின் சீஷர்களென்று சகலரும் அறிய கிறீஸ்துவர்களுக்குரிய விதமாய் நடக்கவேண்டும். நீங்கள் பேசும்போதும், வேலை செய்யும்போதும் எங்கேயிருந்தாலும் எல்லா இடங்களிலும் உங்கள் திவ்ய வேதத்தை அநுசரிக்கப் பயப்படாமல் அப்போஸ்தலர்கள் பாவனையாய் ஜீவித்து அர்ச். சின்னப்பரோடு 'சுவிசேஷத்தைப்பற்றி நான் வெட்கப்படமாட்டேன்' என்று உறுதியாய்ச் சொல்லவேண்டும். மேலும் உங்களுக்கு முன்பாக எவரும் நமது வேதத்தைத் தூஷணித்தாலும், திருச்சபைக்கு விரோதமாகப் பேசினாலும், குருக்களை நிந்தித்தாலும், நீங்கள் தைரியமாய் எதிர்த்துப் போராடவேண்டும். உங்கள் வேதத்தின் கடமைகளை உறுதியாயும் தைரியத்தோடும் அநுசரிக்கிறதை அஞ்ஞானிகளும், கெட்ட கிறீஸ்துவர்களும் பார்க்



கும்போதும் உங்கள் விசுவாசத்தைக் கண்டு ஆச்சரியப்பட்டு தங்கள் உள்ளத்தில் நீங்கள் மற்றவர்களைவிட நல்லவர்களென்று மதிப்பார்கள். ஆனதுபற்றி முகத்தாட்சணியத்துக்கு இடங்கொடாமல் உங்கள் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவீர்களேயாகில் உங்களை நகைத்தவருள்ளத்திலும் தேவ அருளால் விசுவாசம் விளையுமென்பது உறுதி. போதகன்.

---

## Here and There.

### நாநா சங்கதிகள்.

**H. L. the Bishop of Coimbatore:**—கடந்த மாதம் மாகானம் பொருந்திய கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்கள் பள்ளப்பாளையம், கருமத்தன்பட்டி, புக்லிபாளையம், முதலிய பங்கு விசாரணைகளில் உறுதிபூசுதல் என்னும் தேவதிரவிய அநுமானத்தை நிறைவேற்றினார்.

**Transfers:**—சங். A. புசியர் சுவாமியார் ஒத்தகமண்டு திரு இருதயக் கோவில் பங்கு விசாரணைக்கும், சங். L. துர்னியேசுவாமியார் நீலகிரியிலுள்ள கூடலூர் பங்கு விசாரணைக்கும் மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

Report of the Society of Foreign mission for the year 1920:—

| | | கோயமுத்தூர் மேற்றிராசனம். |
|---|---|---|
| மேற்றிராசனங்கள் | 35 | |
| கத்தோலிக்கரின் தொகை ... | 1680216 | 44014 |
| கோவில்கள் ... | 6393 | 126 |
| ஐரோப்பிய வேதபோதகர்கள் ... | 1139 | 32 |
| சுதேச குருக்கள் ... | 1109 | 20 |
| உபதேசிமார் ... | 3449 | 35 |
| குருமடத்திலுள்ள வித்தியார்த்திகள். | 2527 | 12 |
| சந்நியாசிகள் ... | 442 | 10 |
| கன்னியாஸ்திரிகள் ... | 7188 | 123 |
| மனந்திரும்பின அஞ்ஞானிகள் ... | 28883 | 336 |
| பாடசாலைகள் ... | 5085 | 70 |
| மாணுக்கர்கள். ... | 192354 | 5294 |

**Retreat** :—ஆகஸ்ட் மாதம் 22-ம் தேதி முதல், 28-ம் தேதிவரை, கோயமுத்தூர் மேற்றிராசனத்தைச் சேர்ந்த ஐரோப்பிய குருக்களுடைய ஞான ஒடுக்கம் நடைபெறும்.

**Trichur** :—மகா சங். பிரான்சிஸ் வாசப்பள்ளி சுவாமியார் திரிச்சூர் விக்கர் அப்போஸ்தொலிக்காக, நியமிக்கப்பட்டு, சென்ற ஜூலை மாதம், 6-ம் தேதி, ஆண்டவர் பட்டம் பெற்றார். கடவுள் அவருக்கு வேண்டிய அருட்பிரசாதமும், நீடிய ஆயுளும் கொடுப்பாராக.

**Catholic Club, Coimbatore** :—சென்ற ஜூன் மாதம் 25-ம் தேதி, மேற்படி கிளப் ஹாலில் சங். எஸ். அம்புரோஸ் நாத சுவாமியவர்களின் அக்கிராசனத்தின் கீழ், நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தில் மெம்பரில் ஒருவரும், முனிஸிபல் கவுன்ஸிலருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ ஆ. பெரியநாயக முதலியார் அவர்கள் பி. ஏ., எல். டி. ஒற்றுமைப்பு என்பதைப்பற்றி ஓர் சிறந்த உபந்நியாசம் செய்தார். அப்போது விளக்கிக் காட்டிய பல விஷயங்களில், கோவாப்பரேட்டிவ் சொஸைட்டிகளால் ஏற்படும் நன்மைகளும், அவைகளைக் கத்தோலிக்கராகிய நமக்குள், ஏற்படுத்தவேண்டிய அவசரமும் மிகக் கவனிக்கத்தக்கவையே.

**Vigil of the assumption** :—இந்த வருஷம் தேவமாதா மோட்சத்துக்கு எழுந்தருளின திருநாளுக்கு முந்தின நாள் ஞாயிற்றுக்கிழமையில் வருகிறபடியால் அன்றையத்தினம் சுத்தபோசனக் கடன் நீங்கிவிடும்.

**Cinema** :—பெல்ஜியம் இராச்சியத்தில் சர்க்காரார் சினெமபையோஸ்கோப் என்னும் படங்கள் விஷயத்தில், சில மேன்மையும், கண்டிப்புமான சட்டங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மேலும் 16 வயதுக்குக் கீழ்ப்பட்ட வாலிபர்கள் பையோஸ்கோப்புக்குப் போகக்கூடாது என்று கட்டளையிட்டிருக்கிறார்கள்.

**Vatican** :—சத்தியவேதம் ஆரம்பித்த காலந்தொடங்கி, தற்போது அர்ச். பாப்பரசருடைய அதிகாரம் அதிகமாகப் பரவியுள்ளதென்பதற்கு அத்தாட்சி 31 தேசங்களில் வத்திக்கானிலிருந்து ஸ்தானாபதிகள் அனுப்பப்பட்டு, இவர்கள் பாப்பரசரின் பிரதிநிதிகளாக இருப்பதே.

**Scarcity of water** :—இங்கிலாந்தில் மிகுந்த தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டதின் காரணமாக, ஒரு மரக்கால் ஜலம் 3½ பென்ஸ் வீதம் விற்கப்பட்டு வருகின்றதாம்.

---


# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

**Vol. VII.** **September 1921.** **No. 9.**

**புத்தகம் VII.]** FIDES AC ROBUR. **[நம்பர் 9.**


17 SEP 1921

## The Wedding Garment.

### கலியாண வஸ்திரம்.

பரலோக இராச்சியமானது தன் குமாரனுக்குக் கலியாணம் செய்த ஓர் இராஜனுக்கு ஒப்பாயிருக்கின்றது. கலியாணத்துக்கு அழைக்கப்பட்டவர்களைக் கூப்பிடும்படி அவன் தன் ஊழியனை அனுப்பினான். அவர்களோ வர மனமில்லாதிருந்தார்கள். மீளவும் அவன் வேறு ஊழியனை அனுப்பி, இதோ என் விருந்தை ஆயத்தம்பண்ணினேன்; என் எருதுகளும், கொழுக்க வளர்த்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டிருக்கின்றன; எல்லாம் தயாராயிற்று, கலியாணத்துக்கு வாருங்களென்று, அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்கள் என்றான். ஆனால், அவர்கள் அதை அலட்சியம்பண்ணி, ஒருவன் தன் கிராமத்துக்கும், ஒருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள். மற்றவர்களோ அவனுடைய ஊழியனைப் பிடித்து அவமானப்படுத்திக் கொன்றுபோட்டார்கள்.

அரசன் இதைக் கேள்விப்பட்டுக் கோபமடைந்து, தன் இராணுவத்தை அனுப்பி, அந்தக் கொலைபாதகனைச் சங்கரித்து, அவர்களுடைய பட்டணத்தையும் சுட்டெரித்தான். அப்பொழுது அவன் தன் ஊழியனைப் பார்த்துச் சொன்னதாவது:

கலியாண விருந்து ஆயத்தமாயிருக்கிறது. அழைக்கப்பட்டவர்களோ அபாத்திரரானார்கள். ஆகையால் நீங்கள் வழிச்சந்துகளிலே போய், காண்கிற யாவரையும் கலியாண விருந்துக்கு அழைத்துக்கொண்டு வாருங்கள் என்றான். அப்படியே ஊழியர் புறப்பட்டு, வீதிகள்தோறும் போய், எதிர்ப்பட்ட நல்லவர்கள், பொல்லாதவர்கள் எல்லாரையும் கூட்டிக்கொண்டு வந்தார்கள். கலியாண சாலையும் பந்தியமர்ந்தவர்களால் நிறைந்தது.

பந்தியமர்ந்தவர்களைப் பார்க்கும்படி அரசன் உள்ளே பிரவேசித்தபோது, அங்கே கலியாண வஸ்திரம் அணியாத ஒருவனைக் கண்டு: சிநேகிதனே! கலியாண வஸ்திரமின்றி, நீ இங்கே எப்படி பிரவேசித்தாய்? என்று கேட்க, அவன் மௌனமாயிருந்தான். அப்போது அரசன் பணிவிடைக்காரரை நோக்கி: இவனுடைய கை கால்களைக் கட்டி, இவனை வெளியே இருளிலே தள்ளுங்கள்; அங்கே அழுகையும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றான். ஏனெனில்: "அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சொற்பப்பேர்" என்று திருவுளம்பற்றினார். (மத். 22. 2-14.)

---

## The Golden Jubilee of the Rev. Father Constantin Biolley.

27th September 1871-27th September 1921.

**சங். கோன்ஸ்தாந்தின் பியோலே சுவாமியார் குருப்பட்டம் பெற்ற 50-ம் வருஷ தங்க ஜூபிலி.**

நீலகிரி ஒத்தகமந்து அர்ச். மோட்ச இராக்கினி மாதாக் கோவில் பங்குக் குருவான (தைரியநாதனென்னும்) கோன்ஸ்தாந்தின் பியோலே சுவாமியார், 1871-ம் வருஷம் செப்டெம்பர் மாதம் 27-ம் தேதியில் குருவாய் அபிஷேகம் பெற்றார். ஆனதால் இவ்வருஷம் செப்டெம்பர் மாதம் 27-ம் தேதியோடு அவர் குருப்பட்டம் பெற்று 50-வருஷங்களாகின்றன.



சேசுநாதர்சுவாமி ஸ்தாபித்த கத்தோலிக்குத் திருச்சபையில் 50-வருஷகாலம் குருவாய் இருப்பது வெகு விசேஷமான காரியம். அப்படி 50-வருஷம் குருவாய் இருப்பவர்களில் கடைசிமட்டும் சரீர சௌக்கியத்தோடும், புத்தித் தெளிவோடும் இருந்து, பிறர் ஆத்தும இரட்சண்ணியத்துக்காக உழைக்கும் வெகு சொற்பப்பேர்களில் இந்த நல்ல குருவானவர் ஒருவர். இந்த 50-வருஷகாலங்களில், 40-வருஷங்களுக்கு அதிகமாய் ஒத்தகமந்தில், கத்தோலிக்குக் கிறீஸ்துவ ஜனங்களின் நன்மை விர்த்திக்காக வருந்தி உழைத்து வேலை செய்து வந்தவர். ஆனதால் நன்றியறிதலுள்ள கிறீஸ்துவர்கள் தங்கள் குருவானவரை வாழ்த்திப் புகழ்ந்து, தங்கள் அன்பையும், நன்றியறிதலையும் இச்சமயத்தில் வெளிப்படையாய்க் காட்டக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். அப்படியே ஒத்தகமந்து கிறீஸ்துவர்கள் யாவரும் கூடி தங்கள் நல்ல மேய்ப்பனின் தங்க ஜூபிலிநாளைச் சிறப்பிக்கும்படி வேண்டிய முயற்சி செய்கிறார்கள் எனக் கேள்விப்பட்டு சந்தோஷிக்கிறோம்.

இந்தத் தங்க ஜூபிலி உற்சவம் இம்மாதம் 27-ம் தேதியன்று ஒத்தகமந்து அர்ச். மோட்ச இராக்கினி மாதாக் கோவிலில் நடைபெறுமென்றும், அந்நாளில் நமது மகா வந். மேற்றிராணி ஆண்டவர் அவர்களும், அநேக குருமார்களும் அங்கு சென்று, இச்சுபதினத்தைச் சிறப்பிப்பார்களென்றும் கேள்விப்படுகிறோம். சுபம்! (பத்திராதிபர்.)

---

## The Little Garden of Roses.

**சிறு ரோஜாத் தோட்டம்.**

மலர். 17 முன் தொடர்ச்சி.

3. மரித்த விசுவாசிகளுக்காகத் தேவ பலிபூசை செய்விப்பவனும், அல்லது அவர்களுக்காக அடிக்கடி பூசைகண்டு ஒப்புக்கொடுப்பவனும், அல்லது மரித்தவர்களுக்கான ஒப்பீசை அடிக்கடி பத்தியுடன் செய்விப்பவனும், அந்த ஆத்துமங்களின் உத்த

ரிப்புக் கடனை மன்னித்து அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுத்தருளவேண்டுமாய்க் கெஞ்சிக் கேட்கச் சேசுவோடு லாசரின் கல்லறைக்கு வருகிறார்கள்.

ஞானவாசகம் வாசிக்கப்படுவதைக் கேட்பதற்குத் தன் சகோதரர்களுடன் பொதுபோஜன சாலைக்குப் போகிறவன், சேசுவோடும் அவருடைய சீஷர்களோடும் ஒரே பந்தியிலமர்ந்து உண்டு களிப்பவனாவான்.

அசனசாலையில் தான் கேட்ட திருவசனங்களை மனதிலாழமாய்ப் பதித்துவைப்பவன், கடைசி இராப்போசன வேளையில் அர்ச். அருளப்பரோடு சேர்ந்து சேசுவின் மார்பில் சாய்ந்திருப்பவன்போலாவான்.

தனக்கு வருத்தத்தைக் கொடுக்கக்கூடிய காரியத்தைத் தடையின்றி செய்ய மகா சிரவணத்துடன் கீழ்ப்படிகிறவன், தமது சத்துராதிகளுக்குக் காட்டிக்கொடுக்கப்பட்டு அவர்களுக்குக் கையளிக்கப்பட்ட சேசுவை கல்வாரிமலைக்குப் பின்செல்பவனாவான்.

கஸ்தி துன்பங்களிலும், விசேஷமாய்த் சந்திர சோதனை நேரங்களிலும் சர்வேசுரனுடைய உதவியைத் தேடியோடி உருக்கமாய்ச் செபிப்பவன், தன்னுடைய இக்கட்டு இடையூறுகளில் சேசுவோடு தானும் சேர்ந்து பசாசோடு போராடுபவனாகிறான்.

தன் சித்தத்தைப் பின்பற்றி நடவாமல், சேசுவோடு சேர்ந்து மோட்ச பிதாவின் திருச்சித்தத்தைச் சம்பூரணமாய் நிறைவேற்றுபவன், கல்வாரிமலைக்கு அவருடைய திருச்சிலுவையை மிகுந்த தைரியமுள்ள பொறுமையோடு சுமந்து செல்பவனாகிறான்.

தன் பகையாளிகளின் குற்றங்களை முழுமனதோடு பொறுத்து, மறந்து அவர்களைச் சிநேகித்து, அவர்களுக்காகச் சர்வேசுரனை மன்றாடுபவன், சேசுவோடு சேர்ந்து தன் சத்துராதிகளுக்கு யாதொரு மோசம் வராமலிருக்கவும், அவர்கள் மனந்திரும்பி சுகிர்த வழியில் நடக்கவும் அவர்களுக்காகப் பரமபிதாவை மன்றாடுகிறவன்போலாவான்.

இவ்வுலகீக இன்ப சுகங்களையெல்லாம் வெறுத்து, ஐம்புலன்களின் ஆசாபாசங்களை அடக்கி மனந் தத்தளியாமல் சேசுவின் பேரில் உறுதியான நம்பிக்கை வைப்பவன், அவரோடு



சிலுவையில் மரிக்கப் பாக்கியவானாவான். அப்போது அவனுடைய ஆத்துமம் பரகதியில் களிகூர்ந்திருக்கும்.

4. இருதய சுத்திகரமுள்ளவனாயும் சமாதான குணமுள்ளவனாயுமிருப்பவன், சேசுவை ஓர் அழகிய வெள்ளைப் பரிவட்டத்தால் மூடி அவரைத் தன் நெஞ்சில் அடக்கஞ் செய்துகொள்ளுகிறான்.

அர்ச். வியாகுலமாதா அநுபவித்த துக்கதுயரங்களை நினைத்து கஸ்திப்பட்டுக் கண்ணீர் சிந்துபவன், அப்பரிசுத்த தாயாராலும் அவளுடைய திருக்குமாரனாலும், தனக்கு நேரிடும் இக்கட்டு இடையூறுகளிலும், விசேஷமாய் தனது அந்தியகாலத்திலும் ஆறுதலும் தேறுதலுமடையப் பாத்திரவானாவான்.

சேசுவின் திரு வசனங்களையும் அவர் செய்த அரிய பெரிய காரியங்களையும் தன் மனத்துள் வைத்துத் தியானிப்பவன், ஞான போசனத்தைக் கண்டடைவதுமல்லாமல் தனது ஆசாபாசங்களின் கசப்பை மாற்றுதற்குரிய இனிப்பான இரசத்தைத் தயார் செய்கிறவனாவான்.

தான் பெற்றுக்கொண்ட உபகார சகாயங்களுக்குக் கைமாறாக மிகுந்த மனப்பற்றுதலோடு நன்றி செலுத்துபவன், மரிய மதலேனம்மாளோடு சேர்ந்து சேசுவின் திருக்கல்லறைக்குப் பரிமள தைலத்தைக் கொண்டுவருகிறான்.

மகாத் தாழ்ச்சி விநயத்துடன் தான் கட்டிக்கொண்ட பாவ தோஷங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, இனிமேல் அப்பேர்ப்பட்ட பாவங்களைச் செய்வதில்லையென்று உறுதியான பிரதிக்கினை செய்து தன் நடத்தையைச் சீர்திருத்திக்கொள்பவன், சேசுவோடு பாவமாகிய மரணத்தினின்று ஞானவிதமாய் உயிர்த்தெழுகிறான்.

புண்ணிய வர்த்திப்பில் கோழைத்தனமுள்ளவனாயும், வெதுவெதுப்புள்ளவனாயுமிராமல் இரட்சண்யமடையவேண்டுமென்கிற ஆவலும், சாங்கோபாங்கத்திலுயரவேண்டுமென்கிற ஆசையுமுள்ளவன், சேசுவோடு சேர்ந்து புதிய பாஸ்காவைக் கொண்டாடுவதுமன்றி, அல்லேலுயாவென்கிற சந்தோஷமான பாட்டை அவரோடு சேர்ந்து பாடுகிறவனாவான்.

உலகவின்பங்களை வெறுப்பவன் அதன் அபாயங்களினின்று தப்பியோடுகிறான். பத்தி முதலிய புண்ணியங்களினால் தனது ஆத்துமத்தை அலங்கரிப்பவன் சேசுவின் சீஷர்களோடு

சேர்ந்து அவருடைய திரு இருதயத்துக்குள் பிரவேசிக்கிறான். அங்கே அவர் அவனைத் தமது திவ்விய இருதயத்தின் அந்தரங்க ஸ்தானத்தில் ஸ்தாபித்து, சாங்கோபாங்கத்தின் கொடுமுடியில் ஏறுவதற்கான தமது கொடைகளையும் ஆசீர்வாதங்களையும் ஏராளமாய்ப் பொழிவார்.

உலக திரவியங்களிடத்து பற்றற்று நிற்பவனும், மோட்சத்துக்கடுத்த காரியங்களைப்பற்றி நினைவாயிருந்து அவைகளைப்பற்றித் தியானிப்பவனும், சேசுவோடு இப்பூமியை விட்டு மோட்சத்துக்கேகுகிறார்கள்.

எந்த ஆத்துமம் கிறீஸ்துநாதர் தனக்குச் சீவனும், மரணமும், ஆதாயமுமாயிருக்கிறாரென்று எண்ணுகிறதோ, அவ்வாத்துமம் ஆசீர்வதிக்கப் பெற்றதாகும். ஏனெனில் அப்பேர்ப்பட்டவன் இவ்வுலகத்துக்குச் செத்தவனாய் சர்வேசுரனுக்காக மாத்திரம் ஜீவிக்கிறான். சேசுவின் சிநேகத்தின் இன்பத்தை அநுபவிப்பதில் ஞான சந்தோஷத்தைக் காட்டுபவன், அழிந்து போகும் வஸ்துக்களின் பற்றையொழிக்கிறான்.

இப்பிரபஞ்ச சுக செல்வப் பொருள்களை விட்டு ஒரே மட்டாகப் பிரிவது வருத்தத்தைத் தருவது. மரணமும் துக்ககரமானது. ஆனால் தேவ இஷ்டப்பிரசாதத்தில் முற்றமுடிய நிலைநின்று சேசுவோடு சந்தோஷமாகவும் சமாதானமாகவும் வாழ்பவன், இரட்சண்யத்தின் பேறுபலன்களைக் குறையறப்பெற்று நித்திய ஜீவியத்தையடைவான்.

சர்வேசுரன் எனக்கு எல்லாமாகவும், அவருக்கு நான் எல்லாமாகவும் இருக்கும் நேரம் எப்போது வரும்? சர்வேசுரனோடு நான் ஒன்றிக்கும் காலம் எப்பொழுது வாய்க்கும்? ஏனெனில் சர்வேசுரனுடைய சோதிப்பிரதாப மகிமையைத் தரிசித்து, அவரோடொன்றித்து அவருடைய ஆநந்தத்திற்குப் பங்காளியானாலல்லாமல் விசுவாசமுள்ள ஆத்துமம் தேவாசீர்வாதத்தைப் பூரணமாய்ப் பெறமுடியாது.

தேவ அன்பினால் நடத்தப்பட்டு உன் ஜீவியகால முழுவதும் என்றும் தளராத விசுவாசத்தோடும் பழுதற்ற மெய்யான தேவ சிநேகமுள்ளவனாய்ச் சேசுவைப் பின்பற்றி நட. முடிவில் சம்மனசுகளுக்குச் சுகசெல்வ ஸ்தலமுமாய், மகிமை ஆநந்த பாக்கியங்களுக்கிருப்பிடமாகிய சர்வேசுரனுடைய பரம வீட்டில் அவரை முகமுகமாய்த் தரிசிக்கும்படியான பாக்கியத்தைப் பெறுவாய்.



இம்மங்களகர பேரின்ப காட்சியைத் தரிசிக்க, சகல மனுஷர் ஈடேற்றத்துக்காகச் சொல்லிலடங்காத நிர்ப்பந்தங்களுக்கும், கடைசியில் சிலுவையில் கடின மரணத்துக்குமுள்ளாகத் திருவுளமான நமது திவ்விய இரட்சகராகிய சேசுநாதர் நமக்குக் கிருபைபுரிவாராக. ஆமென். (இன்னும் வரும்)

S. S. G.

## The cost of drinking.

## குடியின் செலவு.

ஜீவனத்துக்கு வேண்டிய சரக்குகளின் விலை, உயர்ந்திருக்கிறதென்று, ஜனங்கள் எல்லாரும் நன்றாயறிவார்கள். ஆனால் குடியினால் விளையும் பண நஷ்டம் எவ்வளவென்று குடிகாரர் நினைக்கிறதில்லை. நினைத்தாலும், அவர்கள் அதை வெளியே சொல்லுகிறதுமில்லை.

தற்காலம் குடியினால் விளையும் கேடுகளை நினைத்து உணர்ந்து, சில ஊர்களில் கிறீஸ்துவர்களும், அஞ்ஞானிகளும், அந்தச் சபிக்கப்பட்ட குடியை, முழுதுமே விலக்கிவிடவேணுமென்று, பற்பல வழிபாடுகளை ஏற்படுத்தித் தீர்மானம் செய்துவருகிறார்கள். இது மெத்தவும் நன்மையே.—சீர்மையிலிருந்துவரும் சரக்குகளையும், துணிமணிகளையும் புத்தியீனமாய் வெறுத்துத்தள்ளி, நெருப்பிலேபோட்டுச் சுட்டெரிப்பதைவிட, இலாகிரி வஸ்துக்களை நீக்கிவிட்டால், ஜனங்களுக்கு எவ்வளவோ நன்மையாயிருக்கும். குடியினால் உண்டாகும் பண நஷ்டத்தைக்காட்ட தினந்தோறும் வேலைசெய்து பிழைக்கும், இருபது வயதுள்ள வாலிபனொருவன் குடிக்கத்துவக்கி தினம் 2 அணாச் செலவழிக்கிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். வருஷத்தில், 45 ரூபாய் 10 அணா செலவு ஆகிறது. திருநாட்களில் 2 அணாவுக்குமேல் செலவு செய்கிறது வழக்கமாகையால், ஏறக்குறைய வருஷமொன்றுக்கு ரூ. 50 ஆகும்; இப்படி 20 வருஷம் குடித்தால் மொத்தச்

செலவு ரூ 1000; சிறுபத்திலேயே குடிக்கத்துவக்கி, 40 வயதில் குடியை விட்டவர்கள் வெகு சொற்பப்பேர்; ஆகையால் 60-வயதாகும்போது, குடியால்மட்டும் ஆனசெலவு ரூ 2000 என்று சொல்லலாம். ஒரு ஊரில் 100 பேர் குடிகாரர் இருந்தால், இதன் செலவு மொத்தம் 2 ஆயிரம் அல்லது 200 ஆயிரம், அதாவது இரண்டு லட்சம் ரூபாய் வீண் செலவு செய்திருப்பார்கள். இவர்கள் குடும்பமோ மகா நிற்பாக்கிய ஸ்திதியில் இருக்கும்; தங்கள் பிள்ளைகளைப் படிக்கவைக்கப் பணம் இராது. அணிந்திருக்கும் வஸ்திரமோ, அழுக்கடைந்த பழைய கந்தைத்துணி; வேளா வேளைக்குச் சாப்பாடு இல்லை. படுக்கப் பாய் இல்லை. குடியிருக்கும் சிறு குடிசை தவிர இவர்களுக்குச் சொந்தமானது ஒன்றும் இல்லை. ஏதாகிலும் ஒரு துண்டு பூமி, ஒரு வீடு, நகைநட்டு முதலிய சொற்பச்சொத்து இருந்தாலும், அவை அடமானத்திற் கிடக்கும்; கடன் அதிகமென்றாலும், தங்கள்பேரில் குற்றமுண்டென்று, கனவிலும் நினையார்கள்; பிறர்தான் குற்றவாளிகள்; சர்வேசுரன் தங்களை இந்த நிற்பாக்கிய அந்தஸ்தில் வைத்திருக்கிறார் என்று முறையிடுவார்கள்.

கள்ளு, சாராயக்கடைகளில் பணத்தை எறிகிறதற்குப்பதிலாய், தினம் 2 அணாச்சேர்த்து வைத்தால் 20 வருஷத்தில் ரூபாய் 1000 மாத்திரமல்ல, அதற்குள்ள வட்டியும் சேர்ந்திருக்கும்; இத்தொகையை மூலதனமாக வைத்துக்கொண்டு, வியாபாரம்செய்து ஆஸ்திக்காரர் ஆய்விடலாம்.

அநேக தனவந்தர்களும், உத்தியோகஸ்தர்களும், கள்ளுக்கடைக்குப்போவது மரியாதைக்குறைவு, வெட்கக்கேடு என்று எண்ணி, பிராந்தி, உவிஸ்கி, முதலிய சீர்மைச்சரக்குகளைத் தங்கள் வீட்டுக்கு வரவழைத்து, புட்டிபுட்டியாய் உடைத்து இஷ்டமானபோதெல்லாம், மனங்கொண்டபடி குடிக்கிறார்கள். நாள் ஒன்றுக்கு 8 அணா, குடியில் செலவழிக்கிறார்களென்று வைத்துக்கொள்வோம். வருஷத்தில் 182½ ரூபாய் ஆகிறது. திருநாள் செலவைச்சேர்த்தால், ஏறக்குறைய ரூ 200. இருபது வருஷத்தில் ரூ 4000. ஏன் தினந்தோறும், 8 அணா சேர்த்துவைக்கக்கூடாதென்று கேட்டால், எனக்கு ஏராளமான வரும்படியுண்டு, இந்த 4000 ரூபாய் என்னை ஆஸ்திக்காரனாக்கப் போகிறதில்லையென்பார்கள். இது மெய்யாயிருக்கலாம். ஆனால்; இந்த 4000 ரூபாயும் தர்மத்தில் செலவழித்தால், அவர்கள் ஆத்துமத்துக்கும், பிறருக்கும் எவ்வளவு நன்மையாயிருக்கும்.



ஒரு ஊரில் நல்ல அந்தஸ்திலுள்ள 10 கிறீஸ்துவர்கள் மதுபானத்தில் பணத்தைச் செலவழிக்கிறதற்கு பதிலாய், தினந்தோறும் 8 அணாச் சேர்த்துவைத்து வருவார்களானால், எவ்வளவு சீக்கிரம் தங்கள் ஊரில் ஒரு புதுக்கோவிலையாவது, புதுப்பள்ளிக்கூடத்தையாவது, கட்டி வைக்கலாம், அல்லது வேறே ஏதாவது பிரயோஜனமுள்ள தர்மகாரியத்தைச் செய்யலாம்; அப்படிச்செய்துவந்தால், மோட்சத்துக்காக, என்றும் அழியாத ஆஸ்தியைச் சேர்த்துக்கொள்ளுவார்கள்.

(சத்திய நேசன்.)

---

## Female Education.

### மாதர் கல்வி (தொடர்ச்சி.)

பெண்கள் தொழில் கற்றிருந்தால் இவ்வித அலங்கோலைகள் சம்பவிக்காது. கோயமுத்தூருக்கு அருகில் காரமடையில் தற்காலம் பனீன், காலுறை முதலியவைகள் செய்து கடைகளில் விற்கிறார்கள். பெண்கள் பள்ளிக்கூடங்களில் இவற்றைக் கற்றுக்கொடுக்கத் தக்க ஏற்பாடு செய்தால் கத்தோலிக் பெண்களுக்கும், விதவைகளுக்கும் வீட்டிலிருந்து யாதும் சம்பாதிக்க நல்ல தொழிலாகும்.

பெண்கள் சுலபமாய் கையாடக்கூடிய இன்னொரு தொழில், பாய் நெய்தலாம். இத்தொழில் தென் தேசத்திலும், இப்பக்கங்களிலும் முஹம்மதிய பெண்கள் செய்துவருகிறார்கள். தென் தேசத்தில் சாதாரணமாய் ஒருநாளைக்கு 1 ரூபாயளவு சம்பாதிக்கிறார்கள். கோயம்பத்தூர் ஜில்லாவில் உபயோகிக்கும் கோரைப் பாய்கள் விசேஷமாய் கரூர், தாராபுரம், இத்தாலூகாக்களிலுள்ள முஹம்மதிய ஸ்திரீகளால் செய்யப்படுகின்றன. கத்தோலிக் பெண் பாடசாலைகளிலும் இதைக் கற்றுக்கொடுப்பது மிகவும் நல்லது.

இன்னும் கிராமப் பள்ளிக்கூடங்களில் சிறுமிகளுக்குக் கோழி முதலிய வீட்டுப் பறவைகளை வளர்த்தல், மரக்கறி தோட்டம் போடல் முதலியவும் கற்றுக்கொடுக்கலாம். அநேக கிரா

மங்களில் வீட்டுப் பறவைகளை வளர்த்துவந்தாலும், அவைகளினால் அடையக்கூடிய பலன் முழுதும் அடைகிறதில்லை. மேலும் எவ்வளவு காலி இடமிருப்பினும் மரக்கறி செடிகளைப் பயிர்பண்ணி லாபமடையாது சும்மா காலியாகவே விட்டுவிடுகிறார்கள். இதுவெல்லாம் போதுமான பயிற்சி இல்லாமையால் ஏற்படும் முயற்சியின்மையின் குறைவாம்.

பெண்கள் புருஷனையும், பிள்ளைகளையும் பராமரித்து வீட்டிலேயே இருந்து ஜீவித்துக் கூடுமானால் ஓய்வு நேரங்களில் முற்கூறிய ஏதோ ஓர் அலுவல் செய்து குடும்பத்திற்கு உதவாது, தற்காலம் பட்டணங்களில் புதிய நாகரீகத்தை அனுசரித்து கல்வியினால் அடையக்கூடிய உத்தியோகத்தைத் தேடித்திரிகிறது அவர்களுக்கும், அவர்கள் குடும்பங்களுக்கும் மிகக் கேவலமாம்.

தற்கால நாகரீகத்தையொட்டி அனேகர் உபாத்திச்சிகளாகவோ, மருத்துவச்சிகளாகவோ ஏற்படுகிறார்கள். இவர்கள் மெலுக்காய் உடுத்தித் தெருக்களில் செல்லுங்கால் தாங்கள் மற்றவர்களினும் ஏதோ ஓர் பெரிய பதவி அடைந்துவிட்டோம் என நினைக்கிறார்கள்போலும்; ஐயோ பரிதாபம்! இவர்கள் போர்டு பள்ளிக்கூடங்களிலும், சர்க்கார் ஆஸ்பத்திரிகளிலும் ஆண்களுக்கிடையில் வேலை செய்ய நேரிடுவதால், எப்போதும் சோதனைக்குரிய சமயத்திலேயே இருக்கிறார்கள். சோதனை சமயங்களை விலக்கவேண்டியிருக்க, இவர்கள் தங்களைத் தாங்களே இழுத்துச் செல்லுகிறார்கள்! கன்னியர் பள்ளிக்கூடங்கள், பெண் உபாத்தியாயர்களால் நடத்தப்படும் பெண் லாக்கா பள்ளிக்கூடங்கள், பெண்களால்மட்டும் நடத்தப்படும் ஆஸ்பத்திரிகள், சொற்பமாயும், சொற்பத்தொகையான உத்தியோகஸ்தர்களே இவற்றிற்கு அவசியமாயுமிருப்பதாலும், கத்தோலிக் மாதுக்கள் இவைகளில் அலுவல் இல்லாவிடில் வேறிடங்கட்குப் போகவேண்டியிருக்கிறது. ஆகையால் ஆபத்துள்ள இந்த உத்தியோகங்களைக் கூடிய மட்டும் விலக்கவேண்டும். இவ்வுத்தியோகங்கள் ஆத்துமத்திற்கு ஆபத்து உண்டாக்குவதுமன்றி, குடும்பங்களுக்கும் பெருத்த தின்மையை விளைவிக்கின்றன. புருஷன் ஓர் இடத்திலும், பெண்சாதி ஓர் இடத்திலும் இருக்க நேரிடுகிறதும், புருஷனைப் பெண்சாதி மதியாமல் கேவலமாய் நடத்துவதும், புருஷனுக்கும் பிள்ளைகளுக்கும் வேண்டிய உணவைத் தான்செய்யாமல் புறத்தியாரிடம் ஒப்பிப்பதும், தாயும் தகப்பனும் வீடுவிட்டுப் போனபின், பிள்ளைகள் இஷ்டம்போல் தெருவில் திரிவதும், கவனிக்கும் தாய்,



வீட்டில் இல்லாததால், குழந்தைகள் அடிக்கடி வியாதியடைவதும், சிறு வயதிலேயே வியாதிப்பட்டு சரியான கண்காணிப்பின்றி இறப்பதும் சகஜமாம்.

இக்காரணங்களை முன்னிட்டே ஐரோப்பிய மாதுகள் கலியாணத்திற்குப்பிறகு உத்தியோகம் செய்கிறதில்லை. ஆனால் வீட்டிலிருந்துகொண்டு மருத்துவச்சியாயும், டாக்டராயும் இருக்கலாம். கத்தோலிக் தாய் தகப்பன்மார்களும், உபாத்தியாயர்களும் இவ்விஷயங்களைச் சரியாய் கவனித்து வரவேண்டியது அத்தியாவசியம். A.P.M.

(இன்னும் வரும்.)

---

## The Uplift of the Catholic Community.

### கத்தோலிக்கரின் முன்னேற்றம்.—(தொடர்ச்சி).

**சரித்திரம்.**—ஒருகாலத்தில் அரசன் ஒருவன் ஒருநாள் தன் உத்தியோகஸ்தருடன் வெளியில் உலாவப்போயிருந்த காலத்தில், சுமார் 80 வயதுடைய வயோதிபனொருவன் தனது தோட்டத்தில் ஒரு மாங்கன்றை நட்டுக்கொண்டிருப்பதைக் கண்ணுற்று, தனது உத்தியோகஸ்தரைப் பார்த்து, “அதோ, அங்கே, காண்கிற அக்கிழவன் எத்தன்மையான பேதமையுடையவனாயிருக்கின்றான்! இன்னும் வெகு காலத்துக்கு ஜீவனோடிருந்து, அம்மாங்கன்றின் பலனை அனுபவிக்கப் போகின்றவன்போல் வெகு சிரமத்துடன் அம்மாங்கன்றை நட்டுக்கொண்டிருக்கின்றான்” என்று சொல்லி அக்கிழவனைப் பரிகசிக்குந் தன்மையாய் நகைமுகங் காட்ட, அவனது உத்தியோகஸ்தரும் அவ்வாறே செய்தனர். பின்னர், அரசனும் மற்றவரும் அக்கிழவனை அணுகி, கிழவனை நோக்கி, அரசன், “ஓ கிழவனே, உனக்கு வயது என்ன” என்று வினவ, “எனக்கு வயது 80; ஆயினும் தேகத்தில் இன்னும் பெலனிருக்கிறதாக அறிவேன். ஆனதுபற்றி இன்னும் உழைக்க எனக்குச் சத்துவம் உண்டு” எனக் கிழவன் விடை பகர்ந்தனன். மீண்டும் அரசன் கிழவனை நோக்கி, “இன்

னும் எவ்வளவு காலத்துக்கு உயிரோடிருக்கப் போகின்றாய்? இன்னும் நெடுங்காலம் ஜீவிக்கக் கூடியவன்போல் வெகு கஷ்டப்பட்டு இம்மாங்கன்றை நட்டுக்கொண்டிருக்கின்றாய். இதன் பலனை அனுபவிப்போம் என்கிற நம்பிக்கை உனக்கு இருக்கிறதா? இது என்ன பைத்தியகாரத்தனமான செய்கை!" என்று வியப்புடன் வினவ, கிழவன், "ஓ, மகாராஜாவே! நான் இன்னும் சொற்ப காலந்தான் ஜீவிக்கக்கூடும். ஆனதுபற்றி இக்கன்றின் பலனை நான் அனுபவிக்கப் போகிறதில்லை என்று செவ்வனே நான் அறிவேன். ஆயினும் நம்முடைய முன்னோர் செய்ததுபோல நாமும் செய்வதே தகுதி. அவர்கள் மரங்களை நட்டார்கள். அவைகளின் பலன்களை நாம் இப்போது அனுபவிக்கின்றோம். ஆனதுபற்றியே நானும், என்னுடைய புத்திரர் புத்திரிகளும், பௌத்திரர்களும் அனுபவிக்கும் பொருட்டே இக்கன்றை நடுகின்றேன்" என்றான்.

இவ்வித மறுமொழியைக் கேட்ட அவ்வரசன் மிக்கச் சந்துஷ்டியுடையவனாய் அக்கிழவனுக்கு பத்து ரூபாயைச் சன்மானமாக அளித்தான். அப்போது அக்கிழவன் சிரித்துக்கொண்டு, "இக்கன்றை யாதும் பிரயோசனமின்றி நான் நட்டிருக்கிறதாக யார் இப்போது சொல்லக்கூடும்? நான் இக்கன்றை நட்ட இன்றே அது எனக்குப் பத்து வெள்ளி மாம்பழங்களைக் கொடுத்திருக்கின்றதே" என உரத்துக் கூவினன்.

கனவான்களே, இச்சரித்திரத்தால் நாம் செய்யவேண்டியது இன்னதென "உள்ளங்கை நெல்லிக்கனிபோல்" விளங்கவில்லையா? ஆனதால் நாம் நம்முடைய ஜீவிய காலத்தில் நம்முடைய சொந்த நன்மைப் பயனை ஒன்றையே கருதி யாதாமொரு கிருத்தியத்தைச் செய்யவோ, அல்லது அவ்வித நன்மைப் பயனை நாம் அடையவா போகின்றோம்? இல்லை, என்கிற எண்ணத்தால் நம்மாற் கூடியதைச் செய்யாது விடவோ தகவே தகாது. நாம் அனுபவித்தாலும் சரி, பிறர் அனுபவிக்கிறதாயிருந்தாலும் சரி, நம்மாற் கூடியதை நாம் செய்து வரவேண்டும்.

ஆதலால், நம்மிடத்துள்ளனவாகிய மேற்காட்டிய அசமந்தம், ஒற்றுமை இல்லாமை, பிறசிநேகக் குறைவு ஆகிய இம்மூன்று துர்க்குணங்களையுங் களைந்துவிட்டு, புறமதஸ்தரைப்போல் முன்னேற்றத்துக்கான ஏற்பாடுகளை நிரூபித்தொழுக முயலுவோமாக. அவ்வாறு செய்வதற்கு அத்துர்க்குணங்களின் உட்காரணங்கள் யாவை என சற்று சிந்தனை



செய்து, அவற்றை முந்தமுந்த களைந்தெறியவேண்டியது ஆவசியகத்திலும் ஆவசியகம்.

அவ்வுட்காரணங்கள் யாவையென யோசித்துப் பார்க்குமிடத்து, என்புத்திக்கு அவை மூன்றெனப் புலப்படுகின்றன. அவையாவன, பணச் செருக்கு, கல்வியின் செருக்கு, ஜாதி மேன்மைச் செருக்கு என்பனவையாம்.

பணச் செருக்கு:

சிலர் தங்களிடத்துள்ள ஆஸ்திபாஸ்திகளால் கர்வங்கொண்டு, பிறருடையவும், விசேஷமாய் ஏழை எளியவர்களுடையவும் க்ஷேமத்தைச் சற்றுமே கருதாததுடன், அன்னோரை ஈனமும் செய்கின்றனர். கடவுள் பார்த்து அவர்கட்குக் கொடுத்த செல்வத்தால் இவ்விதம் செய்வாராயின், அக்கடவுளே அவர்களை நாளையத்தினம் வறிஞராகச் செய்துவிட்டால், அவர்களது கர்வம் எங்கே. தான் எனும் ஆணவம் எங்கே. அவர்கள் இவ்விஷயத்தை தங்கள் புத்தியில் ஸ்திரமாய் இருத்தி, அதற்குத் தக்கவாறு ஒழுகல் வேண்டும். கடவுள் அன்னோருக்குச் செல்வத்தைக் கொடுத்தது, அவர்கள் பிழைக்கமட்டுமல்ல. மற்றவர்களுக்கும், முக்கியமாய் எளியோருக்கும் அதைக்கொண்டு கூடியதும் வேண்டியதுமான உதவிபுரிந்து, அவர்களது வறுமை நீங்கும்படிக்கான உதவிகள் புரிந்து வரவேண்டும். இல்லையாயின், ஒரு நாள் வரும், அப்போது கடவுள் முன்னிலையில் தங்கள் செல்வத்தைப்பற்றிக் கண்டிப்பான கணக்குக் கொடுத்து அதின் பயனை அனுபவிக்கவேண்டி வரும்.

கல்வியின் செருக்கு: சிலர் தங்கட்குள்ள கல்வியின் மேன்மையைப்பற்றி இறுமாப்புக் கொண்டு, அக்கல்வி விஷயத்தில் தங்கட்குக் கீழானோரை அற்பமாய் எண்ணி அவமதித்து வருவதுடன், அக்கீழானோரில் யாராவது கல்வி விஷயத்தில் உயர முயலுங்கால், அவர்கட்கு பலவிதத்திலும் தடைகள் செய்து, அவர்களது ஊக்கமும் நம்பிக்கையும் குன்றும்படிக்கான உபத்திரவங்களைப் பிரயோகம் செய்து, இத்தன்மையாய் அவர்களது அந்தஸ்தை அமுக்கிவிடப் பார்க்கிறார்கள். என்ன பரிதாபம்! கடவுளுக்கு இவர்கள் என்னதான் கணக்குக் கொடுப்பார்களோ அறியேன். இதிலும் விந்தையான விஷயம் ஒன்று என்னவெனில், தாங்கள், கல்வியில் உயர முயலும் அவர்கட்கு வேறு யாராவது உதவிபுரிய முன்னுக்கு வருங்கால், அம்முன்னுக்கு வருபவருக்குத் துர்ப்புத்தி சொல்லி, "இடுவார் [illegible]

கெடுவார் கெடுப்பர்" என்னும் பழமொழிக்கொப்ப அவர்களைக் கெடுத்துவிடுகின்றனர். இவ்வாறு அவர்களைக் கெடுக்கின்றவர்கள் இறுதியில் கெடுவார் என்பது நிட்சயம்.

ஜாதி மேன்மைச் செருக்கு:

ஜாதி யிரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்,
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்,
இட்டார் பெரியோ ரிடாதார் இழிகுலத்தோர்,
பட்டாங்கி லுள்ளபடி.

என்னும் பாடலுக்கொப்ப, ஜாதி ஆண் பெண் இரண்டே தவிர வேறு ஜாதி இல்லையென்று சொல்லவேண்டியது. அவ்வாறிருப்பின், நான் மேல் ஜாதி, அவன் கீழ் ஜாதி என்று வாயில்வந்தபடி உளறிக்கொண்டு, கீழ் ஜாதி என்று அவர்கள் எண்ணுபவர்களுடன் வெறுப்புக்கொண்டு, அவர்களைத் தங்களுடன் சேரவிடாமலும், பேசவிடாமலும் செய்து வருவதுடன், அவர்கள் ஏதோ கடவுள் கிருபையால் உயர் பதவிக்கு வருவதைக் கண்ணுறுங்கால், பொறாமை எனும் பேய்பிடித்தவர்களாய் அவர்கள் எப்போது வாழ்வடைவார்களோ என்னும் தகாத கருத்தை உட்கொண்டவர்களாய், அவ்வித தாழ்விற்கு அவர்கள் வரும்படிக்கான உபாயங்களையெல்லாம் தேடா நிற்பார்கள். ஆகையால், கனவான்களே, இத்யாதி விஷயங்களை நன்குணர்ந்து, அவைகள் நம்மிடத் திருக்குமாயின் அவற்றைப் பற்றற நீக்கிவிட்டு நன்மையைக் கடைப்பிடித்தொழுகுவோமாக.

[தொடரும்.] C.S.D.

---

## Where is happiness.

## பாக்கியம் எங்கே?

இக்காலங்களில் எப்பக்கத்திலும், எவ்விடத்திலும், இரவும் பகலும் சகலரும் இக்கால நிலைமையைப்பற்றி துவித்து முறையிடுகிறார்கள்.



கடைகளுக்குப் போனாலோ, நமக்குத் தேவையாயுள்ள சகல சரக்குகளும் நாளுக்குநாள் கிராக்கியாகி அதிக விலைக்கு விற்கப்படுகின்றன. 7 வருடங்களுக்குமுன், ஒரு ரூபாய்க்கு விற்கப்படும் பொருள், இப்போது இரண்டு அல்லது 3 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஒரு சாதாரண வீட்டை வாடகைக்குக் கேட்டாலோ, 2 ரூபாய் வாடகையுள்ள வீட்டுக்கு 4 அல்லது 5 ரூபாய் கொடுக்கவேண்டும்.

தொழிலாளிகள் நல்ல கூலி சம்பாதித்தாலும் வயிற்றுக்குப் பற்றாது என்றும், வேலை அதிகமென்றும் முறையிடுகிறார்கள்; கைத்தொழிற்சாலையின் எஜமான்களோ, வேலைக்காரர் கூலி, சம்பளம் போதாதென்று சொல்லுகிறதொழிய, மற்றப்படி அதிக வேலையைக் கொடுத்து நடப்பிக்கிறதற்குப்பதிலாய், சாலையிலுள்ள வேலையையே குறைத்துவிடப் பார்க்கிறார்கள். வேலையாட்களோ, "ஆம், அல்லது இல்லை," என்னும் ஒரே சொல்லுக்காக கோபித்துக்கொண்டு வேலையைவிட்டுப் போய்விடுகிறார்கள்; தங்களுக்கு வெகு கஷ்டமும், நஷ்டமும் என்பது, எஜமான்களுடைய முறைப்பாடு; அவ்விதமே சகல உத்தியோகஸ்தர்களும், அவரவர்களுடைய எஜமான்களும் தாங்கள் தங்கள் கஷ்டத்தைச் சொல்லி முறையிடுகிறார்கள்.

புகைவண்டியேறிப் பயணம்செய்யப்போனாலோ, டிக்கட் கிரயம் அதிகம். ஒரு காகிதத்தை அனுப்பவேணுமானால், தபால்கூலி அதிகம். பூமி, வீடு, முதலியவற்றின் கிரயமும், வாடகையுமன்றி, மற்றும் எங்கே பார்த்தாலும் பணத்தைப்பற்றியேதான். அவைகளுக்கு ஏற்பட்ட சர்க்கார் வரிகளோ அதிகம். இதுகளைப்பற்றியே சங்கடமும், முறைப்பாடும்.

இந்த நாகரீக காலமாகிய 20-ம் நூற்றாண்டென்னும் இக்காலத்திற்கூட, இவ்வுலகில் கொஞ்சமாகிலும் பாக்கியமுண்டோ? சந்தோஷமுண்டோ? அப்படி இருந்தால், எங்கே அகப்படும்? பட்டணம், ரெயில்வே, மோட்டார்கார், சினேமா, முதலியவைகட்காக அப்பாலேபோய்த் தேடுவோமானால், ஒரு சின்ன கிராமத்தில் ஒரு பாக்கியமுள்ளவனைக் காணலாம். அவன் பட்டிக்காட்டில் ஜீவிக்கிறான். அவன் குடும்பஸ்தன். அவனுக்கு ஒரு சொந்த வீடும், 5 ஏக்ரா தோட்டமும், 2 மாடும், 6 ஆடுகளும், கோழிகளும், தோட்டத்தில் பலவித காய்களும், பழ வகைகளும் உண்டு. அவனுக்குப் பெண்சாதி பிள்ளைகளும் இருக்கிறார்கள். வேலைக்குக் குறைவில்லை. சாப்பாட்டுக்கும் குறைவில்லை. அவனே

தன் மக்களோடு தன் சொந்த நிலத்தில் வேளாண்மை செய்கிறான். அவன் மனைவி வீட்டுவேலை பார்த்துக்கொண்டு, சிறு குழந்தைகளை அன்பாய் விசாரித்து, வஸ்திரங்களைச் சுத்தமாய்க் கசக்கி, தைத்துப் பழுதுபார்க்கிறாள். அவனுக்கோ, கொல்லத்துக்காரன், தச்சன், கொல்லன், தையற்காரன் முதலியவர்கள் தேவையில்லை. தானே அவசரமாயிருக்கும்போது, இந்த வேலைகளையெல்லாம் செய்வான். ஒற்றுமையாமையென்பது அவனுக்குத் தெரியாது. அவன் யாதொரு ஹெட்மாட்டர்களுக்கும் பயப்படவேண்டியதில்லை. அவன் சுவாதீனமாய் தன் வாழ்நாளைக் கழித்துவருகிறான்.—அவனுக்கு அதிக ஆசையும், அதிக நஷ்டமும் கிடையாது. அவன் உத்தம கிறீஸ்துவனாயிருப்பதினால் ஞாயிற்றுக்கிழமைதோறும், தன் நல்ல குடும்பத்தோடு தவறாமல் பூசைக்குப் போகிறான். தினந்தோறும் இராத்திரியில், தன் பெண்சாதி பிள்ளைகளோடு முழந்தாட்படியிட்டு பக்தியுடன், "பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவை," நோக்கி, "அன்றன்றுள்ள எங்கள் அப்பம், எங்களுக்கு இன்று தாரும்," என்று வேண்டிக்கொள்ளுகிறான். அவனுடைய நித்திரை அமரிக்கையாயிருக்கிறது. கவலையின்றித் தூங்குகிறான். அவனே இவ்வுலகத்தில் பாக்கியவான், பரலோகத்திலும் பேரின்ப பாக்கியத்தை அனுபவிப்பான்.

(Olim.)

---

## Page for the Young.

### பிள்ளைகளின் பக்கம்.

### Avoid the Occasions of Sin.

### பாவத்துக்கு ஏதுவான சமயங்களை விலக்குதல்.

ஓர் ஊரில் திரவியவானான அமலதாஸ் என்ற ஓர் வாலிபனிருந்தான். இவன் தகப்பன் இறந்தபிறகு அவன் சம்பாதித்த பொருட்களையெல்லாம் வீணிலேயும், துர் விஷயங்களிலும் செலவழித்தான். அமலதாஸுக்குள்ள பல துர்ப்பழக்கங்களில் சூது



விளையாடுவது ஒன்று. சூது விளையாடச் சென்றால் கைப்பணத்தை இழந்து வெறுங்கையாய் வீட்டுக்குத் திரும்பிவருவான். இவன் தாயும் பந்துக்களும் பலமுறை சொல்லியும் இவன் கேட்கவில்லை. அமலதாஸ் வெளியே விளையாடப்போகும்போது இவன் கூட ரோவர் என்ற இவன் வீட்டு நாயும் போவது வழக்கம்.

ஒருநாள் இவன் வழக்கம்போல் கையில் பணமெடுத்துக்கொண்டு சூது விளையாடப் போகும்போது, அவனுடைய உத்தம சிநேகிதர்களிலொருவனாகிய அருள்தாஸ் இவனுக்கெதிரே வந்தான். உடனே அமலதாஸைப்பார்த்து, "நண்பா! ஏன் இன்று தனியாய்ச் செல்கின்றாய்? எப்போதும் உன்கூட வருகிற நாய் ஏன் இன்று வரவில்லை" என்று கேட்க, அமலதாஸ் சொல்வான்: "நேற்று என்னோடு ரோவர் அந்த வீட்டுக்கு வந்தபோது எப்படியோ வீட்டுக்குள்ளே நுழைந்தது. துஷ்டப் பயலான அவ்வீட்டுக்காரன் பிரம்பெடுத்து சுரீர் என்று நாயை அடித்தான். இன்றைக்குக்கூட வரும்படி எவ்வளவுதான் கூப்பிட்டாலும் நேற்று விழுந்த அடியை நினைத்து வரமாட்டேனென்று வீட்டிலேயே நின்றுவிட்டது."

இச்சங்கதியைக் கேட்ட அருள்தாஸ் புன்சிரிப்புடன் தன் சிநேகிதனைப் பார்த்து: "மித்திரா! நான் உனக்கு ஒன்று சொல்லப்போகிறேன் அதைப்பற்றி நீ என்மேல் கோபித்துக் கொள்ளக்கூடாது. "உனக்கு இருக்கும் அறிவைப்பார்க்கிலும் உன் நாய்க்கு அதிக அறிவு இருக்கிறது. நாய் ஒருவிசை அந்த சூது விளையாடும் வீட்டில் அடிபட்டபின்பு திரும்பி அங்கே போகாமல் நின்றுவிட்டதே. ஆனால் நீயோ எத்தனைவிசை சூதாடப்போய்க் கைப்பணத்தை இழந்து வெட்கமும் அவமானமும் பெற்று வந்திருக்கிறாய்? உனக்குப் புத்தி இன்னம் வரவில்லை. அடிபட்டபின்னும் சூது விளையாட அந்த வீட்டுக்குப் போகிறாயே! இது நல்லதல்ல" என்று சொன்னான். இந்த ஞாயத்தைக் கண்கூடாய்ப் பார்த்தநாள்முதல் அமலதாஸுக்குப் புத்திவந்து தன் துர் நடத்தையை மாற்றித் தர்மவழியில் திரும்பினான். அதுமுதல் அவன் காட்டிய துர் மாதிரிகைக்குப் பரிகாரஞ்செய்து நல்லவனாய் நடந்துவந்தான்.

ஆகையால் பிள்ளைகளே! உங்களில் எத்தனைபேர் இந்த வாலிபனைப்போல பாவத்தில் பழகிவருகிறீர்கள்! உங்களில் எத்தனைபேர்கள் கெட்ட படங்களையும், நாடகங்களையும் பார்க்கப் போவதிலும், அசுத்தக் கதைகள் அடங்கிய புஸ்தகங்களை

வாசிப்பதிலும், துன்மார்க்கருடைய சகவாசத்திலும் பழகிவருகிறீர்கள்! இவைகளெல்லாம் பாவத்துக்கடுத்த சமயங்களென்று அறிந்தபின்பும் அவைகளை விட்டுவிட மனமில்லாமலிருக்கிறீர்கள்! பாவத்தை விலக்கவேண்டுமென்ற கடமைபோல் பாவத்துக்கு அடுத்து நிற்கும் சமயத்தை விலக்கவேண்டுமென்பது உங்கள்மேல் பொறுத்த கடமை. "உன் கண் பாவத்துக்குக் காரணமானால் அதைப் பிடுங்கி எறி. உன் கை பாவத்துக்கேதுவாயிருந்தால் அதை வெட்டிப்போடு" என்று சேசுநாதர்சுவாமியே இந்தப் புத்தியைத் தெளிவாய்ப் படிப்பித்திருக்கிறார். எப்போதும் சர்வேசுரனுக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ்செய்து அவரோடு சமாதான நிலையிலிருக்க ஆசையாயிருந்தால் பாவத்துக்கு ஏதுவான சமயங்களைத் தூர நீக்கிப்போடுவதுதான் புத்தி. ஆகையால் உங்களில் ஒவ்வொருவனும் தனது ஆத்துமத்தை இரட்சிக்கவேண்டுமென்கிற நேர்மையான ஆசையோடு தன் நடத்தையை சர்வேசுரன்முன் சோதித்து அதில் பாவத்துக்கு உன்னைக் கூட்டிப்போன வழிகள் இவையென்று அறிந்ததும் துணிந்து அவைகளையெல்லாம் அடக்க முயற்சிசெய்வானாக. நீங்கள் ஸ்திரமான மனதோடு துவக்கினால் சர்வேசுரன் உங்களுக்கு உதவி செய்வார். பாவிகளின் தஞ்சமாகிற தேவ ஆண்டவள் உங்களுக்காக சேசுநாதரிடம் பிரார்த்தித்து உங்களைக் காப்பாற்றுவாள்.

போதகன்.

---

## Here and There.

### நாலு சங்கதிகள்.

**H. L. the Bishop of Coimbatore** :—கடந்த ஆகஸ்டு-மீ 8-உ மகாகனம்பொருந்திய கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்களுடைய பக்தியுள்ள தாயார் தேகவியோகமானார்கள்; இந்த துக்கத்துக்குரிய செய்தியை நமது பிரிய சகோதரர்களுக்குத் தெரிவிக்க விசனப்படுகிறோம். அவள் ஆத்தும இளைப்பாற்றிக்காக மகா கனம் ஆண்டவர் ஆகஸ்டு-மீ 12-உ மேற்றிராசனக் கோவிலில் பெரிய பாட்டுப்பூசை செய்தார். R. I. P.



**Golden Jubilee** :—சங். C. பியோல்லே சுவாமியார் குருப்பட்டம்பெற்ற 50-ம் வருஷ தங்க ஜூபிலி இந்த செப்டெம்பர்-மீ 27-உயில் ஒத்தகமந்து மோட்ச இராக்கினி மாதாக்கோவிலில் கொண்டாடப்படும்.

**Famine in Russia** :—ருஷியாவிலே பெரிய பஞ்சமும், பேதி நோவும் நடமாடுகிறதாம்; கணக்கில்லாத ஜனங்கள் அன்னாகாரமின்றி வருந்துகிறார்களாம்; தற்காலம் அந்தத்தேசம், மெத்தவும் பரிதாபமான அந்தஸ்திலிருக்கிறது. கலாபனையின் பலன் இதுவே: இங்கிலாந்து, பிராஞ்சு, அமேரிக்கா முதலிய தேசங்களிலிருந்து, ருஷியாவுக்குப் பொருள் உதவி செய்யப்பட்டிருக்கிறது.

**Catholicism against Bolshevism** :—சில நாட்களுக்கு முன், பிராஞ்சு சட்டசபை சங்கத்தில், பொர்ஜோ துரை என்பவர் சொன்னதாவது :—தற்காலம் உலகத்தில் பரம்பிவரும் போல்ஷெவிஷம் என்னும் குழப்பத்தை அடக்கி ஜெயிப்பதற்கு கத்தோலிசிஸம் (கத்தோலிக் வேதம்) எல்லாவற்றையும் பார்க்க மேலானவழி. கடந்த இரண்டாயிரம் வருஷங்களாக, எக்காலத்திலும், எத்திசையிலும் கத்தோலிக் வேதமே குடும்பம், ஒழுக்கம், வேலை முதலியவைகளின் மேன்மையையும், பிரஜைகளின் சுதந்தரங்களையும் காப்பாற்றுகிறது. அதுவுமல்லாமல், அரசின்மையையும், ஸ்வயாதி காரணத்தையும், போல்ஷெவிஸம் என்னும் குழப்பத்தையும், எவ்வித கலாபனையையும், ஓயாமல் தடுத்துவருகிறது.

**A blasphemer punished** :—சில நாட்களுக்குமுன், இத்தாலி தேசத்தில் பிக்கொலி என்னும் ஒரு நாஸ்திகன் ஒரு சங்கத்தில் உபந்நியாசம் செய்து, சத்திய வேதத்துக்கும், குருக்களுக்கும் விரோதமாய்ப் பேசினதுமல்லாமல், கடவுளை வெகு அக்கிரமமாய்த் தூஷணித்தான். "தெய்வம் இருந்தால் அது இப்போதே என்னைக் கீழே தள்ளிக் கொல்லட்டும்; தெய்வம் இல்லாவிட்டால் குருக்கள் பிரயோஜனமென்ன?" என்று சொன்னான். அதன்பிறகு திடீரென அவன் நாக்கு திமிருண்டாகி பேச்சில்லாமல் மூர்ச்சடைத்துப்போனான்.—தவிர, சில நாட்கழித்து, உரோமாபுரியிலிருந்து, நேப்பிள்ஸ் என்னும் பட்டணத்துக்குப் போகவேண்டி ரெயில் வண்டியில் ஏறிப் புறப்பட்டான்; அடுத்த நாள் காலையில் அவன் பிரேதம், இருப்புப் பாதையின் ஓரமாய் துண்டுதுண்டாக உயிரில்லாமல் காணப்

உடனூழியரில் ஒருவனைக் கண்டு, அவன் மன்னையைப் பிடித்து நெரித்து, நீ பட்ட கடனைக் கொடு என்றான். அப்போது அவனுடைய உடனூழியன் அவன் காலிலே விழுந்து அவனை மன்றாடி என்பேரில் பொறுமையாயிரு; உனக்கு எல்லாவற்றையும் கொடுத்துத் தீர்த்துப்போடுகிறேன் என்றான். ஆனால் அவன் சம்மதியாமல், போய், அவன் தன் கடனைத் தீர்க்குமளவும் அவனைச் சிறைச்சாலையிலே போடுவித்தான். அவனுடைய மற்ற உடனூழியர்கள் நடந்தவைகளைக் கண்டு, மிகவும் துக்கப்பட்டுத் தங்கள் எஜமானிடத்தில் வந்து, நடந்ததெல்லாவற்றையும் அறிவித்தார்கள்.

உடனே அவனுடைய எஜமான் அவனை வரவழைத்து: துஷ்ட ஊழியனே, நீ என்னை மன்றாடினதினாலே, உன் கடனெல்லாம் உனக்கு மன்னித்தேனே. ஆகையால் நான் உனக்கு இரங்கினதுபோல நீயும் உன் உடனூழியனுக்கு இரங்கவேண்டாமோ? என்று சொல்லி, அவனுடைய எஜமான் கோபித்து, அவன் கடனையெல்லாம் செலுத்துமளவாயில் உபாதிக்கிறவர்கள் கையில் அவனை ஒப்புவித்தான். ஆகையால் உங்களிலும் அவனவன் தன் சகோதரனுக்கு உங்கள் முழு இருதயத்தோடு மன்னியாவிட்டால், என் பரம பிதாவும் உங்களுக்கு இவ்வண்ணமே செய்வாரென்று திருவுளம்பற்றினார்.

(மத்தேயு 13-23-35).

---

## The Correct Things for Marriage.

## கலியாணம் செய்யும்போது அநுசரிக்கவேண்டிய ஒழுங்குகள்.

தாய் தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளுடைய கலியாணத்தைப்பற்றி, பிள்ளைகளுடைய பிரியத்தைக் கேட்பது ஒழுங்கு. பிள்ளைகளும் தங்கள் கலியாணத்தைப்பற்றி தாய் தகப்பனுடைய ஆலோசனையைக் கேட்டு, கலியாணம் செய்வது ஒழுங்கு.



தாய் தகப்பன்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு, கலியாண ஒப்பந்தம் செய்வதற்குமுன், தங்கள் பங்கு விசாரணைக் குருவானவரிடத்தில், ஆலோசனை கேட்டு, அதற்கு விக்கினம் உண்டோ இல்லையோவென்று அறிந்துகொள்வது ஒழுங்கு.

கலியாணம் செய்வதற்கு ஆண்பிள்ளைக்கு 16 வயதும், பெண்பிள்ளைக்கு 14 வயதும் முடிந்திருக்கவேண்டும்.

பெண்ணும், மாப்பிள்ளையும் புதுநன்மை வாங்கி, உறுதிபூசுதல் பெற்றிருக்கவேண்டும்.

கலியாண ஒப்பந்தம் செய்தபிற்பாடு, தாய் தகப்பன்மார்கள் ஓலை கூறுவதற்காக, பெண், மாப்பிள்ளை இருவரையும், பங்குக் குருவானவரிடம் கூட்டிக்கொண்டு வரவேண்டும். சொந்த உறவுமுறைமைகள் இருந்தால், அவைகளைப் பங்கு சுவாமியாரிடம் வெளிப்படுத்தவும் கண்டிப்பாய்க் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

பெண்ணும், மாப்பிள்ளையும், வெவ்வேறே ஊர்களில் வாசம்பண்ணிக்கொண்டிருக்கும்பட்சத்தில், அவரவர்கள் தங்கள் தங்கள் பங்குசுவாமியாரிடத்தில் ஷை கலியாணத்தைப்பற்றித் தெரிவித்துக்கொள்ளவேண்டும். அத்தோடு, எந்த ஊரில், எந்தத் தேதியில், கலியாணம் செய்யவேண்டும் என்கிற தங்கள் பிரியத்தையும், பங்கு சுவாமியாரிடம் அறிவிப்பது ஒழுங்கு.

பெண்ணினுடைய பங்குவிசாரணைக் கோவிலில்தான் கலியாணம் செய்வது ஒழுங்கு. யாதொரு முகாந்தரத்தை முன்னிட்டு மாப்பிள்ளையுடைய பங்குக் கோவிலில் கலியாணம் செய்ய விரும்பினால், பெண்ணினுடைய பங்கு சுவாமியாரிடம் உத்தரவு பெற்றுக்கொள்ளவேண்டியது.

சரியான முகாந்தரத்தை முன்னிட்டு, பெண்ணும், மாப்பிள்ளையும் இருவருடைய பங்குக் கோவிலில் கலியாணம் செய்யாமல், வேறே ஊர்ப் பங்குக் கோவிலில், கலியாணம் செய்ய விரும்பினால், பெண்ணினுடைய பங்கு சுவாமியாரிடம் உத்தரவு கேட்பது ஒழுங்கு.

கலியாணம் செய்வதற்குமுன், மூன்று ஞாயிற்றுக்கிழமைகளில் பூசை நேரத்தில் ஓலை வாசிப்பது ஒழுங்கு. இடையில் கடன் திருநாள் இருந்தால், அன்று ஓலை வாசிக்கலாம். சரியான முகாந்தரம் இருக்கும்போது மாத்திரம் இரண்டு ஓலைகள். அல்லது ஒரே ஓலை கூறும்படி உத்தரவு [illegible],

அதிக விசேஷ முகாந்தரத்தை முன்னிட்டு ஓலை ஒன்றும் வாசிக்காமல் கலியாண உத்தரவு கொடுப்பது மிகவும் அபூர்வம்.

வாசிக்கப்படாத ஓலைக்குக் குறிக்கப்பட்ட அபராதம் கொடுப்பது ஒழுங்கு.

(உ-ம்) கோயமுத்தூர் மேற்றிராசனத்தில் வாசிக்கப்படாத ஒவ்வொரு ஓலைக்கும் 1 ரூபாய் அபராதம் வாங்கப்படுகிறது.

பெண்ணும், மாப்பிள்ளையும் வெவ்வேறே ஊர்களில் வாசம் பண்ணும் பட்சத்தில், அவரவர் பங்குக் கோவில்களில் ஓலை வாசிக்கப்படுவது ஒழுங்கு.

ஓலை வாசிக்கப்படுமுன்னே, பெண்ணும் மாப்பிள்ளையும் வேத சத்தியங்களைச் சரிவர அறிந்துகொள்வது ஒழுங்கு. (பிரதான 5 மந்திரங்களையும், சின்னக் குறிப்பிடம் முழுவதையும் மனப்பாடமாய்ப் பங்கு சுவாமியாரிடம் ஒப்பிக்கவேண்டியது ஒழுங்கு.

பெண்ணாவது, மாப்பிள்ளையாவது அவரவர் ஞானஸ்நானம் பெற்ற ஊரில் கலியாணம் செய்யாமல் வேறே பங்கு விசாரணைக் கோவிலில் கலியாணம் செய்தால் கலியாணம் கொடுக்கும் பங்குக் குருவானவருக்கு ஓலை வாசிக்குமுன் தங்களுடைய ஞானஸ்நான செர்ட்டிப்பிக்கெட்டை வாங்கி ஒப்பிக்கவேண்டும்.

மேற் சொன்னபிரகாரம், பெண்ணாவது, மாப்பிள்ளையாவது, 2-வது கலியாணம் செய்யும்பட்சத்தில், ஞானஸ்நான செர்ட்டிபிக்கெட்டுடன், முதல் புருஷன் அல்லது முதல் பெண்சாதி இறந்துபோனதாக மரண செர்ட்டிபிக்கெட்டு வாங்கியனுப்புவது ஒழுங்கு.

மேற்சொன்ன ஸெர்ட்டிபிக்கேட் ஒவ்வொன்றிற்கும் செலுத்தவேண்டிய கட்டணம் செலுத்தவேண்டும்.

வெவ்வேறே ஊர்களில் ஓலை வாசித்திருக்கும் பட்சத்தில், அந்தந்த ஊர்ப் பங்கு சுவாமியாரிடம், உத்தரவுக் கடிதம் வாங்கி, கலியாணம் கொடுக்கும் பங்கு சுவாமியாருக்கு ஒப்பிக்கவேண்டும்.

கடைசி ஓலை வாசித்தபிறகு (சரியான முகாந்தரமிருந்தாலன்றி) மூன்று நாள் கழித்துத்தான் கலியாணம் செய்வது ஒழுங்கு.

கலியாணத்துக்கு முந்தின நாள் அந்தந்தப் பங்குக் கோவிலுக்குச் சேரவேண்டிய கலியாண மிராசை முறைப்படாமல் செலுத்து



வது ஒழுங்கு. கோயமுத்தூர் மேற்றிராசன ஒழுங்குப்படி, கீழ்தேசத்தில் மிராசு ரூபாய் 5; மலை தேசத்தில் ரூபாய் 8.

கலியாணம் செய்வதற்குமுன், பெண்ணும், மாப்பிள்ளையும் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து அடுத்த நாள் திவ்ய நன்மை வாங்குவது ஒழுங்கு.

பூசையிலே கொடுக்கப்படும் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக, பூசை நேரத்தில்தான் கலியாணம் செய்வது ஒழுங்கு.

கலியாணப் பூசை குறிக்கப்படும் நேரத்தில், பெண்ணும் மாப்பிள்ளையும், அவர்கள் பந்துக்களும் தாமதமில்லாமல் ஆஜராயிருப்பது ஒழுங்கு

குருவானவர் பெண்ணையும், மாப்பிள்ளையையும் சம்மதம் கேட்கும்போது, மணவாளர் இருவரும், குருவானவருக்கும் இரண்டு சாட்சிகளுக்கும் நன்றாய்க் கேட்கும்படிக்கு தாமதமில்லாமல் தெளிவாக பதில் சொல்லுவது ஒழுங்கு.

குருவானவர் கலியாணத்தை ஆசீர்வதிக்கும்போது, மாப்பிள்ளையானவன் தாமதப்படாமலும் கூச்சப்படாமலும், தன் பெண்ணினுடைய கையைப் பிடிப்பது ஒழுங்கு.

ஆகமனகாலமும், தபசுகாலமும், கலியாண ஆடம்பரத்துக்கு விலக்கப்பட்ட காலமென்று அறிந்துகொள்வது ஒழுங்கு.

கலியாண விஷயத்தில் எவ்விதமான அஞ்ஞான காரியங்களையும், சாஸ்திரங்களையும், கண்டிப்பாய் விலக்கவேண்டும்.

அவனவன் தன் அந்தஸ்துக்குத் தகுந்தபடி வீண் செலவு செய்யாமல் கலியாண ஆடம்பரத்தை நடத்துவது ஒழுங்கு.

---

## Female Education.

### மாதர் கல்வி (தொடர்ச்சி.)

பெண்கள் கற்கவேண்டிய இன்னொரு முக்கிய கல்வி குடும்ப சாஸ்திரம். இது குடும்பத்தை நடத்தவேண்டிய காலத்தில் உதவும் கல்வியாதலால், இதன் முக்கியம் எவ்வளவென்று சொல்லவேண்டுவதில்லை. இதில் சமையல் பாகங்களும், சு

தார விளக்கங்களும், வரவு செலவின் கூறுபாடுகளும், சாதாரண வியாதிகளும், அவற்றின் பரிகாரங்களும், இன்னும் ஓர் குடும்பத்தை நடத்தவேண்டிய எவ்வித அறிவும் அடங்கியிருப்பதால் விசேஷ சிரத்தையுடன் இதைக் கற்பிக்கவேண்டும்.

பள்ளிக்கூடங்களில் இக்கல்வி கற்பிக்கப்பட்டும் இதைச் சரிவர குடும்பங்களில் கையாடாத குறை, இக்கல்வி பரீட்சைக்கு மட்டும் படித்ததாலென்று சொல்லலாம்.

இனி மத்திப கல்வியும், உயர்தர கல்வியும், கத்தோலிக்க சிறுமிகளுக்கு அவசரமோ என்பதைக் கவனிக்கவேண்டும். இது விஷயமாய் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டிருந்தாலும், கூடுமானால் பெண்களுக்கு இத்தகைய கல்விகளும் கற்றுக்கொடுத்தல் கத்தோலிக்கரின் முன்னேற்றத்துக்கு ஏதுவானதென்று கருதப்படுகிறது. ஆயினும் இக்கல்வி கற்றபின் இம்மாதுகள் என்ன செய்கிறது என்பதே முக்கிய எண்ணம். உத்தியோகம் செய்கிறதெனில் இக்கல்வி யில்லாதிருத்தலே நலமாயிருக்கும். ஏனெனில் உத்தியோகத்தால் ஆத்துமக்கேடு சுளுவில் சம்பவிப்பதுமன்றி, குடும்பம் பிரிவதுடன் பிள்ளைகளும் நன்கு வளர்க்கப்படுவதில்லை. ஆகையால் உத்தியோகத்தால் வரும் பண நன்மை அதினாலுண்டாகும் தின்மையினும் பெரிதல்ல; எனினும் கத்தோலிக் பள்ளிக்கூடங்களை நடத்தும் கன்னியர்களுக்கு இக்கல்வி மிக அவசியம். கன்னியர்களாக இருக்கும் பெண்களுக்கு இக்கல்வி கற்றுக்கொடுப்பதில் நன்மையே உண்டாகும். இன்னும் டாக்டர் முதலிய தொழில் கற்று கன்னியாஸ்திரி சபைகளில் சேர்ந்து உலகுக்கு நன்மைசெய்ய இஷ்டப்படின் அதுவும் மிக்க நன்மையாம்.

உத்தியோக நோக்கமின்றி கற்ற புருஷருக்குத் துணையும், ஆலோசனைக்காரிகளுமாகி தங்கள் பிள்ளைகளின் கல்வியை நடத்தும் அலுவலைமட்டுமே செய்கிறவர்களுக்கு எவ்வித உன்னத கல்வியிருந்தாலும் தகும். ஆனால் இவர்களைத் தக்கவிதமாய் உலக அந்தஸ்தில் தங்களைக்காட்டிலும் அதிக கல்வியுள்ளோர்க்கே விவாகம் செய்யவேண்டும். இல்லாவிடில் இவர்களது அதிக கல்வி குடும்பத்துக்குத் தீங்குண்டாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மத்திபக்கல்வி உயர்தரக்கல்வி இவற்றைத் தங்கள் பிள்ளைகட்கு கற்றுக்கொடுக்க விரும்புவோர்கள் முற்கூறியவற்றைத் தீர ஆலோசித்து ஏற்பாடு செய்வார்களாயின் அவர்கள்



அடைந்த கல்வி குடும்பங்களுக்கு மென்மேலும் நன்மையைச் செய்யும்.

இதுவரையும் எழுதி வந்தவற்றைச் சீராய் அறிந்து கத்தோலிக்கர் தங்கள் பிள்ளைகளுக்குச் சரியான கல்வி கற்பிக்க முயலுவார்களாயின், ஒவ்வோர் குடும்பமும் அதிக விர்த்தியடைந்துவருவதுமன்றி, உயர்தரக் கல்வி கற்ற பெண்களுடன் கூடி அவர்களுடைய விர்த்தியினால் மற்ற குடும்பங்களும் பயனை அடையலாம்.

கிறீஸ்துவர்களில் அநேகர் தாங்கள் கிறீஸ்துவர்களாயிருப்பதால் புறத்தியார் தங்களை மதிக்கிறதில்லை என்று வருத்தப்படுகிறார்கள். இதினால் நமது சத்திய வேதத்துக்குத் தாங்களே இகழ்ச்சி செய்கிறார்கள். ஆனால் இவர்கள் தங்கள் பெண்களுடைய கல்வி விஷயத்தில் சரியான கண்காணிப்புள்ளவர்களாகி அவர்கள் சீராய்க் கற்கும்படி ஏற்பாடு செய்து வருவார்களாகில், ஆண்களுடைய கல்வி இப்பெண்களால் சீராய்க் கவனிக்கப்படுமாதலால் கிறீஸ்துவ ஜன சமூக முன்னேற்றம் தக்கவாறு நடக்கும். அப்போது புறத்தியார் இவர்களை நிந்திப்பதற்குப் பதில் மேன்மைப்படுத்துவார்களென்பதற்கு எவ்வித சந்தேகமுமில்லை.

---

## The Rosary.

### ஜெபமாலை.

'ரோசரி' என்றால் ரோசாய் புஷ்பமாலை; நாம் ஜெபமாலை வேண்டிக்கொள்ளும்போது, தேவ ஆண்டவளுக்கு, நாம் ஒரு ரோசா புஷ்பமாலையைக் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கிறோம். ரோசாப் புஷ்பமானது வெகு அழகுள்ளதும், சுகந்த வாசனையுள்ளதுமாயிருப்பதினிமித்தம், மற்ற புஷ்பங்களைவிட, அது மிகவும் மேன்மையுள்ளதாயிருப்பதுபோல, பரிசுத்த மரியாய் கன்னியர்களுக்கெல்லாம் இராக்கினியாயிருப்பதனால், நாம் அவளை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறோம்.

ஆல்பிஜுவா என்கிற பதிதர்கள் பிராஞ்சு தேசத்துக் கோவில்களையும், மடங்களையும் அழித்து நாசமாக்கி, பற்பல

அக்கிரமங்களையும் செய்யுங்காலத்தில், 13-ம் நூற்றாண்டில் தேவமாதா அர்ச். தொமினிக் என்பவருக்கு தரிசனையாகி, அவருக்கு ஜெபமாலை என்னும் சுகிர்த ஜெபத்தை வெளிப்படுத்தினாள். அவர் இந்த ஜெபமாலையைக்கொண்டு, மேற்சொன்ன பதிதர்களை ஆயிரமாயிரமாக மனந்திருப்பினார்.

1571-ம் வருஷம் துலுக்கர் எல்லாரும் ஒன்றுகூடி கிறீஸ்து வேதத்தை ஐரோப்பா கண்டம் முழுவதிலுமிருந்து அழித்தகற்றி, தங்கள் மகமதிய மார்க்கத்தை எங்கும் பிரபல்யப்படுத்தி ஸ்தாபிக்கவேண்டுமென்றெண்ணிப் படையெடுத்து, கிறீஸ்துவர்களோடு சண்டைபோடுங்காலத்தில், கிறீஸ்துவர்கள் தேவமாதாவின் அடைக்கலத்தை நாடி, ஜெபமாலைமாதாத் திருநாளைப் பிரபல்யமாய்க் கொண்டாடும் அந்த நாளில்தானே, கிறீஸ்துவர்கள் துலுக்கர்களை அற முறியடித்து ஜெயங்கொண்டார்கள்.

ஒரு குருவானவர் அடிக்கடி ஜெபமாலை சொன்னதினிமித்தம், அவர் செத்தபிறகு அவருடைய வாயில் ரோஜா புஷ்பம் இருக்கக் கண்டதுமன்றி, தேவமாதா ரூவான் அதிமேற்றிராணியாருக்குத் தோன்றி, அந்த குருவானவரை ஓர் மகிமையான இடத்தில் அடக்கம்பண்ணவேணுமென்று சொல்லி மறைந்தாள்.

ஓர் சந்நியாசியார் தாம் சாப்பிடப்போகுமுன் 150-மணி ஜெபத்தைச் செய்து முடிக்கிறது வழக்கம். ஒருநாள் என்ன காரணத்தினாலேயோ அதை முடிக்கக் கூடவில்லை. ஆதலால் அவர் சிரேஷ்டரிடத்தில் போய் தாம் ஜெபமாலை இன்னம் முடிக்கவில்லையென்றும், அதை முடிக்க உத்தரவு கொடுக்க வேண்டுமென்றும் மன்றாடினார். அவரும் அப்படியே உத்தரவு கொடுத்தார். அந்த சந்நியாசியார் விடைபெற்றபிறகு தமது அறைக்குப் போனார். அவர் சாப்பிடவரத் தாமதப்பட்டபடியால், சிரேஷ்டர் ஓர் சந்நியாசியாரை அழைத்து, அவரைக் கூப்பிட அனுப்பினார். இந்த சந்நியாசியார், அவர் இருந்த அறையில் போய்ப் பார்க்கும்போது, அந்த அறையில் மோட்சப்பிரகாசம் துலங்குகிறதையும், தேவதாயாரும், இரண்டு சம்மனசுகளும், அந்த அறையில் வீற்றிருக்கிறதையும், அவர் ஒரு பிரியதத்த மந்திரம் சொல்லச்சொல்ல, ஒரு ரோஜாப் புஷ்பம் விழுகிறதையும், சம்மனசுகள் அதை எடுத்து தேவமாதாவின் சிரசில் வைக்கிறதையும் கண்டார். இந்தச் சந்நியாசியாரும் வரத் தாமதமாய்விட்டதைக்கண்டு, சிரேஷ்டர் வேறு இரண்டு சந்நியாசிமார்களை அனுப்பினார். அவர்களும் இக்காட்சியைக்கண்டு, ஆனந்த சந்தோஷத்தில் அமிழ்ந்தினதுமன்றி, அந்த ஜெபமாலை முடிகிறவரையில், தேவதாயார் அந்த அறையில் வீற்றிருந்ததையும் கண்டார்கள்.



ஆகையினால், ஜெபமாலையானது எவ்வளவு மகிமைபெற்றதென்றும், தேவ ஆண்டவனுக்கு எவ்வளவு பிரியமுள்ளதென்றும், அறிந்துகொள்ளக்கடவோம். "பரிசுத்த ஜெபமாலையின் இராக்கினியே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்."

Olim.

## அர்ச். ஜெபமாலை இராக்கினியின்பேரில் பதிகம்.

### நேரிசை வெண்பா.

"அன்னை சுவக்கீனா ரருந்தவத்தில் வந்துதித்த
தன்னில் நிகரில்லானாய்மரியே—உன்னையே
ஜென்ம மாசில்லாக தேவுலக ராக்கினியென்
றென்றுந் துதிப்போ மினிது."

### நூல்.

எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

1. சீரான சென்னியிற் பன்னிருவுடுக்களைச்
சிறந்திட முடியணிந்தாய்
பேறான வேகனை யுன்கரத்தேந்திடப்
பெற்றிடும் புகழடைந்தாய்
மாறாதுன் கர்மதில் மகிழ்வுடனேந்திடும்
மாஜெபமாலை கொண்டாய்
கூறானவுடறனிற் பானுவை யாடையா
யுடுத்த ஜெபமாலை மரியே.

2. நிலவு தவழுன்கழல் நின்றிடப் பதவடி
நிறை கன்மவரி மிதித்தாய்
குலமதனிற் றவிதனின் மரபதிலுதித்திடுங்
குமாரனைப்பெற்ற முத்தாய்
பலவானே ராஞ்சுகள் பக்கநின்றொளிவிடப்
பணிந்திடும் பேறுபெற்றாய்
உலகிலுறுமானிட ரூழ்வினைமாற்றிட
உதித்த ஜெபமாலை மரியே.

3. பத்திராசனருடன் பலகணவானவர்
    பயந்துனைப் பணிந்து சூழ
இத்தரை தனைவிடுத் துயர்வுபெற்றுன்முன்
    மிலகோளிவிட்டு நாளும்
சித்தரோ டுமுத்தர்க ளர்ச்சியசிஷ்டர்கள்
    சிறந்திடும் வேதசாட்சி
நத்தியுனை மன்றுட நல்வர்மெமக்கருள்
    நங்கை ஜெபமாலை மரியே.

4. சூசையெனுமாதவன் சூழ்கரத்தேந்திய
    துளிர் மலர்க் கமர்ந்த மரி நீ
ஆசையொடுவந்திடு மாடவர்கடம்மிலே
    அதிசயமுற்றவுளு நீ
மோசையெனுந் தவமுனியோங்கியே கைக்கொளு
    மோசமில் தண்டுகோல் நீ
ஓசைதருநாகசுர மூது பல்வானவர்க்
    குகந்த ஜெபமாலை மரியே.

5. மங்காத சுடர்விடு மங்கள வலங்கிர்த
    மகிமையணி புணிந்த மரியே
சிங்கார வீடெனுஞ் சீர்பெறு மோட்சத்தில்
    திருப்புகழ் கூர் கொண்ட மரியே
எங்கோனுந் திரித்துவத்தொருபரன் றன்னருகில்
    எழுந்திடு மெங்கண் மரியே
யெங்கா யெத்தின மிறைவனை மன்றுடு
    மேந்து ஜெபமாலை மரியே.

6. பிரியதத்த மந்திரம் பிரியமுட னியம்பப்
    பிணையிருந் துதவி வாராய்
பெரியதொரு மாலைமணி நாற்றுடனைம்பத்து
    பெருமைசேர் மூன்றுமணியால்
உரியதொரு ரகசியஞ் சந்தோஷந் துக்க
    மூயரு மா மகிமை மூன்றை
உரிமையுட னுங்களு முருட்டியே ஜெபிக்க
    உதவு ஜெபமாலை மரியே.

7. மின்னரிய நாமங்கள் சொல்லவெணிலாயிரம்
    நிறைந்திடுங் குவலயத்தில்
உன்னரிய நாமமே யுவர்க்கடற் பொருடரும்
    உரைத்திடில் மரியென் றமே



மண்ணறிய மானிடர் மங்களமாதா வென்றுன்
    மாட்சிசே ரற்புதத்தால்
விண்ணறிய விளம்புமே விடிகால மீனென
    விளங்கு ஜெபமாலை மரியே.

8. சாமிநாதற்கொரு ஜெபமாலை நீதந்து
    சாற்றிய மொழிய தன்னல்
கேமியிற் பற்பல பதிதரும், பசாசுடன்
    நெடுகவே யழிந்து போனர்
காமியா மானிடர் கசடொழித்துய்ய வேண்டி
    களித்து ஜெபமாலை யோத
தோமிலா பக்தியுஞ் சக்தியுந்தந் தாண்டருள்
    தொன்மை ஜெபமாலை மரியே.

9. அமலோற்பவமென்ன வந்திடும்பெண் கண்முன்னே
    அற்புதஞ் செய்த தாயே
கமலமெனு நின்பாதங் காட்டிப் பூமீது
    கனிவுடன் வைத்த தாயே
சமயந்தனிற் செவி மேமை யந்தகர் சப்பாணி
    ஜலத்தினற் புதுமை செய்தாய்
அமயமென வுந்தனையே யண்டிடும் பாவியெனை
    யாளுஞ் ஜெபமாலை மரியே.

10. பல்பிணிகளேைப்களும் பலமான வைசூரி
    பற்றிடும் பிளேக்கு மாரி
உள்ளதொரு தலைவலி வாந்தியொடு பேதிமற்று
    முறுத்திடும்பற் பன்னோய்களும்
வல்லமை யோடகம்புற மிரண்டினிலு முடியோனை
    வாட்டிடுஞ் செய் வினைகளும்
இல்லாமனீக்கிட நின்மகனை மன்றாடு
    மிரங்கி ஜெபமாலை மரியே.

## வாழ் விருத்தம்.

ஈசனருளிப் பதிகந்தன்னை நன்று
    மிப்புவியில் விருப்பமொடு பாடுவோரும்
பாசமெனு மாயவலைச் சிக்கிடாமல்
    பக்தியொடு பாடுவதைக் கேட்டபேரும்

161 298
0 008
3L
Rm 211/6115

விசு புகழ்பெற்ற பாப்பு மற்றுமுள்ள
வியனுலக குருக்கண் மேற்றிராணிமாரும்
சேசு மரிசூசை யென்போராசி தன்னாற்
செகத்தோருஞ் திருச்சபையும் வாழி மாதோ.

அர்ச். ஜெபமாலை மாதாவே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

S. M. S. G.

---

## The Uplift of the Catholic Community.

### கத்தோலிக்கரின் முன்னேற்றம்.—(தொடர்ச்சி).

இதுகாறும், நாம் முன்னேற்றம் அடைவதற்குத் தடையாயிருக்கும் வெளிக்காரணம், உட்காரணம், ஆகிய இவற்றை ஆராய்ந்தறிந்தபின், நாம் எவ்வாறு முன்னேற்ற மடையலாம் என்பதற்கான வழிப்பாடுகளை ஆராய்ந்தறியவேண்டியிருக்கிறது.

எவ்வாறு முன்னேற்றமடையலாம்? இக்கேள்விக்குச் சுருக்கத்தில் விடை பகரல் கூடும்; அதாவது, தக்க யோக்கியதையிருக்குமானால் நாம் முன்னேற்றமடையலா மென்பதே. இவ் விடை சிறியதாயினும், அதில் கவனிக்கவேண்டிய விஷயங்கள் பலவுள. எவ்வாறெனில், தக்க யோக்கியதைக்கான விஷயங்கள் யாவை? அவற்றை நாம் கொண்டிருக்கின்றோமா? அவற்றை நாம் கொண்டிராவிடில், அதற்காக நாம் செய்யவேண்டியது யாது? முதலிய இவை போன்றனவாம்.

தக்க யோக்கியதைக்கான விஷயங்கள் யாவை? இக்கேள்விக்குச் சுருக்கத்தில் விடையளிக்கும் பட்சத்தில், அதை மூன்றாகப் பிரித்துச் சொல்லலாம். அவை யாவையெனில், (1) மேலான உத்தியோகம், (2) உயர்தரக் கல்வி, (3) பெண் கல்வி.



1. மேலான உத்தியோகமென்றால், கலெக்டர், ஜட்ஜ், இஞ்சனியர், சப் கலக்டர், அசிஸ்டாண்ட் கலக்டர், டிப்டி கலக்டர், சிப் ஜட்ஜ், அசிஸ்டாண்ட் இஞ்சினியர், சப் இஞ்சினியர், ஆகிய இவைபோன்ற உத்தியோகங்களும், இவைகளுக்கு மேலாய், சட்ட நிருபண சபை மெம்பர், கவர்னரது ஆலோசனைச் சபை மெம்பர், போர்ட் மெம்பர், போர்ட் செக்ரட்டரி முதலிய உத்தியோகங்களும், இன்னுமுண்டான பற்பல டிபார்ட்டுமெண்டுகளாகிய, தபால் இலாகா, விவசாய இலாகா, பாரஸ்டு இலாகா, ரிஜிஸ்ட்ரேஷன் இலாகா, சட்ட இலாகா ஆகிய இவைகளின் தலைமை உத்தியோகங்களுமாம். இவ்வித உத்தியோகங்களை நாம் கைக்கொள்ளவேண்டுமாயின் எத்தன்மையுடையோராயிருக்கவேண்டும்? மேற்காட்டிய இரண்டாவது விஷயமாகிய உயர்தரக் கல்வியைக் கொண்டிருக்கவேண்டும்.

2. உயர்தரக் கல்வி:—இதை எவ்வாறு அடைதல்கூடும்? ஆரம்பத்திலேயே இதை நாம் கொண்டிருக்க முடியாது. ஏனெனில், இது கல்வியில் மூன்றாம்படிக்குச் சார்ந்தது. முதற்படியும் இரண்டாம்படியும் கடந்தபின்னரல்லோ மூன்றாம்படி ஏறவேண்டும்? அங்ஙனமாயின், இரண்டாம்படியும் மூன்றாம் படியும் யாவை? ஏற்கனவே நான் சொல்லியிருப்பதுபோல, அவைகள் மத்திப, பிரதமக் கல்விகளாம். ஆதலால் முந்த முந்த பிரதமக் கல்வியும், பின்னர் மத்திப கல்வியும் கற்றபின், உயர்தரக் கல்வி கற்க முயலவேண்டும். உயர்தரக் கல்விகற்றாலன்றி, மேற்காட்டிய மேலுத்தியோகங்களை அடையமுடியாது. அவ்வாறாயின், மற்றிருவிதக் கல்விகள் கற்கவேண்டி, அவைகட்கான தக்க பள்ளிகளில் சேர்ந்து கருத்தாய்ப் படித்தல்வேண்டும். வகையுள்ளவர்கள்தான் படிக்கக்கூடும், ஏனையோர் படிப்பதெங்ஙனம்? எனும் கேள்வி இங்கு உண்டாகலாம்; வாஸ்தவம். வகையில்லார்க்கு வகையுடையோர் உதவிபுரியவேண்டும். இவ்வித உபகார சிந்தை நம்மில் ஏற்படாவிட்டால், நாம் முன்னேற்ற மடைவது குதிரைக்கொம்பாய்த்தானிருக்கும்.

இயல்பாய், உலகில், ஐசுவரியவான்களுடைய பிள்ளைகள் தங்கள் ஐசுவரியத்தை முன்னிட்டு, கல்வியில் அதிக நாட்டங்கொள்வதில்லை. அவ்வாறில்லாதாரின் பிள்ளைகள் நாட்டங்கொள்ளினும், தங்களது வறுமையை முன்னிட்டு கல்வியில் உயர அசக்தர்களாகிவிடுகின்றனர். காரியம் இவ்வாறிருப்பதால், வகையுடையோர் வகையில்லாதார்க்கு உதவிபுரியவேண்டியதவசியம்.

இந்துக்களில், விசேஷமாய் பார்ப்பினரையும், முஹம்மதியரையும் கவனித்துப் பாருங்கள். தம்மவர்க்கு எவ்வளவோ உதவிபுரிந்து அவர்களை மேன்மைக்குக் கொண்டுவர முயலுகின்றனர்! இது காரணம்பற்றியல்லோ ஏற்கனவே பார்ப்பினரில் பெருந்தொகை கொண்டவர் உயர்வு பெற்றிருக்க, மற்றவரில் அநேகர் நாளுக்குநாள் உயர்வடைந்து வருகின்றனர். இப்போதோ பார்ப்பினரல்லாத மற்றைய ஹிந்துக்கள் அவ்விருவரைக் கண்டுபாவிக்குந் தன்மையாய், தம்மவரின் முன்னேற்றத்துக்காக வருந்தி உழைத்துவருகின்றனர். காரியங்கள் இவ்வாறிருக்க, கிறீஸ்துவர்களாகிய, விசேஷமாய்க் கத்தோலிக் கிறீஸ்துவர்களாகிய நாம் அவற்றைக் கவனியாது துயில் கொண்டவர்போல், படுத்த படுக்கையிற் கிடக்கின்றோம். சகோதரர்களே, இனியும் துயில்கொண்டிருக்கவொண்ணாது. காலம் கிட்டிவருகின்றது. வெள்ளம் வருமுன் அணைப்போடவேண்டும். அன்றேல், வெள்ளம் நம்மை நஷ்டப்படுத்திவிடும். எவ்வித நஷ்டமென்றால், பிறகு அந்நஷ்டத்தை சரிப்படுத்த நம்மாலியலாது. ஆதலால், சகோதரரே, எழுந்திருங்கள்.

நமது சத்தியவேதத்தைப்போல், மற்றெவ்வித வேதமும் பிறர் சிநேகத்தை மனிதரின்கண் தூண்டி எழுப்புவதில்லை அவ்வாறிருக்க, நாம் அதைப் பின்பற்றாது, மற்றைய மதத்தார் பின்பற்றுவதென்றால், என்ன ஒரு குறைவு நமக்குள் ஏற்படுகிறது! ஐசுவரியவான்களே, உங்களுக்குக் கடவுள் ஆஸ்தியை ஏதுக்காகக் கொடுத்திருக்கின்றார்? நீங்கள்மட்டும் அதை வேண்டிய அளவாய் உபயோகித்துக்கொண்டு, மற்றதை பெட்டியிலிட்டு பூட்டி வைக்கவோ, அல்லது சட்டியிலிட்டு வறுத்துண்ணவோ? உங்கள் ஆஸ்தியை எவ்விதம் உபயோகித்தீர்களென்கிற கணக்கை கண்டிப்பாய்க் கேட்பார் அதை உங்கட்குக் கொடுத்தவர். அவரை ஏமாற்ற உங்களாலேலாது. ஜாக்கிரதை!

(தொடரும்.) C. S. D.



## Devotion to the B. V. M. in Russia.

## ருஷியாவில் தேவமாதா பத்தி.

ருஷிய பிரிவினைக் கிறீஸ்துவர்கள் அக்காலந்தொட்டே பரிசுத்த தேவதாயார்பேரில் விசேஷ பத்தியுள்ளவர்களாயிருக்கிறார்கள். அரசர் அரண்மனை முதற்கொண்டு, எளியோர் குடிசைவரைக்கும் ருஷியாவிலே தேவமாதாவின் சுரூபமொன்று, அல்லது திருப்படமொன்று இல்லாத கிறீஸ்துவர்கள் வீடு கிடையாது. ஒவ்வொரு வீட்டிலும் ஒரு பரிசுத்தமான நடுவான இடத்திலே மாதா சுரூபம் வைத்திருக்கும். சுரூபத்தின்முன் அவரவருடைய அந்தஸ்துக்கும், சக்திக்கும் தக்க சோடனைகள் செய்திருக்கும். வீட்டினுள் விருந்தினர்முதல் எவரும் நுழையும்போதெல்லாம் முந்தமுந்த மாதா சுரூபத்தின்முன் போய் நின்று தலைகுனிந்து ஆசாரம் பண்ணிக்கொண்டே வீட்டாருடன் பேச உட்காருவார்கள். ஒவ்வொரு வீட்டிலும் பொதுவாக அச்சுரூபங்களின் முன் எப்போதும் ஓர் விளக்கு எரிந்துகொண்டேயிருக்கும். இப்படியே பரிசுத்த தேவதாயாரை ருஷிய கிறீஸ்துவர்கள் தங்கள் வீடுகளின் பரம நாயகியாக ஏற்படுத்திக்கொண்டதாகக் காணப்படும். பல விடங்களிலே வீட்டு வாயல்களில் மாதா சுரூபம் வைக்கப்பட்டிருக்கிறது. பட்டணத்தின் மதில்களிலும் அத்திருச்சுரூபம் காணப்படுகிறது. ருஷிய கிறீஸ்துவர்கள் இச்சுரூபங்களின்முன் போகும்போதெல்லாம் ஆசாரம் பண்ணிக்கொண்டே போவார்கள். அன்னியர் எவரேனும் ஒருவர், அறியாமல் ஆசாரம் செய்யாது போவதைக் காண்பவர்கள் உடனே அவனுக்கு மரியாதையோடு அதை எடுத்துச் சொல்வார்கள். ஆயினும் தேவதாயார்மீது, ருஷிய கிறீஸ்துவர்களுக்கு உள்ள பத்தி அதிக விசிதமாய்க் காணப்படுவது அவர்கள் அத்தாயார்பேரால் கட்டி எழுப்பியிருக்கிற அலங்காரமான அநேக ஆலயங்களிலேயாம். அவற்றின் பீடங்கள் பல விடங்களிலே பொன், வெள்ளி, இரத்தினங்களாற் சிறப்புற்று ஒளிருகின்றன. இவ்வண்ணமே மாதாக் கோவில்களும், திருப்பீடங்களும் ருஷியாவிலே விசேஷ சிறப்

புள்ளவைகளாயிருப்பது அவர்கள் அத்தாயார்மீது வைத்த விசேஷ பத்திக்கே அடையாளமாகின்றது. ஸ்தாபிக்கப்பட்ட பொது ஸ்தலத்திலிருக்கிற மாதாச் சுரூபத்தைக் கண்டு வணங்காமற் போகிறவர்களை அவர்கள் மதிப்பதில்லை. இப்பத்தி, ருஷிய கிறீஸ்துவர்கள் தேவதாயாரைப்பற்றிக் கொண்டாடும் திருநாட்களில் பண்ணும் திருயாத்திரைகளால் இன்னும் அதிக விசேஷமாய்த் துலங்குகின்றது. ருஷிய சபையின் திருநாளட்டவணைப்படி வருஷத்திலே பெரும்பங்கான நாட்கள் மாதாக் கோவில்களின் திருநாட்கள் திருயாத்திரைகளுள்ள நாட்களாம். அத்தினங்களிலே மாதாக் கோவில்களிற் கூடும் கிறீஸ்துவர்களின் தொகையை மதிப்பது அரிதாம். மாதாவின்பேரில் பத்தி வைராக்கியமுள்ள பிரிவினைக்காரக் கிறீஸ்துவர்கள் லட்சக்கணக்காய் ருஷியாவிலே இருக்கிறார்கள். இவர்கள் அத்தேவதாயார் மன்றாட்டால் மனந்திரும்பி நமது தாயாகிய திருச்சபையிற்சேர்ந்து, அர்ச். பாப்பரசரின் ஆட்சிக்குட்பட்டு ஆனந்த மோட்ச சம்பாவனையைப் பெறும்படி அவர்களுக்காக வேண்டிக்கொள்வோமாக. நம்மவரில் எவர் ருஷியரைப்போல் மாதாமீது பத்தியுடையவர்?

S. M. S. G.

---

## Cholera
### வாந்திபேதி.

#### எச்சரிக்கைகளும், கற்பனைகளும்.

(சென்னை பப்ளிஸிடி பீரோவினால் பிரசுரிக்கப்பட்டது.)

உங்கள் ஊரில் வாந்திபேதி இருந்தால் அடியிற்கண்ட முன்னெச்சரிக்கைகளை அனுஷ்டியுங்கள் :—

(1) எந்த ஜலத்தையும் கொதிக்கவைக்காமல் குடிக்கக் கூடாது. விசேஷமாய் குளத்துத் தண்ணீர் எதையும் காய்ச்சாமல் குடிக்காதீர்கள்.



(2) காய்ச்சாத பாலைக் குடிக்கக்கூடாது.

(3) தூசி படியும்படியாக அல்லது ஈ மொய்க்கும்படியாக திறந்து வைக்கப்பட்டிருந்த எதையும் தின்னக்கூடாது.

(4) வாந்திபேதி கண்டவர் போயிருக்கும் மலத்திலுள்ள பூச்சிகளைக் கொல்வதற்கான மருந்தைப் போடும்படி ஒரு ஸானிடரி உத்தியோகஸ்தரை வரவழைக்க முடியுமானால் அப்படிச் செய்யுங்கள். இது முடியாத பட்சத்தில் சுடச்சுட சாம்பலையெடுத்து அந்த மலத்துடன் கலந்து அதைத் தண்ணீர் ஆதாரத்துக்கு வெகு தூரத்தில் கொண்டுபோய் புதைத்துவிடுங்கள்.

(5) சீக்கிரம் ஜீரணமாகாத பதார்த்தங்களைச் சாப்பிட்டும் வயிற்றை அதிகமாய் நிரப்பியும் அஜீர்ணத்தை வரவழைத்துக் கொள்ளாதீர்கள். அஜீர்ணத்தால் பேதி (diarrhoea) உண்டாகும். அப்போது தேகத்தில் வாந்திபேதிப் பூச்சிகள் வெகு சுலபமாய்ப் புகுந்துவிடும்.

(6) வாந்திபேதியால் யாரேனும் இறந்துபோனால், அவர் உடுத்தியிருந்த துணிகளெல்லாவற்றையும் கொளுத்திவிடுங்கள்; அல்லது அவைகளை கொதிக்கிற தண்ணீரில் அரைமணி நேரம் ஊறவையுங்கள். அவருடைய மலம் அல்லது வாந்தியினால் அசுத்தப்பட்டிருக்கும் எந்த வஸ்துக்களையும் எரித்துவிடுங்கள். இது சாத்தியப்படாவிட்டால், அவைகளின்மேல் பூச்சிகளைக் கொல்லும் மருந்தைக் கொட்டுங்கள். வைக்கோல் அல்லது நெல் உமியைத் தரையில் போட்டுப் பொசுக்கினால் தரையிலுள்ள பூச்சிகள் இறந்துபோகும்.

(7) ஒரு ஸானிடரி உத்தியோகஸ்தரைக் கூப்பிட்டு கிணறுகளில் மருந்து போடச்சொல்லுங்கள். வாந்திபேதி தொத்தியிருக்கும் வீட்டிலிருந்து பாத்திரங்களை அந்தக் கிணறுகளில் போட்டு மொண்டு அவைகளில் மறுபடியும் வாந்திபேதிப் பூச்சி தொத்தும்படி செய்யாதபடி தடுக்கவேண்டும்; அதாவது கிணற்றிலிருந்து ஜலம் எடுக்க சக்கரத்தில் ஒரு மரக்காலைத் தனியாய்க் கட்டிவையுங்கள்.

(8) குடல் அல்லது வயிற்றில் ஏதேனும் சங்கடம் (நோய்) உண்டானால் உடனே வைத்தியனைக் கூப்பிட்டு சிகிச்சை செய்யச்சொல்லுங்கள்.

---

## Here and There

### நாறு சங்கதிகள்.

**Karumuthampatty** :—ஒக்டோபர்-மீ 2-ம்உ ஞாயிற்றுக்கிழமை கருமுத்தன்பட்டியில், அர்ச். ஜெபமாலைமாதா உற்சவம் வழக்கம்போல் நடைபெறும்.

**Transfers** :—சென்ற செப்டெம்பர்-மீ சங். கஸ்தனியே சுவாமியார் பள்ளபாளையம் பங்கு விசாரணைக்கும், சங். தொலின் சுவாமியார் கருமுத்தன்பட்டி பங்கு விசாரணைக்கும், சங். ரோஷ் சுவாமியார் தாராபுரம் பங்கு விசாரணைக்கும், சங். லாங்கிலே சுவாமியார் சவேரியார் பாளையம் பங்கு விசாரணைக்கும், சங். கிறித்தனு சுவாமியார் கொடிவேறிக்கும், சங். ப்ரோன் சுவாமியார் அர்ச். மிக்கேல் போர்டிங் மடத்துக்கும் மாற்றப்பட்டிருக்கிறார்கள்.

**Children of Mary** :—கோயமுத்தூர் பங்கு விசாரணையில் மாமரியின் மைந்தர். சபையை ஏற்படுத்த பங்கு சுவாமியார் வேண்டிய முயற்சியைச் செய்துவருகிறார். சென்ற மாதம் 8-ம்உ தேவமாதா பிறந்த திருநாளில் ஷை சபையின் அஸ்பைரண்ட் என்னும் முதல் வகுப்பில் 40-பத்தியுள்ள சிறு பெண்பிள்ளைகள் சேர்ந்தார்கள். இன்னும் அநேகம்பேர் இந்த நல்ல சபையில் மோட்ச இராக்கினியின் கொடியின்கீழ் சேர்ந்துகொள்ளப் பிரியப்படுவார்கள் என்று நம்பப்படுகிறது.

**Moplah outbreak** :—ஆகஸ்டுமாதக் கடைசியில் மலையாளத்தில் திடீரென்று, மாப்பிள்ளைகள் என்னும் மகமதியர்கள் கலகத்தை எழுப்பி, பலவிதமான ஆயுதங்களை உபயோகித்து, பல ஊர்களிலும் கொள்ளையடித்து, வீடுகளைச் சுட்டெரித்து, தந்திக் கம்பிகள், ரயில் பாதைகள் முதலியவற்றைச் சேதப்படுத்தி, ஜனங்களைக் கொலைசெய்து, பிரஜைகளை நிஷ்டூரமாய் உபத்திரவப்படுத்தினார்கள். படைவீரரும், போலீஸாரும் வந்து கலகக்காரர்களை அடக்கிவருகிறார்கள். இப்போது கலகம் அடங்கிவருகிறதென்று தோன்றுகிறது. இருந்தாலும் சிற்சில



பாகங்களில் இன்னும் கலகக்காரர் துன்பம் இழைத்தேவருகிறார்கள். ஒற்றுமையாமையின் போதனைப் பலன் இதுவே!

**Catholic club, Coimbatore** :—சென்ற செப்டெம்பர்-மீ 11-ம்உ கத்தோலிக் கிளப்பின் அங்கத்தினர் முயற்சியால், ஷை கிளப் ஹாலில் மகா-ா-ா-ஸ்ரீ J. N. தியாகரம்பிள்ளை அவர்கள் நாணய ஐக்கிய உதவி சங்கத்தைப்பற்றி ஓர் உபந்நியாஸம் செய்தார். அப்போது, கோயமுத்தூர் முனிசிப்பல் சங்கத்தின் சேயர்மனாகிய மகா-ா-ா-ஸ்ரீ C. S. இரத்தினசபாபதி முதலியாரவர்கள் அக்கிராசனம் வகித்தார்.

**Temperance** :—சென்னை சட்ட நிரூபண சபையார் மதுபான பாவனையைப்பற்றி யோசனை பண்ணுவதற்காக தம்முன் ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறார்கள். மனிதனுக்கு மதுபானப் பழக்கத்தைப்போல் கெடுதியானது ஒன்றுமில்லை, இந்த மதுபானப் பழக்கத்தைத் தடுப்பதற்கான வழிவகைகள் ஏற்படுமானால்; அது ஜனத்தின் சீர்திருத்தத்தை விரும்புகிற யாவருக்கும் மிகவும் சந்தோஷமான சம்பவமாகும். மதுபானத்தை உபயோகப்படுத்ாதபடி அரசாட்சியார் தடுத்துவிடவெண்டுமென்பது சிலருடைய அபிப்பிராயம். அது சரியான கருத்தாக எண்ணப்பட மாட்டாது. அது ஒருவிதமாய் முடியாத காரியமாயிருப்பதுமல்லாமல், அது மனிதனின் சுயாதீனத்தைத் தடுப்பதுபோல் ஆகும்; அதனாலே, ஆளைக் கட்டுப்படுத்தாமல், மதுபானத்தையே கட்டுப்படுத்திவைப்பது சரியான வழியாகும்.

**Travancore** :—கடந்த மாதம் திருவாங்கூரிலுள்ள கலாசாலைகள், பிரைமரி கல்விசாலைகள், மற்றும் பாடசாலைகள் யாவும் மூடப்பட்டிருக்கின்றன. பள்ளிக்கூடத்துச் சம்பளத்தை அதிகப்படுத்தியிருந்தமையால், கவர்ண்மெண்டார் இது விஷயமாக தாம் செய்திருக்கும் நிபந்தனைகளை மாற்றி, முன்போல் சொற்ப சம்பளம் போட்டாலல்லாது மாணவர்கள் பள்ளிக்கூடத்துக்கு வருவதில்லை என்று திட்டமாகக்கொண்டதுமன்றி, கலகமும் செய்தார்கள். அதைக்கண்டு, டிஸ்திரிகட்டு மாஜிஸ்திரேட் அவர்கள் பள்ளிக்கூடங்கள் அனைத்தையும், மறு உத்தரவுபரியந்தம் திறக்கக்கூடாதென்று கண்டிப்பான கட்டளை விதித்திருக்கிறார்.

**Cholera in Russia** :—சென்ற ஆகஸ்டு மாதத்தில் ருஷியாவிலே வாந்திபேதியால் இறந்தவர்கள் 130,000-பேர்.

அதோடுகூட ஷை தேசம் அகோர பஞ்சத்தால் வருந்துகின்றது.

**Turko-Greek War** :—துருக்கிக்கும் கிறீசுக்குமிடையே நடக்கின்ற யுத்தத்திலே கிறீஸர் முன்னேறிக்கொண்டு போகிறார்கள். இரண்டு கட்சியாருடைய படைகள் மிகவும் களைத்திருக்கின்றனவாம்.

**The roll of honour** :—கடந்த 1920-ம் வருடத்தில் 153 சத்தியவேத போதக குருக்கள் அஞ்ஞான தேசங்களில் மரணமடைந்தார்கள். இவர்களில் பிராஞ்சு தேசத்துக் குருக்கள் 89 பேர். மற்றதேசத்துக் குருக்கள் 64 பேர். எப்போதும் போலவே இப்போதும் பிராஞ்சுதேசத்துக் குருக்கள்தான், சத்தியவேதபோதகர் திருப்படையில் அதிகமாயிருக்கிறார்கள். பிராஞ்சு தேசத்தின் மகிமைகளிலும், இதுதான் பெரிய மகிமை என்று சொல்லலாம்.


# The Messenger of Truth.

# சத்திய தூதன்.

**Vol. VII.** **November 1921.** **No. [illegible]**

புத்தகம் **VII.**] FIDES AC ROBUR. [நம்பர் **11.**


24 NOV

## The Day of Judgment.

### நடுத்தீர்வை நாள்.

அக்காலத்தில் சேசுநாதர் தம்முடைய சீஷர்களை நோக்கித் திருவுளம்பற்றினதாவது :—

“ அப்பொழுது மிகுந்த உபத்திரவமுண்டாகும் ; அவ்வித உபத்திரவம் உலகமுண்டான நாள்முதல் இந்நாள்மட்டும் இருந்ததுமில்லை, இனி இருக்கப்போகிறதுமில்லை. அந்த நாள் குறைந்தாலொழிய, எந்த மாமிஷமும் பிழைக்கமாட்டாது ; ஆயினும், தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தம் அந்த நாட்கள் குறைக்கப்படும். அக்காலத்தில், இதோ கிறீஸ்துநாதர் இங்கேயிருக்கிறார் அல்லது அங்கேயிருக்கிறார் என்று யாராவது உங்களுக்குச் சொன்னால் விசுவசியாதேயுங்கள் ; ஏனெனில், கள்ளக் கிறீஸ்துவர்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமாகில் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை முதலாய் வஞ்சிக்கும்படியான பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள். இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்தேன். ஆதலால், இதோ, அவர் வனாந்தரத்திலிருக்கிறார் என்று சொன்னாலும் வெளியே புறப்படாதிருங்கள். இதோ, வீட்டுக்குள்ளேயிருக்கிறார் என்றாலும் விசுவசியாதேயுங்கள். ஏனெனில், மின்னலானது கிழக்கில் தோன்றி, மேற்குமட்டாகப் பிரகாசிப்பது

எப்படியோ, அப்படியே மனுமகனுடைய வருகையுமிருக்கும். பிணம் எங்கேயோ, அங்கேயே கழுகுகளும் வந்து கூடும்.

"அந்நாட்களின் உபத்திரியத்துக்குப்பின்பு, சூரியன் இருள, சந்திரன் தன்னொளி கொடாதிருக்க, நட்சத்திரங்களும் வானத்தினின்று விழ, வானத்தின் வல்லமைகள் அதிரும். அப்பொழுது, மனுமகனுடைய அடையாளமானது வானத்தில் காணப்படுவதுமன்றி, பூமியிலுள்ள சகல ஜாதி ஜனங்களும் புலம்பி, மனுமகன் வானமேகங்களின்மேல் மிகுந்த வல்லபத்தோடும், மகிமையோடும் வருவதைக் காண்பார்கள். அப்போது அவர் தம்முடைய தூதர்களை எக்காளப் பெருந்தொனியோடு அனுப்புவார். அவர்கள் வானத்தின் மேல்முனைமுதல் கடைமுனைவரையில், நான்கு திசைகளிலுமிருந்து, அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் கூட்டிச்சேர்ப்பார்கள். அத்திமரத்தினின்று ஓர் உவமையைக் கற்றுக்கொள்ளுங்கள்: 'அதில் இளந்துளிர்கண்டு, இலைகள் தழைக்கும்போது, கோடைகாலம் சமீபமாயிற்றென்று அறிந்திருக்கிறீர்கள்.' இவ்வண்ணமே, நீங்களும் இவைகளெல்லாவற்றையும் காணும்போது, அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறாரென்று அறிந்துகொள்ளுங்கள்.

"இவையெல்லாம் நடந்தேறுமளவும், இந்தச் சந்ததி ஒழிந்துபோவதில்லையென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோகாது. ஆனால், அந்த நாளையும் நாழிகையையும்பற்றிப் பிதா ஒருவரேயன்றி வேறெவனும், பரலோகத்திலுள்ள சம்மனசுக்கள்முதலாய் அறியார்கள்."

(மத். 24. 21-36.)

---

"*No one knows what he can do till he is fully resolved to do what he can.*"

*   *   *   *   *

"*Your rope won't help a drowning man unless you hold your end of its.*"



## On Death.

## மரணத்தின்பேரில்.

1. **மரணமென்றால் என்ன?** இவ்வுலகப் பற்றுதல்களையெல்லாம் விட்டுப்பிரிவதே. அதாவது :—இவ்வுலகில் நீ கஷ்டப்பட்டு, ஓடி ஆடித் தேடிய மண், பொன், ஆஸ்திபாஸ்திகளையும்; நீ அடைந்துள்ள கௌரவப்பட்டங்கள், மேலான அந்தஸ்து, இன்பசுகங்களையும்; உற்றார், பெற்றார், மனைவி மக்கள், சிநேகிதர்களையும், உன்னில் ஒரு பாகமாகிய உன் சரீரத்தையும்; கடைசியாய் நீ உற்பவித்தமுதல் உன் உயிர் பிரியும் வேளைவரையில் நீ தங்கியிருக்க இடங்கொடுத்த இப்பிரபஞ்சத்தையும் விட்டுப்பிரிவதே மரணம். இன்னும்,

2. **மரணமென்றால்:** நீ விட்டுப்பிரிந்த சகலராலும் கைவிடப்படுவதே. அதாவது :—நீ இறந்துபோன சொற்பகாலத்திற்குள் உன்னை மறந்துவிடப்போகிற உன் மித்திரர்களையும்; நீ தேடிவைத்த பணங்காசுகளைப் பங்கிட்டுக்கொள்ளும்போது உன்னைத் தூற்றவோ அல்லது போற்றவோ உன்னை நினைக்கிற உன் மக்களையும்; அந்நியர் மெச்சுவதற்காக உன் பிரேதத்தினருகிலிந்து அலறி அழும் உன் சுற்றத்தாரையும் விட்டுப்பிரிவதே மரணம். இன்னும்,

3. **மரணமென்றால்:** விசாலமாகவும், சிங்காரமாகவும் அமைக்கப்பட்டு நீ தங்கியிருந்த வீட்டைவிட்டு நெருக்கமான கல்லறையில் வாசஞ்செய்வதே. அதாவது :—பட்டுப்பீதாம்பரங்களாலும் ருசிகரமான பதார்த்தங்களாலும் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமாக சிங்காரிக்கப்பட்டு வளர்க்கப்பட்ட உடல், இறந்தவுடன் ஒரு புது வஸ்திரத்தினால் சுற்றப்பட்டு, ஊர்வனவும் புழுக்களுமின்றி வேறு தோழர்களற்று, உன் கல்லறையின்மேல் ஞாபகசின்னமாக எழுதப்பட்டு சொற்பகாலமிருந்து மறைந்துபோகும் சில வசனங்களன்றி வேறு பட்டங்களில்லாமல், ஆறடி நீளமும் மூன்றடி அகலமுள்ள ஓர் அறையின் தனிவாசமே மரணம். இன்னும்,

4. **மரணமென்றல்** : உன்னைக் கேவலமான ஸ்திதிக்கு மாற்றிவிடுவதே. அதாவது :—இந்த ஸ்திதியில் உன் பஞ்சேந்திரியங்கள் உணர்ச்சியற்று நின்றுவிடுகின்றன. உன் கண்கள், உன் சரீரம் எவ்விதமாக அழுகி நாற்றமெடுத்து சீர்கெட்டுப்போகிறதென்பது முதலாய்ப் பார்க்கச் சக்தியற்று விடுகின்றன. உன் செவிகள் யாதாமொரு சப்தத்தையும், புழுக்கள் உன் சரீரத்தோடு சரீரமாக ஒட்டிக்கொண்டு அதனைச் சிறுகச்சிறுக தங்களுக்கு உணவாக்கிக்கொள்வதினால் உண்டாகும் இரைச்சல்முதலாய்க் கேட்க வகையற்றுவிடுகின்றன. நாவுக்கினிமையானதும் பலவித ருசிகரமான பதார்த்தங்களாலும் போஷிக்கப்பட்ட உன் அவயவங்களெல்லாம், ஊர்வனவுக்கும் புழுக்களுக்கும் இரையாகி சகிக்கமுடியாத துர்க்கந்தம் வீசி, நாளடைவில் மண்ணோடு மண்ணுக்ச் சேர்ந்துவிடுவதே மரணம்.

—கடைசியாக—

5. **மரணமென்றல்** : உன் ஆத்துமம் சரீரத்தை விட்டுப்பிரிந்த ஒரு க்ஷணப்பொழுதிற்குள் ‘ நித்தியம் ’ என்னும் ஒரு புதிய இடத்திற்குச் செல்வதே ; அங்கே போய் தனக்குச் சதாகாலத்திற்கும் குறிக்கப்பட்டிருக்கும் மகுடத்தை அறிய ஆண்டவர் வாய்மொழியை எதிர்நோக்குகின்றதே. சர்வேசுரனுடைய சாயலாக உண்டாக்கப்பட்ட ஆத்துமமே ! மரணமானது நீ இவ்வுலகத்தில் இருந்தபொழுது உன் ஞான மேய்ப்பர்களால் அறிவிக்கப்பட்ட பயங்கரமான நேரம் ; நாஸ்திகர்களாலும், வேதப்புரட்டர்களாலும், அவவிசுவாசிகளாலும் மறுதலிக்கப்பட்டநேரம்; உன் சதாகால ஜீவியத்திற்கு தீர்ப்புக்கிடைக்கப்போகிற நேரம் ; இதோ வந்துவிட்டது ! உன்னை உண்டாக்கியவர் வசம் உன் ஆத்துமத்தை அளிக்கப்போகின்றாயா ? அப்படியானால் இது உனக்கு எவ்வளவோ பாக்கியமான நேரம். பரமண்டலத்தில் சம்மனசுக்களும், அர்ச்சியசிஷ்டவர்களும் சந்தோஷமடையக் கூடியநேரம். அப்படிக்கில்லையானால், சபிக்கப்பட்ட ஆத்துமமே! நித்தியமாகிய மற்றொரு ஸ்தலத்துக்குப்போக எத்தனமாயிரு.

ஆ ! கிறீஸ்துவ ஆத்துமமே ! நீ எந்த ஸ்தலத்திற்கு ஆளாகப்போகின்றனை ? உனக்குத் தீர்ப்பாய்க் கிடைக்கப் போகிற நித்தியஸ்தலம் மோட்சமா ? நரகமா ?

சேசுநாதருடையவும் தேவமாதாவினுடையவும் திருக்கரங்களில் பாக்கியமான மரணத்தையடைந்த அர்ச். சூசையப்பரே !



நாங்கள் மரிக்கும்போது இஷ்டப்பிரசாதத்தோடே செத்து மோட்சபேரின்ப பாக்கியத்தை அடைந்து உம்மோடு என்றென்றைக்கும் வாழப்பண்ணியருளும்.

ஓ ! மரியே ! இஷ்டப்பிரசாதத்தின் தாயே ! சகல ஆபத்துக்களிலும், விசேஷமாய் எங்கள் மரண சமயத்திலும் எங்களைத் தற்காத்தருளும்.

S. S. G.

---

## Child's Prayer Answered.

### சிறுமி ஜெபம் சித்தியானது.

லண்டன்மாநகர் கீழ்ப்பாகத்தில் யூத ஜாதியினளாகிய இளமாது ஒருத்தி, கடின நோய் கண்டு படுத்துக்கிடந்தனள். இளம்பருவந்தான். ஆயினும் தனக்குக் கடைசிகாலம் நெருங்கிவிட்டது என்று அவளுக்குத் தோன்றலாயிற்று. ஒரு கன்னியாஸ்திரியம்மாள் அவளை அருமையாய்ப் பார்த்துவந்தார்கள். அவர்களை அழைத்து வைத்துக்கொண்டு, “ தாயாரே, இப்பொழுதே நான் கிறீஸ்துவளாகவேண்டும். எனக்கு ஞானஸ்நானம் கொடுக்கமுடியுமா ? ” என்று கேட்டாள்.

இப்படி திடுதிப்பென்று எதிர்பாராத விஷயத்தைக் கேட்டதைக் கண்டு ஆச்சரியப்பட்டு, கன்னியாஸ்திரியம்மாள் மெதுவாகச் சொல்வார்கள் : “ திடுதிப்பென்று கேட்கிறாயே, அம்மா: அதிமுக்கியமான இந்த விஷயத்தில் தலையிட்டுக்கொள்வதற்கு முன் அமர்ந்து யோசித்து கலந்து பேசவேண்டாமா ? கிறீஸ்துவளாகவேண்டும் என்று நீ விரும்புவதற்குக் காரணம் என்ன, அம்மா ? ”

இதைக் கேட்ட நோயாளி : “ திடுதிப்பென்று வந்த கருத்தல்ல அம்மா, இது. நான் சிறுமியாய் இருந்த காலத்தில், எனக்

குச் சிநேகிதியாய் இருந்த பெண் ஒருத்தி, ஒரு கோவிலுக்குள் என்னைக் கூட்டிக்கொண்டுபோய், நான் திருச்சபையில் சேர வேண்டும் என்று தான் வேண்டிக்கொண்டுவருவதாக என்னிடம் சொன்னாள். அப்பெண்ணின் வேண்டுதல் எப்பொழுதாவது ஒருநாள் கேட்கப்படாமற் போகாது என்று எப்பொழுதும் எனக்கு மனதிற் பட்டுவந்தது.”

இதைக் கேள்வியுற்றுச் சந்தோஷம் அடைந்தவளாய், கன்னியாஸ்திரியம்மாள், “நாங்கள் விசுவசிப்பவைகளை உனக்கு விளங்கச் சொல்லுகிறேன், அம்மா. பிறகு குருவானவர் ஒருவரைக் கூட்டிக்கொண்டு வருகிறேன்” என்றார்கள்.

“இல்லை இல்லை, அம்மா, அதற்கெல்லாம் நேரமிராது” என்று நோயாளியாகிய யூதமாது சொல்லி, பின்னும் “சேசுவே, என் பொருட்டு நீர் உயிர்விட்டீர் என்று விசுவசிக்கிறேன்’ என்றால் போதாதா?” என்று கேட்டாள்.

கேட்கவும், “போதாதே, அம்மா, சுவாமியார் வந்து ஞானஸ்நானம் கொடுக்கிறவரைக்கும் பொறுத்திருப்பதுதான் நல்லது” என்றார்கள் தாயாரம்மாள்.

“நேரமில்லையே. நீங்கள்தான் எனக்கு ஞானஸ்நானம் தர வேண்டும், தாயாரே.”

முடிவு அவ்வளவு சீக்கிரமாக அவளுக்கு வரும் என்று தோன்றவில்லையென்றாலும், ஞானஸ்நானத்தில் அவளுக்குள்ள ஆத்திரத்தைக் கண்டு, அவள் சிரசின்மீது தாயார் துவிஜநீர் பொழிந்தார்கள். பொழிந்துவிட்டுப் போய் அரைமணியாகி தாயார் மீண்டும் வந்து பார்க்கையில், அம்மாது காலமாகிவிட்டதைக் கண்டனர்.



24 NOV 1921

# Progress of the Catholic Church.

## திருச்சபை அபிவிர்த்தி.

ஸ்திராந்தல்லி (Strandelli) என்பவர் புதிதாய் வெளியிட்டிருக்கும் “ஸ்டாட்டிஸ்டிக்ஸ்” என்னும் கணிப்புக் குறிப்புகளைப் படித்துப் பார்த்தால், கடந்த நூற்றாண்டில் கத்தோலிக் திருச்சபை அடைந்துள்ள அபிவிர்த்தி தெளிவாய் விளங்கும். அங்கு கண்ட குறிப்புகள் சில அடியிற் காட்டியிருக்கின்றன.

இங்கிலாந்தில் பதினெட்டாவது நூற்றாண்டின் இறுதியில் இருந்த கத்தோலிக்கர் 120,000 பேர், குருமார் 200 பேர். 1907 வருஷத்திலோவென்றால், கத்தோலிக்கர் 2,000,000 பேர், மேற்றிராணிமார் 21 பேர், குருமார் 4,166 பேர். 1899-ஆம் முதல் 1907-ஆம் வரை மனந்திரும்பினவர்களுள், பதிதபோதகர்கள் 445 பேரும், சட்ட சபையினர் 417 பேரும், ஆப்பிஸர்மார் (இராணுவ கப்பல் உத்தியோகஸ்தர்) 205 பேரும், டாக்டர்மார் 60 பேருமாவர். இங்கிலாந்தில் மனந்திரும்புவோரின் தொகை, சிலகாலமாக பிரதி வருஷமும் சராசரி 10,000-மாக நடந்துவருகிறது.

1800-ம் வருஷத்தில் 6,000,000 பேர் கத்தோலிக்கரோயிருந்த ஜெர்மனியில், 1901-ம் வருஷத்தில் கத்தோலிக் ஜனசங்கை 20,000,000 ஆகிய பெருந்தொகை ஆகிவிட்டது.

ருஷியாவில் மனந்திரும்புவோர் எத்தனையோ பேர்! எல்லா மதமும் நடைபெறலாம் என்ற மத சுதந்தர சட்டம் பிறந்தபிறகு 1905-1909 ஆகிய நான்கு வருஷத்துக்குள்ளாக கத்தோலிக்கர் தொகை 230,000 ஆகிவிட்டது.

பால்கன் நாடுகளில் பத்தொன்பதாவது நூற்றாண்டில் கத்தோலிக்கர் தொகை மிகவும் அதிகரிக்கலாயிற்று. எவ்வாறென்றால்: ருமேனியாவில் 16,300 பேர் கத்தோலிக்கர், 150,000 பேராயினர். போஸ்னியாவில் 23,000-மாயிருந்தது 389,000-ஆக பெருகிவிட்டது. பல்கேரியாவில் 1,300-த்திலிருந்து 28,000-மாக பெருகிவிட்டது. செர்பியாவில் 6,000-த்திலிருந்து

20,000-மாகிவிட்டது. கிரீசில் 15,000-த்திலிருந்து 44,000-மாகிவிட்டது.

ஒரு நூற்றாண்டுக்குமுன் ஒரேயொரு மேற்றிராணியாரும், 50 குருமாரும், 40,000 கத்தோலிக்கரும் மாத்திரம் இருந்த ஐக்கிய நாடுகளில், தற்சமயம் கர்தினல்மார் இருவர், அதிமேற்றிராணிமார் 13 பேர், மேற்றிராணிமார் 88 பேர், குமார் 10,000-க்கு மேற்பட்டவர், கத்தோலிக்கர் 23,000,000-க்கு அதிகமாகிவிட்டனர். இம்மகா குடியரசுநாட்டில் மனந்திரும்பி வருவோரின் தொகையோ மிகவும் பெரிதாம்; வருஷா வருஷம் 30,000 முதல் 50,000 வரையில் இருக்கும். இங்கிலாந்தில் எப்படியோ அப்படியே ஐக்கிய நாடுகளிலும் மனந்திரும்பினோர்களுக்குள் மிகவும் பிரபல்யமான மகான்களுமுண்டு. அந்தந்த சடங்குகளையும் (rites) சமய பேதங்களையும் (sects) சார்ந்தோராகிய எத்தனையோ அத்தியக்ஷர் (மேற்றிராணிமார்), போதகர், இதர மதாசாரியார் முதலியோர் மனந்திரும்பி கத்தோலிக் சபையில் உட்படுகிறார்கள்!

ஆஸ்டிரேலியாவில் நூறு வருஷத்துக்கு முன் கத்தோலிக்கரே இல்லை. 1820-ம் வருஷம் வரையில் கடங்கலின்றி அங்கே போக கத்தோலிக்கு போதக குருமார்களுக்கு அநுமதி கிடையாது. அப்படியிருந்த நாட்டில், தற்சமயம் திரு அதிகாரவர்க்கம் (Hierarchy) எப்படியிருக்கின்றதென்றால், கர்தினல் ஒருவர், அதிமேற்றிராணிமார் இருவர், மேற்றிராணிமார் 14 பேர், குருமார் 1,600 பேர். கத்தோலிக்கரோ 1,500,000 பேர்.

1800-ம் வருஷத்தில் கத்தோலிக்கர் மிகவும் சொற்பமாயிருந்த ஆப்பிரிக்காவில், தற்சமயம் பத்து லட்சத்துக்குமேல் இருக்கிறார்கள். ஆசியாவில் சுமார் ஐம்பது லட்சம் பேர். சீனா குடியரசு நாட்டில் பத்து லட்சத்துக்கு மேற்பட்ட பேர். கேவலம் துருக்கிக்குக் கீழ்பட்டுக் கிடந்த நாடுகளில் முதலாய், கடந்த நூற்றாண்டில் உண்டான அபிவிர்த்தி சொற்பமல்ல. ஸ்மர்னாவில் (300) முந்நூறிலிருந்து 16,000-மாகியும், மெஸொப்பொட்டாமியாவில் (10,000) பதினாயிரததிலிருந்து 113,000-மாகியும், பலஸ்தீனாவில் (3000) மூவாயிரத்திலிருந்து 30,000-மாகியும் இருக்கிறது.

(*Catholic Times.*)

---



## A Lesson in Catechism.

### ஞானோபதேசத்தின் ஓர் பாடம்.

தங்கள் பாவங்களுக்காக முழுதும் உத்தரியாத புண்ணிய ஆத்துமாக்கள் (சாவுக்குப்பிறகு) எங்கே போகிறார்கள்?

உத்தரிக்கிற ஸ்தலத்துக்குப் போகிறார்கள்.

உத்தரிக்கிற ஸ்தலத்தில் என்னமாயிருக்கிறார்கள்?

தங்கள் பாவங்களுக்குத் தக்க வேதனைப்பட்டு உத்தரிக்கிறார்கள்; முழுதும் உத்தரித்தபிறகு மோட்சத்தையடைவார்கள்.

உத்தரிக்கிற ஸ்தலம் உண்டோ? உண்டென்பது வேத சத்தியம். அதை மறுக்கிறவன் எவனோ, அவன் திருச்சபைக்குப் புறம்பாயிருக்கிற பதிதன் என்று எண்ணவேண்டியது.

முற்காலத்தில், கிரேக்கரிடத்திலும், உரோமையரிடத்திலும் விளங்கின பித்தகோர், சோக்கிடெஸ், விர்ஜில் என்பவர்களும், வேறு பற்பல அஞ்ஞான சாஸ்திரிகளும், வித்துவான்களும், இந்து சாஸ்திரிகள், இந்து வித்துவான்களும் முதலாய் உத்தரிக்கிற ஸ்தலம் என்பது உண்டெனக்கொண்டதால், ஆதி பிதாக்களுக்குச் சுவாமி அறிவித்த சத்தியங்களுக்குள்ளே இது ஒன்று என்று நிச்சயித்துக்கொள்ளலாம்.

உத்தரிக்கிற ஸ்தலம் உண்டு என்கிறதற்கு வேத புத்தகமே அத்தாட்சி. யூதாஸ் மக்கபே என்பவர் பணத்தைச் சேகரித்து, சண்டையில் இறந்துபோன வீரர்களுடைய பாவங்களுக்காக குருக்கள் பலிகளை ஒப்புக்கொடுக்கும்படி ஜெருசலேமுக்கு அனுப்பினார்.

உத்தரிக்கிற ஸ்தலத்திலுள்ள ஆத்துமாக்கள் படுகிற ஆக்கினை என்ன?

அவர்கள் சுவாமியைக் காணாமல் இருக்கிறபடியால் சொல்ல முடியாத நிற்பாக்கியம் அநுபவிக்கிறார்கள்; மேலும், நெருப்பிலே வேகிறார்கள்.

உத்தரிக்கிற ஸ்தலத்தின் அக்கினியும், நரகத்தின் அக்கினியும், இவ்விரண்டும் ஒன்றுதான் என்று சில வேதசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள்.

அதனால், உத்தரிக்கிற ஆத்துமாக்கள் அனுபவிக்கிற வேதனை எவ்வளவு கொடூரமானதென்று நிதானித்துக்கொள்ளலாம்.

உத்தரிக்கிற ஸ்தலத்தின் ஆத்துமாக்களுக்கு உதவிசெய்ய நம்மாலே முடியுமோ?

அவர்களுடைய வேதனை தணியும்படி செய்ய நம்மாலே கூடும் என்பது விசுவசிக்கவேண்டிய சத்தியம்.

மரித்தோருக்காக வேண்டிக்கொள்ளுவது சுகிர்தமான தரும சிந்தனையென்று வேத புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. மற்றுள்ள தருமங்களைப்பார்க்கிலும் உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு உதவிசெய்கிறதே பெரிய தருமமென்று வேத சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஏனெனில், உத்தரிக்கிற ஆத்துமாக்கள் படுகிற நிற்பாக்கியம், வார்த்தையெல்லாம், நினைப்பெல்லாம் கடந்த நிற்பாக்கியம். அந்த நிற்பாக்கியமுள்ள ஆத்துமாக்களுக்கு உதவிசெய்ய நமக்கு வல்லமையும், கடனுமுண்டு. ஆகையால், நாமெல்லோரும் பூசை, ஜெபம், தானம் முதலிய தருமங்களால் உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்கு உதவி செய்யக்கடவோம்.

உன் தகப்பன் கடன்பட்டு, அதற்காகச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தால், நீயே அவன்மேல் இரக்கங்கொண்டு, வேலைசெய்து, பணஞ் சம்பாதித்துக், கடனைத் தீர்த்து, உன் தகப்பனை விடுவிப்பாயல்லோ? அப்படிப்போலவே, உன் தகப்பனோ, தாயோ, சகோதரர் சகோதரிகளோ, சிநேகிதர்களோ, தங்கள் பாவத்தின் அபராதக்கடன் தீருமட்டும் உத்தரிக்கிற ஸ்தலத்தில் கிடக்கிறார்கள் என்றறிந்து, நீயே அந்தக் கடனைத் தீர்க்கும்படி பூசை செய்விக்கவும், ஜெபம் பண்ணவும், பிச்சை கொடுக்கவும், இவை முதலிய தருமங்களைச் செய்து முடிக்கவும் கடவாய். உத்தரிக்கிற ஸ்தலத்தினின்று ஓர் ஆத்துமத்தை இரட்சித்தவன் எவனோ, அவன் நரகத்துக்குத் தப்பித்துக்கொள்ளுவானென்று சொல்லுகிறார்கள்.

## சரித்திரம்.

ஒரு மனிதன் இருபது வருஷமாய்த் தன் படுக்கையைவிட்டு எழுந்திராமல் மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தான். கடைசியில் பொறுமை கெட்டு, சலிப்படைந்து, சுவாமியை நோக்கி: "ஆண்டவரே! இதோ இருபது வருஷமாய் வியாதியாயிருக்கிறேன், அது போதாதா? எனக்குச் சள்ளை, பிறருக்குத்



தொல்லை; இப்படியிருக்கையில் நான் சாகிறது பாக்கியம்" என்று பிரார்த்திக்கையில், அவனுடைய காவல் சம்மனசு அவனுக்குத் தரிசனையாகி: "உன் வேண்டுதலுக்கு சுவாமி காது கொடுத்திருக்கிறார்; இன்னமும் உயிரோடிருக்க உனக்கு மனதானால் 3 வருஷம் வரையில் வேதனைப்படவேண்டும்; அதற்குப்பிறகு நேராய் மோட்சத்துக்குப் போய்ச் சேருவாய். இது உனக்குப் பிரியப்படாமல் இப்போதுதான் சாகிறது தாவிளை என்றால், உத்தரிக்கிற ஸ்தலத்தில் நீ மூன்றே மூன்றுநாள் வேதனைப்படவேண்டும்; ஆனால் அது மகா கொடூரமாய் இருக்கும். இது விஷயத்தில் உன் இஷ்டமென்ன? அந்த இஷ்டப்படி உனக்கு நடக்கும்" என்று சம்மனசு சொல்ல; அந்த மனிதன் மூன்றுநாள் அவ்வளவு பெரிய காரியமல்ல என்று வேறொன்றும் பாராமல், தற்காலம் தான் படுகிற துயரத்தை மாத்திரம் பார்த்து, உடனே இறந்துபோகிறதைத் தெரிந்துகொண்டான்.

அவன் இறந்து உத்தரிக்கிறஸ்தலத்துக்குப் போனான். அவ்விடத்திலிருக்கையில் ஏறக்குறைய ஒருமணிநேரம் பொறுத்து, மேற்படி சம்மனசு அவனுக்கு ஆறுதல் சொல்ல வந்தார். ஆத்துமம் அவரைக் கண்டவுடன்: "ஓ! சம்மனசானவரே, ஏழையாகிய அடியேனை இப்படி மோசம் செய்யலாமா? அது உங்களுக்குத் தர்மமா? மூன்றே மூன்றுநாள் உத்தரிக்கிறஸ்தலத்தில் இருப்பாயென்று சொன்னீரே, நான் இங்குவந்து 100 வருஷம் போலானது" என, சம்மனசு: "ஆத்துமமே; நீ படுகிற வேதனை மிகுதியால் உனக்கு இப்படி தோன்றுகிறது; நீ இறந்துபோய் இன்னம் ஒருமணிநேரம் ஆகவில்லை; உன் பிரேதம் சில்லிட்டுப் போகாமல் இன்னமும் சூடாயிருக்கிறது; ஆனால் உத்தரிக்கிற ஸ்தலத்தின் வேதனை எவ்வளவோ அகோரமென்று உன் வழியாய் மனிதர்கள் அறியும்படியாக, மறுபடியும் சரீரத்தோடே சேர்ந்து, உத்தரிக்கவேண்டியதைப் பூலோகத்தில் உத்தரிக்கும்படி சுவாமி உனக்கு உத்தரவு கொடுக்கிறார்; உன் இஷ்டமென்ன?" என்று கேட்க, ஆத்துமம்: நல்ல சம்மனசே, அப்படியே ஆகட்டும், உத்தரிக்கிறஸ்தலத்தில் அரைமணிநேரம் வேதனைப்படுகிறதைவிட, பூலோகத்தில் 100 வருஷம் வரையில் வியாதியாயிருக்கிறது நன்மை" என்று சொல்லி, மறுபடியும் ஆத்துமம் சரீரத்தோடே சேர, அந்த மனிதன் உயிர் பிழைத்து 3 வருஷம் ஜீவித்தபின் பாக்கியமான மரணத்தை அடைந்தான்.

## Golden Jubilee.

### தங்க ஜூபிலி.

கடந்த செப்டெம்பர் மாதம் 25-ம் தேதியில் ஒத்தகமண்டு அர்ச். மோட்ச இராக்கினி மாதாக் கோவிலில், பங்கு குருவான சங். பியோலெ சுவாமியார் குருப்பட்டம் பெற்ற 50-ம் வருஷ தங்க ஜூபிலி வெகு ஆடம்பரத்தோடும் பத்தியோடும் கொண்டாடப்பட்டது. அந்த விசேஷ கொண்டாட்டத்துக்கு மகா வந்திக்கத்தக்க கோயமுத்தூர் மேற்றிராணியாரவர்களும் பல குருக்களும் ஆஜரானார்கள். 25-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை, காலை 9-மணிக்கு, சங். பியோலெ சுவாமியார் பெரிய பாட்டுப் பூசை செய்தார். அதன்பிறகு சங். இஞ்ஞாசிநாதர் சுவாமியார் வெகு வாய்ச்சாலமாகப் பிரசங்கம் செய்தார். அன்று சுமார் 1000 கிறீஸ்துவர்கள் திவ்விய நன்மை உட்கொண்டார்கள்.

மோட்ச இராக்கினி மாதாக் கோவில் அவ்வளவு மகிமையுள்ள நாளை முந்திக் கண்டிருக்குமோ, இனிக் காணப்போகுமோ தெரியாது. ஒத்தகமண்டு பங்கு விசாரணையைச் சேர்ந்த கிறீஸ்துவர்கள், அர்ச். சூசையப்பர் பாடசாலையிற் கூடியிருக்க, மகா வந்திக்கத்தக்க கோயமுத்தூர் மேற்றிராணியார் அவர்கள் ஓர் உபந்நியாசம் செய்தபிறகு, அர்ச். பாப்பானவர் சங். பியோலெ சுவாமியாருக்கு அனுப்பிய தமது விசேஷ ஆசீர்வாதத்தையும், வெளிப்படுத்தி, படத்தையும் அவருக்குத் தந்தருளினார். அதன்பிறகு, இங்கிலீஷிலும், தமிழிலும் வந்தனோபசாரப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. தங்க ஜூபிலி ஞாபகமாக ஒத்தகமண்டு கிறீஸ்துவர்கள், அதிக விலையுயர்ந்த ஓர் அழகான பளிங்குக் கல் பீடத்தைத் தருவித்து ஸ்தாபித்ததுமல்லாமல், 1000 ரூபாயுள்ள பணப்பையும், சுவிசேஷ புஸ்தகமும், இன்னும் அநேகவிதமான காணிக்கைகளும் தங்கள் பிரியமான பங்கு குருவானவருக்கு ஒப்புக்கொடுத்தார்கள். அன்று சாயந்திரம் 4½ மணிக்கு, மிகவும் சங். L. பெஷூ சுவாமியார் குருத்துவத்தின் மகத்துவத்தைப்பற்றி இங்கிலீஷில் பிரசங்கித்தார். அதன்பிறகு தேவநற்கருணை ஆசீர்வாதம் கொடுக்கப்பட்டது. அதில், தேதேயோம்



(Te Deum), என்கிற கீர்த்தனமும், மாக்னிவிக்காத் (Magnificat) என்கிற கீர்த்தனமும், நன்றியறிதலுள்ள தோத்திரமாகப் பாடப்பட்டன.

அடுத்தநாள் 26-ம் தேதி சாயங்காலம் அர்ச். சூசையப்பர் கத்தோலிக் வாலிபச் சபையார், "நீதியின் ஜெயம்," என்னும் ஓர் நேர்த்தியான இங்கிலீஷ் டிராமாவையும், "வழிகாட்டி" என்னும் ஓர் இன்பமான தமிழ் டிராமாவையும் வெகு அநுகூலமாய் நடத்தினார்கள். 27-ம் தேதி செவ்வாய்க்கிழமை, நசரேத் என்னும் ஐரோப்பிய மடத்து சங். தாயார்மாரும், மடத்துப் பிள்ளைகளும், சங். பியோலெ சுவாமியாரை வரவழைத்து, அவ்விடத்தில், இங்கிலீஷிலும், தமிழிலும் வந்தனோபசாரப் பத்திரங்களை வாசித்து, இனிமையான பாட்டுகளுடன், கோலாட்டமும், "கோபுரத்துள் அடைக்கப்பட்ட பிள்ளைகள்" என்னும் ஓர் நேர்த்தியான டிராமாவும் நடைபெற்றது. கடைசியாய், "ஆத்துமமும், சம்மனசானவரும்" என்னும் பாடலோடே "குருவும் சம்மனசும்" என்னும் ஓர் விநோதமான காட்சியும் காட்டப்பட்டது.

அந்த உற்சவமானது சகலராலும் வெகு சந்தோஷமாகக் கொண்டாடப்பட்டது. ஒத்தகமண்டு கிறீஸ்துவர்கள், தங்கள் பங்கு சுவாமியாருக்கு, தங்கள் நன்றியறிதலையும், பட்சத்தையும் தாராள மனதுடனே மனமுவந்து காட்டினார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. அச் சுப தினத்தை, அவ்வளவு மகிமையோடும், ஒழுங்கோடும் ஏற்படுத்தி நடத்தின உதவிப் பங்கு குருவாகிய சங். மரியலூயிஸ் சுவாமியாரவர்களை மிகுதியும் மெச்சிக்கொள்ளக் கடவோம்.

மேலும் ஒத்தகமண்டு முனிஸிப்பல் சங்கத்தார், சங். பியோலெ சுவாமியார் 40 வருடகாலமளவாக அவ்வூரிலுள்ள ஜனங்களுக்குச் செய்துவந்த அநேகவித நன்மையுபகாரங்களை நினைத்து நன்றியறிந்து, அவருடைய 50-ம் வருஷ ஜூபிலியின் ஞாபகார்த்தமாக, ஷை நகரின் ஓர் தெருவுக்கு அவருடைய பெயரை நியமிக்கவேணுமென்று தீர்மானித்தார்கள் என்று கேள்விப்பட்டுச் சந்தோஷப்படுகிறோம்.

சங். பியோலெ சுவாமியார் இன்னும் நெடுநாள் சுகமாக வாழும்படி கடவுள் கிருபை செய்வாராக!

## Advice of a Father to his Son.

## தகப்பன் மகனுக்குப் புத்தி சொல்லல்.

### குடியர் கூத்து.

தடியருடைய சகவாசம் மனதுக்கு அருவருப்பாயிருந்த போதிலும், குடியருடைய கூத்து, மகனே, மகா அரோசிகத்தைக் கொடுக்கும். அவர்களால் எத்தனையோ குலகோத்திரங்கள் உண்ண உணவில்லாமலும் உடுக்க வஸ்திரமில்லாமலும், மானங் கெட்டு, மரியாதையிழந்து, நாணம் அச்சமற்று, கையிலுள்ள பொருள்களை இழந்து, மழையில் நனைந்து, வெயிலிற் காய்ந்து, பனியில் நலிந்து, குந்தக் குடியில்லாமலும், அண்ட நிழலில்லாமலும், நிற்பாக்கியமாய் கோடிக்கரையில் நிற்கின்றன. அநேகர் சொற்புத்தி கேளாததினால் பலவாறு கெட்டு அக்கிரம மிகுதியால் வழி தப்பிப்போகிறார்கள். சிலர் கையிலே இரண்டு காசு இருக்குமாயின், மதுபானம் தங்களை உஷ்ணப்படுத்தும்படி, வெறிக்கக் குடித்து, விருந்துகளில் தம்பூர், தாளமேளம், நாகசுரம் முதலிய வாத்தியங்கள் வைத்து ஏரோதனைப்போல் கூத்தாடுவிக்கிறார்கள். அது சொல்லுவதற்கும், கேட்பதற்கும் மகா அசங்கிர்தமான சங்கதி. சகல வஸ்துக்களும் வாய்விட்டு அழும்படியான வதந்தி. தடியர் எப்போதும் முறட்டுத்தனமுள்ளவர்கள்; யூகமுடையோர் அவர்களை வெகு லேசாய் அடக்கிப்போடுவார்கள். ஆனால், குடியரை அப்படியல்ல. நயத்திலும், பயத்திலும் எந்தவிதத்திலும் புத்திசொல்லி மட்டுதிட்டப்படுத்தமுடியாது. அவர்கள் மனது ஒரு காரியத்தில் நிலைத்து நிற்காது. இருளை வெளிச்சமாகவும், வெளிச்சத்தை இருளாகவும், கைப்பை இனிப்பாகவும், இனிப்பைக் கைப்பாகவும் காட்டுவார்கள், கடவுளால் கொடுக்கப்பட்ட மேலான ஞானத்தைக் குடி வெறியினால் கெடுத்து, புத்தி சித்தம் வேறுபட்டு, வாய் காய்ந்து வயிறு பருத்து விடாய்த்து, தேகப்பிணியாகி, தற்கொலைப்படுத்திக்கொள்வதுபோல செய்வதுந்தவிர, மற்றவர்களையும் அவ்வாறு செய்யும்படி தூண்டுவார்கள். குடியால் அநந்தம் வீடு அடைபட்டுப்போயிற்று. சிலது குடியோடிக் குட்டிச்



சுவராயிற்று. அவர்களுக்குத் தாய் பிள்ளை யென்கிற வரன்முறை கிடையாது. பெரியவர் சிறியவர் என்கிற பேதா பேதமிராது. வலியவரும் எளியவரும் ஒன்றுதான். சக்காந்தக்காரரும், அமளி பண்ணுகிறவர்களும் ஒன்றுதான். தங்கள் அயோக்கியத்தனத்தை வார்த்தையினாலும், செய்கையினாலும் மற்றவர்களுக்குக் காட்டுவார்கள். பிறரை நிந்திப்பார்கள். பெரும்படியாகப் பேசுவார்கள். சாராய மயக்கங்கொண்டவர்கள் மனந்திரும்பாவிடில் விவேகிகளாவதில்லை. கஞ்சா, அபினி கையாடுகிறவர்கள் எவ்வளவு கற்றவராயினும், அவர்களுக்குக் கருத்து விளங்குகிறதில்லை, இளைப்பாறுதலில்லை, சுகமில்லை, அமைச்சலில்லை. கள்ளுக்குடிப்பவரைப்பற்றியோ சொல்லத் தேவையில்லை. அவர்கள் போஜனம் அருந்துவதற்குமுன் பெருமூச்சு உண்டாகும். தண்ணீர் குடித்தும் களைப்புண்டாகும். மற்றவர்கள் அவர்களைக் கண்டால் தூர மறையவேண்டும். இல்லாவிடில், வலிய இழுத்து வம்புக்கு நிற்பார்கள், வாதாடுவார்கள், சண்டையிடுவார்கள். அவர்கள் சொற்களை வீட்டு ஜனங்கள் முதலாய்க் கேட்கத் தாழார்கள். குடியருக்கு எப்போதும் பரோபகாரமில்லை, பாவபுண்ணியமில்லை, அவர்கள் வாயிலிருந்து வருகின்ற தேவ தூஷணம், குருதூஷணம், குலதூஷணம், இனதூஷணமான கனதூஷணங்களுக்கு வகை தொகையில்லை. எந்தப்பிரகாரம் தங்கள் நினைவு போகின்றனவோ அந்தப்பிரகாரமே இருந்து, சகல அதப்பியங்களையும் பேசுவார்கள். சரச உல்லாசமாய்ப் பிறரோடு விளையாடுவார்கள். சகதியிற் கிடக்கின்ற எருமை மாட்டுக்கு அவதி கிடையாது. சாராயக் குடியருக்கு சுவரணை கிடையாது, வெட்கமிராது, மானமிராது. மதுபானப் பிரியரும், ஸ்திரீ மயக்கமுள்ள வெறியரும் சரி; கள்ளைக் குடித்தவர்களும், நஞ்சை அருந்தினவர்களும் சரி; சண்டை சச்சரை முதலியவை உண்டாகும்பொருட்டுத் தங்களைப் போஷிப்பார்கள். சகல பொல்லாப்புகளுக்கும் காரணராக முன்னுக்கு வருவார்கள். (தொடரும்.)

(மரணசாசனம்.)

## Page for the Young.

### பிள்ளைகளின் பக்கம்..

## Race of Life.

### ஜீவியத்தின் பந்தய ஓட்டம்.

கிரேக்கர்களைப் பூர்வீகத்தில் நன்றாய்ச் சண்டை செய்யப் பழக்கும்பொருட்டு, ஓட்டம், மல்யுத்தம் முதலிய தேக அப்பியாசங்கள் அதிகமாகக் கவனிக்கப்பட்டுவந்தன. அவர்களுக்கு அதிக உற்சாகம் வரும்படியாகப் பயங்கரமான வேடிக்கைகள் வைத்துப் பந்தயங்களும் ஏற்பாடு செய்வார்கள். கிரேக்கர் நடத்திய விளையாட்டுகளிலெல்லாம் ஒலிம்பியா விளையாட்டு மிகவும் சிறப்பானது. பந்தய விளையாட்டுகள் முடிந்தவுடனே, அவ்விடம் வேடிக்கை பார்க்கக் கூடி வந்திருக்கும் ஏராளமான ஜனங்கள் ஆரவாரம் செய்ய, பந்தயம் கெலித்தவனுடைய சிரசில் ஜெயக்கிரீடம் சூட்டுவது வழக்கம்.

இப்பேர்ப்பட்ட பந்தயங்களில் ஒருதடவை மனம் உருகும்படியான சம்பவம் ஒன்று நடந்தது. அதாவது: அநேக வருஷங்களுக்குமுன் பந்தயம் ஜெயித்தவனும், இப்போது விருத்தாப்பியதிசையடைந்தவனுமான டையாகிரஸ் என்னும் ஒரு கிரேக்கன், ஒலிம்பியா வேடிக்கையில் பந்தயமெடுக்கும்படியாக வந்த தன்னுடைய இரண்டு குமாரர்களையும் பார்த்துப்போக வந்தான். அவன் குமாரர்கள் வெற்றியடைந்து இரண்டுபேரும் இரண்டு கிரீடங்களைப் பெற்றார்கள். அப்போது சந்தோஷத்தினால் நிறைந்த அவர்களுடைய வயதுசென்ற தகப்பன், உடனே எல்லாருக்கும் முந்திச் சென்று அவர்களை வாழ்த்துதல் செய்தான். அவர்களிருவரும் தகப்பனைத் தழுவித் தங்கள் தலைகளில் வைக்கப்பட்ட கிரீடங்களையெடுத்துப் தகப்பன் தலையில் வைத்து, இருவரும் சேர்ந்து தங்கள் தகப்பனே வெற்றியடைந்ததுபோல தங்களுடைய தோட்களில் அவனைச் சுமந்து பந்தயசாலையைச் சுற்றிவந்தார்கள். அதைக் கண்டு அவ்விடம் கூடியிருந்த ஜனங்கள் எல்லாரும் ஏகோபித்து உரத்த சத்தமாய்



அவர்களை வாழ்த்த ஆரம்பித்தார்கள். சகஜமாய் கிரேக்க ஜாதியார் முதியோரைக் கண்ணியமாய் நடத்தியே வருவார்கள். ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில், தகப்பனையும், தங்கள் தகப்பனை இவ்வளவாய்க் கண்ணியப்படுத்திய புத்திரரையும் வாழ்த்தி, "டையாகிரஸே! நீ இப்போது இறந்துபோகலாம், இனி நீ ஆசிக்கவேண்டியது ஒன்றுமில்லை" என்று அவர்கள் எல்லாரும் சப்தம்போட்டுச் சொன்னார்கள். அது அப்படியே நடந்ததாம். ஜெயமடைந்தோம் என்கிற அந்த ஆனந்தக்களிப்பானது அவ்விருத்தாப்பியனுக்குத் தாளக்கூடாமல் போனதால், தன் மூத்த மகனுடைய புயத்தின்மேல் சாய்ந்து அவர்களிடையில் தன் ஜீவனைப் போக்கினான்.

பிள்ளைகளே! இவ்விதமாக நீங்களெல்லாரும் ஓடவேண்டிய பந்தய ஓட்டமொன்றிருக்கிறது. அதற்குக் கொடுக்கப்படும் வெகுமதி ஒருவருக்குமட்டுமல்ல, நன்றாய் ஓடும் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படும். என்றும் வாடாத மகிமைதங்கிய கிரீடமும், பேரின்ப இராச்சியத்தில் வசிக்கும் பதவியும் அப்பந்தய ஓட்டத்திற்குக் கொடுக்கப்படும் வெகுமதிகளாம். ஆனால் ஓடாமல் நிற்பவர்களும், சரியாய் ஓடமாட்டாதவர்களும், இந்த வெகுமதிகளைப் போக்கடித்துக்கொள்வதோடு, சகாயத்தையும் நம்பிக்கையையும் முற்றிலுமிழந்து, இருண்டிருக்கும் பயங்கரமான நரகக் குழியில் தள்ளப்படுவார்கள்.

கிறிஸ்துவனின் ஜீவியமே அந்தப் பந்தய ஓட்டம். சர்வேசுரனுக்குப் பிரமாணிக்கமாய் ஊழியஞ்செய்து, அவருடைய ஜீவியத்தையும் நடக்கைகளையும் கண்டுபாவிக்கவேண்டுமென்று எப்போது மனப்பூர்வமாய்த் தீர்மானம் செய்கிறீர்களோ, அப்போதே அந்த ஓட்டம் ஆரம்பமாகி நீங்கள் மோட்சவாசலில் போய்ச்சேரும்போது அது பூர்த்தியடையும். மேலும் பந்தயக்காரர்கள் பந்தய வெகுமதியளிக்கும் நியாயாதிபதியின்மேலேயே கண்ணோட்டம் வைத்து ஓடுவதுபோல, நீங்களும் உங்களுடைய ஜீவிய ஓட்டத்தின் பரிசுத்தமும் நெருக்கமுமான பாதையின் கடைக்கோடியில், உட்கார்ந்திருக்கும் நியாயாதிபதியாகிய சேசுநாதர்பேரில் கண்ணோட்டம் வைத்து பொறுமையாகவே ஓடி உங்களுடைய ஜீவியத்தை முடிக்கவேண்டும். அவர் உங்களைத் தைரியப்படுத்தி உங்களுக்குத் தகுந்த பலனளிப்பார். மரணபரியந்தம் உண்மையாயிருந்தால் ஜீவகிரீடத்தைத் தருவோம் என்று அவர் ஒவ்வொருவருக்கும் வாக்களிக்கிறார்.

போதகன்.

## Here and There.
### நாலு சங்கதிகள்.

**Coimbatore** :—சிலகாலம் அசௌக்கியமாயிருந்த சங். A. மரிய ஜோசப் சுவாமியார் இப்போது சௌக்கியமாயிருக்கிறார். கடந்த மாதம் சங். பிரதர் மரிய ஆரோக்கியநாதர் தமது சௌக்கியத்தைநோக்கி, கண்டி குருமடத்திலிருந்து கோயமுத்தூருக்கு வந்திருக்கிறார்.

**Vatican** :—ருமேனியா அரசுக்கும், வத்திக்கானுக்கும் ஓர் உடன்படிக்கை எழுதப்பட்டிருக்கிறது. இந்த உடன்படிக்கைப்படி, கத்தோலிக் திருச்சபை அவ்வரசிலே மேன்மை பெறும்.

**Moplah outbreak** :—மாப்பிள்ளைகளின் கலகம் இன்னும் அடங்கினதாகக் காணப்படவில்லை. மாப்பிள்ளைகள் மலைகளில் ஒளிந்துக்கொண்டு, சமயாசமயங்களில் புறப்பட்டு, இங்கும் அங்கும் கொள்ளையடித்து, கொலைசெய்து, பலவிதமாய் ஜனங்களை துன்பப்படுத்துகிறார்கள்.

**Madras riots** :—சென்றமாதம் சென்னையில், மறுபடியும், இந்துக்களுக்கும் ஆதி திராவிடருக்கும் போர் நடந்தது. போலீஸ் உத்தியோகஸ்தர்கள் துப்பாக்கியைப் பிரயோகித்தார்கள். அப்போது கூட்டம் கலைந்தது. இந்த சம்பவங்களில் 8-இந்துக்கள் பிடிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கிறார்கள். காயம்பட்டு இறந்தவர்கள் இருவர். அநேகர் கடுங்காயம்பட்டார்கள்.

**Disarmament** :—பொதுஜன சமூக கூட்டத்தில், சகல வல்ல அரசாங்கங்களும், இனி ஆயுத உபயோகங்களைக் குறைக்க வேண்டும் என்று யோசித்ததில், பிரான்சும், பிரிட்டனும், தங்களால் கூடிய உதவியையளிக்க மனதாயிருப்பதாகத் தெரிவிக்கின்றன.

**Turko-Greek war** :—கிரேக்கர் துருக்கியரோடு சமாதானமாய்ப்போகும் கருத்துடையவர்களாக இருக்கிறார்கள் போலும்.



**China** :—சீனாவிலே குடியரசைத்தள்ளி, பழைய அரசை ஸ்தாபித்து, இப்போதிருக்கும் இளவரசரான பையனைச் சக்கரவர்த்தியாக்கவேணுமென்று, சிலர் முயற்சித்திருக்கிறார்கள்.

**Palestine** :—ஐரோப்பிய மகா யுத்தத்திற்குப்பின், பலஸ்தீன்நாட்டில், யூதர் கூட்டங்கள் நுழைந்து, துலுக்கர்களையும், கிறீஸ்துவர்களையும், பலவிதமாய் இம்சிப்பதால், பலஸ்தீன் நாட்டார் நமது பரிசுத்த பிதாவாகிய பாப்பானவருடைய சலுகையைத் தேடுவதற்காக 4 துலுக்கப்பிரபுக்களையும் 2 கிறீஸ்துவர்களையும் அவரிடம் அனுப்பியிருக்கிறார்கள்.

**The Little Flower of Jesus** :—குழந்தை சேசுவின் தெரேசம்மாளுக்கு "வணக்கத்துக்குரிய" என்கிற பட்டம் திருச்சபையால் சென்ற செப்டெம்பர்-மீ 4-ம்வ கொடுக்கப்பட்டது.

**Conversion of Anglican nuns** :—லண்டன் நகரத்துக்குச் சமீபமாயுள்ள செயின்ற் F. வேர் என்னும் பதித கன்னியர் மடம் முழுவதுமே நமது கத்தோலிக்கு வேதத்தைக் கைப்பற்றிக்கொண்டதென்று தெரியவருகிறது. ஷை மடத்தில் 60 கன்னியாஸ்திரிகள் இருக்கிறார்கள்.

**Profane language** :—அமேரிக்காவிலுள்ள பந்து விளையாட்டு சங்கத்தார் தாங்கள் விளையாடும் இடங்களில் தூர்ப்பாஷை பேசுவோர் பிரவேசிக்கக்கூடாதென்று, ஓர் புதுச்சட்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நமது இந்தியா தேசத்தில் இவ்விதச் சட்டம் மிகவும் அவசரம்.

**A good example** :—ஜெர்மனியில் ஐந்து லட்சம் கத்தோலிக்கு ஸ்திரீகள் ஒன்றுகூடி, தேவமாதாவுக்குத் தங்களைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்து பின் வருமாறு பிரதிக்கினை செய்திருக்கிறார்கள் : "கன்னியரின் பொக்கிஷமாகிய கற்பையே சகலத்தையும் பார்க்க சிரேஷ்டமென மதிக்கிறோம். கெட்ட நாடகங்கள், அவலட்சணமான அசையும் படக்காட்சிகள், அசுத்த புஸ்தகங்கள், படங்கள் முதலானவைகளை வெறுத்துத்தள்ளுவோம். பரிசுத்ததனத்துக்குப் பொருந்தாத சகலத்தையும் தூர அகற்றுவோம். உலக இன்பசுகங்களைத் தேடித் திரியமாட்டோம். தேவமாதாவாகிய பரிசுத்த கன்னிகையின் மெய்யான பிள்ளைகளாயிருப்பதே எங்கள் உறுதியான தீர்மானம்."

# The Messenger of Truth.

## சத்திய தூதன்.

Vol. VII. December 1921. No. 12.

புத்தகம் VII.] FIDES AC ROBUR. [நம்பர் 12.

8 - DEC 1921

## The Prince of Peace.
## சமாதானத்தின் அரசர்.

1921 வருஷங்களுக்குமுன் கர்த்தர் பிறந்த இராத்திரியில் தேவதூதர்கள், "பூலோகத்தில் நல்ல மனதுள்ள மனிதர்களுக்குச் சமாதானம் உண்டாவதாக" என்று வானத்தில் சந்தோஷமாய்ப் பாடினார்கள். அந்தப் பாக்கியமான இராத்திரியில், மோட்சத்திலிருந்து பூலோகத்துக்கு நல்ல செய்தி வந்ததோடே சமாதானத்தின் அரசர் பிறந்தார். இவர் தமது ஜீவிய காலமெல்லாம் சமாதானத்தின் சுவிசேஷத்தைப் போதித்தார். அவருடைய திருச்சபை உலகமெத்திசையிலும் சமாதானத்தையே போதித்து வருகிறது. மனிதர்கள் இந்த சுகிர்த போதனையைக் கேட்டு நடந்தால், இவ்வுலகத்தில் அதிக சமாதானமும் பாக்கியமும் இருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

சமாதானத்தின் திவ்விய அரசர் தமது இராச்சியமாகிய பூலோகத்தில் ஆளுவாராக; சகல இராச்சியங்களுக்கும் சமாதானம் உண்டாவதாக; ஐரோப்பிய மகாயுத்தம் முடிந்து சுமார் மூன்று வருஷமானாலும், இவ்வுலகில் இன்னும் முழுச் சமாதானமாகவில்லை. இப்போது உவாஷிங்டன் என்னும் நகரில் மகாசங்கத்தில் கூடியிருக்கும் மந்திரிகள் பரலோக அரசனை மறக்காமல், நீதியுள்ள சமாதானத்துக்கு சரியான வழிபாடுகளைச்

செய்வார்களாக. நமது இந்தியா தேசத்துக்குச் சமாதானம் உண்டாவதாக. அநேக பக்கங்களில் குழப்பமும், சண்டையும், வேலை நிறுத்தலும் உண்டாகிவருகிறதைக் காண்கிறோம். பரலோக சமாதானத்தின் அரசராகிய சேசுக்கிறீஸ்துநாதர் இந்த தேசத்துக்குச் சத்தியத்தின் ஒளியையும், சமாதானத்தையும் தந்தருளுவாராக!

குடும்பங்களில் சமாதானம் உண்டாவதாக! சமாதானந்தானே, குடும்பத்தின் திரவியம். சகல குடும்பங்களிலும், சமாதானம் உண்டாகும்படி திவ்விய குழந்தை அரசர் கிருபை செய்வாராக! சகல கிறீஸ்துவர்களுக்கும் சமாதானம் உண்டாவதாக! அவர்கள் ஆதி கிறீஸ்துவர்களைப்போலே அந்நியோந்நிய நேசமாய் வாழும்படி சமாதானத்தின் திவ்விய அரசர் கிருபை செய்வாராக! திருச்சபைக்கு அடங்காத கிறீஸ்துவர்கள் தங்கள் ஆங்காரத்தையும், துர்ஆசாபாசங்களையும் நீக்கிச் சமாதானம் அடைவார்களாக!

கிறீஸ்மஸ் திருநாளில் கிறீஸ்துவர்களெல்லோரும் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து, திவ்விய நன்மை வாங்கி, மோட்சத்திலிருந்து இறங்கும் சந்தோஷத்தையும், மனச்சமாதானத்தையும் அடைவார்களாக!

இதுவே சமாதானத்தின் அரசராகிய சேசுக்கிறீஸ்துநாதர் பரலோகத்திலிருந்து மனிதருக்குக் கொண்டுவந்த நல்லசெய்தி. இதுவே நமது கிறீஸ்மஸ் கோரிக்கை.

---

## Association for the Propagation of Faith.

### விசுவாசப் பரப்புதல் சபை.

"விசுவாசப் பரப்புதல் சபை" என்னும் பெயர்பூண்ட சபைகள் இரண்டு இருக்கின்றன. திருச்சபையை ஆண்டு நடத்துதலாகிய அருந்தொழிலில் அர்ச். பாப்பானவருக்கு துணை புரியும் மந்திர சபைகள் (காங்கிரகேஷன்கள்) பதினொன்றில் ஒன்றாகிய புரோப்பகாந்த சபை இவற்றில் ஒன்று. மற்றொன்று, ஆசியா ஆப்பிரிக்கா முதலிய நாடுகளில் சத்தியவேதம்



போதிப்பவர்களை தானதர்ம ஜெபதபங்களால் ஆதரித்து வரும் புரோப்பகேஷன் சபையாகும். இரண்டாவது கூறிய இந்தச் சபைதான் இந்தியாவிலுள்ள மேற்றிராசனங்களுக்குப் பண உதவி செய்து, குருமார் கன்னியாஸ்திரிமார் முதலியோரையும், குருமடம், அநாதைகள் மடம், பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி முதலிய தர்ம ஸ்தாபனங்களையும் ஆதரித்துவருவது. இந்தச் சபைதான் வருகிற வருஷம் நூறு வருஷப் பூர்த்தி மகோற்சவம் கொண்டாடப்போகிறது. ஆதலால் இந்தச் சபை உற்பத்தியான வரலாறு என்னவென்றும், அதன் இலக்கு, அங்கத்தாரின் கடமை, அதில் காரியம் நடக்கும் முறை முதலியவை என்னவென்றும் சுருக்கமாய் அறிய யாவர்க்கும் விருப்பம் இருக்குமல்லவா?

அஞ்ஞான இருள் நிறைந்த நாடுகளில் சத்திய வேதபோதகம் இனிது நடைபெறுதற்குரிய உதவிபுரிதலாகிய, தர்மங்களில் எல்லாம் சிறந்த தர்மத்தை இலக்காகக் கருதி ஏற்பட்ட இந்தச் சபைக்கு உற்பத்தி ஸ்தானமாகிய நாடு எதென்றால், எத்தனையோ புண்ணியங்களுக்கும் புண்ணிய சீலர்க்கும் பிறப்பிடமும் உறைவிடமுமாகி விளங்கும் பிரான்ஸ் தேசமேயாம். இந்தச் சிறந்த சபை தோன்றுவதற்குக் காரணமாயிருந்தவர்கள் யாரென்றால், கேவலம் செல்வமும் செல்வாக்கும் இல்லாத சில பெண்களும், கிறீஸ்துவர்களுமேயாவர். தற்சமயம் உலகமெங்கும் பரவி இருநூறு மேற்றிராசனங்களை ஆதரித்துவரும் இந்த சபைக்கு அஸ்திவாரம் இட்ட பெண்மணி "பவுலின் மரிஜரிக்கோ"வின் பேரும், சபை ஆரம்பமாகிய "லையன்ஸ்" நகரும், 1822-ளு மேமாதம் மூன்றாம் தேதியும், என்றும் மறவாமலிருக்கத் தக்கவையாம்.

இந்தச் சபையில் சேர்ந்திருப்பவர்கள் செய்யவேண்டியது என்னவென்றால், மிஷனரிமார் என்னும் சத்தியவேத போதக குருமாரை, ஜெபம், தர்மம் என்னும் இருவகையிலும் ஆதரித்து வருதலாம். பிரதிதினமும் ஒரு பர.-மந்திரமும் ஒரு பிரி.-மந்திரமும், "அர்ச். பிரான்சீஸ்கு சவேரியாரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" என்னும் ஜெபமும் சொல்லிவரவேண்டும். காலைச் செபத்திலாவது மாலைச் செபத்திலாவது வருகிற பர.-பிரி.-மந்திரங்களை ஒப்புக்கொடுத்தாலே போதுமானது.

அங்கத்தார் ஒவ்வொருவரும் பிரதி வாரமும் கொடுக்க வேண்டிய தர்மம் கேவலம் அரையணா. இஷ்டமானால், ஒரு வருஷத்துக்கு மொத்தமாக ரூ. 1-10-0 ஒரே தடவையில் செலுத்திவிடலாம். பல்வத்து அங்கத்தினர் செலுத்தும் வரியை ஒவ்வொருவர் வசூல்செய்து, நூறுபேர் வரியை வசூல் செய்பவர்

ஒருவரிடம் அனுப்பிவிடுவார்கள். இவ்வாறு அந்தந்த இடங்களில் வசூலாகும் தொகையெல்லாம், லையன்ஸ், பாரீஸ் என்னும் இரண்டு இடத்திலும் ஏற்பட்டிருக்கும் நிர்வாக சபையாரிடம் வந்து சேர, அவர்கள் அந்தந்த மிஷன்களுக்குப் பகிர்ந்து வழங்கிவிடுவார்கள். Annals of the Propagation of the Faith என்னும் பத்திரிகையில், அந்தந்த வருஷத்து வரவு செலவுக் கணக்கு வெளியாகும். "பலதுளி பெருவெள்ளம்," என்பதுபோல, ஒவ்வொருவர் கொடுப்பது சொற்பமேயானாலும், மொத்தத்தில் வசூலாவது அறுபது லட்சம், எழுபது லட்சம் பிராங்கு ஆகிவிடும். இருநூறு மேற்றிராசனங்களுக்கு ஆதரவாகும்.

உலகமடங்கிலுமுள்ள மேற்றிராணிமாரின் அங்கீகாரமும் ஆசீர்வாதமுமன்றி, 1840-ம் வருடத்தில் திருச்சபைத் தலைவரின் புகழ்ச்சியோடுகூட அங்கீகாரமும் பெற்று, ஏழாம் பத்திநாதர் முதல் எத்தனையோ பாப்பானவர்களால் எண்ணிறந்த பலன்கள் அருளப்பெற்று, கிறீஸ்துவ புண்ணியத்துக்கு ஆதாரமும் நித்தியானந்தம் அடைவதற்கு இன்றியமையாத சாதனமுமாகிய விசுவாசம் என்னும் சொல்லரிய செல்வத்தை வழங்குதலாகிய தர்மத்திலெல்லாம் சிறந்த தர்மத்தை மேற்கொண்டிருக்கும் இந்த விசுவாசப் பரம்புதல் சபையானது நமது நாட்டிலும் ஏற்பட்டு பரவும்படி தக்கமுயற்சி செய்ய யார்தான் விரும்பார்கள்.

---

## The Uplift of the Catholic Community.

## கத்தோலிக்கரின் முன்னேற்றம்.—(தொடர்ச்சி).

இவ்வாறாக, ஆஸ்திவந்தர் மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நான் சொல்லும்போது, அதையே பிடியாகப் பிடித்துக்கொண்டு, மற்றவர் அவரது உதவியொன்றையே நாடி, தாங்கள் சிறிதும் முயற்சிசெய்யாதிருப்பது சரியன்று. "நாம் நமக்கே உதவிசெய்துகொள்ள முயன்றால், கடவுள் நமக்கு உதவி செய்வார்" என்பது மூதுரை. "தெய்வத்தாலாகாதெனினும் முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்" என்பது திருவள்ளுவநாயனாரின் வாக்கு. ஆதலின், பிறர் உதவி ஒன்றையே நாடி, நாம் யாதொரு முயற்சியுமின்றி வீணே கைகட்டிக்கொண்டு காலங் கழித்துவருவதுடன், நம்முடைய சிறுமைக்கான காரணத்தைக் கடவுளின்மேலேற்றி அவரை நிந்தித்துக் குறைகூறிக்கொண்டு திரிவது சுத்த மதியீனம்.



கடவுள் நம்மை நற்சுகத்துடன் காப்பாற்றி, நம்முடைய கை கால் கண் முதலிய உறுப்புகள் பழுதுறாவண்ணம் வைத்திருப்பதே, அவரது கருணாநிதியின் பிரத்தியட்சம். அவ்வாறிருக்க, அவற்றைத் தக்கவாறு உபயோகித்துப் பயனுறாது வீண்காலம் போக்கிக்கொண்டு, பிறருடைய உதவியை நாடி, அது ஒன்றையே ஏக கருமமாகக் கொண்டிருப்பது மெத்த வெட்கத்துக்குரிய விஷயம். இவ்வித அடாத வழக்கம் நம்மில் அனேகரிடத்தில் குடிகொண்டிருப்பது சகஜமான விஷயமாகத் தோன்றுகின்றது. எவ்வாறெனில், அன்னோர் நல்ல திடகாத்திரதேகமுடையோராயிருந்தும், வருந்தி உழைக்க மனமிலாது, யாசகர்போல் குருக்களிடத்தும் மேம்பாடுடைய மற்றோரிடத்தும் சென்று சிறிதும் நாணமின்றி தங்களது சிறுமையை எடுத்துக்கூறி தங்கட்கு உதவிசெய்யவேண்டும் என்று தங்கள் பல்லைக் காட்டிக் கெஞ்சி நிற்பர். இது மகா வெட்கக்கேடான விஷயமன்றோ! "இரப்பது இகழ்ச்சி" என அவர்கள் அறியாதார்போலும். வேறு சிலர் தங்கட்கு மிதமான அவகாசமிருந்தும், அவற்றை வெளிக்குக் காட்டாது மறைத்துக்கொண்டு, தாங்கள் வறுமையுடையோரென மற்றவரெண்ணங்கொள்ளுமாறு நடித்துக்காட்டிவருகின்றனர். இஃது மேற்சொன்னவரது செய்கையைவிட எம்மட்டோ ஈனத்தனமுடையது. இவர்கட்கு மெய்யான மனமிருக்கும்பட்சத்தில், தம் மக்களின் மேம்பாட்டுக்கு எவ்வளவோ உபகாரணர்களாயிருத்தல் கூடும்.

ஆதலின், சகோதரரே, கூடியவரையில் நாம் நமது சொந்த முயற்சிகொண்டே நம்முடைய அந்தஸ்தை உயர் பதவிக்குக் கொண்டுவரத்தக்க ஜாக்ரதையுடையோராயிருத்தல் அவசியத்திலும் அவசியம். அவ்வாறு முயன்றும் நம்மாலேலவில்லையெனக் காண்போமாயின் அப்போதுமட்டும் பிறர் உதவியை நாடிப் போவது நன்று.

முன்னேற்றமடைவதற்கான உயர்தரக் கல்விகற்க அவகாசமில்லை எனச் சொல்லும் நம்மவரில் அனேகர் செய்துவரும் மூடத்தன்மையான விஷயங்கள் பல உள. அவற்றைக் கவனித்து

முற்றும் அவற்றை விட்டொழிப்பது மிக்க அவசியம். ஏனெனில், அவை நமது முன்னேற்றத்துக்கு பெருந்தடைகளாயிருக்கின்றனவெனச் சொல்லின் அது பொய்யாகாது. அவ்விஷயங்கள் யாவையுமே இங்கு எடுத்துக்கூறுவது கூடாமைபற்றி, அவற்றில் முக்யமானவையைமட்டும்பற்றித் தற்காலம் எடுத்துக்கூறுவது போதுமாயிருக்குமெனக் கருதுகின்றேன். அவை யாவையெனில், குடிச்செலவு, கலியாணச்செலவு நகைச்செலவு, வஸ்திரச் செலவு ஆகியவைகளே.

குடிச் செலவு:—குடியெனும் துர்வழக்கத்தால் நாம் எவ்வளவு செலவிடுகிறோமென்றால், அதைப்பற்றி வழங்கப்படும் பழமொழியைக் கவனியுங்கள். "குடிக்கிற வீடு விடியாது." இதினுடைய அர்த்தம் இன்னதென நாம் நன்றாய் அறிவோம். இத்துர்வழக்கத்தைப்பற்றி இன்னம் என்ன சொல்லலாமெனில், "குடிக்கிற வீடு குட்டிச்சுவர்," "குடிக்கிற வீடு மூதேவியின் வாசஸ்தலம்," "குடிக்கிற வீடு ஓயாத போர்க்களம்," "குடியன் எவனோ அவன் காமாதுரன்" ஆகிய இவைபோன்றவைகளே. குடியினால் விளையுங் கேடுகளை நாமே கண்ணாரக் கண்டுவருகின்றோமாதலால், அவற்றை இங்கு எடுத்துக்கூற அவசியமில்லை. இத்துர்வழக்கத்தில் நாம் செலவிடுவதைக் கணக்கேற்றிப்பார்த்தால், ஒருவாரத்தில் குறைந்தது மூன்று ரூபாயென்றால்,—(இது வெகு குறைந்த அளவாக எண்ணப்படும் தொகை)—ஒரு மாதத்தில் ரூபாய் பன்னிரண்டு, ஒரு வருடத்தில் ரூபாய் ஏறக்குறைய 150. ஒருவன் 20-ம் வயதில் குடிபழகினானென்று வைத்துக்கொள்ளலாம்; தன்னுடைய 30 வயதுக்குள் செலவிடுவது ரூ. 1,500; 40 வயதுக்குள் ரூ. 3,000; 50 வயதுக்குள் ரூ. 4,500. இப்பெருந் தொகையைக்கொண்டு இவன் தனது அந்தஸ்தை மேன்பதவிக்குக் கொண்டுவர என்ன தடை? மேற்சொல்லியிருக்கும் பிரகாரம் குடியன் பெரும்பாலும் காமாதுரன். இவ்வாறிருப்பதால், முதற்கேட்டின் பயனாகிய காமாதுரச் செய்கையால் செலவாகும் தொகையை நாம் எவ்வாறு வரையறுத்துச் சொல்லக்கூடும்? குடிச் செலவைப்பற்றியாவது ஒருவாறு தொகையை நிதானித்தல்கூடும். காமாதுரச் செய்கையால் ஆகும் தொகையை வரையறுத்தல் கூடாமை என்பதே தகுதி. ஆனதால், குடி எனும் துர்ப்பழக்கத்தை அறவே நீக்கவேண்டியது நம் முன்னேற்றத்திற்கு இன்றியமையாத விஷயம்.

கலியாணச் செலவு:—இது விஷயம் மங்களகரமானதாயினும், இதுவிஷயத்தில் நாம் அளவுகடந்து செலவிடவொண்ணாது.



"வளவனாயினும் மளவறிந்துண்" என்னும் சான்றோர் வாக்கைக் கடைப்பிடித்தொழுகுதல் அவசியம். காரியம் இவ்வாறிருக்க, நம்மில் அனேகர் இவ்விஷயத்தில் கண்குருடராய், கையிலில்லையாயினும், கடன்வாங்கியாவது, "வீம்புக்கு வேட்டையாடுதல்" போல், அளவுகடந்து செலவுசெய்து, "முன் கொண்டாட்டம் பின் திண்டாட்டம்" என்னும் பழமொழிக்கொப்ப, கலியாணம் முடிந்து கணக்குப்பார்க்கும்போது, மூக்கின்மேல் விரலை வைத்துக்கொண்டு, "இவ்வளவா செலவாயிற்று! அவ்வளவா செலவாயிற்று!" என்று சொல்லி உதட்டைச் சப்பிக்கொண்டு, இச்சுக்கொட்டுவார்கள். பிறகு வீட்டுச்செலவு பார்க்கிறதா, கலியாணக்கடன் அடைக்கிறதா? இதுவிஷயத்தில் நேரிடும் கஷ்டத்திற்கு, பழியை யார்மேல் சுமத்துவார்கள்? தன் பிள்ளைக்கு அருமையுடன் தேடிக்கொண்டுவந்த மருமகள், மருமகன் பேரில். என்ன சொல்லுவார்கள்? "மூதேவி முண்டை என் வீட்டில் எந்த நேரத்தில் காலடி வைத்தாளோ தெரியவில்லை, தொட்டது துலங்குகிறதில்லை, பொன்னும் துரும்பாய்ப் போகிறது" என்னும் கொடிய வார்த்தைகளே. "பாவம் ஒரு பக்கம் பழி ஒருபக்கம்" என்பது இது அல்லவா! "தென்னைமரத்தில் தேள்கொட்ட பனைமரத்தில் நெறிகட்டினது" இது அல்லவா? இதுபோலவே மருமகனையும்பற்றிச் சொல்லுவார்கள். என்ன ஒரு அறிவுகெட்டதனம் இது! இதினால் கலியாண விஷயத்தில் செலவு செய்யக்கூடாது, பொம்மைக் கலியாணம்போல் செய்யவேண்டும் என்று நான் சொல்லுகிறதில்லை. நியாயமாக என்ன செலவு செய்வேண்டுமோ அம்மட்டுந்தான் செய்யவேண்டும். போட்டிபோட்டுக்கொண்டு, வேறொரு கலியாணத்தைச் சுட்டிக்காட்டி, "அந்தக் கலியாணத்தில் அத்தனை ரூபாயில் காசிப்பட்டு எடுத்திருக்கிறார்கள். என் பிள்ளை என்ன அதற்குப் பேடாவாபோச்சு? நானும் அப்படியே செய்வேன்" என்று சொல்லி, "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி" எனும் பாடலிற் செப்பியிருப்பதுபோல் நடிக்கப்பார்த்து, பிறகு திண்டாட்டமடைய கொண்டாட்டமெலாம் கம்பி காட்டிவிடும்படி செய்யவொண்ணாது.

C. S. D.

## The Cardinal's Compact

### கர்தினால் செய்த ஒப்பந்தம்.

ரீம்ஸ் நகர் அதிமேற்றிராணியாராகிய மேன்மைதங்கிய கூஸே கர்தினால் அவர்கள், தமது மேற்றிராசன நகரத்தாரில் பலர் ஞாயிற்றுக்கிழமையை அவசங்கை செய்து வருவதைக் கவனித்து, மிகவும் மனம் வருந்தி, "இந்தத் தீமையைப் பரிகரிக்கத்தக்க மார்க்கம் ஒன்றுமிராதா" என்று சிந்தித்து வரும் நாளில், ஒருநாள், அந்த ஊர் வர்த்தகர்களுள் மிகவும் தனிகனான ஒருவனைக்கண்டு பேசுகிறதென்றும், அவ்வளவு வேண்டிய மனுஷனின் நன்னடக்கையானது ஏனையோரும் வழிக்குவருவதற்குத் தக்க ஏதுகரமாகும் என்றும் அவர் மனதிற்குத் தோன்றலாயிற்று.

அந்தச் செல்வனைத் தமது அரண்மனைக்கு அவர் அழைக்கவும், அவன், இதனால் தனக்குக்காட்டப்பட்ட பெருமையை நினைத்து மனம்பூரித்து, உடனே அழைத்த வண்ணம் வந்தான். ஆண்டவரவர்கள் வரவழைத்ததற்குக் காரணம் கூறி, ஞாயிற்றுக்கிழமையில் வர்த்தக நிர்வாகம் செய்வதை நிறுத்திவிட்டு, ஏனையோருக்கு நன்மாதிரிகை காட்டவேண்டும் என்று வேண்டிக் கொண்டார். அதற்கு அவன் மரியாதையாய்த்தான் மறுமொழி சொன்னான் என்றாலும், அவன் கண்டிப்பாய்ச் சொல்லும் விதத்தைப்பார்த்தால், கர்தினாலவர்கள் கருதிய காரியத்திற்குத் துற்சகுனம்போல் இருந்தது. அவன், "இது முடியவே முடியாது. இவ்வாறு செய்தால் என்னுடைய வர்த்தகம் கெட்டுப்போகாதா? என் பிள்ளைகள் போம்வழியென்ன?" எனவும், கர்தினாலவர்கள் அவன் கூறிவரும் ஆக்ஷேபனைகளுக்கெல்லாம் சமாதானம் சொல்லிப்பார்த்து, தர்க்கத்தைக் கொஞ்சத்தில் நிறுத்தி, சொல்வார்:—"சரிசரி, ஐயா, நாம் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்வோம். அதாவது நீங்கள் ஒரு வருஷகாலம் ஞாயிற்றுக்கிழமையில் யாதொரு வர்த்தக நிர்வாகமும் செய்யாது விட்டுவிட்டு, தினந்தினம் லாபம் இவ்வளவென்று சரியாய்க் கணக்குப் பதிவு செய்துகொள்கிறது. வருஷக்கடையில் மொத்தலாபம் சென்ற வருஷலாபத்தில் குறைந்தால் நான் ஈடு கட்டிக்கொடுக்கிறது."



இதைக்கேட்ட வர்த்தகன் பிரமித்து, "ஏது, தாங்கள் விளையாட்டுக்குச் சொல்லுகிறீர்கள்" என; அவர் "இல்லை காரியமாய்ச் சொல்லுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை; என்னவென்றால், மொத்த லாபம் முந்திய வருஷாந்தர லாபத்தில் மிகுந்திருந்தால், மிகுதியை என்னுடைய தான தர்மங்களுக்கு நீங்கள் கொடுத்து விடவேண்டும்" என்றார்.

பேச்சு நடந்து ஒருவருஷமாயிற்று. கர்தினால் இதை மறந்துவிடப்போகுந் தருணமுமாயிற்று. அத்தருணத்தில் வர்த்தகன் அவர் இல்லிடம் நாடிவந்து, சந்தோஷம் விளங்க, "மேன்மை தங்கியவரே, நமக்குள் நடந்த ஒப்பந்தத்திற் கண்ட வருஷத்தவணை பூர்த்தியாய் விட்டதே. அந்த ஒப்பந்த நிபந்தனைப் பிரகாரம் உங்களுக்குச் சேரவேண்டிய தொகை இதோ பிராங்கு ஆறாயிரமும் கொண்டு வந்திருக்கிறேன். இந்தத் தொகை முந்தின வருஷாந்தர லாபத்தில் அதிகமாயிருப்பது" என்றான்.

---

## Men and Insects

### மனிதரும் பூச்சிகளும்.

சர்வேசுரன், விவேகமுள்ள சம்மனசுகளும் மனிதருமன்றி, அநேக கோடிக் கணக்கான மிருகங்கள், பறவைகள், மச்சங்கள், பூச்சி புழுக்கள் முதலிய உயிர்வாழ்வனவும், உயிரின்றிய தாவரதாதுவர்க்கங்களையும் உண்டுபண்ணியிருக்கிறார்.

மனிதனுக்கு உலகில் தமக்கு கீழ் சுதந்தரத்தை கொடுத்திருக்கிறார். ஆகையால் மனிதருக்குக் கீழ் அந்தஸ்துள்ளவை யாவும் அவனுடைய ஆண்மையில் அடங்கியிருக்கின்றன. இவைகளை அழிக்கவோ, விர்த்தியாக்கவோ, இடம்விட்டு இடம் மாற்றவோ, எவ்வித சுதந்தரமும் மனிதனுக்கு உண்டு.

இவை யாவும் மனிதனுடைய உபயோகத்துக்கென்றே உண்டாக்கப்பட்டவை. அவற்றின் உபயோகங்களும் நாம் அறிந்தவையே. மிருகங்கள், பக்ஷிகள், மச்சங்கள், தாவரங்கள் முதலியவற்றின் உபயோகங்களைச் சாதாரணமாய் அறிந்துள்ளபோதிலும், பூச்சி புழுக்களின் உபயோகங்களைப்பற்றிப் போதுமான

வரையில் நாம் அறியவில்லை. ஏனெனில் இப்பூச்சி புழுக்களின் சாஸ்திரக் கல்வி கொஞ்ச காலத்துக்கு முன்தான் கையாடப்பட்டிருக்கிறது. ஆகையினால் பூச்சி புழுக்களைப்பற்றி பொதுவான அபிப்பிராயமுடையோமென்றாலும், அவைகளால் ஏற்படும் நன்மையோ, தின்மையோ இன்னின்னவென வரையறுத்துத் தெரிந்தோமில்லை.

பட்சிகளைப்போல் இறக்கையுடையவும், அவைகளைப்போல் மூக்கும், இரண்டே கால்களுமின்றி பறந்து திரிபவைகட்குப் பூச்சியென்றும், இறக்கைகளின்றி நிலத்தில் ஊர்ந்து திரிபவைகட்கு புழுக்களென்றும் சொல்லுகிறோம்.

உலகில் எவ்விதம் பிறப்பும், கலியாணமும், விருந்தும் இவை போன்ற மற்ற வைபவங்களும், இல்வாழ்க்கைக்கு நன்மையும் சந்தோஷமும் உண்டாக்குகின்றனவோ, அம்மாதிரியே பிளேக், காலரா, அம்மை முதலிய சம்பவங்கள் அவ்வாழ்க்கைக்குத் துன்பமாயும் அதிருப்தியுடையவுமாய் நேரிடுகின்றன. இம்மாதிரியே இன்பமும், துன்பமும் இவ்வுலக வாழ்க்கைக்கு சகசமாய் ஏற்பட்டிருக்கின்றன.

இவ்விதமே முற்கூறிய பூச்சி புழுக்கள் அநேகம் நமது நன்மைக்கு ஏற்பட்டும், வேறு அநேகம் நமக்குத் தின்மையும் துன்பமுமாயிருக்கின்றன.

நாம் மேன்மையாய்க் கொண்டாடும் பட்டு ஓர் புழுவின் எச்சில்; நவரத்தினங்களில் ஒன்றாகிய முத்து ஜலத்தில் வசிக்கும் சிப்பியின் வயிற்றில் உண்டாகும் ஓர் மழைத் துளியாம். பயிர்கள் செழித்து வளர்ந்து நமக்குப் பலன் அதிகம் கொடுக்கும் நிலத்தின் கொழுமைக்குப் பூச்சிகளே முக்கிய காரணம். இவை நிலத்தில் பயிருக்குக் கெடுதியான சாரங்களை அருந்திவிட்டு அவற்றிற்கேற்ற உணவாகிய எச்சங்களை வெளியிடுகின்றன. கரையான் புற்றுள்ள இடத்தில் பயிர்கள் செழிப்பாய் வளர்வதை நாம் பார்த்திருக்கிறோம்.

நாம் விதைக்கும் பயிர்கள் வளர்ந்து பூவேற்றபின், அவைகள் பலன்தருவதற்குப் பூச்சிகள் இன்றியமையாதன. இக்காரணம்பற்றியே நிலமெங்கும் பயிர் பச்சைகள் செழிப்பாய் வளரும் பனிகாலத்தில் பலவர்ணமுள்ள பூச்சிகள் நமது நாடுகளில் ஆயிரக்கணக்காய் உண்டாகி பறந்து திரிகிறதைப் பார்க்கிறோம். புலங்களிலும், காடுகளிலும் உண்டாகும் பயிர்கள் செடி கொடிகள் பூவிட்டு அம்மொக்குகள் விரிக்கத் துவக்கினதும், இப்பூச்சிகள் அவற்றினுள் புகுந்து மகாந்தப்பொடிகளை இலக்கி, பூ மத்தியிலுள்ள காயின் அரும்பில் அப்பொடிகளைச் செலுத்தி அக்காய்கள் வளர்வதற்கு ஏதுவாகின்றன.



இப்படிப் பூச்சிகள் ஏற்பட்டு மலர்களின் மகாந்தப்பொடிகள் சிதரப்படாமலிருந்தால், காய்கனிகள் நமக்கு கிடையா. இவைகள் இவ்வலுவலைச செய்வதற்கென்றே, கடவுள் செடி கொடிகளுக்குக் கண்ணைப்பறிக்கும் பலவர்ணமுள்ள புஷ்பங்களைக் கொடுத்திருக்கிறார். இப்புஷ்பங்கள் மிக அழகும் வாசனையுடையவுமானதால் பூச்சிகள் வருகின்றன. இவைகள் தங்கள் அலுவலைப் பிரியமாய்ச் செய்ய மலர்கட்கு வர்ணமும், வாசனையும் கொடுத்ததுமன்றி, பூச்சிகள் செய்யும் வேலைக்குக் கூலியும் ஏற்பட்டிருக்கிறது. இவைகட்குப் போதுமான தேன் அப்புஷ்பங்களில் உண்டு. இத்தேனுக்காகவே இவைகள் மனிதனுக்கு உழைக்கின்றன. (இன்னும் வரும்.)

A. P. M.

---

## The Tribulations of a Parish Priest.

### ஓர் பங்குவிசாரணைக் குருவானவருடைய கவலைகள்.

சிலமாதங்களுக்குமுன் சிலுவைபுரம் பங்குவிசாரணைக் குருவானவர் தமது கவலைகளில் சிலதுகளை இச்சிறு பத்திரிகையில் வெளிப்படுத்துகிறார். அவருக்கு இன்னும் சில கவலைகள் உண்டு. அவர் எழுதுகிறதாவது :—

ஐயா பத்திராதிபரே! ஒருவருஷகாலமாக ஒருபுது பாடசாலையைக் கட்டி வருகிறேன். அதின் செலவு ரூபாய் 12,000-க்குமேலாகும். அதில்பாதி சர்க்காரால் கொடுக்கப்படும். பாக்கித் தொகையை யார் கொடுப்பார்? இதுதான் இப்போது என் கவலை. தற்காலம் நடந்து வரும் பள்ளிக்கூடத்தில் 160 ஏழைப்பிள்ளைகள் படிக்கிறார்கள். இவர்களிற் சொற்பப்பேர் சம்பளம் கொடுத்து, மாசம் மாசம் சராசரி 10 ரூபாய் வசூலாகும். உபாத்திமார்களுக்கு மாசச்சம்பள தொகை ரூபாய் 75. நான் என்ன செய்வேன்? அநேகர் என்னிடம் வந்து தங்கள் கஷ்டநஷ்டங்களைச்சொல்லி முறையிட்டும் பணஉதவி கேட்கிறார்களேயொழிய, ஒருத்தரும் பணஉதவிசெய்ய முன்வருவதைக் காணேம். இதோ! இதை எழுதும்போதே ஓர் கிறீஸ்தவள் வந்து, சுவாமீ, நான் விதவை, எனக்கு இளம்பிராயமுள்ள 5 பிள்ளைகள்

இருக்கிறார்கள். எனக்கு உதவிசெய்வார் ஒருத்தருமில்லை. இவளுடைய பரிதாபத்தைப் பார்த்து, ஒன்றுமில்லையென்று அவளை யனுப்பிவிட்லாமா? அவள் போனபிறகு வேறொருவன் வருகிறான். அவன், "சுவாமீ, 3 மாதகாலமாக எனக்கு சௌக்கியமில்லை, வேலையுமில்லை, கஞ்சியுமில்லை. என் பெண்சாதி பிள்ளைகளும் கஷ்டப்படுகிறார்கள்," என்கிறான். அவனுக்கும் கொஞ்சம் உதவிசெய்து அனுப்பினேன். பிறகு ஒருசிறுபிள்ளை வருகிறான்: "சுவாமீ, என்னுடைய வீட்டில் அதிக கஷ்டம், என் ஐயாவுக்குச் சௌக்கியமில்லாததினால் வேலையில்லை! இந்த இரண்டு மாதமாக வீட்டுவாடகை கொடுக்கவில்லை. வீட்டுக்காரர் கோபிக்கிறார்கள். என் அம்மா இந்தக்கஷ்டத்தை உங்களிடம் சொல்லக் கூச்சப்படுகிறார்கள்" என்றான். ஏதோ கொஞ்சம் பணத்தைக்கொடுத்து "இதை உன் அம்மாளிடம் கொடு" என்று சொல்லியனுப்புகிறேன்.

அப்படியே, எத்தனையோபேர் ஒன்றுக்குப்பின் ஒன்றாய் உதவிகேட்க வருகிறார்கள்! எத்தனையோபேர் துன்பப்படுகிறார்களென்று பங்கு விசாரணைக் குருக்களுக்குத்தான் தெரியும்! என் பங்கு விசாரணையில் அநேக ஏழைகள் இருந்தபோதிலும், சிலர் நல்ல அந்தஸ்திலிருக்கிறார்கள். ஆனால், இதுவரைக்கும் அவர்களுக்குள்ளே ஒருவனாகிலும், "சுவாமி நீங்கள் கட்டிவருகிற புதுப்பாடசாலைக்கு இதோ 10, 20, ரூபாய் கொடுக்கிறேன்" என்று சொல்லவரவில்லை; அல்லது யாராவது "சுவாமீ, நீங்கள் எங்கள் பிள்ளைகளுக்காகச் செய்து வருகிற நல்லவேலைக்காக இதோ ஒரு ரூபாய் கொடுக்கிறேன்" என்று நல்ல மனசைக் காட்டியிருப்பார்களானால் எனக்கு எவ்வளவோ சந்தோஷமும் ஆறுதலுமாயிருக்கும். இந்தப் பள்ளிக்கூடத்தை எல்லாருடைய பொதுநன்மைக்காகவே தான் கட்டிவருகிறேன். ஜனங்களுக்குத் தானே ஆதாயமும், பலனும் கிடைக்கும். ஓர் பள்ளிக்கூடத்தைக் கட்டித் திறக்கிறவன் எவனோ, அவன் ஓர் சிறைச்சாலையைச் சாத்திவிடுகிறான் என்று ஓர் சாஸ்திரி சொல்லியிருக்கிறார், நமது கத்தோலிக் பாடசாலைகளைப்பற்றித்தான் இந்த வாக்கியம் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட பொதுநன்மைக்காக ஒருவனாகிலும் பொருள் உதவிசெய்யவில்லையே! "நமது ஞானமேய்ப்பர்களுக்கு நம்மாலானமட்டும் உதவி செய்வது," என்கிற திருச்சபைக் கட்டளையை அநுசரிக்கிற கிறீஸ்துவர்கள் எங்கே? பத்திராதிபரே, இந்தக்கட்டளையை உங்கள் நல்ல பத்திரிகையில் வெளிப்படுத்துவது நலமாகுமென்று தோன்றுகிறது; அது உங்கள் சிறு ரோஜாப்பூத்தோட்டத்தில் ஓர் புஷ்பமாய் விளங்குமல்லவோ? கோவிலுக்குத் தருமம்



செய்வார் ஒருவருமில்லையென்று நான் சொல்லுகிறதில்லை; ஆனால் சேசுநாதர் கற்பித்த பிரகாரம், வலதுகை கொடுக்கிறதை இடதுகை அறியாதபடிக்குத் தர்மம் செய்கிறவர்கள் வெகு சொற்பப்பேர்; அநேகர் கோவிலுக்கு ஓர் சுரூபத்தையாவது, வேறே பொருளையாவது தர்மமாகக் கொடுத்தால் அதின்மேல் தங்கள் பேர் எழுதவேணும் என்றும், அல்லது பத்திரிகைகளில் அதைப் பிரசுரம்பண்ணவேணுமென்றும் விரும்புகிறார்கள். எக்காலம் ஊதி தர்மம் செய்வது கிறீஸ்துவ தர்மகுணமல்ல. வீண்பெருமைதேடாமல், சர்வேசுரனுக்குப் பிரியப்படத்தானே தர்மம் செய்யவேண்டும்; அப்போது தான் தர்மம்; புண்ணியவான்களுடைய பேர் மோட்சத்தில் என்றும் அழியாத அக்ஷரத்தால் எழுதப்படும்,

இப்படிக்கு

சிலுவைபுரம் பங்கு சுவாமியார்.

---

## What doth it profit a Man?

## மனிதனுக்குப் பிரயோசனம் என்ன?

சில வருஷங்களுக்குமுன் பிரான்சு தேசத்தில், ஓர் ஏழைப் பையன் இருந்தான். அவன் தான் வீணை வாசிப்பதில் கெட்டிக்காரனாகவேணுமென்று, மிகவும் ஆசைப்பட்டான். அதற்காக, தேவமாதாவைப் பார்த்து வேண்டிக்கொள்ளுகிறதுமன்றி, இடைவிடாமல், அப்பியாசமும் பண்ணிக்கொண்டு வருவான். அவன் தன் விருப்பத்தின்படியே மகா கெட்டிக்காரனானான். அவனுடைய பெயர், அந்த நாடெங்கும் பிரபல்யமாயிற்று. ஒரு நாள் ஓர் பெரிய துரை அவனை வரவழைத்து, நீ என்னுடன் பாரீஸ் பட்டணத்துக்கு வந்து நாடகமேடையில் வீணை வாசிப்பாயாகில், உனக்கு 500-ரூபாய் சம்பளம் கிடைக்குமென்று சொன்னான். மகா ஏழையாகிய அந்தப் பையன் அதைக்கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டு, தன் தாயாரிடம் போய் அந்த சங்கதியைச் சொல்லி, யோசனை கேட்டதில், மகா விசுவாசியாகிய அந்த அம்மாள், "மகனே 500 ரூபாய் சம்பளம் கிடைத்தாலும் கிடைக்கும். ஆனால், நாடகத்தில் சேர்ந்து வேலை செய்வாயாகில், உன் ஆத்துமத்துக்கு நஷ்டம் வாராமலிருக்குமா? சாகிறகாலத்தில் பணத்தைச் சம்பாதித்ததினால் பிரயோசனமென்ன?" என்று

சொல்ல; பையன் "மெய்தான் அம்மா, என் ஆத்துமத்தை நஷ்டப்படுத்திப் பணத்தைச் சம்பாதிப்பதில் லாபம ஒன்றுமில்லை" யென்று, அந்த வேலை தனக்கு வேண்டாமென்று மேற்படி துரைக்குக் கடிதம் எழுதிவிட்டான். எத்தனையோ தாய் தகப்பன்மார் தங்கள் பிள்ளைகளுடைய ஆத்துமத்தைக் கவனிக்காமல், அவர்களை ஞானோபதேசத்துக்கு அனுப்பாமல், பணம் சம்பாதித்தால் போதுமென்று நினைத்தாற்போல, 500 ரூபாய் சம்பளத்துக்கல்ல, ஒரு ரூபாய் அல்லது அரை ரூபாய்க்கு ஆசைப்பட்டு அவர்கள் ஆத்துமத்தை விற்கிறார்கள். "மனிதன் உலகமெல்லாம் சம்பாதித்தபோதிலும் அவன் தன் ஆத்துமத்தைச் சேதப்படுத்தினால் அவனுக்குப் பிரயோசனம் என்ன?"

* * *

It is better to be stung by a bee than by a lying tongue.

---

## Advice of a Father to his Son.

## தகப்பன் மகனுக்குப் புத்தி சொல்லல்.

### குடியர் கூத்து—(தொடர்ச்சி.)

எல்லாவற்றையும் அடக்கி ஆளும்படியான மனித தத்துவத்தை குடிவெறியினால் மிருகத்தன்மையாக்கி, நிற்கின்ற நிலை அறியாமலும், இருக்கின்ற இடம் தெரியாமலும், கண்ணிருண்டு, மனமருண்டு, கைசோர்ந்து, மெய்தளர்ந்து, ஆடை அலங்கோலமாகி, வாயில் ஈ மோதி, வந்தவர் போனவர் நகைக்க, பந்து ஜனங்கள் சிரிக்க, சந்திக்கரையில் படுத்துக்கிடப்பான். நாலு பேர் தொங்கத் தொங்கத் தூக்கிக்கொண்டுபோவார்கள். இரண்டு பேர் தாங்கத் தள்ளாடி வருவான். சம்சாரம் பிள்ளைகள் கிட்ட நெருங்கிவரப் பயப்படுவார்கள். எங்கே தூக்கம்? எங்கே துயரம்? எங்கே விசாரம்? எங்கே இரைச்சல்? எங்கே குத்துப்பழி? எங்கே வெட்டுப்பழி? குடியருடைய வீட்டிலல்லாமல் மற்றவர்கள் இல்லத்திலல்ல. அவர்களிடத்தில் உடைபடாத பாண்டங்களில்லை கிழிபடாத வஸ்திரங்களில்லை. இறைத்துப் பொறுக்காத தானிய தவசங்களில்லை. அறுத்துச் சேர்க்காத



ஆபரணங்களில்லை. தாங்கள் பேசுவதும், செய்வதும் இன்னதென்று புரியாது. பிறரைப் பார்த்து நடக்கத் தெரியாது. மதுபானப் பிரியர் குடிக்குமுன் இது சொற்பந்தானென்று எண்ணுவார்கள். குடித்தபின்னர் அது நச்சு நாகத்தைப்போற் கடித்து, கட்டுவிரியனைப்போல் அவர்களைத் தீண்டும். வெறி தெளிந்தபின் மற்றக் குடியரைக் கண்டு, தங்கள் சோர்வை நினைத்து விதனப்படுவார்கள். மேன்மையை எண்ணிக் கண்ணீர் விடுவார்கள். அநேகருக்குப் புத்தி போதகம் சொல்வார்கள். உதட்டுக்குமேல் நிற்குமொழிய உள்ளத்தில் நிற்காது. பகட்டு வார்த்தை பேசத் தெரியுமல்லாமல் பாபரகிதந் தெரியாது. குடியருடைய ஞானமும் வெறியருடைய தீர்மானமும் சரி. குடியருக்குச் சத்தியமில்லை, வெறியருக்கு நித்தியமில்லை. நீருக்குள் தீபஞ் செல்லாததுபோல, அவர்கள் மனதுக்குள் நாணங்கொள்ளாது. நாழிமுகவாது நானாழி. கடவுளைத் துதிக்கும்படியான நாட்கிழமையிலும், புண்ணியகாலத்திலும் ஒட்டிக்கு இரட்டி பெட்டிகள் வாங்கி, மற்றவர்களுக்கு இட்டு நிரப்பி, கொண்ட மட்டும் குடித்து, தேவாலயத்திலும், சபையிலுஞ் சேருவார்கள். இது அவர்களுக்குக் கீர்த்தி, சேர்ந்தவர்கட்கு சையோத்தி. அப்போது அவர்களை அடித்தாற் தெரியாது, குத்தினால் நோகாது. இப்படிப்பட்டவர்கள் ஞான நன்மைகளுக்கு முற்றும் விலக்கப்பட்டிருக்கிறார்கள். இலாகிரியுள்ள வஸ்துக்களை அருந்துகிறவர்கள் தெய்வ சந்நிதிக்கு நீக்கப்பட்டிருக்கிறார்கள். மனுதர்ம சாஸ்திரம் அவர்களை ஊரைவிட்டு ஓட்டும்படிக் கற்பிக்கின்றது. நிபந்தனைகள் இப்படியிருக்க, எந்த தேசத்திற் குடியரில்லை. எந்தப் பட்டணத்தில் மதுபானப் பிரியரில்லை. எந்த ஊரில் (கள்ளுஞ்) சாராயக்கடைகளில்லை. நாட்டுச் சரக்குஞ் சீர்மைச் சரக்குஞ் சேர்த்து, குளம்புச்சரக்கை வரவழைத்து பாத்தியப் பத்திரம் வாங்கி, துரைத்தனத்தார் அறிய, எங்கே பார்த்தாலும் விற்பனை செய்கிறார்கள். கண்டவிடமெல்லாம் ஜனங்கள் உருண்டு புரளுகிறார்கள். இராஜரீகத்துக்கு இதைப்பற்றி எள்ளளவும் கவலை கிடையாது. துட்டுவந்தால் பெட்டி நிறம்புமல்லாது, திட்டுவந்தால் நிறம்பாது. அரசருடைய குத்தகைத் தொகை மதுவர்க்கங்களுக்குப் பெருகப் பெருக, இந்நாட்டுக் குருகுலத்தார் முதல், இழிகுலத்தார் வரையில் சரிபாதி ஜனங்கள் சாராயக் கடைக் கணக்கில் எழுதப்பட்டிருக்கிறார்கள். சந்நியாசிகள் கையாடுகிறார்கள். அநேகர் தங்கள் தேவதைகளுக்குங்கூட வைத்துப் படைக்கிறார்கள். குடியருக்குச் சுவாமிகள் கூத்தாடவேண்டும். இல்லாவிடில் தோண்டி, கலயம், பெட்டி முதல், எல்லைச்சட்டிவரையில் போட்டு உடைக்கவேண்டும்.

இலாகிரி விருப்பமுள்ளவர்கள் எந்தக் காலத்திலும் ஐசுவரியராகமாட்டார்கள். குடியரும் பெருந்தீனிக்காரரும் தாரித்திரவான்களாவார்கள். அவர்கள் கையிலுள்ள பொருட்களைத் தோற்று, ஒன்றுக்குப் பத்து கடன் வாங்குவார்கள். ஒரு சமயம் தங்கள் சின்னஞ் சிறியவர் அணிந்திருக்கின்ற நன்னிபின்னிகளைத் திருடுவார்கள். சில பெண்கள் கழுத்தில் திருமங்கிலிய முதலாயிராது. வீட்டுக்கு வேறுகள்வர் வேண்டுவதில்லை. அவர்களைப்பற்றி நாட்டுக்குச் சொல்லத் தேவையில்லை.

(தொடரும்) மரணசாசனம்.

---

## A bit of fun.

### விநோதம்.

### மனைவிமார் தங்கள் புருஷர்கள்மீது வைத்துள்ள மூட பக்தி.

பூதலூர் என்னும் கிராமத்தில் வேதமுத்து என்னும் ஒரு உபதேசியார் இருந்தார். மாதரசு என்னும் அவர் மனைவி ஒரு நாள் பாவசங்கீர்த்தனம் செய்யக் கோவிலுக்குப்போனாள். குருவானவர் பாவசங்கீர்த்தனம் கொடுக்கும் இடத்திற்குப் போகுமுன்னதாக, அந்தப் பெண்பிள்ளையிடம் சில மந்திரங்களைச் சோதிக்க விரும்பி பத்துக்கற்பனை மந்திரத்தைச் சொல்லும்படி கேட்டார். அதற்கு அவள்: "சுவாமி! பத்துக்கற்பனை மந்திரம் சரிவரத் தெரியாது. எனது கலியாணகாலத்தில், ஏதோ மந்திரங் குறிப்பிடங்களைக் கட்டாயத்துக்கென்று படித்து நன்மை வாங்கினதுதான். இக்கிராமாந்திரங்களில் திரும்ப அடிக்கடி அவைகளைக் கேட்கவாவது சொல்லிக்கொடுக்கவாவது வழக்கமில்லாததினால் மறந்துவிடுவது சகஜம்" என்றாள். உடனே குருவானவர் மிக்க மனக்கஸ்திப்பட்டு, "அந்தோ! நீ ஒரு உபதேசியின் பெண்சாதியாயிருந்தும், இப்படி மந்திரங்கள் தெரியாதிருப்பது மகா வெட்கமும் துக்கமுமுள்ள காரியம். மற்ற ஸ்திரீகளுக்கு வேத விஷயத்தில், மேல்வரிச்சட்டம்போலிருக்கவேண்டியது உன் கடமையாயிருக்க, நீ இவ்வாறு பேசுவது நமக்கு அளவற்ற விசனத்தைத் தருகின்றது. உனக்கு மந்திரம் தெரியாது என்பதை உலகமறிந்தால் உன்னைப் பரியாசம்பண்ணி நகைப்பார்



களே. ஆகையால் நீ உடனே போய் உன் புருஷனிடம் மந்திரங்களைக் கேட்டுப் படித்து மனப்பாடம்செய்துகொள்," என்று நல்ல புத்தி சொன்னார். மாதரசு வீட்டுக்குப்போய் தனது நாயகனிடம் நடந்த சங்கதியைத் தெரிவித்து, தனக்கு மந்திரம் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று மன்றாடினாள். உபதேசியார் ஓம் என்று உடன்பட்டு, பின்வருமாறு மந்திரங்கற்பிக்க ஆரம்பித்தார்:—

உபதேசியார்:—சர்வேசுரன் நமக்கு அருளிச்செய்த வேத கற்பனை பத்து.

உபதேசியார் மனைவி:—சர்வேசுரன் நமக்கு அருளிச்செய்த பத்துக்கற்பனை பத்து.

உபதேசி:—அப்படியல்ல, சர்வேசுரன் நமக்கு அருளிச்செய்த வேதகற்பனை பத்து.

உப. மனைவி:—சர்வேசுரன் நமக்கருளிச்செய்த கற்பனை பத்து.

உபதேசி:—(கோபத்துடன்), இதென்ன மதியீனம்? சரியாய்க் கவனித்துச் சொல். சர்வேசுரன் நமக்கு அருளிச்செய்த வேதகற்பனை பத்து.

உப. மனைவி:—சர்வேசுரன் நமக்கருளிச்செய்த உங்கள் கற்பனை பத்து.

உபதேசி:—இதென்ன, ஏட்டிக்குப் போட்டி செய்கிறாய். நான் சொல்லுகிறதை கவனித்துச் சொல்லுகிறாயா? அல்லது தப்பல் வேண்டுமா? நான் சொல்லுகிறமாதிரி சொல்லு—சர்வேசுரன்.

உப. மனைவி:—சர்வேசுரன்.

உபதேசி:—நமக்கருளிச்செய்த.

உப. மனைவி:—நமக்கருளிச்செய்த.

உபதேசி:—வேத கற்பனை.

உப. மனைவி:—உங்கள் கற்பனை.

உபதேசியார்:—(தலையில் குட்டி)—ஏ. மூடமதி! வேதகற்பனையென்று சொல்.—இதைக்கேட்டவுடன் உபதேசியார் மனைவி தேம்பித் தேம்பி அழுது கண்ணீர் விட்டாள். இதைப்பார்த்த உபதேசியார் சர்வேசுரன் இவளுக்குக் கொடுத்த அறிவு இவ்வளவுதான்போற் காணுகிறது என்று வருத்தப்பட்டு, குருவானவரிடம்போய், "சுவாமி, நான் என்ன செய்யட்டும்? எத்தனைதரம் சொல்லிக்கொடுத்தாலும் என் பெண்சாதிக்கு 'வேத கற்பனை' என்ற வார்த்தை வருகிறதில்லை," என்று துக்கத்தோடு சொன்னார். குருவானவர் அதிக ஆச்சரியத்தோடு, அப்பெண்பிள்ளையை அன்போடு அழைத்து, "மாதரசம்மாள், நீ பயப்ப ரூ. 1.

பத்துக்கற்பனை மந்திரத்தைப் பதறாமல் என்னிடம் சொல்" என்று விநயமாய்க் கேட்டார். அதற்கு அப்பெண் "சர்வேசுரன் நமக்கு அருளிச்செய்த என் வீட்டுக்காரர் கற்பனை பத்து" என்று சொன்னாள்.—குருவானவர் 'வேதகற்பனை' என்று திருத்தினார். இதைக்கேட்டு மௌனமாயிருந்த அந்தப் பெண்பிள்ளையை நோக்கி, "ஏன் பேசமாட்டேனென்கிறாய், காரணம் என்ன?" என்றபோது, "சுவாமி தாங்கள் திருத்தினது எனக்குத் தெரியாமலல்ல. அந்த வார்த்தை என் புருஷன் பெயர், ஆதலால் என் உயிர்போனாலும் அவர் பெயரை உச்சரிக்கமாட்டேன்" என்று சொல்லிவிட்டாள்.

நமது தேசத்தில் பெண்கள் தங்கள் புருஷன் பெயரைச் சொல்லப்படாதென்று வழங்குவது கெட்டவழக்கமே.

---

## Here and There
## நாலு சங்கதிகள்.

**What the Pope says**:—தற்போது மனுக்குலமானது ஐந்து ஞான தொத்து வியாதிகளால் வருந்துகிறதென்று அர்ச். பாப்பானவர் சொல்லிவிட்டார்.

அதாவது:—1. அதிகாரிகளுக்கு அடங்காமை; அல்லது, ஒற்றுமையாமை; 2. மனிதர் மனிதர்கட்குள் பகை; 3. வேலையில் வெறுப்பும், சோம்பலும்; 4. உலக சுகபோகங்களின்மேல் ஆவல்; 5. பரலோக நன்மைகளை மறுதலித்து, உலக காரியங்களை ஏக கதியென்றெண்ணி, அவைகளைமாத்திரமே தேடுதல், இவைகளேயாம். மனிதர்கள் சேசுக்கிறீஸ்துநாதருடைய போதனையையும், அவருடைய சத்திய வேதத்தையும் ஏற்றுக்கொண்டு அதின்பிரகாரம் நடந்தாலொழிய, மற்றப்படி மேற்சொல்லிய கடின வியாதிகட்கு வேறே மருந்து இல்லை.

**Trichinopoly**:—இப்போது திருச்சினாப்பள்ளி மேற்றிராணியாரின்கீழே, தூத்துக்குடிப் பகுதியில், 18 பங்கு விசாரணைகளுக்கு அதிசிரேஷ்டராக சங். மரியகுசைநாதர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

**An appeal to the Parishioners of Coimbatore**:—தற்போது கோயமுத்தூர் மேற்றிராசனக் கோவிலிலிருக்கும் சிலுவைப்பாதையின் ஸ்தல படங்கள் பழசாகிவிட்டனவென்



பது கோயமுத்தூர் கிறீஸ்துவ சகோதரர் யாவருக்குந் தெரிந்த விஷயம்; ஷை கோவிலுக்கு தகுதியான புது ஸ்தலங்களைத் தருவித்து ஸ்தாபிக்க யோசனை செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்து நிறைவேறும்படி ஒரு ஸ்தலத்துக்கு ரூ. 100 வீதம் 14 ஸ்தலங்களுக்கு 1,400 ரூபாய் குறையாமல் வேண்டும். (படங்களல்ல, சுரூபரூபமான ஸ்தலங்கள்.) ஆகையால் கோயமுத்தூர் பங்கு விசாரணையைச் சேர்ந்த கிறீஸ்துவ சகோதரர் யாவரும், ஷை சுகிர்த கிருத்தியத்திற்கு தாராள மனதோடே பொருளுதவி செய்யவேணுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது. 14 கத்தோலிக்குக் குடும்பங்கள் தனித்தனியாவது, அல்லது, மற்ற பந்துக்கள் சிநேகிதர்களோடு சேர்ந்தாவது ரூபாய் 100 கொடுத்தால் தங்களுக்கு இஷ்டமான ஒரு ஸ்தலத்தைத் தெரிந்துகொள்ளலாம். மேலும், ஷை கோவிலில் அர்ச். அந்தோனியார் சுரூபம் ஒன்று தருவித்து ஸ்தாபிக்கவேணுமென்கிற கருத்தோடு ஒரு கிறீஸ்துவ சகோதரர் ரூ. 50 கொடுத்திருக்கிறார். பெரிதும் அழகானதுமான சுரூபத்தைத் தருவிக்க விரும்பி, இன்னும் ரூபாய் 150 சேரும்படி பங்கு விசாரணை குருவானவர் எதிர்பார்க்கிறார்.

**Madras riots**:—சென்னையில் மில் தொழிலாளர்கட்கும், மில் சொந்தக்காரருக்கும் எழுந்த கலகம் ஒழுங்காயிற்று. தொழிலாளர்கள் 5-மாதகாலமாக வேலையின்றி, சம்பளமின்றி, பசியினாலும் பட்டினியாலும் வருந்தி, நல்ல படிப்பினை படித்துக்கொண்டார்கள். இனிமேல்பட கலகஞ் செய்யத் துணிவார்களோ?

**The Pope and the King**:--ஐயர்லாண்டு சமாதான விஷயமாக மாட்சிமை தங்கிய ஜார்ஜ் சக்கரவர்த்தியவர்கள் எடுத்துக்கொண்டுவரும் முயற்சிகள் முற்றும் நற்பயனோடு முடியும்படி, தாம் எல்லாம் வல்ல சர்வேசுரனை வேண்டுவதாக நமது பரிசுத்த பாப்பானவர் சக்கரவர்த்திக்குத் தந்தி மூலமாய்த் தெரிவித்ததில், சக்கரவர்த்தியும் அந்தத் தந்தியைப் பெற்று, சந்தோஷமடைந்து, நமது பரிசுத்த தந்தைக்குப் பதில் தந்தி அனுப்பினார்.

**Moplah out-break**:—மலையாளக் குழப்பம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்துகொண்டு வருகிறதென்று தோன்றுகிறது. ஆனால், இக்கலகக்காரர்களின் நிஷ்டூர செய்கைகளால் தவிக்கும் பல்லாயிரம் ஏழை ஜனங்களுக்கு போதுமான பரிகாரஞ் செய்ய பத்துலட்சம் ரூபாய் வேண்டுமெனச் சொல்லப்படுகிறது.

**Reminder to subscribers**:—நமது சத்திய தூதனின் சந்தாதாரர்கள் வருகிற 1922-ம் வருஷத்திய சந்தா ரூ. 1.

தாமதமின்றி அனுப்பிவைக்கவேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். மேலும் சிலர் 1921-ம் வருஷத்திய சந்தாத் தொகையை இன்னும் செலுத்தாமல் இருக்கிறார்கள். "தன் கடன் செலுத்துகிறவன் எவனோ, அவன் ஆஸ்திக்காரனாவான்," என்னும் பழமொழியை மறக்கவேண்டாம்.

**Query** :—கல்லறையில் ஏன் வெடி (பட்டாஸ்) சுடக்கூடாது? ஏனென்றால், 1. கல்லறை மந்திரிக்கப்பட்ட இடம்; 2. அது துக்கத்துக்குரிய இடம்; 3. பத்தியுள்ள ஜெபம் செய்ய வேண்டிய இடம்; 4. வெடிசுடுவது அஞ்ஞான ஆசாரத்துக்கு சம்மந்தமான காரியம்;—இவை முதலிய முகாந்தரங்களின் நிமித்தம் கல்லறையில் வெடி சுடுவது திருச்சபைச் சட்டத்துக்கும், கருத்துக்கும் விரோதமாயிருக்கிறது.

**All-India Catholic Conference** :—முழு இந்திய கத்தோலிக்கரின் சங்கம் ஒன்று, பம்பாய் நகரில் டிசம்பர் மாதம் 27-ம் தேதியில் நடக்க இருக்கின்றது.

**The bark of Peter** :—ஆங்கிலிக்கன் சபை என்னும் கப்பலானது பாறைகளிலே தட்டுப்பட்டு, முட்டுப்பட்டு, உடைந்துகொண்டு வருகின்றது; அவ்விதமாக அது உடைந்துகொண்டே வருவதினாலே, அச்சபையின் பிரதான பாதிரிகள், கற்பாறைகளாலே மோதப்பட்டும் உடைபடாத இராயப்பர் கப்பலைத் தேடி, அதில் ஏறி க்ஷேமமாய், மோட்சப் பிரயாணம் பண்ணலாமென்று வந்தடைகிறார்கள். இன்னும் நாலைந்து வருஷங்களுக்குள் பெருந்தொகையான ஆங்கிலிக்கன் பாதிரிமார் சத்திய கத்தோலிக்குத் திருச்சபையில் வந்து சேருவார்களென்று, லிவர்ப்பூலிலே ஒருவர் உபந்நியாசஞ் செய்தார்.

**Three Brahmin Converts**:—கடந்த ஒக்டோபர் மாதம் 23-ம் தேதியன்று, பெங்களூரில், அர்ச். பிராஞ்சீஸ்கு சவேரியார் கோவிலில் 3 பிராமணர்கள் வெகு ஆடம்பரத்துடன் ஞானஸ்நானம் பெற்று சத்திய திருச்சபையில் சேர்ந்தார்கள். சங். சொர்வான்டோன் சுவாமியார் 11 மாதகாலமாக அவர்களுக்கு ஞானோபதேசஞ் செய்து சத்திய வேதத்தைப் படிப்பித்து, ஞானஸ்நானங் கொடுத்தார்.

**The Prince of Wales** :—நமது சக்கரவர்த்தியின் மூத்த குமாரர் [illegible] இளவரசர் கடந்த மாதம் 17-ம் உ இந்தியாவைச் [illegible] பம்பாயிலிருந்து வந்து சேர்ந்திருக்கிறார். அவருடைய [illegible]வை நாம் நல்மன[illegible]வே எதிர்கொண்டு வாழ்த்துதல் கூ[illegible]ாமாக.

---

3L
161298.
RM211,N15
N15.7